T. 2134

T. 2134
134

ஸ்ரீ:

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்

தமிழ் வசனம்



By

D. S. RAGHAVAN

டி. எஸ். ராகவன்

(Retd. Sub Editor " The Hindu ")

Regd. Copy Right]

[Price 2—8—0

ஸ்ரீ:

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்

தமிழ் வசனம்

By

D. S. RAGHAVAN

டி. எஸ். ராகவன்

(Retd. Sub Editor " The Hindu ")

விலை ரூ. 2—8—0
போஸ்ட் சார்ஜ் தனி

கிடைக்குமிடம் :
21, மந்தைவெளித் தெரு
சென்னை. 28

பொருளடக்கம்.

ஸர்க்கம்.		விஷயம்.	
,,	1.	இயற்கையின் பேருதவி	1
,,	2.	பேரருள்பெற அச்சம் அழியவேண்டும் ...	6
,,	3.	பூங்கழல் பணிந்து மெய்ப்பொருள் காணல் ...	7
,,	4.	சொல்வன்மையின் சிறப்பு	11
,,	5.	நம்முள் அறுவரானோம்	15
,,	6.	அறநெறி அடியான் மாண்பு	17
,,	7.	துணைநலம் ஆக்கம்தரும்	19
,,	8.	நட்பின் அறைகூவல்	20
,,	9.	பிழைபொறுக்கா உடன்பிறந்தான் ...	22
,,	10.	தஞ்சமென்ற தம்பியைத் துறத்திய தமையன் ...	23
,,	11.	நட்பின் வளர்ச்சி	25
,,	12.	நட்பின் பெருமை	28
,,	13.	நட்பின் ஆர்வம்	31
,,	14.	சுக்ரீவனது ஆர்ப்பு	32
,,	15.	காண்மின்! அவன் பொன்னடி மெய்ம்மையே!	34
,,	16.	சொற்றிரும்பாமையின் சிறப்பு	39
,,	17.	புல்லறிவாளன் புறங்கூவல்	41
,,	18.	அறவுரையும் அறிவுரையும்	45
,,	19.	அச்சத்தின் அலங்கோலம்...	63
,,	20.	வீரமகளின் விலாபம்	55
,,	21.	மனைமாட்சி இல்லாள் மரபு	56
,,	22.	வாலியின் மறைவு	57
,,	23.	தாரையின் சோகம்	59
,,	24.	கடமைகளின் அலைமோதல்	61
,,	25.	சோகமும் கடமையும்	62
,,	26.	சுக்ரீவன் அங்கதன் முடிசூடல்	64
,,	27.	ராகவனின் பொறுமை	65
,,	28.	மழைகால எண்ணங்கள்...	66
,,	29.	நண்பன் நட்பின் கடமையுணர்தல் ...	68
,,	30.	இயற்கையின் கருத்துரைத்தல்	70
,,	31.	நட்பும் சீற்றமும்	72
,,	32.	அநுமனின் ஆய்வுரை	75
,,	33.	லட்சுமண சாந்தி	77
,,	34.	" உய்வில்லை செய்நன்றிகொன்றமகற்கு " ...	80

வர்க்கம்		விஷயம்	பக்கம்
,,	35.	"சொல்லற்க சொல்லிற் பயனிலாச்சொல்" ...	81
,,	36.	"காலத்தினுல் செய்தநன்றி ஞாலத்தில் மாணப்பெரிது" ...	83
,,	37.	வானரசேனையின் வருகை	84
,,	38.	வானரப்படையின் ஆயத்தம்	85
,,	39.	படை அணிவகுப்பு	87
,,	40.	நிலவுலகாற்றுப்படை	88
,,	41.	தென்திசை இலங்கை நோக்கி	91
,,	42.	குடதிசை மேருகாட்டி	94
,,	43.	வடதிசை இமயம்தாண்டி	96
,,	44.	தேவிக்கு கணையாழி அனுப்பியது ...	97
,,	45.	திருவருளைத் தேடும் தூய இயக்கம் ...	99
,,	46.	பூமண்டலம் வட்டவடிவமே	100
,,	47.	முத்திசைகளிலும் கைவிரிப்பு	102
,,	48.	தெற்கு யாத்திரையின் முற்போக்கு ...	103
,,	49.	தவணையின் இறுதி	104
,,	50.	குகைத்தவசி தரிசனம்	105
,,	51.	சுயம்பிரபையின் வரவேற்பு	107
,,	52.	தவமாதின் திருப்தி	108
,,	53.	தவணைகடந்து துன்பக்கடல்	109
,,	54.	கடமை உணர்மின், வீறுகொண்டு எழுமின்!	111
,,	55.	அங்கதன் வடக்கிருத்தல்	112
,,	56.	காரிருளில் ஓர் கதிரொளி	114
,,	57.	கதிரொளியில் இசைத்த செம்பொருள் ஒலி	115
,,	58.	கதிரொளி காட்டிய சுடரொளி	117
,,	59.	சுடரொளிகாண சுபார்சுவன் சரிதை ...	119
,,	60.	நிசாகரர்	121
,,	61.	அடாதுசெய்து படாதுபடுதல்	122
,,	62.	யாவர்க்கும் உண்டு இறைவனருள் ...	123
,,	63.	ராமநாம பிரபாவம்	125
,,	64.	வான்திறந்து வீற்றிருப்ப வீரர் வாரீர் ...	126
,,	65.	உரைகல்லில் பதம் பார்த்தல்	128
,,	66.	ஆஞ்சநேயனின் ஆத்மசக்திக்கு அவயமிடல்...	129
,,	67.	அநுமனின் எழுச்சி!	131

ஸ்ரீ:

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்.

கிஷ்கிந்தா காண்டம்.

முன்பு அயோத்தி நகரில், கோமதீ தீரத்திலுள்ள நைமிசாரணியத்தில் அமையப்பெற்ற அச்வமேத யாகசாலையில், மாமுனிகள், ரிஷிகணங்கள், அமைச்சர்கள், நகர மாந்தர்கள், வானரேசுவரர்கள், ராட்சசேசுவரர்கள் கூடியிருக்க, ஸ்ரீ சியாமள ரூபனை, சர்வலோக சரண்யனை, சர்வ ரட்சகனை, சர்வேசுவரனை, புருஷோத்தமனை, அயோத்யாபுரீசனை, அகில ஜனங்களது இச்சைகளைத் திருப்தி செய்பவனை, சர்வமங்களகரனை, ஸ்ரீ ராமச்சந்திரன் முன்னிலையில், குசலவர்கள் பதின்மூன்றாவது தினத்தில் ஆரண்ய காண்டம் 64-வது ஸர்க்கம் முதல் கிஷ்கிந்தா காண்டம் 9-வது ஸர்க்கம்வரை கானம் செய்கிறார்கள் :—

1. இயற்கை எழிலின் பேருதவி

[முன் காண்டத்தில் (ஆரணிய காண்டத்தில்) தவசிகளும், முனிகளும் ரகுநாதனைக் காணக் காத்துக்கொண்டிருந்தார்கள். அநேகர், மண்ணுலகை விட்டு விண்ணுலகிற்கு செல்ல விருந்தனர். ராம லட்சுமணர்கள் வைதேகியுடன் தண்டகாவனம் வந்து, தவசிகளைத் தரிசித்துப் பணிந்தனர். அவர் தங்கள் தவப்பயன்கள் யாவற்றையும் காணிக்கையாகச் செலுத்திவிட்டு ஸ்ரீராமசந்திரனைக் கண்டு களித்து அவனிடம் விடைபெற்று வானெய்தினர்.

உட்கருத்தறிந்த மெய்ஞானிகள், மோட்சமளிக்கும் பரமகாருணிகனை பகவான் ஸ்ரீமந்நாராயணனே நேரில் வந்து, அநேக காலம் தவமியற்றிய பெரியோர்களுக்கும், தவமியற்றத் துணை வேண்டிச் சரணமடைந்த மற்றவர்க்கும் சரணாகதி தருமத்தை நிலைநிறுத்திக் காட்டியதாக ஆரணிய காண்டத்தை நம் கவனத்திற்கு அறிவுறுத்துகிறார்கள். சர்வேச்வரனே, பக்தனைத் தேடி, அவன் தன்னையடைய வசதியளிக்கிறான். இக்காண்டத்தில் என்றும் தெளிவுறுத்துகிறார்கள். எனினும் நம்போன்ற பாமரருக்கு, தாசரதி நம் உறவினனாகவும் நமக்குகந்த பந்துவாகவும், நம்போன்ற ஒருவனாகவும் நாம் அவனைப் பின்பற்ற காட்டியுள்ள எளியவர்களுக்கு ஆதரவளித்து அவர்களுக்கு இடையூறாகயிருந்த அரக்கர்களை ஒழித்து துணைபுரிந்து காத்து நின்றான், என்று கண்டுகொண்டோம்.]

[இக்காண்டத்தில் நட்பின் பெருமையை காண்கிறோம். காணும்போதே காதலியை யிழந்த கணவன் வேதனையில் கலந்துகொண்டு அவனுடன் தேடி வாடுகிறோம். துணைகண்டு ஒருவாறு தேறுகிறோம்.]

மாபெரும் வனத்தில் ரிசியமுக மலையின் தாழ்வரை. மனத்தைக் கொள்ளை கொள்ளும் பம்பைக் கரையின் இயற்கை எழில் கமழும் ரம்மியக் காட்சி! வசந்த காலம், மணம்கமழும் மெல்லிய வாடை. சபரி ஆசிரமத்திலிருந்து, அவள் விண்ணுலகுக்குச் சென்றபின், புண்ணிய தீர்த்தங்களில் நீராடிப் புனிதமாகி, ராமலட்சுமணர்கள் இருவரும் ரிசியமூக மலைநோக்கி நடந்து வந்துகொண்டிருக்கிறார்கள். கவர்ச்சி பொங்கும் இயற்கையின் வனப்பு மனத்தையும் உணர்ச்சியையும் ஒன்றுபட்டு இழுக்கிறது,

தாமரை, கருநெய்தல், விதவித வர்ணமுள்ள மீன் கூட்டங்கள், பம்பா ஸரஸின் இயற்கை அமைப்பு முதலியன அவ்விடத்தைதேவலோகமாக்கி விளங்க வைத்துக்கொண்டிருந்தன, அவளல்லவோ இவ்வியற்கை வனப்பைக்கண்டு களிக்க வேண்டும் என்று ராமன் ஜானகியை நினைத்து நினைத்து பொருமுகின்றான். சீதையின் பிரிவாற்றாமையைத் தாங்கமுடியவில்லை. அவள் எங்குற்றாளோ, என்ன செய்கின்றனளோ, உயிருடனிருக்கின்றனளோ, எத்துயரத்தில் தவித்துத் தத்தளிக்கின்றனளோ? என்று எண்ணி எண்ணி மனம் விண்டு வாடி வதங்குகிறான்.

ராகவன் லட்சுமணனைப் பார்க்கிறான். "அப்பா! வைடூரியம்போல் கதிரவன் பிரகாசத்தில் ஒளிபெற விளங்கும் இப்பம்பையின் தீர்த்தத்தின் களிநடனத்தைப் பார், மலர்ந்த தாமரைகள் புன்னகை பூத்து பரிகசிக்கின்றன, இதைப்பார்க்க சீதை யில்லையே! இக்கரையிலுள்ள சோலையழகைக் கவனித்தாயா? மலையையொத்த உன்னத மரங்கள்; உல்லாசமாகவும் கம்பீரமாகவும் தலையசைக்கும் கிளைகள்; மந்தமாருதத்துடன் உரையாடுகின்றன. இவைகளுக்கு என்ன குறை? நம்முடைய பரதன் அயோத்தியைவிட்டுக் கிராமத்தில் தவசியாகித் தன் கடமையைச் செய்வதிலேயே காலங்கழிக்கிறான். ராஜ்ஜியத்தைப் பெற்றும் அவனுக்குச் சுகமுண்டோ? எனக்குச் சீதையைப் பறிகொடுத்ததால் இவ்வியற்கை யெழில் சோகத்தைப் பன்மடங்காய்ப் பெருக வைக்கிறது.

"ஐயோ! அவளின்றிய வசந்தகாலம் ஏன் வரவேண்டும்? இப்படிப் புஷ்பங்களைக் கொட்டிக்கொண்டு மங்களகரமான சோபையும் சாந்தியும் அலட்சியமாய் தன் தன் போக்கே போகின்றன. வாழ்க்கைப் பாதையின் மேடு பள்ளங்களைப்பற்றி அக்கரை இவைகளுக்கு ஏன்? இதோ பார்! எங்கும் பச்சைப்பசேலென்று படர்ந்த புல்தரை, பலவகை புஷ்பங்களால் இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டனவாகக் கண்ணைக் கவர்கின்றன. அதோ நீலமும், பசுமையும், மஞ்சளும், சிவப்புமாக வர்ணம்தீட்டின புஷ்பங்கள் படிந்து அமர்ந்து இளைப்பாறக் கூவியழைக்கின்றன. இவ்வழைப்பைக் கண்டு களித்துப் பிறரைக் களிக்கவைப்பவள் எங்கே? பூசொரியும் கொடிகள் புனைந்த மரக் கிளைகள் மேலே பந்தலிட்டு இச் சமவெளியைக் குளிரவைக்கின்றன. வசந்தத்தின் மந்தமாருதம் என் மனக்கொந்தளிப்பை விசிறிக்கொண்டு வீசுகிறது. மெல்ல நடந்துபோ! இதோ நாம் செல்லும் வழியெல்லாம் இனிய சுவை முதிர்ந்த தீங்கனிகள் புல்லின் மேல் அமர்ந்து பரவி பசிதாகத்தைப் பறக்கடிக்கக் காத்திருக்கின்றன.

" இம்மலையடிவாரத்தில் செல்லும்போது நம்மேல் மலர்மாரி பொழிவதைக் கவனி. பலவித மரங்களின் அடர்ந்த உயர்ந்த கிளைக் கொடைகள் வானளாவிக் கூவி யழைப்பதின் தனியழகைப் பார். இம்மெல்லிய காற்றின் தவழுதல் ஜீவராசிகளை ரஞ்சிப்பிக்க, ஒவ்வொன்ருகக் கனிகளை உதிர்க்கின்றது. எங்கும் பூங்கொத்துக்கள் தொங்கி அவிழ்ந்து மெதுவாகக் கீழே இறங்குவதும், மணம் கமழும் நறுமணமும், பட்சி விலங்கினங் களையும் இவ்வுற்சாகத்தில் தொட்டழைக்கின்றன. இப்பருவ காலத்தில் எழுந்த வண்டுகள் இன்னிசை யெழுப்பி, கிளைகளிலுள்ள கோகிலங்கள் முதலிய பக்ஷிகள் தொனிகளில் கலந்து தம்புரா நாதமாக இயற்கைக் கானத்தை ஒலிபெருக்கிப் பறந்து வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கங்கே குகைகளிலிருந்து வெளிவரும் காற்று மரக் கிளைகளைப் பிரித்தும் சேர்த்தும் 'ஜோ'! என தொனித்தும் அகில், சந்தனம், தாழை இவைகளின் மணத்தைத் தெளித்தும் போகின்றது. மனோரம்யமான மலையடிவாரத்தில் எழுந்து உயர்ந்த பெரும் மரங்கள், மலைக் குன்றுகளையும், சிகரங்களையும் ஒன்ருேடொன்று அமைதிப் பெருக்கில் இணைக்கின்றன. எங்கும் மலைகள், உயர்ந்த அடர்ந்த மரங்கள், எங்கும் புஷ்பங்கள்; பூமண நீரோடைகள் அவைகளின் அன்னங்கள், இவ்வனப்பின் கவர்ச்சியை அதிகரிக்கின்றன."

ராமனும் லட்சுமணனும் நடந்துகொண்டே ரிசியமூக பர்வதத்தை அணுகுகிருர்கள், மலையடிவாரத்தைவிட்டு அதன் மற்ருெரு பக்கத் தாழ்வரை வந்துசேருகிருர்கள். ஒரே சமவெளி, புல் நிறைந்த பூக்கள் உதிர்ந்த குளிர்ந்த பூமி. அங்குமிங்கும் குயில்கள் ஜதை ஜதையாய் ஓடிக் கூவுகின்றன. குயிலின் சப்தம் ராகவனுக்கு மைதிலியின் குரலை நினைப் பூட்டுகிறது. நீர்க்கோழியின் தொனியும் இவ்வொலியைக் கேட்டு அன்ருெரு நாள் வைதேகி மிக்க மனத்திருப்தி யடைந்தாள், பிறகு தன்னை வெளியே யழைத்து அவள் ஆனந்தத்தில் தன்னையும் களிக்கவைத்தாள் என்று அண்ணன் தம்பிக்குப் பர்ணசாலை வாழ்க்கையை வரைந்துகொண்டு சென்ருன். அவர்கள் அங்கு சற்று தங்கினபோது, பலவகை பறவைகள், பலவித தொனிகளுடன் அங்குமிங்கும் பறந்து களிப்புறுவதைக் கவனிக் கிருர்கள். வசந்தருதுவானதால் பறவையினங்கள் ஜதை ஜதையாய்க் கூடியிருப்பதைக் கண்டு காதலியைப் பிரிந்த கணவன் அடக்கமுடியாத வருத்தமடைகிருன். 'பிருங்கராஜ' மென்னும் வண்டுகளின் ரீங்காரம் ஜானகிக்கு இன்பமூட்டுமே, என்று புலம்புகிருன். வசந்த காலத்தின் இயற்கைக் குளிர்ச்சி, அவன் உணர்ச்சியைக் கோடைக்காலக் கனலாக எரிக் கின்றது. பூங்கொத்துக்களைக் கண்டதும், அவைகள் தணல்கள் என்று உணர்கிருன். வண்டுகளின் ரீங்காரத்தை அவன் மனப்புண்ணில் கோலிடுவ தாகக் கருதுகிருன்.

" கருணை பொழியும் கண்ணழகி, அழகுற்ற கூந்தலுடையாள், தேன் மொழியாள், இப்பருவகாலத்தைக் கண்டு களிப்புறுபவள், அவள் இங்கு இல்லையே" என்று வாய்விட்டுத் துடிக்கிருன். அவள் களிப்பிலேயே தன் களிப்பைக் காணும் மெய்க்காதலன், அவள் மறைந்துவிட்டுத் தன்னைச்

சோகத்தில் ஆழ்த்தி, இப்பொழுது இவ்வெழில் பொழியும் வசந்த காலம் படர்ந்து பரவவும் அக்கினிச் சுவாலையாகத் தன்னை முழுவதும் எரித்து விடுகிறதாகத் தம்பியிடம் முறையிடுகிறான்.

சற்றுதூரம் சென்றதும் எங்கும் மயில் கூட்டங்கள். தோகை விரித் தாடும் ஆண் மயில்களின் கம்பீரத் தோற்றம் காதலியைப் பறிகொடுத்த காகுத்தனைக் கேலி செய்வதுபோல் காண்கின்றன, அவைகளுடன் சரச மாடப் பேடுகள் வந்து கூடுகின்றன. இவைகளின் ரதிகேளிகள் இன்னும் அதிகமாக அவன் துயரத்தை வளர்க்கின்றன. பிரிந்துபோனவளைப் பற்றி எண்ணி எண்ணி ஏங்கி, "ஐயோ! என்னை விட்டுப் பிரிந்த அந்தப் பதி விரதா சிரோமணி உயிர் தரியாள்' என்று கதறுகிறான். மணம் கமழும் காற்று அவனை அக்கினிச் சுவாலையாய்த் தகிக்கின்றது. பூக்களும் கனி மரங்களும், அன்னம் நிறைந்த ஓடைகளும், தாமரைத் தடாகங்களும் அவன் கண்ணைக் கவர்கின்றன. அவள் இருந்து இவ்வியற்கை யெழிலை அனுப விக்க வில்லையே; அவள் எங்கே போய்விட்டாள் என்று கண்ணீர்விட்டு கூவி யழைக்கிறான். அப்பொழுது ஒரு பறவை பறந்து வந்து கிளையிலுட்கார்ந்து தன்னைப் பார்த்துக் கூவுவதாகக் கவனித்து இனி தனக்கு நற்பலன் வரு மென்று உணர்வதாகத் தெரிவிக்கிறான். பின்பு இருவரும் அம்மலைத்தாழ் வரையை விட்டு மலையடிவாரத்தில் ஒரு பாதையைக் கொண்டு ஒரு பெரும் சோலைக்குள் நுழைகிறார்கள். 'ஜம்' என்று மணம்வீசும் ஜாதி மல்லிகை, பரிமளம் பரப்பும் பவழமல்லிகை, மலைமுல்லை, செந்தாழை, இலுப்பை, மகிழம் பூக்களின் மணம் ஆங்காங்கே பிரத்தியேக மாக வாசனையை மாற்றிக்கொண்டே யிருந்தன. பூஞ்சோலைக்கப்பால் அடர்ந்த மலைமரங்கள் வானளாவி நின்று குளிர்ந்த நறுமணம் கமழும் குகைச்சோலையாய்ச் சிங்காரித்து நின்றன. இவ்வழியே செல்லும் போதும், 'ஐயோ! தடங்கண்ணாள், கல்யாணி, இன்னிசை மொழியாள், சிற்றிடையாள், பொற்கொடியாள், பூமண மூச்சுடையாள், உயிர், உடல், உள்ளங்களைக் குளிரச் செய்பவள், சாந்தஸ்வரூபி, கருணைப் புன்னகை அரும் பும் அன்ன நடையாள், ஜானகி தன்னுடன் நடந்துவரவில்லையே, எங்குத் தவித்து எவ்வாறு துயருறுகிறாளோ வென்று புலம்பி பெருமூச்சுவிட்டுத் தள்ளாடினான். "லக்ஷ்மணா! நான் இனி உயிர் தரியேன். என் மனம் துடிக் கிறது. அவளை இனி என்று காண்பேன்? எவ்வளவு அருமையாகிவிட்டாள் அவள்! நீ இப்பொழுதே பரதனிடம்போய்ச் சேர்ந்துவிடு. என் மருமகள் சீதை எங்கே என்று கேட்கும் அன்னைக் கோசலையை எவ்வாறு பார்ப் பேன்"? என்று கதறிக்கொண்டு வேதனை தாங்காது அப்படியே அப்புல் தரையில் உட்கார்ந்துவிட்டான்!

லட்சுமணன் அண்ணலின் மன வேதனையைக் கண்டு தானும் உள்ளம் கலங்கி, பின்பு மனந் தேர்ந்து ராமனைத் தேற்றித் தன்னிலை யடையச் செய்யும் சேவையில் இறங்கினான்.

"'காகுத்தா'' என்று மிக்க வணக்கமானதும் திடங்கொண்டதுமான குரலில் தமையனைக் கூவியழைத்தான். "புருஷோத்தமா! உலகிலே கிடைக்கப்பெறாத மாபெரும் அருமைத் தேவியையடைந்து அவளைப் பிரிய நேர்ந்ததால் துக்கப்படுவது சுபாவமே, எனினும் ஐயனே! உங்களுக்கு ஒன்று நினைப்பூட்டுகிறேன். உலகத்தில் வாழ்க்கையில் தருமம் ஒன்றே தலைசிறந்த லட்சியமாகும். தருமத்தைத் தாங்கி நிற்பவன் இவ்வுலகில் அடையமுடியாதது எதுவும் இல்லை. மகாத்மாவிற்குத் தரணியே தலைகொடுத்துத் தாங்கும். தெய்வம் அவன் தரும வாழ்வையே நிறம்படச் செய்யும். எந்நிலையிலும் அவனுக்குத் தைரியமின்றித் துன்பமேது? அத்தகைய தருமாத்மாவான தேவரீர் தருமத்தைக் கடைபிடிக்கவே கானகமெய்தினீர்கள். அதன் பொருட்டு எதையும் சகிக்கும் வன்மையாளர் நீர். தங்களுக்குத் தகுமோ இத்தகைய மனச்சோர்வு? சுகதுக்கமிரண்டையும் ஒரு நிகராக நினைத்து நன்னெறி செல்லும் தரும வீர தீரன் மனத் தளர்ச்சிக்கு இடம் கொடுப்பதுண்டா? சத்தியத்தைச் சற்று சிந்தனை செய்வீர்களாக. அதன் சக்தியையும் நினைப்பீர்களாக! ஜானகியை அபகரித்தவனை இந்த நிமிஷமே கண்டுபிடிக்காது இடையில் இப்படித் தயங்குவதற்கு அவகாசமேது? சுவாமி! தருமத்தில் நிலைபெற்றவரும், சத்தியத்தைப் பிராணனுகக் கொண்டவருமான தேவரீர் எத்தகைய கொடிய பாவத்தையும் களைந்தொழித்துக் கட்டும் கடமையைப் பற்றி சிந்திப்பீர்களாக. ஐயனே! வீண் கவலை ஏன்? சத்தியத்தின்முன் அசத்தியம் நிற்குமோ? அன்னையைத் திருடிச்சென்ற மாபாதகன் இதோ மடியப்போகிறுன். இதோ தேவரீரும் தேவியைத் திரும்பி அடையப் போகிறீர்கள். இதில் சந்தேகமென்ன? புருஷோத்தமா! மனக்குறை ஒழியட்டும்; சோகம் அடங்கட்டும்; உங்கள் வீரமும் தீரமும், விடாமுயற்சியும் ஓங்கட்டும்; வெற்றி விளங்கட்டும்; ஆத்மஸ்வரூபமான செயலாற்றும் சக்தியறிந்த மெய்ஞானியாகிய தாங்கள் மெய்யான புருஷத் தன்மையை யடைந்து ஆற்றலுடன் மேல் நடக்க வேண்டியதை இப்போதே எனக்கு ஆக்ஞை இடுவீர்களாக'' வென்று வீரமொழி முழங்கினுன் ராமாநுஜன்.

இவ்வாறு தேறுதல் செய்யும் லட்சுமணனைக் கவனித்தான் ராகவன். ஆம்! எது எவ்வாருயினும் மனிதன் தன் கடமையைச் செய்தேயாக வேண்டும். தருமத்தில் நிற்பவனும், சத்தியத்தைக் கடைபிடிப்பவனும் தன் கருமத்தைச் செய்து முடிப்பதே தன் சுபாவத்திற்கு ஏற்றதாகும். உடனே எழுந்து பாதையில் இருவரும் சென்றனர். மரச்சோலையை விட்டு மறுபடியும் சமவெளி வந்தனர்.

இவர்களிருவரையும் வெகுதூரத்திலிருந்தே கவனித்து வந்தான் வானரத் தலைவனுன சுக்கிரீவன். இவர்கள் பம்பையைக் கடந்ததையும், பின்பு திரும்பினதையும், மலையடிவாரம் வருவதையும், காணமற்போன ஒரு பொருளைத் தேடுவதாகத் தோன்றுவதையும் கவனித்துவந்தான். 'என்ன இது? இவர்கள் யார்? யாரைத் தேடி வருகிருர்கள்?' என்று சந்தேகம் கொண்டான். பின்பு இவர்கள் வாலியால் அனுப்பப்பட்டவர்கள், என்று பயங்

கொண்டு தன்னைச் சூழ்ந்த வானரர்களுடன் தனக்கு ஆபத்து வராத இடமான மதங்க முனிவரின் ஆசிரமத்தில் நுழைந்து மறைந்துவிட்டான்.

[இக்காண்டத்தின் முதன் முதல் ஸர்க்கமாக வசந்தருது வர்ணனை பலவண்ணச் சித்திரமாக ஜீவனூட்டும் எழுத்துக்களில் வரைந்து கொடுத்திருக்கிறார், வான்மீகி ஆதிகவி! என்றும் இணையற்ற ஓர் அமர காவியமாக இவ்வர்ணனை தோன்றி அமைந்திருப்பது சிறிய கருத்துக்களுடன் மானிட சமுதாயத்திற்கே ஓர் முக்கிய படிப்பினையாகவும் அமைகின்றது. இயற்கையில் அற்புதமான ஓர் தூய எழில் எழுந்து பரவுகிறது. ஜீவராசிகளின் மன ஓட்டங்களை சற்று மந்தமாக்கி சாந்தியடையச் செய்கிறது. தனிப்பட்ட ஓர் சிந்தனை செய்பவன் இங்கு இவ்வியற்கை எழிலைக் கண்டு தூய எண்ணங்கொண்டு தவத்திலும் தெய்வ வழிபாட்டிலும் இயங்குகிறான். அரசியல் முறையில் இத்தகைய எழில் பொழியும் சோலைச் சோபையை அவ்விடத்து அரசாங்கங்கள் எல்லா மக்களும் கண்டு களிப்புற வசதியளிப்பதில் முனைவதுண்டு. உண்மையான உயர்தர ராஜரீகமான முறையில் அவ்வரசாங்கம் மற்ற நாடுகளின் மக்களும் இவ்வதிசயமான இயற்கைக் கண்காட்சியை வந்து கண்டு களிப்புறுமாறு அழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும். எனவே, எல்லா ஜீவராசிகளும் கண்டு இன்பமுறும் இயற்கை சிருஷ்டி உலகிற்கே ஓர் பொது உடமையாகி விடுகிறது. மானிட சமுதாயமே ஓர் சகோதர பிணைப்பில் ஒன்றிக்கொண்டு இப்படைப்பின் விசேஷத்தையும் விளைவுகளையும் ஆராய்ந்தறிந்து இறைவனைக் காண சக்தி உருவாகுவதை உணர்கிறது. இம்மனமார்ந்த உணர்ச்சி உற்சாகத்தை இழைத்து, ராமலட்சுமணர் விஷயத்தில் விடா முயற்சியை ஊக்கவைக்கின்றது.]

---

2. பேரருள் பெற அச்சம் அழியவேண்டும்.

தன்னுடைய துணைவர்கள் வந்து சேர்ந்தவுடன் சுக்கிரீவன் தன் சந்தேகத்தை அவர்களுக்குத் தெரிவித்தான். தூரத்தில் கண்ட இரு மனிதர்கள் சிறந்த ஆயுதம் தாங்கியவர்களாகவும், சூரர்களாகவும், மகாத்மாக்களாகவும் தோற்றமளிக்கவே, சுக்கிரீவன் மிகவும் சிந்தை கலங்கினவனாய் வெருட்சி கொண்டு, "புகுதற்கரிய இவ்வனத்தில் வந்த இவர்கள் யாவர்? வாலியால் அனுப்பப்பட்டவர்களா? எனக்குக் கவலையும் பயமும் அதிகரிக்கின்றனவே!" என்றான்.

[இறைவனருள் தேடி வரும்போது அச்சமுற்று அகலுகிறவர்கள் நம்முள் பலபேர் இருப்பார் போலும்!]

இதைக்கேட்ட அநுமான், "வானரோத்தமா! ஏன் சிந்தை கலங்க வேண்டும்? வாலியைப்பற்றிய கலவரம் வேண்டாம். இங்கு அவன் வர முடியுமா? இது மலயமெனும் மலை. இங்கு அவன் வந்தால் முனிவரின் சாபத்தால் அழிந்துபோவான் என்பதை மறந்துவிட்டீர்களா? அவனிடமிருந்து நமக்கு இங்கு ஆபத்தென்பது கிடையாது. ஆகையால் மனக்

கலக்கம் வேண்டாம். ஸௌம்மிய! எவனைக்கண்டு பயம்கொள்கிறீர்களோ அவன் இங்கில்லை. மனவுறுதி கொள்ளுங்கள். பயத்தை ஒழியுங்கள். எல்லாவற்றையும் தீர விசாரிப்பதில் வல்லவரான தாங்கள் இவ்வாறு இவர்களைக் கண்டதும் தைரியத்தை இழக்கலாமா?" என்று தேற்றவே, சுக்கிரீவனும் ஒருவாறு மனந்தேறினன். "அநுமானே! நீர் சொல்லுவது உண்மையே, எனினும் இவர்கள் நீண்ட கையுள்ளவர்கள், பரந்தகன்ற மார்பைக்கொண்டவர்கள். ஆயுதங்களை அணியாகக் கொண்டிருக்கிறார்கள். தேவகுமாரர்களைப்போல் காந்தி யுள்ளவர்கள், இவர்களைக் கண்ட மாத்திரத்தில் எவனுக்குத்தான் திகிலுண்டாகாது? இவர்கள் வாலியால் அனுப்பப்பட்டவர்களென்றே எண்ணுகிறேன். இவர்களை ஒருவேளை வாலி துணையாய்க் கொண்டிருக்கிறானே என்னவோ? இதை விசாரித்தறிய வேண்டும். இவர்கள் கருத்துதான் என்ன? இவர்கள் ஏன் நாமிருக்குமிடத்திற்கு வரவேண்டும்? இவர்கள் சிறிதும் பயமின்றிக் கலவரமின்றிக் கம்பீரமாக உலாவி வருவதின் காரணமென்ன? அவர்கள் நடையழகில் ஏழும் வீரம் விலங்கினங்களை வெருட்டியடிக்கின்றது. பாரும்! வாலி தன் இச்சையை ஈடேற்றிவைக்கும் வன்மை யுள்ளவன். மேதாவி, மாறுவேடம் பூண்டவரை உபயோகிக்கும் சக்திபெற்றவன். காலத்துக்குகந்தபடி யோசித்து நடக்கும் நுண்ணறிவுகொண்ட நீர்தான் இவர்களைப்பற்றி அறிந்து வரவேண்டும். என்றான்."

"நீர் அவர்களிடம் மாறுவேடம் கொண்டு அணுகவேண்டும். அவர்களின் அபிப்பிராயத்தையும், அவர்கள் இங்குவரும் கருத்தையும் நுட்பமாகக் கேட்டறிந்துகொள்ளும். அவர்கள் நல்லெண்ண முடையவர்களானால் அவர்களைப் புகழ்ந்து உபசரித்து அவர்களின் விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ளும். அவர்களுடன் நட்புக்கொள்ளும். நம்பிக்கையைப் பெற்று நம்மவராகச் செய்துவிடும்" என்று கூறினன். அநுமான் 'அப்படியே செய்கிறேன்' என்று சொல்லிவிட்டு ராமலட்சுமணர்களிடம் புறப்பட்டான்.

---

3. பூங்கழல் பணிந்து மெய்ப்பொருள் காணல்.

வாயுகுமாரன் சுக்கிரீவனுடைய கட்டளைப்படியே வந்திருக்கும் இளங்குமாரர்களைக் காணவேண்டி, வானர உருவத்தை விட்டு பிக்ஷு வடிவமாகி ராம லட்சுமணர்களுடன் வந்துசேர்ந்தான்.

மிக்க வணக்கத்துடன் அவர்களை விதிப்படி மரியாதை செய்தவண்ணம் அவர்கள் தோற்றத்தையும் அவர்களின் தரிசனத்தால் விளைந்த உள்ளக் களிப்பையும் விளக்கினான். "பெரியோர்களே! நீங்கள் ராஜரிஷிகளையும் தேவர்களையும் ஒத்திருக்கிறீர்கள், அருமையான காந்தியுடையவர்களாய்க் காண்கிறீர்கள். உங்களது வீரதீர கம்பீரத் தோற்றம் இவ்வனத்தைச் சோபையுறச் செய்கிறது. உங்களைக் கண்டு மிருகங்கள் இயற்கையாக (தீமை நன்மையைக்கண்டு மறைவதுபோல்) பயந்தோடி ஒளிகின்றன. தவசிகளாய்த் தோன்றும் நீங்கள் இங்கு எழுந்தருளின காரணம் யாதோ? ஒப்பற்ற எழில் மணம் கமழும் உங்கள் தோற்றம் மனச்சாந்தி யளிக்கிறது. தூய உணர்ச்சி எழுப்புகின்றது. உங்கள் பொன்மேனியும் சலியா பராக்கிரமம் காட்டும் புஜங்களும்; பெருமை பொழியும் கம்பீரப் பார்வையும், வீர வடிவமும், அரிமாவின் ஆற்றலும், ஆண்மையை அளந்துகாட்டும் அவயவங்களும், இந்திரனது வில்லொளிகொண்ட உங்கள் தனுசும், உங்களிடம் காணும் ஓர் அற்புத காந்தியும் அதன் இயற்கையாய் அமையப் பெற்ற கவர்ச்சியும் யாவர் மனக் கவலையுமொழித்து மின்னொளிபோன்ற மனக்களிப்பெழுப்பி உங்களிடம் இழுத்து உங்களிடமே நிறுத்திக்கொள்ளும் வன்மை கொண்டனவென்று உணர்கிறேன். இத்தகைய அபூர்வ அதிசய சக்தி விளங்கும் நீங்கள் யார், என்று நான் அறிய அருள் புரிவீர்களாக.

"இதோ இம்மலையும் அதைச்சூழ்ந்த பிரதேசமும் உங்கள் வரவினால் ஒளிபெற்றுத் திகழ்கின்றதைக் காண்கிறேன். எனினும், வெறும் மரவுரியுடுத்திய உண்மைத் தவசிகளை மாத்திரம் தரிசிக்கிறேன் என்று நான் எண்ணவில்லை. உலகெலாம் தன் ஒரு குடைக்கீழ் ஆளுகின்ற ஏக சக்ராதிபதியின் ராஜலட்சணங்களைக் காண்கிறேன். நீங்கள் வருகையில் பம்பைக் கரை மரங்களைக் கவனித்து வந்ததை அடியேனும் கவனித்து வந்தேன். இதனால் கடுமையான விரதங்களை அனுஷ்டித்தவர்கள் நீங்கள் என்று தெளிவாயிற்று. உங்கள் நடையில் ஓர் சுறுசுறுப்பு, எதற்கும் சலியா பேராண்மையை விளக்கும் சாந்தமூர்த்திகளின் காம்பீரியம், பொற்காந்தியுற்ற தேக மினுமினுப்பு, காணற்கரிய புஜங்களின் சீரமைப்பு, காண் போரைக் கடிதில் அடிமையாக்கும் ராஜபார்வை, சிம்மத்தின் கடினத்தையும், ரிஷபத்தின் கமனத்தையும், யானைத் துதிக்கையின் பிடிப்பையும், விவரிக்கும் கரங்களின் தோற்றம், இந்திரனின் வில் ஒளி இதுதான் என்று காட்டும், அக்கரங்கள்பற்றிய சிறந்த விற்களின் காட்சி; இவை யாவும் யாவரையும், எப்போதும், உள்ளும் புறமும் களிப்புறச்செய்து காந்தம் போல் உங்களிடம் அழைக்கின்றனவே! இப்படி உங்களை யடைந்தவர்கள் தானாக மனமாரச் சொல்லும் சொற்கள் இவை—ஆஹா! எத்தகைய சீமான்கள்! அபூருப சௌந்தரியம்! தூய ஒளி வீசுபவர்கள்! உவகையுடன் நான் பணியும் நரோத்தமர்கள் எதிரிகளற்றவர்கள்! இக்குளிர் ஜலங்கொண்ட நதியை சோபையுறச் செய்கிறீர்கள் நீங்கள்!

ஐயன்மீர்! நீங்கள் யாரோ? அரசுரிமை விளங்கப் பெற்றவர்கள், தேவர்கள்போல் தோற்றமளிப்பவர்கள், உங்கள் தாமரை இதழ்போன்ற

கண்கள் வீரம் பொலிகின்றன. சடைமுடி புனைந்து ஒருவரை யொருவர் ஒத்திருக்கிறீர்கள்; வைகுண்டத்தை விட்டு இங்கு எழுந்தருளியிருக்கும் விஷ்ணு பகவானோ? எதேச்சையாய் மண்ணுலகை யடைந்த சந்திர சூரியர்களோ? தெய்வ ரூபங்கொண்டு வீரத்தையும், தீரத்தையும், ஆற்றலையும், ஆர்வத்தையும் விகசிக்கும் விசால மார்பழகையும், சிம்மப் பிடரியின் கழுத்தையும் காளையின் சுருசுருப்பையும் விளக்கும் மேன்மையுற்ற உயர் மானிடர்களாய்க் காட்சியளிக்கும் தேவரீர்கள் யார் என்று அறியலாமா? இவ்விடத்திற்கு விஜயம் செய்யும் காரணம் யாதோ? உழல் தடியொத்த எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்படவேண்டிய கரங்கள் ஏன் அலங்கரிக்கப்படாமலிருக்கின்றன? கடல், வனங்கள் கொண்ட, விந்தியம், மேரு மலைகள் இவைகளால் அலங்கரிக்கப்பெற்ற இப்பூமண்டலமனைத்தும் சர்வாதிகாரிகளாய் ஆளவல்லவர்கள் நீங்கள் என்பது என் திடமான நம்பிக்கை. விசித்திரமான லக்ஷணங்களுடன் மின்னும் பொன் பூச்சு கொண்ட உங்கள் விற்களிரண்டும் இந்திரனது வஜ்ராயுதங்களோ? அழகுற்ற உங்கள் அம்பருத் தூணிகள் நிறைந்திருக்கும் பாணங்கள் எத்தகைய மென்மை வாய்ந்தவைகளென்று புலனாக்குகின்றன. அவைகள் கொழுந்து விட்டெரியும் அக்கினிச் சுவாலைகள், இலக்கு தப்பாதவை. உயிரை மாய்க்க வல்லவை. வீண்போகாதவை. இதை ருசுப்படுத்த, அழுத்தமான தங்கப்பிடி பூண்ட பளபளப்பும் கூர்மையுங்கொண்ட உங்கள் வாட்கள் சட்டை கழற்றிய இரண்டு கால சர்ப்பங்களா?

ஐயனே! இவ்வாறு பேசியும், அடியேனைப் பார்த்து ஏனோ வாய்திறவாதிருக்கிறீர்கள்? தர்மாத்மாவும், வீரரும், வானரத் தலைவருமான சுக்கிரீவன் என்பார் ஒருவர் தன் அண்ணனால் துரத்தப்பட்டு துக்கமடைந்து உலகில் அலைந்து திரிந்துவருகிறார். வானரத் தலைவரும் ராஜாவுமான அம் மகாத்மா சுக்ரீவரால் உங்களிடம் அனுப்பப்பட்ட தூதன் நான். நானும் ஓர் வானரன். அநுமான் எனப்படுபவன். அந்த புண்ணியாத்மா உங்களிருவரின் நட்பைப்பெற அவாக்கொண்டிருக்கிறார். அடியேனை வாயு புதல்வனாகவும், வானரனாகவும், நினைத்த ரூபமெடுப்பவனாகவும், அச்சுக்கிரீவர்க்கு நன்மைசெய்ய எண்ணி பிக்ஷு ரூபமெடுத்து ரிச்யமூகத்திலிருந்து எங்கும் செல்ல வல்லவனாகவும், அவருடைய மந்திரியாகவும் நீங்கள் திருவுளத்தில் பற்றுவீர்களாக'' என்று சொல்லி முடித்து மௌனமாயிருந்தான் ஆஞ்சநேயன்.

[மனத்தேயுள்ள தெய்வ எண்ணங்களும் அவைகளின் அநு குணங்களும் உருப்பெற்றுக் கண்முன் நிற்பதாக உணர்கிறான் வாயுதேவரின் புதல்வன். அவை உயர்திரு அற்புத மானிட ரூபத்தில் வடிந்திருப்பதைக் கண்ணாரக் கண்ட பிரமிப்பு, சர்வ ராஜ லட்சணங்கள் பொருந்திய உருப்பமைப்பின் அதிசயம், இவைகளைப் பூணப்பேணும் ஆபரணங்களின்மையின் வியப்பு, உண்மை பக்தனின் எளிமை, ஒழுக்கம், எல்லாம் ஒன்றுசேர்ந்து ஆஞ்சநேயனின் ஆத்மாவைத் தூய உணர்ச்சிபெற வைக்கின்றன. மனச்சாந்தியளித்து, ஆத்ம திருப்தி நீடிக்கும் ஓர் பெருமகிழ்ச்சி பரவ அறிவுடைமையால மாத்திரம் கிடைத்தற்கரிய பெருஞ் சாதனம் கிடைத்ததென்று தெளிந்து

பக்குவமடைந்த ஞானத்தாலும், உள்ளத்தின் குதூகலிக்கும் துடிப்பாலும், கண்ணுரைக் கண்டு, நெஞ்சாரப் பதிந்துபோன ராம லட்சுமணர்களின் ஈடு இணையற்ற, அற்புதத் தரிசனம் மாருதியின் உண்மைப் பக்தியை எழுப்பியது போலும்! உடனே துதிசெய்யும் ரிக்வேத முறையிலும், மந்திர சக்திவாய்ந்த யஜுர்வேத அக்ஷர அமைப்புத் தொடரிலும் இசை யொலிக்கும் ஸாமவேத உச்சரிப்பிலும், அதர்வண வேதத்தின் செயலில் பரிணமிக்கும் ஒலி அலைகளின் பிரயோகத்திலும் அமைகின்றன ஆஞ்சநேயனின் வரவேற்புரை. தூயவனிடம் தானே வந்தடையும் சித்திபோல் ஓர் தெய்விக அருள் தன்பால் வழங்கப்பட்டதுபோல் உணர்ந்து, பேரருள் ரஸானுபவம் காண்பனாய், பக்தி பரவசனாய், பிரமிப்பும், பேரன்பும் வெளிப்படுத்துபவனாய், " நீங்கள், யார் " என்கிறான். அதாவது, " நான் காண்பது உண்மைதானா "? என்று தொனிக்கும் மொழியில் எளிமையுடன் நிற்கிறான். இவர்களைத் தேவர்களாய் காண்கிறானோ அல்லது உத்தம மானிடர்களின் முதல்வர்கள், இவர்கள்; இவர்கள் உள்ளத்திலுண்டு இறைவன். இவர்களுக்குப் பணிசெய்தல் இறைவனுக்குப் பணியாற்றல் என்று உணர்கிறானோ, அச்சமயம் ஆஞ்சநேயனின் மனநிலை அவனேதான் அறியக்கூடும். எவ்வாறாயினும் இவ்வரிய புருடோத்தமர்களைக் கண்ட உடனேயே இவர்கள்பால் பேரன்பு கொள்கிறான். இது போதாது, தான்மாத்திரம் சுயநலத்தில் ஆனந்தம் கொள்ளலாகாது. மற்றவர்களும் இவ்வுணர்வடைந்து உள்ளங் களிக்கவேண்டுமென்றும், இவர்களையடைந்தமட்டில் எல்லா லட்சியங்களும் கைகூடுமென்ற நம்பிக்கையடைய வேண்டுமென்றும் எண்ணி முதல் முதலாகத் தான் சேவை செய்து வந்த சுக்கிரீவனுக்கு இவர்கள் ஆதரவு சித்திக்கவேண்டுமென்றும் இவர்களுக்குள் சக்கியஞ் செய்துவிடத் திட்டமிட்டான். இப்பேரன்புப் பெருக்கில், பின்னர் சுக்ரீவனும் ராகவனும் ஒருவரை யொருவர் கரம்பற்றி நட்புப் பூண்டு அளவளாவும்போது தானாகவே முற்பட்டு அக்கினி மூட்டி அக்கினி சாக்ஷியாக இருவருடைய நட்பை ஆணிவேராக நிலைநாட்டுகிறான். தன் புருஷார்த்தம் சித்தித்த உடன் சுக்கிரீவனுக்கும் அவன் புருஷார்த்தம் சித்திக்க வேண்டுமென்று நாடுகிறான்போலும்!]

மாருதியின் வரவேற்புரையைக் கேட்ட சீதாபதியின் முகம் மலர்ந்தது. லட்சுமணனைப் பார்த்து, "லட்சுமணா! நாம் எவனை எதிர்பார்த்து வந்தோமோ அவனே, தன் அமைச்சனை நம்மிடம் அனுப்பியிருக்கிறான். இவனோ உரையாடுவதில் சமர்த்தனாயும், உண்மை விசுவாசமுள்ளவனாகவும் காண்கிறான். இவனுக்கு நீயே பதிலுரைப்பாய், ரிக்வேதபயிர்ச்சியின் எளிமை, யஜுர்வேத பொறுப்புடைமை, ஸாமவேத இனிமை இவன் சொற்களில் பிரதிபலிக்கின்றன, வேதமோதும் ஞானமும் வியாகரணப் பரிசீலனையும் விளக்கும் இவன் மொழிகள் உண்மை யுணர்ந்தவனாகத் தெரிவிக்கின்றன. மனத்தில் சுத்தமுண்டு. அவயவங்களும் இங்கிதங்களும் இவன் களங்கமற்றவனென்று ருசுப்படுத்துகின்றன. சத்தியத்தை அடிப்படையாய்க் கொண்ட இவன் தன்மை சாத்விக முறையில் குரல் நயமுடன் பொருள்பட எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைகின்ற இவன் சொற்களால் தெளிவாகிறது. கத்திவுயர்த்தி எதிரிடும் விரோதியும் இவன் பேச்சில் ஆவேசந் தணிந்து உடன்படுவான். அரசனுக்குரிய தூதன், இவனை அமைச்சனாயடைந்த அரசன் புகழ் வளர்ந்துகொண்டிருக்கும், அரசனின் அலுவலை

வெற்றியுடன் முடித்துக்கொடுக்கும் அமைச்சன் எந்த அரசனிடம் இல்லையோ அவன் அபாக்யவான். ஆகவே, லட்சுமணா! இவனுக்குத் தகுந்தபடி பதிலுரைப்பாயாக", என்றான்.

லட்சுமணனும் அநுமானுடன் பேசவாரம்பித்தான். "பேரறிவு படைத்தோனே! பெருமைகொண்ட சுக்ரீவனுடைய குணங்கள் எங்களுக்கு முன்பே நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. வானரராசனான அந்த சுக்ரீவனையே நாங்களும் தேடி வந்திருக்கின்றோம், உண்மை யறிந்தவரே. சுக்கிரீவனுடைய கருத்தை உம்முடைய மொழிகளால் நன்கறிந்தோம்! அவன் எதைக்கோரி, என்ன செய்யவேண்டுமென்று உம்முடைய வார்த்தைகள் தெளிவாக்கினவோ அதை நாங்கள் செய்து வைப்போம், ஐயம் வேண்டாம்" என்று சுருக்கமாகப் பதிலுரைத்தான்.

லட்சுமணனுடைய இனிமையைக் கேட்டதும் அனுமானது உணர்ச்சி புத்துயிர் பெற்றுப் பரவிற்று. இலக்குவன் இங்கிதமாக உரைத்த மொழிகளின் உண்மையை அநுமான் உணர்ந்து, மனக்கவலையை அறவே யொழித்து ஆதரவை யளிக்கும் இவ்விடையைக்கண்டு உள்ளம் களித்தான், நினைத்த காரியம் கைகூடுவதில் இனிச் சந்தேகமில்லையென்று தெளிந்து, அங்கம் பூரித்து, அவர்களிடம் உண்மை நண்பனாக உரையாடித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று உறுதிகொண்டான்.

4. சொல் வன்மையின் சிறப்பு

அநுமான் அடைந்த உள்ளக் களிப்பிற்கு எல்லையேயில்லை. மேலும் மேலும் அவனது உவகைக் கடல் கொந்தளித்து அலை மோதிற்று, தன் உள்ளத்தில் ராம லட்சுமணர்களைக் கண்டு அவர்களைப் பணிந்ததும் அவர்கள் அவனை அங்கீகரித்து அவன் எண்ணம் பூர்த்தியாவதில் எள்ளளவும் சந்தேகமில்லை என்று தெளிவாக்கும் பெருந்தன்மை மொழிகளைக் கேட்டதும் இதுவரை கண்டிராத ஆறுதலடைந்தான். கரைபுரண்டெழுந்து மேன் மேலும் உயர இழுத்துச் செல்லும் ஒரு தூய்மையான உணர்ச்சி பரவ உள்ளம் பூரித்து உண்மை பக்தன் வழிபடும் கோயிலிறைவன் பிரசன்னமானதைக் கண்டவுடன் அடையும் உள்ளக் களிப்பையும், விவரிக்க இயலா ஆனந்தத்தையும் அடைந்து அப்படியே நின்றுவிட்டான், ஆம்! மனித உருவத்தில் மனிதனின் உள்ளக்கருத்தை யுணர்ந்து, உகந்ததைத் தானே அளித் தருளும் மாட்சிமை பொலியும் பார்வையைக்கண்ட எவன் தான் தன் மனோரதம் கைகூடப் பெறுதவனாகவிருப்பான் என்ற எண்ணங்கள் அநுமான் மனத்தில் ஊடுருவிச் சென்றதின் அடையாளமாக சுக்கிரீவனைப் பற்றி நினைத்தான் ஆம்! இத்திவ்விய புருஷனையடைந்த சுக்கிரீவன் தன் மனோரதத்தை நிறைவேறப் பெற்றவனேயாவான் என்பதில் சந்தேக

மென்ன? அவனே வாலியின் ராஜ்யத்தையடைய விரும்புகிறுன். இம்மகா புருஷனல் அதையும் அடையலாம், என்று உறுதிகொண்டு "சுக்ரீவனைக் காண நாங்களே வந்திருக்கிறோம்" என்ற லட்சுமணரின் வார்த்தைகளை நினைத்து அதன் கருத்தை அறிய விரும்பி ராகவனை நோக்கி, "சுவாமி! கோரமாயும், அநேக விதமான கொடிய விலங்குகள் நிறைந்ததாயும், புகுந்து சஞ்சரிப்பதற்கும் இயலாததுமான இவ்வடர்ந்த பம்பையின் வனத்தைக் கடந்து இங்கு தம்பியுடன் வந்த காரணம் நான் அறியலாமா?" என்றார்.

ராகவன் பதிலளிக்கவில்லை. சுக்கிரீவன் தூதனையனுப்பி செய்தி அறிகிறுன். அம்முறையிலேயே ரகுநாதன் லட்சுமணன் வாயிலாக வந்த காரணத்தைச் சொல்லியனுப்புகிறுன். ராமானுஜன் பேசுகிறுன்:-

"கேளும், சொல்லுகிறேன். அறநெறியில் நின்று தருமத்தை ஒரு போதும் நழுவவிடாது நான்கு வர்ணத்தாரையும் நன்கு பரிபாலித்து வந்த கீர்த்திமானன தசரத சக்கரவர்த்தி என்பவர் அயோத்தியை ஆண்டு வந்தார். அவருக்கு எவரிடமும் வெறுப்பில்லை, எவரும் அவரை வெறுக்க வில்லை, எதிரிகளின்றி எல்லோர் நட்டையும் பெற்று தேச பிதாவாகக் கருதப்பட்டு, எல்லோருக்கும் நன்மை வழங்கி எவருக்கும் இல்லை யென்னுது யாகங்களாலும் பலவித தானங்களாலும் தெய்வத்தையும் மக்களையும் மகிழ்வித்து வந்த புண்ணியமூர்த்தி அவர். அம்மகானுடைய முதல் மகன் இவர். எல்லோரும் இவரை ராமனென்று அழைக்கிறார்கள். பெயருக்கேற்ற உருக்கொண்டவர். யாவருக்கும் சரணியர்; தந்தையின் ஆக்ஞையைத் தலை மேல் தாங்கித் தருமமிழைப்பவர்; தசரத சக்கிரவர்த்தியின் புத்திரர்களுள் இவர்தான் தனிப்பெரும் குணக்குன்றில் நிற்பவர்; பொங்கிப் பெருகும் முக காந்தியுடையவர். ஐம்புலன்களையடக்கி ஆள்பவர். வீரன். ராஜலட்சணங் கள் பொலிந்த இவர் அரசைக் கைக்கொள்ள விருந்தார். அச்சமயம் நாட்டி லிருந்து வெளிப்பட்டார். அரசை விட்டு வெளிக்கிளம்பிக் காட்டில் வசிக்க வந்தார். நானும் அவரைப் பின்தொடர்ந்தேன், வானைத் தன் கதிரொளி யால் பொன்னுக்கவல்ல கதிரவன் போல் இவர் காந்தியை ஒளிவீசச் செய்து கொண்டு இவருடன் வந்தவர் இவர் மனைவி. நன்றியுள்ளவரும், சுகத்தினிருப்பிடம் தனதேயென்று தோற்றமளிப்பவரும், எல்லோராலும் பூஜிக்கத் தக்கவரும், எல்லாப் பிராணிகளிடத்தும் கருணை கொண்டவரும் செல்வத்தையும் சிம்மாசனத்தையும் துறந்து வனத்தையடைந்த இக்குண வானுக்குத் தொண்டு புரிவதற்காகவே இவரைப் பின்பற்றி வந்த இவருடைய இளைய சகோதரன் நான். லட்சுமணன் என்பது என் பெயர்,

"இவருடைய தருமபத்னியைத் தனியாயிருந்த சமயத்தில் மாய ரூப மெடுக்கும் ஒரு அரக்கன் அபகரித்துச் சென்று விட்டான் அப் பாதகன் யாரென்றும் அவன் எங்கிருக்கிறுனென்றும் அவனைப்பற்றிய வரலாறு ஒன்றும் அறியாதவர்களாயிருக்கிறோம். திதியின் புதல்வனன தனுஎனும் தானவன் சாபத்தால் கபந்தன்எனும் ராட்சத கதியை அடைந்தான். அவன் இவ்வுலகை விட்டு விண்ணுலகை அடையுமுன்,

வானரத் தலைவனான சுக்கிரீவன், இவர் மனைவியைத் திருடிப் போனவனைப் பற்றி அறிவிப்பார் என்றும், அவர் சமர்த்தரென்றும், அவருடைய நட்பைப் பெறும்படியும் சொல்லிப் போனார். ஆகையால் சுக்கிரீவன் உதவியை நாடி வந்திருக்கிறோம்'' என்று சொல்லி முடித்தான்.

[ஜானகியை அபகரித்துப் போனவர் அரக்க 'அரசனான ராவணன் என்று ஜடாயுவிட மிருந்து முன்பே தெரிந்திருந்தும், அவன் யாரென்று தெரியவில்லை என்று லட்சுமணன் சொன்னது பொய்யாகுமே வென்ற பிரச்னைக்கு இடமுண்டா வென்று அக்கால சூழ்நிலையைக் கவனிக்க வேண்டும். அநுமாரென்ற குரங்கு சுய ரூபத்தை விட்டு பிக்ஷு ரூபத்தில் வந்திருக்கிறான் சுக்கிரீவன் எல்லாம் தெரிந்தவன், தகுந்த துணைபுரிவான், அவன் சகாயத்தைப் பெறவேண்டு மென்று கபந்தன் யோசனை சொல்லிப் போனான். எல்லாம் தெரிந்தவனென்றால் சீதையை அபகரித்தவன் யாரென்று தெரிந்திருக்க வேண்டும். அவனுடைய அமைச்சன் என்று தன்னை அறிமுக மாக்கிக்கொண்ட அநுமானுக்கும் தெரிந்திருக்கவேண்டும். எதற்கும், அவன் யாரென்று இவர்கள் சொல்லட்டுமென்று எண்ணினானோ என்னவோ ராவணன் பெயரை, சுக்கிரீவனைச் சந்தித்து அவனுடன் சம்பாஷிக்கும் போதும் இவர்கள் சொல்வதேயில்லை. கபந்தன் சொன்னது உண்மை; சுக்ரீவனும் இவர்களும் அவனைப்பற்றியும் அவன் யாரென்றும் அறிந்தே யிருக்கிறார்களென்றும் விளக்குகிறார் அநுமார். ராவணன் சீதையைத் திருடிப் போனான் என்று அவர்தான் அவன் பெயரை முதலில் சொல்லுகிறார். ஆகவே லட்சுமணன் முன்பே அநுமாருக்கு அவன் பெயரை உரைக்காதது இவர்களுக்குத் தெரிகிறதா வென்பதை உணருவதே காரணமாயிருக்கலாம்.

லட்சுமணன் சொல்லிக் கொண்டே போகிறான். "அரசையும் மற்ற எல்லாவற்றையும் ஸத்தியத்திற்காகக் கொடுத்து விட்டு ஒப்பற்ற புகழடைந்து, மக்களுக்கெல்லாம் புகலிடமாயிருந்த இவர் இப்போது சுக்கிரீவரின் தலைமையைக் கோருகிறார். யாவருக்கும் நாதனாகவிருந்த இவர் இப்போழுது சுக்கிரவனைச் சரண்புக வந்திருக்கிறார். சரணமடைந்த வரைக் காத்து ரட்சிக்கும் இயல்பினரும் எல்லோருக்கும் புகலிடமான வருமான இவர், எனக்கும் சரணியரான, வழி காட்டியான பெரியார் இப்பொழுது சுக்கிரீவன் உதவியை நம்பி வந்திருக்கிறார். ராஜ்யத்தின் மக்களுக் கெல்லாம் அருள் பொழிந்து ஆதரித்த அன்புப் பெரியார் வானரத் தலைவனின் அருளை வேண்டி வந்திருக்கிறார். உலகிலுள்ள எல்லா மன்னர்களின் கௌரவத்தையும் ஆதரவையும் பெற்றுப் புகழடைந்த தசரத சக்கிரவர்த்தியின் முதற்புதல்வர், மூவுலகையுமாளவல்ல கியாதி பெற்ற இவர் வானரேந்திரனான சுக்கிரீவனின் உதவியை நாடி வந்திருக்கிறார்'' என்றான்.

லட்சுமணன் அநுமானுக்கு இருவிதமாகப் பொருள்படும்படி உரையாடு கிறான், கபந்தன் எவரால் விண்ணுல கெய்தினானென்று எளிமையின் காரணமாகத் தெரிவிக்கவில்லை. கபந்தன் கடைசியில் சொல்லிப் போனதைப் பின்பற்றி சுக்கிரீவன் நட்பைக் கோரிவந்த காரணத்தைச் சொல்கிறான்.

தாசரதி உலக ரட்சகன், எனினும் அத்தானவன் சொல்லியபடி சுக்கிரீவனின் தலைமையை நாடுகிறான், என்று தமையன் மேன்மைக் குணத்தையும் எளிமைத் தன்மையையும் தெளிவாக்கி, ரகுநாதனின் மன வருத்தத்தை சூசிப்பிக்கிறான். சுக்கிரீவன் அநுமானைத் தூதுவிடுத்தான். தூதன் வந்து பணிந்து சுக்கிரீவன் தருமாத்மா வென்று இருதடவை சொல்லிப் புகழ்ந்தான். அதற்குப் பதிலாக இங்கு ராகவனின் புகழுரைத்து இத்தகைய உயர் மனிதனுடன் நட்புக்கொண்டால் சுக்கிரீவன் பாக்கியவானவான் என்று விளங்கவைக்கிறான். தாசரதிக்குத் தொண்டு புரிவதே தான் எடுத்துக் கொண்ட கருமம். ஆகவே தனக்கென்று தனி எண்ணங்களும் அபிப்பிராயங்களும் கிடையாதென்றும் விளக்குகின்றன அவன் சொல்வன்மையின் சிறப்பு!

[சர்வலோக ரட்சகனான ராகவன் மனைவியின் பிரிவாற்றாமை தாங்காது அவளைத் திரும்பியடைய எப்பாடு படவும் தயார் எனும் மானிட சுபாவத்தையுணர்த்தி அவன் தற்போதைய மனநிலை அவன் பெருமையை இன்னொருவன் துணையை நாட இசைய வைக்கிறதென்று தெளிவுறுத்துகின்றன அவன் சொற்கள். இன்னொரு முறையில் இவைகள் சுக்கிரீவனைப் பெருமை படுத்துகின்றன. இவை யுணர்ந்ததாலோ என்னவோ பின்னர் ஆஞ்சநேயன் இவர்களை சுக்கிரீவனுக்கு அறிமுகமாக்கும் போது ராகவனுக்கு இதே சொல்வன்மையில் புகழ்மாலை சூட்டுகிறான்.]

சுக்கிரீவன் உதவியை நாடி இவ்வரும்பெரும் வீரர் இருவர் வந்திருப்பதைக் கண்டு அநுமான் லட்சுமணனுடைய மொழிகளின் கருத்தை யுணர்ந்து அவன் கண்களில் நீர் ததும்பும் காரணத்தையும் அறிந்து, "இத்தகைய, பக்குவமடைந்த புத்திமான்களும், ஐம்புலன்களை யடக்கியவர்களுமான இவர்களையன்றோ சுக்கிரீவன் தேடி யலையவேண்டும்? அவனைக் காண தாங்களே வந்திருப்பது அவருடைய பாக்கியமே!" என்று லட்சுமணனிடம் சொல்லி, 'நாம் சுக்கிரீவனிடம் போகலாம்' என்று அனுமதி கேட்டான்.

பின்பு சுக்ரீவனின் கதியை விவரிக்கிறான். "சுக்ரீவனும் தன் தமையனான வாலியால் நாட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்டார். விரோதம் கொண்டு சுக்கிரீவன்மனைவியும் அபகரிக்கப்பட்டாள், காட்டில் விடப்பட்டு அநேககாலம் துன்புற்றிருக்கிறார். சூரியபுத்திரனான அந்த சுக்கிரீவன் எங்களோடு சீதாதேவியைத் தேடிக் கண்டுபிடிப்பதில் உங்களிருவருக்கும் உதவி செய்வார்."

இதைக்கேட்ட லட்சுமணன் அநுமானை முறைப்படி மெச்சி ராமனைப் பார்த்து "ராகவா! வாயு புதல்வனான இந்த அநுமான் காரியம் செய்து முடிக்கும் உற்சாகத்தில் பேசுகிறதைப் பார்த்து உம் காரியம் கை கூடினதாகவே நினைக்கிறேன். இவர் முகத்தில் உண்மை பிரதிபலிக்கிறது" என்றான். அநுமனும் தன் பிக்ஷு ரூபத்தை விட்டு சுயரூபமடைந்து இருவரையும் தன் தோளில் தாங்கி தன் புஜபலபராக்கிரமத்தையும் வாயு வேகத்தையும் விளக்கிய வண்ணம் சுக்கிரீவனிடம் சென்றான்.

---

5. நம்முள் அறுவராேனும்

ராகவனும் லட்சுமணனும் அநுமானின் தோளில் அமர்ந்து அவனது வலிமையையும், வேகத்தையும், அறியவேண்டுமெனக் கருதினர் போலும்! அவர் ஒரே விநாடியில் ரிசியமூகமலையிலிருந்து மலயமலையைத்தாவி அடைந்தார். இவர்கள் வரவை ஆவலுடன் நோக்கிக் காத்திருந்த சுக்கிரீவன் வெளிவந்து வரவேற்றான். வந்திருப்பவர்களைச் சுக்கிரீவனின் முன்னிட்டு இருத்தி, ஐயனே!! இதோ இவர்தான் ராமரெனப்படுவர், உயர் அறிவாளி, திடமான விக்ரமம்படைத்தவர், உண்மையான பராக்கிரமசாலி. தம்பியான லட்சுமணருடன் இவரை நான் பார்த்தேன். ஸ்ரீராமர் தசரதரின் புதல்வர், இக்ஷ்வாகு குலத்தில் பிறந்தவர், தந்தையின் வாக்கை நிறைவேற்றித் தருமத்தில்நிற்கும் கீர்த்திமான். வனத்தில் வசிக்கும்போதுமகடமையைக் கைப்பிடித்தொழுகும் இப்பெரியாரின் மனைவி ராவணனால் அபகரிக்கப்பட்டாள். உங்கள் துணையைநாடி வந்திருக்கிறார். எவரால், ராஜஸூயம், அசுவமேதம் போன்ற யாகங்கள் பலவற்றால் தேவதைகள் திருப்தி செய்விக்கப்பட்டார்களோ, எவரால், நூறு ஆயிரமாக தட்சணைகளும் பசுக்களும் கொடையாக அளிக்கப்பட்டனவோ, எவரால் நாடானது, தருமத்திலும் ஸத்தியத்திலும் நேர்முறையில் சென்றுகொண்டிருந்ததோ அத்தகைய பெருமைபொருந்திய தசரதரின் புதல்வராகிய இந்த ஸ்ரீராமர் தமது மனைவியின் காரணமாக உங்களிடம் உதவியைக்கோரி வந்திருக்கிறார். இந்த ராம லட்சுமணர் இருவரும் சகோதரர்கள். பூஜிக்கப் படவேண்டியகர்களுள் சிறந்தவர்கள். உங்களுடன் நட்பை விரும்பும் இவர்களை அங்கீகரித்து கௌரவிப்பீர்களாக!! என்று சொல்லிமுடித்தார்.

இம்மொழிகளைக் கேட்ட ஸுக்கிரீவன் அச்சமொழிந்து உள்ளம்பூரித்து புதிதாய்க்கண்டவர்களிடம்கொண்ட கவலையையொழித்து உடனே மானிடரூபங்கொண்டு மிகக்கவர்ச்சிதரும் தோற்றத்துடன் பிரீதியோடு ராகவனை வரவேற்றான்.

"சுவாமி! தயை புரியுங்கள். தேவரீருடைய உத்தம குணங்களை அநுமான் கூறினான். தருமத்தினின்றும் பிறழாதவர், எத்தகைய விரோதியையும் முறியடிப்பவர், எல்லோரிடத்தும் அன்புடையவர். என்று அறிகிறேன். பிரபுவே! இத்தகைய பெரியார் என்னுடைய நட்பை விரும்புவது எனது பாக்கியமே. எனக்கு மதிப்பிடமுடியாத பேருதவிசெய்ய, தாங்கள் என்னை அங்கீகரிப்பீர்களாயின், இதோ என் வலது கரத்தைப் பற்றுங்கள்; நம் நட்பு நிலையாயமையட்டும்" என்று ஆவலுடன் தெரிவித்தான்.

ராமனும் அவனுடைய நீட்டியகரத்தைப் பற்றிக்கொண்டு ஆநந்தமடைந்து அவனைத்தழுவிக்கொள்ள, அநுமானும் இரு அரணிக்கட்டைகளைக் கடைந்து அக்னியை உண்டுபண்ணி, அதைப்புஷ்பங்களால் பூஜைசெய்து

அவர்களிருவரின் மத்தியிலிட்டார். சுக்கிரீவனும் ராமனும் அதை வலம் வந்து அதன்முன் பிரியா நட்புடன் இருக்கப் பிரதிக்ஞை செய்தனர். மனத்திருப்தியடைந்த அவ்விருவரும் புது நண்பர்களாகிச் சாலமரத்தின் கிளையை எடுத்துக்கீழேபரப்பி அதன்மேல் அமர்ந்து ஒருவருக்கொருவர் மனந்திறந்து அளவளாவினர். அநுமானும் லட்சுமணனுக்கு ஆசனம் அளிக்க எல்லோரும் அமர்ந்து உரையாடினர்.

சுக்ரீவன் நண்பனை நோக்கிச்சொல்லுகிறான்: "ராமா! மனைவி அபகரிக்கப்பட்டவனாய், அவமானத்துடன் பயமடைந்தவனாய், என்னை திகிலடையவைக்கும் என் ஜன்ம சத்துரு அணுகமுடியாத இந்த இடத்தில் நான் திரிந்துகொண்டிருக்கிறேன். பகைகொண்டு என்னை என் தமையன் மோசஞ்செய்தான். அதுவுமன்றி எப்பொழுது அவனால் ஆபத்து நேருமோவென்று நடுங்கிக்கொண்டிருக்கிறேன். உள்ளங்கலங்கித் தடுமாறுகிறேன், கீர்த்திமானே! வாலியினிடமிருக்கும் என் உள்ள நடுக்கத்தைத் தாங்கள் போக்கடிக்கவேண்டுகிறேன். இந்தத்திகில் ஒழியவேண்டும், நான் மனநிம்மதி காணவேண்டும்" என்று கலங்கக்கூறினான். ராகவன் அவன் நிலையைக் கவனித்து அத்திகிலையொழித்தலே நட்பின் நற்குணமென்றுணர்ந்து "அப்பனே! கவலையொழி. இதற்காகவே என் நட்பைக்கோருகிறாய் என்று உணர்ந்தேன், இனி பயம் வேண்டாம். இதோ வீண்போகாத இக்கொடிய பாணங்களுக்கு அவ்வாலி இரையாவான் இதில் சந்தேகமில்லை" என்று தைரியமளித்தான்.

சுக்ரீவன், தன் ஆவியையும் உடலையும் கவ்விக்கொண்டிருந்த பயம் நீங்கினவனாகி தைரியம்கொண்டு ராமனை நோக்கித் தன் உட்கருத்தை விளக்குகிறான், "நரசிம்மனே! நரதேவனே! தேவரீருடைய ப்ரஸாதத்தால் நான் மனைவியைத்திரும்பி அடையவேண்டும், ராஜ்யத்தையும் அடையவேண்டும். எனக்குச்சத்துருவான அந்த வாலியை இப்பொழுதே ஒழித்துவிடவேண்டும். அப்பொழுதான் நான் உயிர்பெற்றவனாவேன், அப்பொழுதுதான் என் வைரம் தீரும்" என்றான்.

ராமனும் அவனுக்குகந்த ஆறுதல் அளித்துக் கவலையையொழிக்க உறுதிமொழிகள் கூறினான். இப்படி இருவரும் அன்பாக உரையாடினார்கள்.

[முன்பு குகன் தசரத புதல்வர்கள் நால்வருடன் ஐந்தாவது சகோதரனானான் என்று ரகுநாதன் கூறியது, இப்பொழுது சுக்ரீவனும் தனக்குந்த நண்பன் என்று செய்கையால் நிரூபித்து, இவர்கள் ஆறு சகோதரர்களாயினர் என்று தெளிவாக்கியது.]

இவர்கள் உரையாடி அளவளாவும்போது ஜானகியின் இடது கண்ணும் வாலி, ராவணன் இவர்கள் இடது கண்களும் துடித்தன.

(பொதுவாக பெண்களுக்கு இடதுபக்கம் துடித்தால் நன்மையுண்டாகுமென்றும் ஆண்களுக்கு இடப்பக்கம் துடித்தால் தீமையுண்டாகும் என்பதும் ஆன்றோர் கண்ட அநுபவம்.)

6. அறநெறி அடியான் மாண்பு.

ரகு ராமனின் மனத்தை மேலும் மகிழ்விக்க நினைத்துச் சுக்கிரீவன் சொல்லிக்கொண்டே போகிறான்: "ராமா! தாங்கள் எக்காரணத்தால் நாட்டைவிட்டுக் காடடைந்தீர்களென்பதையும், நீங்கள் இருவரும் இல்லாத சமயம் பார்த்து ராவணன் ஜானகியைத் திருடிச்சென்றானென்பதையும், ஜடாயு அவனைத்தடுத்துப் போர்புரியும்போது அவனால் இறக்கையறுபட்டு வீழ்த்தப்பட்டதையும், என் சிறந்த அமைச்சனான அநுமான் எனக்குத்தெரிவித்தான். போகட்டும். மனைவியை விட்டுப்பிரிந்த உங்களுடைய மனவேதனையானது அதிவிரைவிலேயே ஒழிந்து போனதாகக்காணப் போகிறீர்கள். பூலோகத்திலிருந்து திருடப்பட்டு பாதாளத்தில் பத்திரப் படுத்தப்பட்ட வேதங்கள் எப்படி மகாவிஷ்ணுவால் மறுபடியும் பூலோகத்திற்குத் திருப்பிக்கொண்டுவரப்பட்டனவோ, அதேபோல் அன்னை வைதேகி எங்கிருப்பினும் நான் தேடிக்கொணர்வேன். ராகவா! இது உண்மையான பிரதிக்ஞை என்று கொள்வீராக! விஷங்கலந்த உணவை எவனும் உட்கொண்டு உயிர்வாழான் அதேபோல் பதிவிரதையான சீதையைத் திருடிப்போய்ப் பதுக்கிவைப்பவனை பதிவிரதாக்கினி சுடுதியில் சாம்பலாக்கும். ஆகையால் இந்திரன் முதலிய யாவராயினும்சரி. ஜானகிக்குத் துன்பம் விளைவித்து வாழமுடியாது. அக்கொடிய அரக்கன் தூக்கிக்கொண்டு செல்லும்போது "ராமா! ராமா!! லட்சுமணா!!! என்று கத்தின பெண்ணின் தீனக்குரலைக்கேட்டேன். மேலே பார்த்தேன். அரக்கன் தன் உடல் வலியால் அவளை இருக்கி மடியில் அடைத்துப்போட்டிருந்தான், அவள் கரைமேல் விட்ட மீன்போல் உடல் துடித்துக்கொண்டிருந்தாள். அவள் தான் மைதிலி என்று இப்பொழுது அறிகின்றேன். சுவாமி! உங்கள் மாண்புமிக்க மனைவியை கட்டாயம்கொண்டுவந்து சேர்க்கிறேன், மகாபாகுவே, மனக்கவலையை ஒழியுங்கள். அவ்வரக்கன் அதிவேகமாய் ஆகாயத்தில் சென்றுகொண்டிருக்கும் போது நான்கு நண்பர்களும் நானும் இம்மலைத்தாழ்வரையிலிருந்தோம். இதைக்கண்ணுற்ற அவள், 'முன்தானையைக்கிழித்துத் தன் ஆபரணங்களை அதில் கட்டி முடித்து இங்கு எறிந்தாள். அதை நாங்கள் எடுத்துப் பத்திரப் படுத்தியிருக்கிறோம். அவைகளைக் கொண்டுவருகிறேன்' என்றான்.

ராமசந்திரன் இச்செய்தியைக்கேட்டு மிக்கபரபரப்புடன் அவ்வாபரணங்களை உடனே கொண்டுவரவேண்டினான். சுக்கிரீவனும் உடனே மலைக்குகையில் விரைந்து அவற்றை எடுத்துவர, ராகவன் அம்முடிச்சை ஆவலுடன் வாங்கிப்பிரித்தான், ஆடையைக்கண்ட உடனேயே அவன் கண்கள் கலங்கின. கைகள் துடித்தன, சீதையின் பிரிவாற்றாமை புது வேகங்கொண்டு மனத்தைப் பிளந்தது. கட்டை அவிழ்த்தான், எழில்மிக்க அவ்வணிகலங்களைக் கண்டான். மனமுடைந்தான். தரணியில் சாய்ந்தான்!

சிறிது நேரஞ்சென்று நகைகளை உற்றுநோக்குகிறான் நரேந்திரன். அவைகள் அழகுவாய்ந்த அவள் அவயவங்களைக்கண்முன் காட்டின. ஐயோ! அவைகள் எங்கே இப்போது? ஆபரணங்களை அன்புடன் அணைத்து துடி துடிக்கிறான். பின்பு அவளை எடுத்துப்போன பாதகனை நினைக்கப் பாம்புபோல் சீறுகிறான். அண்ணலைத்தேற்றத் திரும்புகிறான் இளவல் லட்சுமணன்.

உடனே தம்பியைக்கண்டு, "லட்சுமணா ! சீதையைத்திருடிக்கொண்டு போகும்போது ஜானகி இங்கு எறிந்த ஆபரணங்களைப்பார், இந்த ஆடைத் துண்டையும்பார்!" என்று பதறுகிறான் சோகமடைந்த ரகுராமன்.

லட்சுமணனும் துக்கிக்கிறான், ஆபரணங்களைக்காண்கிறான், சிறந்த எழில்கொழிக்கும். கேயூரங்களும். குண்டலங்களும் மைதிலியை ராகவனுக்கு கண்முன் காட்டுகின்றன. ஆனால் இவ்வாபரணங்களை முன்பு உற்றுநோக்கி அறிந்தவனல்லன் லட்சுமணன். தினமும் தான் வணங்கித்தொழும் அன்னை யின் பாதங்களையும் அப்பாதங்களில் அணிந்த சிலம்புகளையுமே அவன் கண்டிருக்கிறான்,

[காட்டில் தனியே இருக்கும் மாதர் திலகம், கணவனுடன் களிப்புறும் இன்பக்கனி, அவளைக் கண்ணெடுத்துப்பாரான், அவர்களுக்குச் சேவையே தன் வாழ்க்கையாய்க்கொண்ட லட்சுமணனென்னும் உண்மைத் தொண்டன். அத்தகையோனுக்கு ஏது அன்னை அணிகளில் கவனம்? அறநெறியிலேயே அடிமை செய்யும் தூயப் பணியாள், எஜமானியின் முகத்தை எப்பொழுதும் ஏறிட்டுப் பாரான். அவள் அணியும் ஆபரணங்களையும் கவனியான். இதை விளக்குகிறது அவனது பதிலுரை.]

"அண்ணா! அன்னை ஜானகி அணியும் கேயூரத்தையும் குண்டலத்தையும் நான் கண்டறியேன். தினமும் அவளைப்பணியும்போது அவள் பாதங்களின் சிறப்பைச் சித்திரிக்கும் சிலம்புகளை மாத்திரம் கண்டிருக்கிறேன், அவைகளைச் சேவித்திருக்கிறேன்," என்றுரைத்து எல்லோர் மனத்தையும் மேலும்கரைத்து விட்டான்,

தலைவியைப் பிரிந்த காதலன் துயரம் வெள்ளோட்டமெடுக்கிறது! முடிச்சிலிருந்து நகைகளைப் பார்த்துப் பார்த்துப் பொருமுகிற, இத்துயரம் எல்லோர் மனத்தையும் பிணித்துப் பிழிகின்றது.

சற்றுநேரம் நிச்சப்தம். பின்பு கண்ணீர் மல்க, ராகவன் சுக்கிரீவனிடம் திரும்புகிறான், "அப்பா, சுக்கிரீவா! என் உயிரினுமினியாளான இளங்கொடியாளை அக்கொடிய அரக்கன், நீங்கள் பார்க்கும்போது எத்திசை தூக்கிச் சென்றான்? அவன் எங்கிருப்பினும் அவனை இதோ ஒழிக்கப்போகிறேன் பார்! அவன் காரணமாக அவன் இனமே அழியவிருக்கிறது. என் மைதிலியைக் கவர்ந்த கள்வன் இனி உயிர்வாழ்வனோ? அவனுக்கு எமன் வீடு திறந்து விட்டது. இப்போது அப்பாவி எங்குளான், அவனைப்பற்றி விவரமென்ன?" என்று சினங்கொண்டு சீறினான்.

7. துணை நலம் ஆக்கம் தரும்.

தாசரதியின் துயரத்தையும் மைதிலியைப்பற்றிய உள்ளத் துடிப்பையும் கண்ட சுக்ரீவன் தேறுதலளிக்க முற்பட்டான். அவனும் மனைவியை இழந்தவன், அவளைப்பற்றிய கவலையும் தமையனைப்பற்றிய பயத்தையும் வெகு நாளாய் அடைந்து வழிகாணுதவனுய்த் தவித்துக்கொண்டிருந்தவன், ஆகையால் ராமன் நிலையை நன்குணர்ந்து துயரம் மேலிட்டு ராகவன் வருத்தத்தில்தானும் கலந்து, கலங்கிய கண்ணுடன் அஞ்சலிசெய்து பேசுகிறான் :—

"சுவாமி! கவலையை ஒழியுங்கள். ஜானகியைத் தேவரீர் திரும்பி அடைவது எங்கள் பொறுப்பு, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்து முடிக்கிறேன் என்று உங்களுக்கு ஆணையிடுகிறேன். உங்களுக்கு வெற்றி பிரத்தியட்சமென்று நன்குணர்கிறேன். இதில் சிறிதேனும் கவலை வேண்டாம். அந்த நீசனுன ராவணன் இருக்குமிடத்தையாவது, அவனுடைய சாமர்த்தியம், விக்கிரமம், இனத்தின் இயற்கைத்தன்மை, இவைகளைப்பற்றியாவது நான் நன்கு அறிந்திலேன். அவ்வரக்கன் பூண்டோடழிவது நிச்சயமென்றும், நீங்கள் திரும்பவும் வைதேகியையடைந்து களிப்பதையும் என்கண்முன் காண்கிறேன்' மனக்கலக்கம் இனி வேண்டாம். ஆற்றலும் தீரமும் பிறவிக்குணங்களாகப் பெற்ற தேவரீரைப் போன்றவர்களுக்கு மனச்சோர்வு, தாங்கள் இடம் கொடுத்தாலன்றி, ஏற்படுவதற்குக் காரணமேயில்லை. நானும் என் மனைவியை இழந்து பரிதவிப்பவனே. கற்றறிந்தகல்விமானே, பெரியோரிடம் உபதேசம் பெற்றவனே, எந்நிகழ்ச்சியிலும் நலனைக்காணும் நுண்ணறிவாளியோ, எவர்க்கும், எவ்வாபத்திலும் தலை கொடுத்துதவும் பேரன்பனே, இவர்களில் ஒருவனும் இல்லை நான். இவர்களனைவரும் தாங்கள் ஒருவராகயிருந்து மேன்மையுற்ற மகாத்மா, இதை இப்பொழுது அஞ்சலிசெய்து நினைப்பூட்டுகிறேன். தன்னிலையடையத் தலைபணிகிறேன். தங்களுக்கோ, திடமும் திறமும் தடைபட்டுத் தயங்கிநிற்கும்? பேராபத்தோ, பெருநஷ்டமோ, மரணவஸ்தையோ, எவ்வகைநிலையிலும் மனந்தளர்ச்சி காணமுடையாத தனிப்பெரும் தலைவீரரல்லவா தாங்கள்! பேரரசே! சோகத்தை ஒழியுங்கள்! உங்கள் இயற்கையான வீரத்திற்கும் தைர்யத்திற்கும் இடங்கொடுங்கள். உண்மை நண்பன் நான், என்ற உரிமையில் இதை வேண்டி நிற்கிறேன். அடியேனது நட்பைப் பெருமைப்படுத்தி, வருத்தத்தைவிட்டு சுயநிலையை அடைவீர்களாக" என்றான்.

சுக்கிரீவனுடைய வீரமொழிகளால் ரகுவீரன் ஒருவாறுதேறி, வானர மன்னனின்நட்புடைமையை மெச்சி இனி நடக்கவேண்டிய அலுவலுக்கு ஆயத்தஞ்செய்யத்தூண்டினன். தன்னால் அவனுக்கு ஆகவேண்டியது எதுவோ, அதைத்தடையின்றி, செய்துமுடிக்கவும் உறுதியளித்தான்! இருவரும் கவலையை யகற்றினர்.

8. நட்பின் அரைகூவல்

ராமனது உறுதிமொழியைக்கொண்டு தன்னம்பிக்கை பெற்ற வானரத் தலைவன், தன் எண்ணங்கள் நிறைவேறினதாகவே உள்ளங்களித்தான்.

[ராகவனை கவனிக்கிறான். ஆம் இவன் சாதாரண ஒரு மானிடனல்லன். அரச லட்சணங்கள் பொலியும் காந்தியுடைய ராஜபுத்திரன் மற்றும் எதையும் செய்துமுடிக்கும் வலிமை வாய்ந்தவன். இதைப்பற்றி எள்ளளவும் சந்தேக மில்லை. முடியாது என்பது இவனிடத்தில் இல்லை. இத்தகைய குணங்கள் வாய்ந்த மாந்தருள் மாணிக்கத்தின் துணையைப் பெற்று எதையும் சாதிக்க லாம் என்று திடம்பெற்று, தன்னையும் கிஷ்கிந்தை அரசுபுரியும் அரசனாக எண்ணி அகமகிழ்ந்தான், எனினும் அநுமானின் கண்கொண்டு ராகவனைப் பார்த்தானா சுக்ரீவன்? அநுமானின் மனம் ரகுநாதனைக் கடவுளாக உணர்ந்து பேரின்பங் கண்டது. சுக்ரீவனோ தாசரதியை ஒப்பற்ற ஒரு மானிடனாகவே காண்கிறானோ என்னவோ, மகாவீரன் ரகுராமன். நட்பின் கடமைகளை யுணர்ந்த நுண்ணறிவாளி; ஆகவே நட்பு என்ற கொள்கையைக்கொண்டு அதன் ஆற்றலால் தனக்குத் துணை செய்யவேண்டுமெனும் கடமையை உணர்த்துகிறான்போலும்! புது நட்புக்கோர் அரைகூவலிடுகிறான்.]

சுக்ரீவன் சொல்கிறான்:—"ராமா! நற்குணங்கள் மலிந்த உங்களைப் போன்ற ஒருவரை நண்பனாக அடைந்த எனக்குத் தேவர்களுடைய அநுக்ரகம் முழுவதும் பெற்ற ஆறுதல் உண்டாகிறது. இனி என்னால் அடையமுடியாதது என்னவிருக்கிறது? எதையும் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்த உங்களைத்துணையாகக் கொண்ட எனக்கு தேவலோகமென்ன, எந்த உலகம்தான் என்ன, கிஷ்கிந்தைதான் என்ன எதைத்தான் அடையமுடியாது? ரகுகுலோத்தமனை நண்பனாகக்கொண்ட வனுக்கு உற்றார், உறவினர் அநேகம். அக்னிசாட்சியாய்க்கொண்ட நம் நட்பின் பெருமை பெருகவும், விளங்கவும் செய்வது இனி என்பொறுப்பு. தேவரீரைப் போன்ற ஆத்ம ஞானியின் சிநேகத்தைப்பெற்ற என் பாக்கியத்தையும் ஆறு தலையும் மன உறுதியையும் புகழாமல் இருக்கமுடியவில்லை. எனது உண்மை நண்பர் நீங்கள், ஆகையால் என் உணர்ச்சிகளை அறிவீர்கள். என் சுகதுக்க ங்கள் உங்களுடையது அல்லவா?" என்று அவரைக் கௌரவித்தான் கவியரசன்.

ராகவன் தன் அபிப்பிராயத்தை அங்கீகரிக்கவே, சுக்கிரீவன் ஒரு சால மரக்கிளையைப் பிடித்திழுத்து அதைக்கீழே பரப்ப. இருவரும் அதில் அமர்ந் தார்கள்.

ஏகாந்தமாக அமர்ந்து அளாவளாவுகையில், சுக்கிரீவன் தனதுள்ளக் கருத்தை வெளியிடுகிறான். தன் மனோரதத்தைப் பூர்த்திசெய்ய ஆற்றல், புதி தாகவும் வலியக்கிடைத்ததுமான துணையின்பெருமிதம், வலிவே வடிவாய் வந்த

இப்புது நண்பனைச் செயலிலிறக்கி அவன் திறனைக்கண்டு களிக்கப்பேராவல், ஆகிய இவை எல்லாம் ஒருங்கே சேர்ந்து அவனைத்தூண்டின.

சுகமாய்ச் சாய்ந்துகொண்டிருந்த சியாமள ரூபனைப்பார்த்து, "ராகவா! என்னைக் கவனிக்கவேணும். என் நிலையையும் உணரவேண்டும், என் தமையனால் நான் அவமானமடைந்ததுமன்றி, என் மனைவியும் அவனால் அபகரிக்கப்பட்டாள். அவனால் எங்கு, எப்பொழுது,எனக்கு ஆபத்து வருமோவென்று திகிலடைந்து தவித்துத்திரிகின்றேன், அவன் என்னை மோசஞ்செய்தது மாத்திரமல்ல, என்னைப்பகைக்கவும் செய்கிறான், நான் உயிர் வாழவும் அவனுக்கு பிடித்தமில்லை. என்னை எவ்விதத்திலும் எமலோகமனுப்பக் காத்திருக்கிறான். இந்தத்திகில் என்னைப்பற்றி இரவும் பகலும் மதிகலங்கி, துடி துடிக்கும் புழுவாக்கிவிட்டது. ஒரு நிமிஷமேனும் மனநிம்மதியின்றி கலங்கித் தவிக்கின்றேன். எல்லா துஷ்டர்களையும், கண்டமாத்திரம் மனங்கலங்கவைக்கும் பேராண்மை கொண்டவனே! என் உயிரையும் உடலையும் பற்றி அமுக்கும் இவ்வாலி பயத்தைப்போக்கடிக்குமாறு அடிபணிந்து வேண்டுகிறேன். இத்தகைய பெருந்திகிலை என்னால் தாங்கமுடியவில்லை. அவன் பயம் என் உயிரையே வாட்டிவிடுகிறது, திக்கற்ற எனக்குத் தெய்வம்போன்ற தாங்கள் தான் துணை", என்று மனம் விட்டுப் பதறிப் பிரலாபித்தான்.

இவனுடன் நட்புக்கொண்டாய்விட்டது, இவனை வாட்டிவரும் திகிலைப் போக்கடிப்பது உண்மை நட்பின் முதல் கடமையாகுமென்றுணர்ந்த ராமன் சுக்ரீவனைப்பார்த்து " நண்ப, கவலைவிடு, மித்திரன் என்பவன் எப்பொழுதும் துணைபுரிவான்; சத்துருவோ அபகாரஞ்செய்பவன், உன் மனைவியை அபகரித்து உனக்கு அடங்கா அச்சத்தை விளைவித்துவரும் கொடிய பாதகனை இதோ ஒழித்துவிடுகிறேன்" என்று உறுதியளித்தான். இதுவன்றோ உண்மை நட்பின் கடமை! வாலியையொழித்துப் பெருந்திகிலைப் போக்குவது அவன் வில்லின் மகிமையாகும்! "சுவாமி, துயருழந்தவர்களுக்குத் தேவரீரே புகலிடம். இது பிரத்தியட்சம். இப்பொழுது, நான் அடைந்த ஆறுதல் இதற்கு நற்சான்று பகரும். வாலி எனக்குப் பரம விரோதி. அவன் மடிந்தால்தான் என் திகிலும் துக்கமும் ஒழியும். என் மனநிம்மதி, உங்களுக்குத் துணைபுரிவது இவை அவன் விநாசத்தைக்காரணமாக உடையன," என்று பெருமூச்சுடன் கண் கலங்கித் தாசரதியிடம் முறையிட்டான்.

அதற்கு ராமசந்திரன், " நண்பா ! முன்பே வாக்குறுதிசெய்தேன். என் வாக்கு ஒருநாளும் மாறாது. ஆகையால் கவலைப்படாதே. வாலி உனக்கிழைத்த தீங்கை அறிவேன், ஆனால், ஏன் உன்மேல் அவன் வைரங்கொள்ளவேண்டும்? பகைமை ஏன்! என்று வினவினான்.

9. பிழை பொறுக்கா வுடன்பிறந்தான்

குசலவர்கள் முன்பு அச்வமேத யாகசாலையில் ராமராஜ்ய ஸபா மண்டபத்தில் ரகுநாதன் முன்னிலையில் 14-வது தினத்தில் கிஷ்கிந்தாகாண்டத்தில் 9-வது ஸர்க்கம் முதல் 29-வது ஸர்க்கம் வரை கானம் செய்த பிரகாரம் :--

நிகரற்ற நண்பனும், நட்பின் கடமையை நன்குணர்ந்த நரோத்தமனால் வினவப்பட்ட வானரத் தலைவனுமான சுக்கிரீவன் வாலியின் பகையைப் பற்றிச்சொல்ல ஆரம்பித்தான்:-

"ராமா! வாலி எனக்குத் தமையன், தந்தையின் நிலைமையிலுள்ளவன், நானும் அவனிடம் அன்பும் மரியாதையும் காட்டிவந்தேன். தந்தை இறந்தபிறகு என் தமையனை வானர அரசனாக மந்திரிகளும் மக்களும் தேர்ந்தெடுத்து முடிசூட்டினார்கள்.

வாலி அரசு புரிகையில் நானும் அவனுக்குட்பட்டு அடங்கி நடந்து தொண்டாற்றினேன். ஒரு சமயம் துந்துபி என்னும் அசுரன் மகன் மாயாவி என்பான் ஒரு பெண் காரணத்தால் வாலியுடன் பகை கொண்டான். வஞ்சம் தீர்க்க ஓர் நடு நிசியில் யாவரும் உறங்கும்போது கிஷ்கிந்தைக்கோட்டை வாயிலில் வந்து கோரமாக கர்ஜித்து நின்றான். அசுரனுடைய அட்டகாசத்தை அடக்க என் அண்ணன் அரண்மனையைவிட்டு அப்பொழுதே வெளிக் கிளம்பினான்.

"கோர அசுரன் நடுநிசியில் கொடிய எண்ணங்கொண்டு இங்குவந்து கர்ஜிக்கிறான். தீர விசாரியாது ஆலோசனையின்றி அவ்வேளையில் எதிர்த்துப் போவது அரசனுக்கழகல்லவென்று, வாலியின் மனைவியும் சுற்றத்தாரும் நானும் வாலியைத்தடுக்க முயன்றோம். மகாவீரதீரனான அவன் எங்களைப் புறக்கணித்து அசுரனை அடக்க ஆத்திரத்துடன் முற்பட்டான். உடன் பிறந்த பாசத்தால் என் கடமையையொட்டி அவனைத்தனியே போர்செய்ய விடாது நானும் அவனுடன் கூடச்சென்றேன். எங்களிருவரையும் கண்ட அம்மாயாவி அச்சமுற்று அவ்விடத்தைவிட்டு விரைந்தோடினான். அவன் பயந்தோடுவதைக்கண்டு நாங்களும் இன்னும் வேகமாக அவனைப்பின் தொடர்ந்தோம். நள்ளிரவு. சந்திரனின் முழுக்கலை வெண்ணிலவு எங்கும் படிந்திருந்தது. மாயாவி அங்குமிங்குமோடிக் கடைசியில் புற்களால் மூடுண்ட ஒரு குகையில்புகுந்து மறைந்தான். நாங்கள் அங்குவந்து அவனுக்காக வெகுநேரம் காத்திருந்தோம் அசுரன் வெளிக்கிளம்பவில்லை. வாலியின் கோபம் குன்றாது அதிகரித்தது. எதிரியை ஒழிக்க எண்ணினான், என்னைப் பார்த்து, வாலி, "சுக்கிரீவா! நான் உள்ளே சென்று அவனைக்கொன்று வருகிறேன். நான் வருமளவும் இக்குகைவாயிலை ஜாக்கிரதையாய்க்காத்து நின்றிரு", என்றான்.

அவன் குகைக்குட்சென்றால் என்ன ஆபத்து நேரிடுமோ வென்று, அவ்ன் தனியாய்ப் புகுவதைத் தடுக்கமுயன்றேன், அதை அவன் பொருட் படுத்தவில்லை. அவன் வரும்வரை என்னை அங்கிருக்கும்படிக்கோரி, தம்பிக்குச் சரணுன தமயன் பாதங்களின்மேல் ஆணையிடச்செய்து என்னை விடுத்துக் கடுங்கோபாவேசத்தில் அசுரனைத் துரத்திக் குகையினுட் புகுந்துவிட்டான்.

நானும் ஆணைப்படி வெளியில் காத்திருந்தேன். இப்படி ஒருவருஷ காலஞ்சென்றது. அப்பொழுதும் என் தமையன் வெளிவந்தானில்லை. என் கவலைக்கு எல்லையில்லை. அவன் மாண்டனனோவென்று மனங்கலங்கினேன். அவன் ஆபத்திற்கு ஆளாகிவிட்டானென்று என் ஆவி துடித்தது. இன்னும் காத்துநின்றேன். வெகுகாலஞ்சென்றபின், ஒருநாள் அக்குகையிலிருந்து நுரையுடன் சிவந்த உதிரம் வெளிக்கிளம்பிற்று. நான் திடுக்கிட்டேன். ஐயோ! அண்ணன் உயிர் துறந்தானென்று அச்சமடைந்தேன், அப்பொழுது உள்ளிருந்து அசுரர்களின் பேரிரைச்சல் ஒலியைக்கேட்டேன்.

"நண்பா ராமா! இந்த அடையாளங்களைக் கண்டு, என் தமயன் உயிர் துறந்தாரென்று எண்ணினேன். எனக்கு அடங்காத்துயரம் உண்டாயிற்று. செய்வதறியாமல் ஆலோசித்துக் கடைசியில் வெறியுண்ட அவ்வசுரன் வெளிக்கிளம்ப முடியாவண்ணம் மலையொத்த பெரும்பாறையை எடுத்துக் துவாரத்தை மூடிவிட்டு அவ்விடம் விட்டு மிக்க சோகம் மேலிட்டு அண்ணனை இழந்துவிட்டதாக முடிவு செய்து புண்ணிய தீர்த்தத்தில் அவனுக்குத் தர்ப்பணம் முதலிய உத்தரக் கிரியைகளையும் செய்து முடித்தேன். பின்பு நகரடைந்து சோர்வுற்று மௌனமாய் இருந்து கிடந்தேன். மந்திரிகளும் மற்றவரும் நடந்ததை எப்படியோ அறிந்தார்கள். அவர்கள் வந்து வெளியிட்ட கோரிக்கையின் பேரில், அவர்கள் சம்மதங் கொண்டு நான் கிஷ்கிந்தை அரசனுகமுடி சூட்டி வைக்கப்பட்டேன், ராகவா; மக்கள் விருப்பத்தின்படி நான் அரசுபுரியும்போது ஒருநாள் நான் இறந்துவிட்டதாக நினைத்த என் தமயனுன வாலி அசுரனைக் கொன்று விட்டு அரண்மனையடைந்தான். நடந்ததை உணர்ந்து பெருங்கோபங் கொண்டு, என்னைக் குரூரமான வசை மொழிகளால் ஏசினுன். அச்சமயம் அவனை அடக்கியாளும் வன்மை கொண்ட அரசனுன நான் அவன் என் சகோதரன் தமையன் என்று அவனைக் கௌரவித்து. அவன் சொற்களைப் பாராட்டாது, என் தப்பிதத்தை ஒத்துக் கொண்டு குற்றத்தைப் பொறுத்தருளுமாறு அவன் தாள் பணிந்து வேண்டினேன். முடி சூடின எனது தலை அவன் பாதங்களில் பணிந்து சரணுகதி செய்தது. அதை நிராகரித்து விட்டான் அவன்.

---

10. தஞ்சமென்ற தம்பியைத் துறத்திய தமயன்.

சுக்கிரீவன் சொல்லிக்கொண்டே போகிறுன் ;— "ராமா! என் தமையன் வாலிக்குக் கோபம் தணியவேயில்லை, நான் எவ்வளவு தாழ்ந்து

சொல்லியும் நம்பாது என்னைப்பகைவனாகவே கருதியது அவன் மனம் "அண்ணா! நீங்கள் அந்த அசுரனைக்கொன்று இங்கு திரும்பிவந்தது என் பாக்கியமும் இந்நாட்டுமக்களின் பாக்கியமுமாகும்; அநாதைகளுக்கு நாதனான தாங்கள் எனக்கும் நாதனே. இதோ இந்த வெண்குடையை உங்களுக்குப்பிடிக்கிறேன். அதன் நிழலில் நீங்கள் கம்பீரமாய் அமருங்கள். நான் உங்களுக்குச்சேவை புரியக்காத்திருக்கிறேன். சுவாமி! என்மேல் கோபிக்க வேண்டாம்; நான் இங்குவந்து அரசை ஒப்புக்கொண்டதைப்பற்றித் தவறாக எண்ணாதீர்கள். ஒருவருஷகாலம் குகையின் வாயிலிலேயே தங்கள் வரவிற்குக்காத்து இரவும் பகலும் நின்றேன். பின்பு அங்கே நுரையுடன் கலந்து வந்த இரத்தத்தைக்கண்டு துக்கித்தேன். அசுரர்கள் சப்தத்தையும் கேட்டேன், மாயாவியின் வெற்றிமுழக்கம் என்றுகருதி அவன் குகையைவிட்டு வெளிக்கிளம்பாவண்ணம் ஒரு மலைப்பாறையைக்கொண்டு வாயை மூடிவிட்டு நகரமடைந்தேன். நகரமாந்தர்களும் அமைச்சர்களும் நடந்ததை அறிந்து நாட்டிற்கு அரசனில்லாவிடில் அது பாழடையுமென்று என்னை அரசு புரிய வற்புறுத்தவே அவர்களுக்காக ஒப்புக்கொண்டேன். நான் இதை விரும்பினவனல்லன். ஆகையால் என் மேல் கோபிக்கவேண்டாம். என்னை மன்னித்தருளும்படி வேண்டுகிறேன். இந்த ராஜ்யமும் அதிலுள்ள யாவும் உங்களுடையன. அவைகளை இதோ திரும்பிச் சமர்ப்பிக்கிறேன். பெற்றுக்கொள்ளவும்" என்றேன்.

என் தமையன் என் வார்த்தைகளைப்பொருட்படுத்தாது நான் அவன் அரசைவஞ்சித்து பிடுங்கிக்கொண்டதாகக் கருதி என்னைக்கடிந்து பேசி என் சரணாகதியையும் புறக்கணித்தான். நான் சொன்னது உண்மைதானா வென்பதை அமைச்சர்களை விசாரியுங்கள், பொறுமை காட்டாது என்னைக் கண்ணெடுத்தும் காணச்சகியாதவனாய் கோபம்தலைக்கேறி என்னைப்பலவாறு நிந்தித்து, எல்லோரையும் வரவழைத்து இந்தச்சுக்ரீவன் செய்ததைக்கவனியுங்கள் "என்று சொல்லி என்மேல் குற்றம்சாற்றிப்பின்னும் கூறுகிறான்;—இரவில் வந்து கர்ச்சித்த அசுரனான மாயாவியைத் துரத்திப்போனேன். சுக்ரீவனும் கூடவந்தான். அசுரன் பயந்து குகையில் புகுந்தான், நான் அவனைக் கொன்று வெளிவரும்வரை சுக்கிரீவனைக் குகையின் வாயிலில் காத்திருக்க வேண்டுமென்று ஆணையிட்டு அசுரனை பின்தொடர்ந்தேன். அவன் குகையில் மறைந்து ஒளிந்து ஒரு வருஷகாலம் எனக்ககப்படாமல் ஓடித்திரிந்தான். பின்பு அவனைத்தேடிப்பிடித்துப் போர்புரிந்து அவனைக்கொன்றேன். அவனுடனிருந்தவர்களையும் மாய்த்தேன். அவர்களுடைய ரத்த பிரவாகம் குகை முற்றும், பரவிநிறைந்தது. வெளியில் செல்லவந்த நான்அப்பொழுது குகை, வாயில் மூடப்பட்டிருந்ததைக்கண்டேன், பலதடவை தம்பியைக்கூப்பிட்டேன். பதிலில்லை. மிக்க ஏமாற்றமடைந்தேன் பின்பு, மிக்க பிரயாசைப்பட்டு வெகுகாலம் உதைத்து உடைத்து வாயைமூடியிருந்த கற்பாறையை நகர்த்திவெளிவந்தேன், இவனுடைய மோசத்தை உணர்ந்தேன். சகோதர வாஞ்சை சிறிதும் இல்லாது அரசாள ஆசைக்கொண்ட இக்கொடிய மனமுடையான் என்கண்முன் நிற்கவும் யோக்கியதையற்றவன். என்னைவஞ்சித்தவன், கெட்டமனமுடையவன்; துரோக எண்ணமுள்ளவன்" என்று நிந்தி

தித்து ஒரே ஆடையுடன் என்னை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டான். பின்பு என்னைக்கண்டபோதெல்லாம் மனஞ்சீறிப் பகைகொண்டு ஓடோடியும் துரத்தித் துன்புறுத்திவந்தான்.

''வாலியால் முனிசாபம் பெற்ற இந்த ரிசியமூகமலை பிரதேசம் தவிர வேறு எனக்குப் புகலிடமில்லை. இந்த இடம் இல்லாவிடில் நான் ஒரு நிமிஷமாவது தங்கி மனச்சாந்தியடைய முடியாது. என்னைக்கொல்ல எண்ணுகிறுன். இவன் பகையாலும் வஞ்சம் தீர்க்கும் எண்ணத்தாலும் உலகம் முழுதும் திரிந்து திரிந்து அல்லலுற்றேன். என் மனைவியையும் அபகரித்துக் கொண்டான் அவன். கண்டபோதெல்லாம் எனக்கு இன்னலிழைத்து வந்தான் உயிர் அஞ்சி நடுக்க முற்று புழுபோல் துடித்துக் கொண்டிருக்கிறேன். நான் சாவது அவனுக்குப் பூரண திருப்தியளிக்கு மென்று எனக்கு நன்கு தெரியும். என்னைக் கொல்லாமல் கொன்று வருகிறுன். அவனிடம் எனக்குள்ள திகில் ஒன்றே தினமும் என் ஆயுளைக்குறைத்துக் குத்தி வருகின்றது. ராகவா! நான் நிரபராதி. எவ்வாறு என் உடன் பிறந்தவனாலேயே அவதியுற்று வாடி வருந்துகிறேன் என்பதைத் தாங்கள் உணர வேண்டும் மென்று இவ்வளவு விரிவாக உரைத்தேன். என்னைக் காத்தருள வேண்டும். கருணை வள்ளலே! என் ஆவியை உறிஞ்சும் இப்பெரும் திகிலை அகற்றுவீர்களாக'' என்றுன். பதைபதைத்த சுக்கிரவனின் வாழ்க்கை நிலையை விளக்கும் இப் பரிதாபச் சொற்கள் உயிர்த் தோழனை ரகுவீரனை வாட்டின. அவன் சுக்கிரீவன் மனச்சாந்தியடையத்தக்கபடி உறுதியளித்து மனவேதனையைப் போக்க எண்ணி முடித்தான். மனைவியை அபகரித்த குற்றம் ஒன்றே வாலிக்கு மரண தண்டனை விதிக்கவல்லது. ஆகையால் அவன் "இதோ என் கூரிய வாளிக்கு இரையாகப் போவதைக் காண்பாய் பயத்தைவிடு" என்று அடித்துப் பேசி சுக்ரீவனுக்கு ஆறுதலளித்தான்.

---

11. நட்பின் வளர்ச்சி.

ராகவன் உறுதிமொழியைக்கேட்ட சுக்ரீவன் என்றும் அடையாத மனக்களிப்பை அடைந்தான். என்றும் வாட்டிக்கொண்டிருந்த 'வாலிபயம்' என்ற விஷஜுரம் தன்னைவிட்டகலப் போகிறதென்ற மனேதிடம் பெற்று நண்பனைப்பார்த்து "ராகவா! உங்கள் பாணங்கள் நிகரற்றவை. பிரளயத்தில் உக்கிரமான ஊழித்தீ எவ்வண்ணம் உலகையெல்லாம் அழித்துச் சாம்பலாக்குமோ (**தற்காலத்து அணுகுண்டு சக்தியின் காரணமாய் "ரேடியோ ஆக்டிவ்" எனும் கனல்பரவிக்கொண்டே எதையும் சாம்பலாக்கும் வன்மையை இம்மொழி குறிக்கிறது போலும்!**) அவ்வண்ணமே அவை சக்திவாய்ந்தவை என்று எண்ணுகிறேன். எனினும் வாலியின் வன்மையும் துணிச்சலும் பராக்கிரமும் தாங்கள் அறிய வேண்டுமென்றும் எண்ணுகிறேன்.

அவனே சூரியன் உதயமாகு முன்னமே மேற்கு சமுத்திரத்திலிருந்து கிழக்குக்கடலுக்கும், தென்கடலிலிருந்து வடகடலுக்கும் தாண்டிச்செல்லும் வேகங்கொண்டவன். வீரியம் படைத்தவன். மலைச் சிகரங்களிலேறி அவைகளைப் பிடுங்கி எடுத்துப்பந்தாடுபவன்!

"ஒருநாள் துந்துபி என்னும் அசுரன், வரபலத்தால் ஆயிரம் யானையின் பலத்தையடைந்து செருக்குற்றுத் தலை கொழுத்து ஒரு கடலையடைந்தான். அவன் கடலைக் கலக்கி அலையைக் கிளப்பி அட்டகாசஞ் செய்தான். "நீ இமயமலைக்குச் சென்றால் இமவான் உனக்குச்சமமாக போர் புரிவான்" என்ற மொழி கடலிலிருந்து எழவே, அடுத்த விநாடியில் இமயமலைக்கு விரைந்தான். அங்கேயுஞ்சென்று தன் கொழுப்பையும் வலிமையையுங் காட்டி சிகரங்களைத் தகர்த்துத் தாறுமாறாக எறியவே. "உனக்குச்சமமாகப் போர் புரியவல்லவன் கிஷ்கிந்தா நகரத்து அரசன் வாலி ஒருவனே" என்ற செய்தி கேட்டு, துந்துபி அசுரன் எருமை உருவமாகக் கிஷ்கிந்தையடைந்து அட்டகாசம் செய்யவாரம்பித்தான். மரங்களைமுறித்தான், பூமியைக் குளம்புகளால் கொத்திக்கிளறிப் பள்ளமாக்கினான். செருக்கால் சீறிக்கொண்டு கோட்டை வாயிலைக் கொம்புகளால் புடைத்துப் பிளந்தான்.

அச்சமயம் வாலி அந்தப்புரத்திலிருந்தான். இப்பேரிரைச்சலைக்கேட்டு பெண்களுடன் வெளிவந்தான். வந்தவன் இன்னானென்று அறிந்து கடுஞ் சினங்கொண்டு, "அடே! துந்துபி! நீ எனக்குத் தெரிந்தவனாயிருக்கிறாய், ஆகையால் உன் பிராணனைக் காத்துக்கொண்டு திரும்பிப்போ" என்றான். துந்துபி "மாதர்கள்முன் வீரம் பேசுகிறாய், உன் வல்லமையைக் காட்டு" என்று மதங்கொண்டு முழங்கினான்.

"அவ்வளவுதான்! புலிபோல்பாய்ந்து வாலி யானையொத்த பேருருவங் கொண்ட துந்துபியின் கொம்புகளைப்பற்றி இழுத்து அவைகளைப்பிடுங்கி எறிந்து அசுரனையும் மண்ணில் வீழ்த்தி அறைந்தான். பின் அவ்விருவரும் மகா கோரமான யுத்தஞ்செய்தார்கள். இந்திரனால் கொடுக்கப்பட்ட காஞ்சன மாலையை அணிந்திருந்த வாலி அக்கடும்போரில் மேன்மேலும் உற்சாகம் பெற்றான். துந்துபியோ வரவர வலிமைகுன்றி நொந்து சளைத்துப்போனான். இதைக்கண்ட வாலி அவ்வெருமை உருவத்தை அப்படியே இலேசாகத்தூக்கி உயர்த்தி தரையில் மோதியடித்தான், அசுரனும் ரத்தங்கக்கி உயிர் துறந்தான். கடைசியில் கோபங்தணிய அப்பேருடலை அலட்சியமாகத்தூக்கி ஒரு யோஜனை தூரம் வீசி எறிந்தான் வாலி.

இவ்வண்ணம் அதிவேகமாய் எறியப்பட்ட அவ்வெருமை அசுரன் வாயினின்று இரத்தத்துளிகள் மதங்கமுனிவரின் ஆசிரமப்பிரதேசத்தில் சிந்தின. இதைக்கண்ட முனிவர் கோபமடைந்தார். "இவ்விடத்துபரிசுத்தத் தன்மையை இரத்தத்துளிகளால் கெடுத்தவனும், எருமை பிரதேத்தை எறிந்து மரங்களை முறித்தவனும், துராத்மாவும், துர்புத்தியுள்ளவனும் மனம்போனபடி நடப்பவனும், அசுரஉடலை எறிந்து அசுத்தஞ்செய்த அயோக்யன் எவனோ அவன் இங்கு புகுவானாகில் உடனே மரணமடைவான்

இச்சாபம் இங்கு வசிக்கும் வாலியைச்சேர்ந்த வானரர்களுக்கும் பலிக்கட்டும்'' என்ருர். உடனே அங்கிருந்த வானரர்கள் அவ்விடம் விட்டுவெளிவந்து வாலியிடம் முனிவர் சாபத்தை அறிவித்தார்கள். அவனும் உடனே விரைந்து வந்து முனியைப்பணிந்து தன்பிழை பொறுக்குமாறு மன்ருடினன். ரிஷியோ அவனைப் பொருட்படுத்தாது ஆசிரமத்தினுள் சென்றுவிட்டார். அதுமுதல் வாலியும் அவனைச்சார்ந்தவர்களும் சாபத்தின் அச்சத்தால் இங்கு வருவதில்லை, அதனுல் எனக்கு இவ்விடம் புகலிடமாயிற்று!

''ராகவா! அன்று வாலி எறிந்த அசுர எருமையின் காய்ந்த எலும்புக் கூடுதான் இதோ காணப்படுகிறது. அத்தகைய வீரம் படைத்தவன் அவ் வாலி, இதோ நம்முன் எழு ஆச்சாமரங்கள் தெரிகின்றன அல்லவா! வேண்டுமென்ருல் இவைகளில் ஒன்றை அவன் அசைக்கத் தலைப்பட்டானுகில் ஒரிலையும் மரத்தில் நிற்காது செய்துவிடுவான். அவ்வீரம் படைத்தவனையல்லவோ ஓடுக்கிவிட உறுதிகூறியிருக்கிறீர்கள்!'' என்று வாலியின் பிரதாபத்தைச் சொல்லி பெருமூச்செறிந்தான் சுக்ரீவன்.

வாலியின் வலிமையை விவரித்த சுக்கிரீவனின் வசனத்தையும் அதன் கருத்தையுமறிந்த லட்சுமணன் புன்னகை புரிந்தான். வாலியிடம் சுக்கிரீவன் கொண்டிருந்த உள்ளப்பயத்தை மதிப்பிட்டு அவனைப்பார்த்து சொல்கிருன்:- ''சுக்கிரீவா! என்ன நிகழ்ச்சி நிகழ்த்திக்காட்டினுல் உமக்கு வாலி வதையைப் பற்றி நம்பிக்கை அடைவீர். உம் சந்தேகம் ஒழியும்''?

வானரத்தலைவன் லட்சுமணனைப்பார்த்து, ''முன்னொரு நாள் வாலி இதோ காணும் எழு ஆச்சாமரங்களை, தனித்தனியாயும், ஒன்று சேர்ந்தும் துளைத்திருக்கிருன். இவைகளுள் ஓர் மரத்தையாவது ராமர் ஓர் பாணத்தால் பிளப்பாராகில், இந்த துந்துபியின் எலும்புக் கூட்டை இருநூறு வில்லளவு தூரம் எறிவாராகில் இவருடைய பராக்கிரமத்தை பிரத்தியட்சமாகக் கண்டு வாலியை மாண்டவனுகவே உறுதிகொள்வேன்!'' என்ருன்.

கொஞ்சநேரம் தனக்குள் சிந்தனை செய்தான், பின்பு இரு சகோதரர்களையும் பார்த்து இன்னும் சொல்லிக்கொண்டே போகிருன் '' வாலியோ பெயர் பெற்ற பலசாலி, சூரன், அசுரர்களை ஒழித்தவன் அவன் ஆற்றலும் வெற்றிகளும் பாரெங்கும் போற்றப் பட்டவை, எவராலும் வெல்லமுடியாதவன். இவன் செயலாற்றல் இன்னவை என்று தேவர்களாலும் மதிப்பிட இயலாதவை. இவைகளையறிந்துதான், அல்லும் பகலும் திகிலடைந்து அவன் வர இயலாத இவ்விடத்திற்கு ஓடிவந்துவிட்டேன். அவன் செருக்கையும், சீற்றத்தையும். பிழைபொருக்கா கொடுமையையும் என்றும் தணியா பகைமையும் உணர்ந்து இவ்விடம் விட்டு அகலாதிருக்கிறேன். இங்கு இருக்கும் நண்பர்கள்தான் தங்கள் இமைபோல் என்னைப்பாதுகாத்து வருகிருர்கள். இனி இமயம்போன்ற உங்களைச் சரணமடைந்துவிட்டேன்!

''ஐயனே! ப்ரபோ! வாலியின்வலிவுடமையை நன்கறிவேன். தேவரீர் வீர்யத்தைப்பற்றி நேரில் அனுபவமில்லாதவன், ஆகவே, உங்களைப்

பரிக்ஷிக்கவோ, அவமதிக்கவோ, பயமுறவோ நான் வாலியைப்பற்றிப் புகழ வில்லை. அவனிடம்கொண்ட என் உள்ளநடுக்கத்தால் அதை உங்களுக்கு அறிவித்தேன், ஆகையால் நீங்கள் வேறுவிதமாக அபிப்பிராயங்கொள்ள லாகாது. ராமபத்ரா! உம் அபாரமான திருமேனித்தோற்றமும் திருவாக்கும் பயமின்மையும், தீரம் இன்னதென்பதையும், நீறுபூத்த அக்கினிபோன்ற அஞ்சாநெஞ்சமும் அழியா ஆணவமும்கொண்ட ஆற்றலையும் நன்கு விளக்கு கின்றன''! என்று பேசிமுடித்தான்.

சுக்கிரீவன் வசனத்தைக்கேட்ட ரகுநாதன் அவன் மனத்திகிலையும் எளிமை மனப்பான்மையையுமுணர்ந்து புன்முறுவல் செய்தான். "வானரரே! என் பராக்கிரமத்தில் நம்பிக்கை கொள்வீர் ; பாரும்'', என்று சொல்லி அலட்சியமாகத் தன் கால் கட்டைவிரலால் சுக்கிரீவனால் காட்டப்பட்ட துந்துபியின் பேருடல் எலும்புக்கூட்டைப் பத்துயோஜனை தூரம் செல்லுமாறு தூக்கி எறிந்தான். இதைக்கண்டு வியப்படைந்தான் வானரத்தலைவன், எனினும் சந்தேகம் அவனை விட்டபாடில்லை. பயபக்தியாய் அதைவெளி யிடுகிறான்.

"நண்பரே! நீர் அலட்சியமாய்ப் பந்தாடிய எலும்புக்கூடு வாலி எறிந்த தூரத்தைக்காட்டிலும் அதிகமானது என்றாலும், அவன் எறிந்தபோது அது ஊனுடன் மிக்க கனமாயிருந்தது. ஆகையால் அதிகமானபலம் யாருக்கென்று மனம் குழம்புகின்றது. ராகவா! ஓர் ஆச்சாமரத்தைமாத்திரம் துளைக்க இந்த நெடுவில்லை வளைத்து நாணேற்ற திருவுளம் பற்றவேணும், அப்போது தான் என் சந்தேகம் தீரும், உங்கள் பராக்ரமத்தை விமர்சனஞ்செய்ய அதுவே போதும், அப்போது, ஒளிகளுள் கதிரவன் கதிர் எவ்வண்ணமோ, மலைகளுள் இமயம் எவ்வண்ணமோ, மிருகங்களுள் சிங்கம் எப்படியோ, அது போல் மானிடருள் நீங்கள் விளங்குவீர், என்பதில் ஐயமில்லை'' என்று தன் ஆசையை வெளியிட்டான்.

---

12 நட்பின் பெருமை

வானரத்தலைவனின் மன ஓட்டத்தை நன்கறிந்த நரோத்தமன் வில்லைக் கையிலேந்தி நாணேற்றி, நாணொலியால் நான்கு திக்குகளையும் ஒலிமயமாகச் செய்து ஓர் ஆச்சாமரத்தைக் குறிவைத்து ஒரு பாணத்தை விடுத்தான். அது பாம்புபோல் சீறிப்பறந்து ஏழு ஆச்சாமரங்களையும் துளைத்துவிட்டு மலை யையும் தகர்த்து பூமிக்குள் புகுந்தது. உடனேயே அவ்விடத்தைப் பிளந்து வெளிவந்து மறுபடியும் அவன் அம்பறாத்தூணியை யடைந்துவிட்டது. அவ்வேழுமரங்களையும் ஊடுருவிப்பாய்ந்து பிளந்ததுமன்றி, மலையையும், பூமியையும் பிளந்து வீண்போகாது, மறுபடியும் திரும்பின வாளியின் தன்மையையும், அதை அலட்சியமாய்க் கையாண்ட ஸ்ரீ ராமரது

திறனையும் கண்டு பிரமித்துப் போனான் சுக்கிரீவன். பின்பு பெருகிக் கிளம்பும் ஆச்சரியத்தில் வாலி மாண்டான் என்ற திட எண்ணத்தில் ராமனைப் பார்த்து அஞ்ஜலி செய்து "ராமா! இன்றுதான் என் பிறவி பயன் பெற்றது. இன்றுதான் என் கவலை யொழிந்தது. இன்றே என் சத்துரு ஒழிந்தான். எனக்கும் உண்டு அரசு புரியுங்காலம். பிரபுவே! புருஷோத்தமா! போரில் உமது பாண ஜாலங்களால் இந்திரன் முதலிய எல்லாத் தேவர்களையும் அழிக்கும் வன்மைபொருந்திய வீரர். நீங்கள்! அல்ப வாலியைப் பற்றிக் கேட்பானேன்? எவருடைய ஒரே பாணம் ஏழு ஆச்சா மரங்களையும், மலையையும், பூமியையும் பிளந்துவிட்டு வீண்போகாது மறுபடியும் தூணியை வந்தடைந்ததோ, அவர் முன் நிற்பவன் யாவன்? இந்திரனையும் வருணனையும் ஒத்த தேவரை நண்பனாகப் பெற்ற எனக்கு இனி குறை ஏது? முழுத் திருப்தியடைந்த எனக்கு இன்றே வாலியை ஒழித்துவிட அருள் புரிய வேண்டுகிறேன். அறிவிற் கெட்டா விக்கிரமசாலி தாங்கள்" என்று தலை குனிந்து பணிந்தான்.

[கௌடில்யரின் "அர்த்த சாஸ்திரத்தில்" விவரிக்கப்பட்ட ஒரு பகுதியை நினைப்பூட்டுகிறது தாசரதியின் வாளிவிசை. ஒரு இயந்திரத்தில் அமையப்பெற்ற இன்றியமையா ஆணிவேர் எவ்வித ஆயுதம் கொண்டும் தகைக்கமுடியா வன்மைகொண்டது, எனினும் ஒருவித "அஸவம்" (திராவகம்?) பூசப்பட்ட ஓர் செப்புப்பெட்டியை 50 அடிக்குள் வைத்தால், அவ்வாணிவேர் எவ்வித உலோகத் தடையையும் துளைத்துக்கொண்டு காந்தம்—இரும்பை இழுப்பதுபோல்—அப்பெட்டிக்குள் புகுந்து அடைந்துவிடும்!]

"முழு மனச் சாந்தியடைந்த எனக்கு இன்றே வாலியை ஒழித்து விட அருள் புரிய வேண்டுகிறேன். நினைக்க முடியா பராக்கிரமசாலி தாங்கள்" என்று கோரின சுக்கிரீவனுக்கு ஆறுதலளிக்க எண்ணி, அப்படியே ஆகட்டுமென்று இணங்கினன் ரகுவீரன்.

உடனே அநுமன் முதலிய வானர அமைச்சர்களுடன் யாவரும் கிஷ்கிந்தை நோக்கி நடந்தனர். அந்நகரின் அடர்ந்த வனத்தையடைந்து அவர்கள் மரங்களால் சூழப்பட்டு நின்றனர்.

சுக்கிரீவன் வாலியைப் போருக்கு அழைக்கும் அவாக் கொண்டு ஆடையை இறுக்கிக் கட்டிக்கொண்டு கோட்டை வாயில் முன் வீரகர்சனையிட்டான். இப் பேரொலியைக் கேட்ட வாலி, இது சுக்கிரீவனது ஒலியென்றுணர்ந்து கடுஞ்சினங் கொண்டு வெளிக் கிளம்பி உடனே தம்பியைத் தகைத்தான். இருவரும் கடும்போர் புரிந்தனர். மிக்க பயங்கரமான யுத்தமது. ராமன் வாலியைக் கொல்ல நினைத்துத் தன் வாக்கை நிலை நிறுத்த எண்ணி வில்லில் நாணேற்றித் தயாராய் நின்றான். ஆனால் இருவரும் கட்டிப் பிடித்து உருண்டு எழுந்து மோதிக் கொண்டிருந்த போது இவர்களுள் யார் வாலி, யார் சுக்கிரீவன்' என்று கண்டு பிடிக்க முடியாமல் தோன்றினர். தோற்றம், அவயவ அமைப்பு, நடை உடை பாவனைகள், ஒத்திருந்தன. இடைவிடாது போராடினர். ராமனும் தொடுத்த வாளியை விடாது காத்து நின்றான். கடுமையாய்ப் போர் புரியும் சகோதரர்களுள், இளையவ

னுக்கு கொஞ்சங் கொஞ்சமாக சோர்வு கண்டது. வாலியோ வரவர வீரம் மிகுந்து சுக்கிரீவனைப் புடைக்கலானான். சுக்கிரீவன் அடி தாளாமல் வேதனையுற்றுப் புறங்காட்டிப் பின்னடைந்து ரிசிய மூக மலைப்பக்கம் ஓடினான். வாலியும் பின்பற்றி அவனை நையப் புடைத்தான். சுக்கிரீவன் மிகவும் தளர்வுற்றுப் புகலிடமான மதங்க முனிவர் வாழும் பிரதேசத்தில் நுழைந்து உயிர் தப்பினான். வாலி முனியின் சாப பயத்தால் அங்குவர அஞ்சி, பயந்தோடும் தம்பியை மேற்கொண்டு தொடராது விட்டான்.

மரங்களினிடையே நின்ற ராமனும் லட்சுமணனும், அநுமானும் மற்றவரும் காயமடைந்து துயருறும் சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தார்கள்.

[வாலியோ இவர்களைக் கண்ணுறவில்லை. எடுத்த கருமம் முடியும்வரை வாலியின் கண்ணில் படாமலும் வேறு எவ்வித தடையும் நேராமலும் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு ராமனுடையது. வாலியை மாய்ப்பதென்பது அவனது உறுதிமொழி. அதை ஈடேற்றி வைப்பது அவன் கடமை. அவனைச் சடுதியில் மாய்ப்பதே கடமை முடித்ததாகும். இது இகழ்ச்சிக்கு இடம் உள்ள நிகழ்ச்சியாகுமே, என்ற பிரச்னை மனத்தில் எழுந்ததோ என்னவோ. தன் வாக்குதத்தத்தை நிறைவேற்றுவதே தருமநெறி; தம்பியின் மனைவியைத் தனதாக்கிக்கொண்டு அவன் தாள்பணிந்து தஞ்சம் வேண்டியும் தள்ளி எறிந்து துரத்தியடித்த தமையன் பெருங் குற்றவாளியே, அவனுக்கு மரண தண்டனை விதித்தலும் அதை நிறைவேற்றித் தம்பிக்கு நீதி வழங்கி, நண்பனுக்குத் துணைபுரிந்து தன் வாக்கையும் நிலைநிறுத்துவதிலேயே கண்ணுயிருந்த கோசலைச் செல்வன் மன நிலையை யார் அறியமுடியும்?]

ராம லட்சுமணர்கள் தன்னிடம் வந்ததைக் கவனித்த சுக்கிரீவன் மனங்கசிந்து தலை குனிந்து, 'துணை புரிவதாகச் சொல்லி வாலியிடம் என்னைச் சிதைவுறச் செய்தது நட்பின் சிறப்பாகுமோ?' வென்று ராமனைக் கடிந்து பேசினான். ரகுநாதன் நட்பின் பெருமை அறியுமாறு அவனைத் தேற்றினான். "சுக்கிரீவா! இதோபார்; நான் என் வில்லில் பூட்டிய பாணத்தை விட முடியவில்லை; தவிர அறியாமையால், இரு சகோதரர்களுள் வேற்றுமை கண்டுணராது சரந் தொடுத்து ஒருவரைக் கொன்று விட்டால், மாய்ந்தவன் நீயாயிருந்து விட்டால் என்ன விபரீத விளைவு ஏற்பட்டிருக்கும்? நான் கொடுத்தவாக்கு பொய்யாகி விடுமல்லவா? அபய மடைந்தவனையும் ஆப்த நண்பனையும் அழிப்பது கொடும் பாதகமாய்விடும். நான் ஜானகியைத் திரும்பிப் பெறுவது நீ பிழைத்திருந்தால் தானே சாத்தியமாகும்" என்று ராமன் பல காரணங்களைச் சொல்லிச் சுக்கிரீவனுக்கு ஆறுதலளித்தான்.

மேலும், அவன் சுக்கிரீவன் என்று தெரிந்துகொள்ள அவன் கழுத்தில் கஜபுஷ்பி என்ற பூக் கொடியை மாலையாய்ச் சூட்டுமாறு லட்சுமணனுக்கு உத்தரவிட்டான் ரகுநாதன்.

[கஜபுஷ்பி என்ற கொடியின் சக்தி தான் விடும் வாளியை இழுக்காது என்பதோ என்னவோ! இதையணிந்ததும் சுக்ரீவன் புது ஒளிகொண்டு

திகழ்ந்தான் அவனை மறுபடியும் உற்சாகமூட்டி, இத்தடவை வாலி மாய்வது நிச்சயமென்று உறுதியளித்துத் திரும்பவும் வாலியைப் போருக்கழைக்க கிஷ்கிந்தைக்கு அனுப்பினன். ராகவனும் மற்றவரும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.]

13. நட்பின் ஆர்வம்

வில்லை நாணேற்றினவண்ணம் ராகவன் லட்சுமணனுடனும், சுக்கிரீவனும் அநுமானும் கிஷ்கிந்தை நோக்கித் திரும்பவும் புறப்பட்டனர். இப்பொழுது வரும் வழி வேறு வழியாயிருந்ததோ என்னவோ! இடையே மனதைக் கவரும் அழகான நந்தவனத்தையும் அதைச் சுற்றியிருந்த வனக் காட்சியையும் கண்டு உள்ளக் களிப்படைந்தனர் ராமலட்சுமணர்கள், பூங்கொத்துடன் விளங்கிய மரக்கிளைகள், தெள்ளிய நீரோடைகள், குகை பொருந்திய மலைப் பிளவுகள், பூப் பரப்பு கொண்ட பள்ளத்தாக்குகள், சாந்தி பொலியும் அழகிய அன்னங்கள், நீர்க் காக்கைள், மனச் சோர்வை மறைக்கும் மான் கூட்டங்கள், யானைக் கன்றுகள்—இவை இயற்கை வனப்பை மிளிர வைத்தன. வெகு தூரம் வேகமாய் நடந்தும் இவ் வியநிகை எழில் தொடர்ந்து வந்ததைக் கவனித்த ராமனைப் பார்த்துச் சுக்கிரீவன் "இந்த இடம் 'சப்த ஜனர்' என்ற ஏழு முனிவர்களின் ஆச்ரமங்கள் நிறுவிய பிரதேசம்; இது மிகவும் விசாலமானது, ரம்மிய மானதும், உத்தியான வனங்கள், ருசியான கந்த மூலங்கள் நீரோடைகள் அடங்கியதும் சிரமத்தைப் போக்கவல்லதுமான பரிசுத்தமான பிரதேசம்'' என்று விவரித்தான். அம்முனிகள் தலைகிழாக இருந்துகொண்டு ஜலத்தி லேயே வசித்து ஏழு நாட்களுக் கொருதரம் காற்றைப் புசித்துக் கடுந்தவ மியற்றிச் சித்தி பெற்று இறுதியில் இறைவனருளால் எழுநூறு வருஷங்க ளுக்குப் பின் தங்கள் தேகங்களுடன் வானுல கெய்தினர்.'' என்றுன்.

[முன்பு அயோத்யா காண்டத்தில் விசுவாமித்திரரின் வேள்விகளைப் பற்றிய பகுதியில் திரிசங்கு என்னு மரசன் தன் பூத உடலுடன் வானுலகம் செல்ல வேண்டுமென்று செய்து முடித்த வேள்வியில் இது இயலாத காரிய மென்று வானோர் தடுத்தனர். இங்கு சப்ஜனர் எனும் ஏழு தவசிகள் தலை கீழாய்த் தொங்கி வேள்வி யியற்றி, தங்கள் சரீரங்களுடன் வானுல கெய் தினர் என்று குறிக்கப்படுகிறது. திரிசங்கு தலைகீழாகத் தொங்கினதற்கும் இங்கு, இம்முனிகள் தலைகிழாகத் தொங்கினதற்கும் ஏதோ கருத்துண் டென்று விளங்குகின்றது. பூத உடலை வானுடல் தன்மையடைய தம் வேள்வி வகுத்துப் பின்பற்றினுர்கள் நம் மூதாதையர்கள், என்று புலனுகிறது.]

சுக்ரீவன் வனத்தின் விசேஷத்தை விவரித்துக்கொண்டே போகிருன். "ரகுவீர! இப்பிரதேசம் அவ்வேழு முனிவர்களின் கடும் தபசால்

மிக்கப் புனித இடமாயிற்று. அவர்களின் யோகத் திரேதாக்கினி இன்னும் அணையாது எரிந்துகொண்டிருக்கிறது பாருங்கள்! இங்கு துஷ்டமான மிருகங்களும், மனிதர்களும் அணுகுவதில்லை. மலர் வாடாது, கனிகள் அவியாது. மிக்கத் தூய்மையான இவ்விடத்தில் தவஞ் செய்த பெரியார்களை யார் வணங்குகிறார்களோ அவர்களுக்கு எவ்வித அசுபமும் நேரிடுவதில்லை, ஆகையால் ராகவா! நாம் அவர்களைப் பணிவோமாக" என்றான். உடனே ராம லட்சுமணர்கள் அப்பெரியார்களை நினைத்து பக்தியுடன் அடி பணிந்தனர். பின்பு வானர ராஜ்யமான கிஷ்கிந்தைக்கு விரைந்தனர்.

வனத்தைவிட்டு வெளிவந்ததும் யாவரும் கிஷ்கிந்தையின் கோட்டை வாயிலைக் கண்டனர். சுக்ரீவன் கஜபுஷ்பி என்னும் மாலையை அணிந்து முன்சென்றான். அரசிளங் குமாரர்கள் அங்கேயே தங்கினர்.

[பதினான்கு வருஷம் வனவாசமெனும் பிரதிக்ஞை. கிஷ்கிந்தை நகருள் புகுந்தால் அப்பிரதிக்ஞைக்கு முரணாகும். நகர மாந்தர்களுடன் சகவாசமும் கூடாது. அவர்களுக்குப் புலனாகாதிருத்தலே கொடுத்த வாக்கை நிலை நிறுத்துவதாகும். இதை வாலி அறியாதவன் என்பதற்கில்லை. அவனுடன் வார்த்தையும் தாரையின் வாக்கியமும் ஒற்றர்களால் அறியப்பட்டிருந்தன வென்றும் பின்னர் புலனாக்கப்போகின்றன. ராமனைப்பற்றியும் அவன் குண விசேஷத்தையும் வாலி நன்கறிந்தவனே. எவனாலும் தனக்கு எவ்விபத்தும் விளைவிக்க முடியாதென்ற அகம்பாவமும், வாலியின் செருக்குமே ராமனைப் பற்றி அக்கறை இல்லாமல் செய்துவிட்டன போலும்.]

---

14. சுக்ரீவனது ஆர்ப்பு.

கிஷ்கிந்தமுன் அடர்ந்த காடு. இங்கு தங்கினார்கள் ராம லட்சுமணர்கள், வில் வளைத்து நாணேற்றி ஆயத்தமானான் ரகுநாதன்.

[முன்பே சுக்ரீவனுடன் போரிடும்போது வாலியின் வலிமையையும் வேகத்தையும் அறிந்துகொண்டான் ராமன். வாலிவதத்தைச் சுக்ரீவன் சக்கியஞ் செய்தபோதே ராகவன் திட்டமிட்டுவிட்டான். தம்பியின் சரணாகதியை உதாசீனஞ்செய்து, நியாயத்தை உணராது சந்தர்ப்பமும் கொடுக்காது அவன் அமைச்சர்களைச் சிறையிலிட்டு ஒரே ஆடையுடன் உடன்பிறந்தானை நாட்டை விட்டுத் துரத்திய கொடுங்கோலனும், தம்பியைத் துறத்திவிட்டு அவன் மனைவியை அபகரித்தவனுமாகிய வாலிக்கு மரணதண்டனையே சரியானது என்று தீர்மானித்திருந்தான். ராம சுக்ரீவர்கள் நட்பைப்பற்றிக் கிஷ்கிந்தை அரண்மனை வாசிகள் நன்கு அறிந்திருந்தபோதிலும், அதன் விளைவு என்ன வாகுமென்று உணர்ந்திருந்தபோதிலும் வாலி வாளாவிருந்துகொண்டு தன் போக்கிலேயே சென்றுகொண்டிருந்தான். தம்பியின் மனைவியை அவனிடம் திருப்பி அனுப்பவில்லை; தம்பியின் புது நட்பினால் தனக்கு ஆபத்து என்று

கருதினவனுமல்லன். தன்னை யாரும் எதுவும் செய்துவிட முடியாதென்று இருமாப்பிலிருந்தான் அவன். ராமனுடைய பராக்கிரமத்தைப்பற்றி வாலி அறிந்திருந்தாலும், அவன் தனக்கு விரோதியல்ல வென்ற காரணத்தால் தனக்குத் தீங்கிழைப்பான் என்று அவன் கருதவில்லைபோலும். எனினும், தன் நடத்தையைச் சீர்திருத்தி நெறிமுறையில் செல்ல முயலவில்லை. அவன் எவரிடத்திலும் பயமில்லாதவனாய்த் தன் போக்காகவே போய்க்கொண்டிருந்தான். ராகவன் தனக்கு மிஞ்சினவனல்ல வென்பதே அவன் உள்ளக் கருத்துபோலும். ராஜபுத்திரர்கள் கிஷ்கிந்தை வந்தும் அவர்களை எதிர்கொண்டழைக்கவுமில்லை. ஒரு மரியாதையும் வரவேற்புஞ் செய்யாதது அரசு புரியும் ஓர் மன்னனுக்கு இகழ்வென்றும் அறிந்தவனல்லன். அல்லது அறிந்தும் கடமையைக் கைப்பிடியாது வாளாவிருந்துவிட்டான். செருக்கின் எல்லை அடைந்தவன்; இந்திரன் தந்தை என்ற பெருமிதம்! இந்திரனால் வழங்கிய காஞ்சன மாலை அவனுக்குப் பேரரண்பூட்டி எதிரியின் வலிவையும் பற்றி யிழுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தது, மேலும் அவன் தன் மதிப்பை பெருக்கிவிட்டதுபோலும்! அம்மாலை பூண்டிருக்கும்வரை தனக்கு மரணமின்மை என்ற திடம் மேலும் அவன் செருக்கைப் பெருக்கி, மதியைச் சுருக்கி, அறநெறியை பிறழவைத்துக் கொடுமையைக் கொழுந்தெரிய விட்டுக் கொண்டிருந்தது. தாரை தடுத்தும், 'ராமன் தருமத்திலிருப்பவன்; அவன் தவறுசெய்யான்' என்று சொல்லித்தான் தவறுசெய்துகொண்டே போகிறான். ராமனால் தண்டிக்கப்பட்டு குற்றுயிரும் குறையுயிருமாய்த் தரையில் மரண வேதனையில் புரண்டு துடிக்கும்போதும் அவன் கழுத்தில் இந்திரன் மாலை இருக்கும்வரை உயிர் பிரியாமல் இம்மரண வேதனையில் நீண்டநேரம் துடித்துக்கொண்டிருக்க எவன் சம்மதிப்பான்? வில்லாளனின் வில்லின் வலிவைக் காண்கிறான். கேவலம் தன் தோள்வலிவை மதிப்பிடாதிருப்பானா? ஆகவே, ராகவன் நன்னுடன் நேரில் போர் தொடுத்திருந்தால் அப்போதே அவன் எமலோகத்திற்குச் சென்றிருப்பான் என்று வாலி விசும்பியது முற்றிலும் ஆதாரமற்ற தற்புகழ்ச்சியின் ஆவேசமென்பது புலனாகிறது. வாலியை நேரில் கண்டு கண்டித்து விசாரித்துத் தண்டிக்க வேண்டுமென்ற நீதிவாதத்தால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை, எதிரே நின்று அவனுடன் போர்புரிந்து தன் கீர்த்தியை நிலைநிறுத்த வேண்டுமெனும் கட்டாயமுமில்லை. ராமனைத் தானே நேரில்கண்டு பேசி அவன் கருத்தை நிறைவேற்றுவதற்கு முன்னரே தன் முறையை நேர்ப்படுத்த வாய்ப்பும் சந்தர்ப்பமுமிருந்தன; அவற்றை அவன் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தன் செருக்கால் அவன் தானே அழிந்தான் என்று முடிவுகூறும் சூழ்நிலை எழுந்து பரவுகிறது அச்சமயம்.]

சுக்ரிவன் முன்சென்று கோட்டை வாயின் முன் நின்றான். இதைக் கண்ணுற்றதும் இதிலிருந்து அகாரணமாய் துரத்தி யடிக்கப்பட்டான் என்று உணர்ந்ததும், இக்கோட்டைக்குள் தன் மனைவி தவித்துக்கொண்டிருக்கிறாள் என்ற எண்ணம், பொங்கி எழும் கோபத்தைப் புயலாக்கியது. பயங்கரமான கர்ஜனை செய்து ஆர்பரித்தான். பின்பு ஆத்திரங்கொண்டு ராமனிடம் தாவி, "ராமா! பொன் தோரணங்கள் கொடிகள், இயந்திரங்கள் பொருந்திய நகரின் கோட்டையைப் பாருங்கள். வீரரே! இங்கு எனக்கு இடமில்லை என்றுவெருட்டி அடித்தவனை வதைசெய்வதாக வாக்களித்ததை நினைப்பூட்டுகிறேன்" என்று கதறிப் பதறினான்.

ரகுநாதன் "சுக்ரீவா! கவலை வேண்டாம். லட்சுமணன் சூட்டிய மாலையுடன் விளங்கும் உன்னை எளிதில் காணலாம்; இதோ வாலி விழுந்தவனைக் காண்பாய். அவனோ உருவத்தில் மாத்திரம்தான் உன் சகோதரன். குணத்திலே வைரி. உனக்கு எவ்விதத்திலும் சத்துருவாக விருக்கிறான். அவன் இதோ மாய்வது திண்ணம். எந்தச் சக்தியால் முன்பு கண் முன்னே ஏழு ஆச்சா மரங்களும் துளைக்கப்பட்டனவோ, அச்சக்தியால் இவனும் மாண்டு விழுவதைக் கண்ணுறப்போகிறாய். என் வாக்குறுதி என்றும் பொய்க்காது. என் பிரதிக்ஞையை எப்படியும் பூர்த்திசெய்யாது விடேன். இதன் உண்மையை இப்போதே காண்பாய். ஆகையால் கவலையின்றி வாலியுடன் போர்புரிய முனை" என்றான்.

மிக்க ஆறுதலடைந்து உற்சாகம் பெருகி சுக்ரீவன் கோட்டை வாயில் முன் தாவி பெருங் குரலிட்டுக் கர்ஜித்தான், அக்கர்ஜனையால் உலகமே கிடுகிடுத்தது. மிருகங்கள் பயந்து ஓடின, பறவைகள் பறந்து தாவின. சுக்ரீவன் மிக்க ஆற்றல்கொண்டு கோரகர்ஜனைசெய்து புயல்காற்றிலடிபட்டெழும் அலைகடலின் கொந்தளிப்பு உணர்ச்சிகொண்டு அங்குமிங்கும் சீறிக் குதித்தான். வெற்றியின் ஆவேசம் பொங்கி எழுந்தது.

மரங்களிடையே நின்றவர்கள் கடும் போரை எதிர்பார்த்துக் காத்து நின்றார்கள். தான் கொடுத்த வாக்கை நிலைபெறக் கருத்தாயிருந்தான் மனக் களங்கமற்ற வில்லாண்மை வீரன்.

[வால்மீகி முனிவரின் காலத்தில், ஸ்ரீ ராகவனும் லட்சுமணனும் மரங்களடைந்த காட்டினுள் மறைந்து நின்றனர் என்று ஒருமுறையல்ல, சரிடங்களில் சுட்டிக் காட்டுகிறார். மறைந்திருந்து வாலியை பாணம் விடுத்து மாய்ப்பது முறையாமோ வென்று ஒரு பிரசினை சிந்தனையைக் கிளப்பத்தான் செய்கிறது. எதிர் நின்று போராடலாம், எனினும் ஒரேபாணத்தால் வாலியை மாய்த்து விழ்த்துவேன் என்று சுக்கிரீவனுக்களிந்த வாக்கு ராமபத்ரனின் மனத்தின்முன் நின்று கொண்டிருந்தது. ஒரே பாணத்தில் கொல்ல வேண்டுமென்றால் இலக்கு சிறிதும் பிசகாதிருத்தல் அவசியம். இதற்குத் தடை ஏற்படாதிருத்தலும் வேண்டும். சமயம்பார்த்துக் குறி தப்பாது பாணம் எய்வதற்குத் தடைநேராது மறைந்திருந்து காத்துநிற்பது ஒரு சாதனம் போலும்!]

---

15. காண்மின்! அவன் பொன்னடி மெய்ம்மையே!

கோட்டை வாயிலின்முன் எழுந்த சுக்ரீவனது முழக்கம் வாலியின் காதைப் பிளந்து மதியைச் சிதறவடித்தது. அப்பொழுது வானர மன்னன் அந்தப்புரத்தில் பெண்களிடையே சரச சல்லாபஞ் செய்துகொண்டிருந்தான். முன்பு அசுரன் மாயாவி கிஷ்கிந்தை வந்தபோதும், துந்துபி வந்தபோதும் சுக்ரீவன் இரண்டாம் முறை வந்தபோதும் வாலி எவ்விதமாகக் காலங்கழித்து

வுந்தானென்பது நிதரிசனமாகிறது. சதா வாலி அந்தப்புரத்தில் கள்ளுண்டு பெண்களிடையே காலங் கழிப்பதாகவே தெரிகிறது. அரசசபையை அழைப்பதில்லை; அமைச்சர்களுடன் ஆலோசனை செய்பவனாகவும் காண்பதில்லை, இப்பொழுது சுக்ரீவன் வீர கர்ஜனை அவன் குடி மயக்கத்தைப் போக்கி அடங்காக் கோபத்தை மூட்டிவிட்டது, உடல் துடித்தது; மனம் பதை பதைத்தது. மறு நிமிஷம் அவன் கோபாவேசம் கொழுந்து விட்டெரியவே சீறிப் பாய்ந்து வெளியே விரைந்தான்.

இதைக் கவனித்தாள் அவனுடன் குதூகலமாயிருந்த அவன் மனைவி தாரை. இரண்டாம் முறை சுக்ரீவன் வந்து இதுவரை கேட்டிராத பேரிரைச்சலை முழக்கவே, அவள் உள்ளங் கலங்கியது. கோரைப் பல்லைக் கடித்துக் கோபத்தில் பெருமூச்சு விடும் வாலியைக் காண்கிறாள். இது ஏதோ விபரீதமென்றுணர்ந்து மனம் நடுங்கினாள். தட்சணமே புன்முறுவல் பூத்துக் கணவனிடம் தாவி அவனைத் இறுகத் தழுவிக்கொண்டாள். அன்புடன் அவனை மருவி இன்பஞ்சொரியும் இன்னிசை மொழியில் மெதுவாகப் பேசவாரம்பிக்கிறாள்;—

"வீரரே! பொங்கி எழும் கோபத்தைத் துயிலெழுந்தவர் பழைய பூ முடிப்பை அவிழ்த்து எறிவதுபோல் விட்டுவிடுங்கள். சுவாமி! உங்களுக்கு நலமுண்டாகும். வானர மன்ன! இவனோடு நாளைக் காலை போர்புரியலாம். இப்பொழுது வேண்டாம். இதனால் தங்களுக்கு ஒன்றும் சிறுமை இல்லை. நீங்கள் இப்படி கோபாவேசத்துடன் அவசரமாக வெளிக்கிளம்புதல் எனக்கு ஏதோ ஆபத்தின் பயத்தை எழுப்பிப் பரப்புகிறது. சற்று நிதானியுங்கள். நாதா! நான் உங்களைத் தடுப்பதின் காரணத்தைச் சொல்லவிரும்புகிறேன். கவனமாய் மனதில் எடுத்துக்கொள்ளுங்கள்.

"முன்பே ஒருதரம் இச்சுக்ரீவன் இங்குவந்து கத்தினார். உங்களால் நன்கு புடைக்கப்பட்டார். புறங்காட்டி ஓடினவன் திரும்பி ஏன் இங்கு வரவேண்டும்? இப்பொழுது வீறிடும் கர்ஜனையோ கதிகலங்க வைக்கிறது. இத்துணிச்சலின் காரணமென்ன? என் மனம் குழம்புகிறது. சுவாமி! கவனியுங்கள். கத்திக் கும்மாளமிடுவதின் காரணம் என்ன? இது உங்களுக்கு மிகவும் அவமதிப்பை உண்டாக்குமென்பதை அவர் உணராதிருப்பாரா? இருந்தும் ஏன் இப்படி இரண்டாவது தடவை வந்து ஆர்ப்பாட்டம் செய்கிறாரென்பதை ஆலோசனை செய்யவேண்டும். இது பொருட்படுத்தத் தகாததன்று. ஏதோ அவருக்கு நம்பிக்கையான துணை நல மிருக்கவேண்டும். யாராவது அபயமளித்து வாலியிடமிருந்து காப்பாற்றித் தருவேனென்று உறுதிமொழி அளித்திருக்கவேண்டும். இல்லாவிடில் இத்தகைய வீராவேசங்கொண்டு கர்ஜனை செய்வாரா? அவரோ இயற்கையிலேயே புத்திமான்; செயலில் சமர்த்தர். ஆகையால் தன் பலமறிந்து உங்கள் வன்மையுணர்ந்து இப்படி அனுவசியமாக இரண்டாம்தரம் இங்கு வந்து ஆற்றல் கொண்டு உங்களைக் கோபமடையச் செய்யமாட்டார். உங்கள் கோபத்தையும் வலிமையையும் பொருட்படுத்தாது இங்கு வந்து இடிமுழக்கஞ் செய்கிறாரென்றால், ஒப்பற்ற பரீட்சைசெய்து தேறிஅறிந்த உயரிய துணையைக் கொண்டே இவ்வளவு நிர்ப்பயமாக அவர் வந்திருக்கவேண்டும்,

"வீரரே! இதைக் கவனித்துக் கேளும். முன்பு ஒருநாள் அங்கதன் பேசிக்கொண்டிருக்கையில் செய்தி அறிந்தேன், அவன் ஒருநாள் காட்டினுள் போயிருக்கையில் நம் ஒற்றர்கள் அவனுக்குப் பின் வரும் நிகழ்ச்சியைத் தெரிவித்தார்கள், சூரர்கள், போரில் வெல்லுதற்கரியவர்கள். இக்ஷ்வாகு குலத்து தயரத மன்னன் புதல்வர்கள், ஒப்புயர்வில்லாதவர்கள், ராமன், லட்சுமணன் என்ற பெயருடையவர்கள், எதையும் செய்துமுடிக்கும் ஆற்றலுடையவர்கள், இவர்கள் சுக்ரீவன் கோரிக்கையைச் செய்துமுடிப்பதாக வாக்குக் கொடுத்து அக்காட்டுப்பிரதேசத்தில் வந்திருக்கிறார்கள் என்று அறிவித்தார்கள். இதை கேட்டுவந்த அங்கதன் என்னிடத்தில் சொல்லி யிருக்கிறான்.

"சுவாமி! உங்களுக்குத் தெரியாததில்லை. ஆனால் உங்கள் தம்பிக்குத் துணைபுரிய வந்திருப்பவர்களோ உலகப் பிரசித்திபெற்ற கீர்த்திமான்கள் என்பதை மறக்கவேண்டாம். ராமனைப் போரில் வெல்லுவதென்பது ஆகாத காரியம். எதிரியின் வலிவை அடியோடு அழிக்க வல்லவர்; காலாக்கினியின் சக்திபோல் விளங்கப் பெற்றவர், கற்பக விருட்சம்போல எல்லாவற்றையும் கொடுத்துதவி சாதுக்களை காப்பவர். ஆபத்திலிருப்பவர்களுக்குப் அபயம் அளிப்பவர்; திக்கற்றவர்களுக்குத் துணை புரிவதே அவர் முதல் லட்சியம்; தனிப்பெரும் அருள்மூர்த்தி, அறிவிலும், ஆராய்ச்சியிலும் வல்லுநர், தந்தை ஆக்கினையைப் பெருமைப்படுத்த அரசைவிட்டுக் கானகம் அடைந்தவர்; வனத்தில் தவஞ்செய்யும் ரிஷிகளை இமயம்போல் ரட்சிப்பவர்; கொடுங் கானகங்களை பரிசுத்தமாக்கினவர்; நற்குணங்கள் நிறைந்த அரும்பெருஞ் சுரங்கம், அறிவிற்கெட்டாதவரும், எவராலும் வெல்ல முடியாதவருமான அத்தகைய நிகரற்ற மகாத்மாவிடம் தேவரீருக்கு பகைமை என்பது ஒரு நாளும் தக்கதன்று. சூரரே! உங்களைக் கோபமூட்டவோ பயங்கொள்ளவோ நான் இவைகளை உரைக்கிறேனென்று கொள்ளவேண்டாம். உங்கள் நலன் ஒன்றையே கருதி இவ்வாறுரைக்கிறேன். அதைப் பொருட்படுத்தி ஆவன செய்யும்படி பிரார்த்திக்கிறேன்.

"வீரரே! இப்பொழுது ஒப்பற்ற துணைகொண்ட தங்கள் தம்பியுடன் போரிடுவதை நிறுத்துங்கள், உவகையுடன் அவரை வரவேற்று உண்மை அன்புடன் இப்பொழுதே யுவராஜாவாக முடிசூட்டுங்கள். ரகுநாதனின் நட்பைப் பெறுவது ஏற்றதென்று எண்ணங் கொள்ளுங்கள், உங்கள் பகைமையை விட்டொழித்து சுக்ரீவரை ஏற்று ஆதரியுங்கள். அவரோ உங்களுடன் பிறந்தவர், எப்போதும் இனிமையாய்ப் பேசிக் கூடி குலாவப்பட வேண்டியவர். அவர் வெளியே இருந்தாலும், இங்கிருந்தாலும் தங்கள் அன்பிற்கும் ஆதரவுக்கும் பாத்திரமானவரல்லவா? தம்பிக்குச் சமமான உறவினர் ஏது? உங்கள் பொறுமையையும் மரியாதையையும் பெறவேண்டிய உரிமை கொண்டவர். ஆகையால் அவரைத் திரஸ்காரஞ்செய்யவேண்டாம், நியாயமானதும் தருமமானதுமான முறையைக் கைக்கொண்டால் ராமனின் நல்லெண்ணத்தைப் பெற்றவராகலாம். பகையை களைந்துவிட்ட உங்களுடன் அவர் வந்து கௌரவமான இடம்பெற்று இன்புற்றிருக்கட்டும். அவரும் உங்களிடத்திலுள்ள பகைமையை விட்டுவிட்டு உங்களுக்கு இணை

யற்ற துணையாயிருப்பார். சுவாமி! தம்பியின் நட்பை மேற்கொள்ளுங்கள் இந்நிலையில் உங்களுக்கு இதைவிட வேறு கதியில்லை, என்னிடத்தில் சதா பிரியங்கொண்டவர் தாங்கள். அது உண்மையாயின், எனக்கு எதுஇஷ்டமோ அதையே செய்வது உங்கள் கொள்கையாயின், உங்களுடைய நலன் ஒன்று தவிர வேறெதிலும் பற்றில்லாதவள் நான் என்று நீங்களறிந்தது உண்மை யாயின், நாதா! நான் செய்யும் விண்ணப்பத்தை ஏற்று அருள்புரிவீராக. உங்களுக்கு மங்களம் தங்கும். என் ஐயனே! நான் கோரும் வரத்தை அருளும். உங்கள் நலனையே கருத்தாய்க்கொண்ட இம்மொழிகளைச் செவி சாய்த்தருளுங்கள். கோபத்தை விட்டொழியுங்கள். கோசலை கோமானுன கோதண்டபாணியின் கோபத்திற்காளாதல் கூடாது. இது உண்மையுரை. இதை „ஆமோதியுங்கள்'' என்று அடிபணிந்து வேண்டிக்கொண்டாள் தாரை. ஆனால் காலம் முடிந்த காலனின் விருந்தாளியான வாலியோ கடுஞ்சினத்தில் மதியிழந்து தாரையின் உபதேசத்தை உதாசீனம் செய்தான்.

[சுக்ரீவனுக்குப் பிரிய சகாவான சியாமளரூபனைப்பற்றி தாரை இவ்வளவு அறிந்திருக்கிறுள்! இது வாலிக்கும் தெரியாதா? ஸ்ரீராம சரிதையில் ராமபத்ரனைப் பலவிதமாக பலர் அறிந்தவண்ணம் சொல்கிறுர்கள். முதல் முதலாக, வால்மீகி ரிஷியே தன் ஆத்ம ரக்ஷாபணத்திற்காக, பெரியோர்களிடமிருந்து 'ராம ராம' என்ற தாரக மந்திரத்தைத் திருப்பிச் சொன்னபோதிலும் —'மரா மரா' வென்று விடாது உபாசித்தால் மீட்சி உண்டென்று உபதேசம் பெற்றுர். அதை வாய்விட்டுக் கூறி. பின்பு சப்தம் குன்றி, அதை நெஞ்சினில் நிறுத்தி, காதில் ஒலிக்க, மூச்சும், மனமும், ஞானமும் ஒன்றிக் கலந்து அதுவே உயிர்நிலையாயடைந்து, புற்றெடுத்துப் புல்மூண்டு உறைந்துபோக, அவர் தவத்தின் மகிமை மூடின புற்றைப் பிளந்து புகையாய் வெளிக்கிளம்பி வானெழுந்து ஜகத்ரக்ஷக அக்னியை— பூஉலகு இயங்கும் சக்தியை-தொட்டிழுத்தது. உடனே இறைவன் பிரசன்னமாகி ஞானக்கண் திறந்தார். வால்மீகி மாமுனியாகி வெளிவந்து, மனஇருள் நீங்கி யோகநிஷ்டையிலிருந்தார். இது முடிந்ததும் கண்திறந்து பார்க்க, ஒருநாள் காலை அமரகாலையாய்க் கண்டார். இது பூஉலகுதானு, அல்லது தேவலோகமாவென்று ஆச்சர்யங்கொண்டார். இயற்கை எழிலே உயிர்பெற்று எல்லாத் திக்குகளிலும் பிரசன்னமாயிருப்பதைக் கவனித்து மனத்தில் ஓர் தூய ஆனந்தம் பிறந்தது. என்ன இது புதுமை? யாரோ எங்கோ ஓர் மானிடன் தெய்வீகத் தன்மைபெற்று மானிட வாழ்க்கையில் மெய்ப்பொருள் தூவியிருப்பதை யுணர்ந்து பிரமித்தார். உடனே ஞானக் கண்ணில் ஆராய்ச்சி செய்யவே, உண்மையறிந்தார் போலும்! இதுவரை இறைவன் பூலோகத்தில் அவதாரமெடுத்தது தீமை யொழிக்கவும் தூய்மையை ரட்சிக்கவும் காரணம். இப்போது நிறுவிய ஸ்ரீராமாவதாரம் இக்காரணம் தவிர இன்னொரு காரணத்தையும் பிரதிபலித்தது. அதாவது சாதாரண ஓர் மனிதன் தன் கடமையைச் சரிவரச் செய்து தருமவழி செல்வானுகில் அவனிடம் தானுகவே இயங்கும் தெய்வசக்தி, அவனே கடவுளாகிறுன்-''ஸத்தியேன லோகான் ஜயதி'' என்ற சக்தி பிறக்கிறது. வானோர் நாடு வழி திறந்துவிடுகிறது. ஆகவே இவ்வவதாரம் எல்லா அவதாரத்தைக் காட்டிலும் மேம்பட்டது, கடல் அளவு கருணைகொண்டு— ''கருணகரகாகுஸ்தா''—(ஸ்ரீவேதாந்த தேசிகர் அருளிச்செய்த தசாவதார

விளக்கம்.) நம்போன்ற பாமரரைக் கடவுள் காண உயர்விக்கிறது என்று அம்மாமுனி உணர்ந்தனரோ, என்னவோ—அவர் ஞானநிஷ்டையிலிருந்தபோது நாரதர் அவர்முன் தோன்றுகிறார். உடனே எழுகிறது மாமுனியின் கேள்வி. பதினாறு குணங்களை எடுத்துரைத்து இவ்வனைத்திய குணங்களையும் குறையாது கொண்ட கொற்றவன் இப்பொழுது இப்புவியில் உளனோ? என்று வினவ, 'ஆம், உளன், அவன்தான் ராமன் என்ற உத்தம மானிடன்.'' என்று விடை பிறக்கிறது. அக்குணங்கள் இயங்கிய ஆற்றல்களையும் விவரித்துப் போகிறார்.

உடனே மாமுனி ஞானத்திலாழ்ந்ததும், திரை திரைகளாக அவ்வாற்றல்களும் சாதனைகளும் ஒன்றன்பின் ஒன்றாய் உயிரோவியங்களாக வந்து தோன்றுகின்றன. அவைகளைச் சுலோகங்களில் பொரித்து வரைந்து அப்படியே நிலைநிறுத்திச் செய்துவிட்டார். ஆகவே, இப்போது மனத்திரையில் செயலாற்றும் உயர் மானிடன்தான் முன்பு, புற்றினுள் சிந்தையடக்கி ஜெபஞ்செய்த தாரக மந்திர மூர்த்தியே, என்று உணர்ந்தனரோ என்னவோ இதை அவர் சொல்வதேயில்லை. எனவே இத்தகைய குணங்கள் வாய்ந்த ஓர் உயர் மானிடனேவென்று கண்டு கொண்டே மகிழ்ந்து போகிறார்.

பின்பு தசரதர் ராகவனைத் தன் அரும்பெரும் புதல்வனாகவே கண்டு களிக்கிறார். சிறிதும் களங்கமற்ற குணச்செல்வங்களின் சீமான் இவன். ஆகையால் ''ஸத்தியேன லோகான் ஜயதி'' என்று அவரும் வாய்விட்டு கைகேயிடம் யாசிக்கும்போது வெளியிடுகிறார். அடுத்தபடி குகன் ராகவனைத் தன் பேரன்பனாகவே பரிவுகொண்டு தன் சிநேகத்தைப் பரிமாறுகிறான். ஆனால், அவனே பரதனைப் பரம பாகவதனாகக் கண்டு கடவுள் பக்தி கொண்டு அவன் கழல் போற்றிப் பணிகிறான். வனவாசத்தில் மாமுனிகளும் பிரும்மரிஷிகளும் தங்கள் ஞானத்திற்குகந்தவாறு தாசரதியைக் காண்கிறார்கள். தெய்வத்தை நேரில் கண்டும் தெய்வலோகஞ் சென்று விடுகிறார்கள். கபந்தன் ராகவனை எங்ஙனம் உணர்ந்தானோ, தான் வானில் மறையுமுன் அவனை மனைவியைத் தேடும் மானிடனாகக் கண்டு அவனுக்குதவி புரியும் குரங்கொன்றைச் சொல்லிவிட்டுச் சென்றான். சுக்ரீவன் ஒப்புயர்வற்ற வீரனைக் காண்கிறான். தெய்வ உருவெடுத்த மானிடனோ-மானிடனாய்த் தோன்றும் இறைவனோ என்றறிய முடியாது அநுமனின் உணர்ச்சி வெளியாகிறது.

ஆனால் தாரையும், பின்பு அரக்கி திரஜடை என்பாளும் மிகவும் கொடுத்து வைத்த ஜீவன்கள். ஒருவள் தன் நேரிடை ஞானத்திலும் மற்றவள் தன் கனவாலும் சீதாபதியைக் கடவுளாகக் காணப்பெற்ற பாக்கியசாலிகளாகிறார்கள். இதை தெள்ளென விளங்க வைக்கிறது. வாலியிடம் போர்செய்ய வேண்டாமென்றுரைத்த எச்சரிக்கை. ''மேவினேன் அவன் பொன்னடிமெய்ம்மையே'' எனும் மதுரகவியின் பொன்மொழியை பிரதிபலிக்கிறாள் தாரை!]

16. சொற்றிரும்பாமையின் சிறப்பு.

விரைவாக வெளிவரும் வாலியைப் பின்தொடர்ந்தாள் தாரை. ஏதோ அவள் மனம் அவனுடைய வாழ்நாளின் முடிவைக் கண்டதுபோலும்! இவளை கவனிக்கிறன் கணவன். உண்மை வீரன், ஒரு எதிரி வலுவில் தன்முன் சீறுவதைச் சகித்துக்கொண்டிருப்பானா? அதுவும் இதுவரை தோல்வி என்பதையே கண்டிராத வெற்றி வீரன் இதைச் சகிப்பது மரணத்தைக் காட்டிலும் கொடுமையானது. "தாரையே கேள்; இப்படிக் கொக்கரிப்பதை என்னால் பொறுக்கமுடியாது. இது நிச்சயம், அயோத்தி அரசன் ராகவன் சுக்ரீவனுக்குத் துணைசெய்வதைப் பற்றிச் சொன்னாய், அவனைப்பற்றி நீ கவலையடைவதேன்? அவனோ தரும மறிந்தவன்; அவனா பாவத் தொழிலைச் செய்யத் துணிவான்? தாரே! இன்னும் ஏன் என்னைப் பின்பற்றி வருகிறாய்? உன் அளவற்ற அன்பையும் பக்தியையும் நான் அறிவேன். இதோ போய் அச்சுக்ரீவனின் கொழுப்பை அடக்கிவிட்டுவருகிறேன், அவனை உயிர்மாய்க்கப் போவதில்லை. ஆகையால் நீ திரும்பிப்போ. இது என் ஆணை!" என்று படபடவென்று பகர்ந்தான்.

தாரை கண்களில் தாரை தாரையாய் நீர் பெருகிற்று. திரும்பவும் அவனைத் தழுவி, பின்பு அவனைப் பிரதக்ஷிணஞ் செய்து பணிந்தாள், மேலும் அவன் வெற்றியுடன் திரும்பிவருமாறு இறைவனை துதிசெய்து விடை கொடுத்து மங்கலமொழிகளுடன் உள்ளே சென்றாள்.

தாரையும் மற்ற ஸ்திரீகளும் அந்தப்புரஞ் சென்றபின் சர்ப்பம்போல் சீறிச் சினங்கொண்டு வெளியில் தாவினான் வாலி, நன்றாக நான்கு திசைகளையும் கவனித்தான். ஒருவரும் கண்ணில் படவில்லை. எதிரே மலைபோல் கொழுந்துவிட்டெரியும் நெருப்புப் போன்ற நின்ற சுக்ரீவனைக் கண்டான்.

கண்டவுடன் வாலியின் கோபம் எல்லை மீறியது, இரண்டாவது தடவை திரும்பவும் வந்து போரிடவா இவ்வல்பன் வருவது, என்று வாலியின் செருக்குத் தீ மூண்டு பரவலாயிற்று. "இப்பொழுது நீ ஒழிந்தாய்" என்று தன் வலிவெல்லாம் ஒன்றுதிரட்டி அவனைஓங்கி அறைந்தான். சுக்ரீவனும் பெரிய ஒரு ஆச்சா மரத்தைப் பிடுங்கி வாலியைப் புடைக்க அவனும் கதிகலங்கினான். சகோதரர் இருவர்களிடையே பகைமை காட்டுத் தீப்போல் பொங்கிச் சூழ்ந்தது. இருவருக்குள் மூண்டெழுந்த கடும் போர் பிரமாதம்! மரணத்தை அளிக்கவிருக்கும் மனங்கலங்கும் மல்யுத்தம் படார் படாரென்று எலும்புகள் முறியும் சத்தம். படீரென்று பாறை மோதும் இடிஒலி. வரவர தம்பியின் வலிவு குன்றியது. அதே அளவு தமயனின் ஆற்றலும் ஆண்மையும் பெருகின. அவன் அணிந்திருந்த காஞ்சன மாலையின் பிரபாவம் போலும்!

சுக்கிரீவனது வலிவு குன்றிக் கொண்டே போகிறது. அவன் சளைத்துப் போனான். எனினும் வாலி தன் போரை நிறுத்தினவனல்லி. தம்பியை நைய்யப் புடைத்துக்கொண்டே போகிறான். ஒருவன் சளைத்துக் களைத்துப்போகையில் அவனை மேன்மேலும் வதைத்துக் கொண்டிருப்பது யுத்த முறைக்கு முரண்பாடென்பது உலகமறிந்த உண்மை, தம்பியைக் கொல்லப்போவதில்லை என்று தாரையிடம் உறுதி கூறினவன் இப்பொழுது ஹிம்சையை நிறுத்தவில்லை. அடிபட்டு அவதியுறும் சுக்கிரீவன் மூச்சுத் திணறுகிறான். அங்குமிங்கும் ஓடி தப்பிக்க முயலுகிறான். சாத்தியமில்லை. உடல்சோர்ந்து, நெஞ்சம் பதறித் தடுமாறுகிறான்.

[உதவிபுரிவேன் என்று வாக்களித்த நண்பனைத் தேடி, சுக்ரீவன் பக்கம் பக்கமாகக் கவனிக்கிறான். அங்குமிங்கும் முகஞ்சுளித்துத் தேடுகிறான். அவனால் ரகுவீரனிருக்கும் திசையைக் கண்டுகொள்ள முடியவில்லை. ஏன்? முன்பு அவனிடமிருந்து ஓர் மாலைபூண்டு வந்தான். அம்மாலையின் விசேஷத்தையும் அதிலுள்ள சக்தியையும் மறந்தானோ என்னவோ, நம்பிக்கையிழந்தானோ வென்னவோ, இப்பொழுது ராகவனிருக்குமிடம் தெரியவில்லை. நாலாபக்கமும் பார்த்துப் பார்த்து அடிவாங்கிக் கொண்டே சுற்றிச் சுற்றி ஓடிவருகிறான். ராமபத்திரன் முன் நின்றவிடத்தைவிட்டு வேறிடஞ் சென்றிருக்க வேண்டும். இல்லையாயின் தோல்வியடைந்தபின் நேரே நண்பனிடம் நாடியிருக்க வேண்டும். ஆகவே, வாலி சுக்ரீவன் இருவருக்குமே, வில்வளைத்த கோதண்டபாணி கட்புலனாகவில்லை.

நிற்க, சளைத்துப்போய் இப்படி ஏன் சுற்றிச் சுற்றி மரங்களுள் இங்குமங்கும் சுக்கிரீவன் தேடிப் பார்க்கிறான், எவனுடைய உதவியை மனங்கலங்கி ஆத்திரத்துடன் எதிர்பார்த்து வளைய வளைய வருகிறான், என்று வாலியின் மனதில் ஏன் எண்ணம் உதிக்கவில்லை? எவராலும் தன்னை ஒன்றுஞ் செய்யமுடியாது என்ற அகம்பாவமா? அல்லது ராகவன் தன்னை நேரிட்டுப் போர்புரிய வரான் என்ற எண்ணங் கொண்டிருந்தானா? அச்சமயத்து சூழ்நிலையைக் கவனிக்குங்கால், எவ்விடத்தில் நின்றால் இலக்கு தவறாமல் வாலியை ஒரே பாணத்தால் மாய்க்கலாமென்ற வில்லாளியின் பரிசோதனையைக் கொண்டு ரகுவீரன் சரியான இடத்தில் காத்திருந்தான் போலும்! பெருமூச்சுடன் தடுமாறுகிறான் சுக்கிரீவன். வாலி திகைத்தவண்ணம் தம்பியைத் துரத்துகிறான். அடிபட்டவன் கதி ஆபத்தில் கொண்டு விடுகிறது. "ஐயோ! ராமனெங்கே?" என்று அங்குமிங்கும் தேடுகிறான். இனி அவன் துணையின்றி உயிர் தப்பேன்" என்று உள்ளம் பதறி ஓடித்தாவி, புடைக்கும் வாலியிடமிருந்து தப்பிக்க முயலுகிறான். பிராண பயம்கொண்டு ஏங்கி மதிமயங்குகிறான். எதிர்க்கச் சக்தியின்றி உடல் ஊசலாடுகிறது. மிகவும் நெருக்கடியான தசை. இவனுடைய ஆபத்தைக் கவனிக்கிறான் ராகவன். வாலியோ சளைத்தவனை வதைக்க இன்னும் விரைகிறான். சரி, வாலியை இனி அவன் மனம்போல் விட்டால் சுக்கிரீவன் மடிவது நிச்சயமென்று கண்டு வில்லை வளைக்கிறான் உண்மை நண்பன்.]

வில்லை வளைக்கும் பேரொலி முழங்குகிறது. பிரளய காலத்து பூகம்பமும் இடியும்போலக் கர்ஜிக்கின்ற கதிகலங்கும் சப்தம்! பெரும்

பறவைகள் பயத்துடன் பறந்து சிதறின. கொடும் விலங்குகள் திகிலுற்று நாற்புறமும் தாவி ஓடித் தடுமாறின.

[இச்சப்தம் வாலியின் காதில் விழவில்லையா? விழுந்தும் அதை அவன் அசட்டை செய்தானா? அதைக்கேட்டு ஏன் தன் இடத்தை மாற்றிக்கொள்ள வில்லை? அப்பேரிடி முழக்கம் அவனையும் கதிகலங்க வைத்துவிட்டதா? யார் சொல்லமுடியும்?]

அடுத்த நிமிஷம் வஜ்ராயுதத்தையும் மின்னலையும் நிகர்த்த பாணம் சீறிப் பறந்து வாலியின் மார்பில் புதைந்து மறைந்தது. தடாரென்று வேரறுபட்ட மரம்போல் மண்ணில் விழ்ந்தான் வாலி. அறிவிழந்து ஒளிகுன்றி பிரக்ஞை இழந்தான், ரத்தம் பீறிக்கிளம்பிப் பாய்ந்து, வாலியின் வலிவையும் வேகத்தையும் விளக்கிற்று. பிரம்மாண்ட தோள்வலிவுடையான், தன் புஜபலத்தால் பல திக்குகளில் வெற்றிபெற்றவன் ஒரு அம்பினால் மார்பு பிளக்கப்பட்டான். கேவலம் மிருக உடல்வலிமை ஆயுதத்தின் முன்—ஒரு அம்பின் முனையால்—துளைக்கப்பட்டு தோல்வியுறுகிறது.

[முன்பே சுக்ரீவன் வாலியால் சரியாகப் புடைக்கப்பட்டு நொந்து போனான். இப்பொழுது மறுபடியும் அதே கதி அடைந்துவிட்டான். அதுமாத்திரமன்று இன்னும் தாமதமானால் விபரீதப் விளையுமே நண்பனுக்குத் துணைபுரிவது நட்பின் முதற்கடமை. மேலும், பெரும் ஆபத்தில் சிக்கிய நண்பனுக்குத் துணை புரியாதிருத்தலைவிட மேலான தீமை வேறில்லை.

தவிர, சுக்ரீவன் ராமபத்ரனின் வாக்குத்தத்தம் பெற்றவன். அச்சத்தியமூர்த்தி சொன்னவண்ணம் செய்துமுடிக்கும் வல்லாளன். இத்தருணம் தயங்கினால் சத்தியங் காத்தல் அசாத்தியமாகிவிடும். ஆகவே, வாலி போர்முறையை மீறி அஞ்சியோடுபவனை வதைத்தல், ஆபத்தில் இருக்கும் நண்பனுக்குதவி புரியும் கடமை, கொடுத்த வாக்கின் காரணமோ—காரணமின்மையோ, வாலியை மாய்த்து அரசை தம்பிக்கு ஈதல்—என்ற பிரதிக்ஞை, என்ற இம்மூன்று காரணங்களிலிருந்து எழுகிறது ராமபாணம்! மறைந்திருந்தாலும், மறையாதிருந்தாலும், இச்சமயத்தில், இக்காரணங்களால் எழுந்தே தீரும் வில் வல்லவனின்வாளி, இவைகளே, வாலிவதத்தின் உட்கருத்தை நாம் ஒருவாறு அறிந்துகொள்ள சமாதானஞ் செய்ய அல்ல—உதவுகின்றனவல்லவா?]

---

17. புல்லறிவாளன் புறங்கூவல்

அடிபட்ட மரம்போல் பூமியில் சாய்ந்த வானர மன்னனைக் கண்டு அங்கிருந்த அவனைச் சேர்ந்தவர்கள் பயமடைந்து கிஷ்கிந்தைக்கே ஆபத்து வந்துவிட்டதென்று நாலு திக்குகளிலும் வெருண்டோடத் தலைப்பட்டனர்.

வெண்மதியிழந்த விண்ணுலகு போல அந்நகரமே சோபையிழந்தது. தரையில் வீழ்த்தப்பட்ட வாலி துயிலுறுபவன்போல் தோன்றினன். உதிரம் வழிந்தோடும்போதும் அவன் ஆண்மைபொலிவு குன்றவில்லை. ஆவியும் மனோதைரியமும் மழுங்கவில்லை. அவன் அணிந்திருந்த, பொன்மாலை அவன் உயிரையும், முகக்காந்தியையும் நீடிக்க வைத்தது, வீழ்ந்துவிட்ட வானர மன்னன் அம்மாலையால் செம்பொன் செறிந்த மாலைவானம்போல் விளங்கினன். அவன் பேருடலும் மார்பில் பொன் பூணிட்டுப் புதைந்த பாணமும், கழுத்தில் பொதிந்து பொன்மாலையும் ஒன்றுகலந்து பிரகாசித்தன.

சுவர்க்கத்திற்கழைத்துச் செல்லும் திவ்வியமான ராமபாணம் தரையிற்படிந்து கண் மூடின வானரத் தலைவனுக்கு மிகவும் உத்தமமான விண்ணுலகின் நற்கதியைச் சோபிக்க வைத்து அவன் ஆவியை புனித உணர்ச்சியுறச் செய்தது.

லட்சுமணன் பின்பற்ற ராமன் நின்றவிடத்தைவிட்டு வெளிவந்தான். கீழே கிடக்கின்றவனை அணுகினன். சுவாலையற்ற அக்னியைப் போலவும், புண்ணியத்தின் முடிவில் தேவலோகத்திலிருந்து நழுவிய யயாதி அரசனைப் போலவும், பிரளயகாலத்தில் பூமியில் சாயும் சூரியனைப் போலவும், செருக்குற்ற இந்திரனைப் போலவும், சிங்கத்தின் கம்பீரமும், நீண்ட கைகளின் வலிவும், குன்றாத முக ஒளியும், அரசகுரியொத்த கண் அமைப்பும் விளங்கத் தோன்றினன் வாலி, எனினும், அவன் வீழ்ச்சிநிலை அதருமத்தால் அழிந்து போனவனின் கதியைச் சித்தரித்தது. அடியுண்டு அவதியுறுபவனுக்கு ஆறுதலளிக்க அணுகினன் அறமூர்த்தி.

[பிரளயகாலத்தில் பூமி எழும். கடல் பொங்கிப்பரவும், விண்மீன்கள் சிதறும், நதிகள் வெள்ளமெடுக்கும், வானங் கவிந்து கீழ்புரளும், செண்கதிர், நீண்டதோர் பாளையாகப் படர்ந்து படுக்கும். அப்பொழுது அப்பு, வாயு அக்கினி முதலிய பஞ்சபூதங்களும் வீறுகொண்டு ஒன்றுகலந்து களிநடனம் புரியும். பூஉலகு முடியும் நாளது; என்பது பவிஷ்யத் புராணம்.]

வில்லேந்திய ராமனையும், லட்சுமணனையும் கண்ணுறுகிறான் வாலி, செருக்கையும் ஆண்மையையும் தெளிவாக்கும் முறையில் தருமத்திற்கு ஏற்றதுபோன்ற வாதத்தொனியுடன் பேசவாரம்பிக்கிறான் :—

"இன்னொருவனுடன் சண்டை செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென்று ஒரு பாணத்தால் மார்பில் அடிக்கப்பட்டேன். உம்மை எதிர்த்துப் போர் புரியாதவனை என்னைக் கொல்வதால் உமக்குக் கிட்டின பயன் என்னவோ? நீரோ ஒரு சக்கரவர்த்தியின் புதல்வர். கண்குளிரும் தோற்றமுடையவர்; குலவான்; உயர்குணவான்; காந்தி பொலியும் மேனியான்; தருமம் பிறழாதவன்; கீர்த்திமான்; ராமனென்று எல்லோர்க்கும் பிரியம் கொடுக்கும் காரணப் பெயர் பூண்டவன். கருணாநிதி செய்ந்நன்றி மறவாதான். பிரதிக்ஞை தவறாதான், மக்களின் நலமொன்றிலேயே நாட்டமுள்ளவன்; அளவிடற்கரிய ஆற்றலுடையான்;

அரசியல் முறைகளை ஆராய்ந்த அறிஞன்; தருமத்தை வாழ்க்கை முறையாக்கிக் கொண்டவன்; திடச்சித்தத்தின் மெய்யுரு; இவ்வாறு உலகம் உம்மைப் போற்றுகின்றது.

"அரசே! நடுவுநிலைமை, சாந்தி, பொறுமை, நீதிநெறி, ஆணவம், மெய்ம்மை, பராக்கிரமம், அபராதியை மாத்திரம் தண்டித்தல், ஆகிய இவைகள் அரசர்களின் குணங்கள். நீர் அரச குலத்தவர், இக்குணங்கள் உம்மிடமுண்டு என்று நம்பினேன்; தாரையால் தடுக்கப்பட்டும் அதைப் பொருட்படுத்தாது சுக்கிரீவனுடன் போர்புரிய வந்தேன். அப்பொழுது உம்மைக் காணவில்லை. நான் வேறொருவனுடன் போரில் கவனமாயிருந்தேன்; சினங்கொண்டு என் கருமத்திலேயே கண்ணாயிருந்தேன். இப்படியிருந்த என்னை, இடைபுகுந்து அடிப்பீரென்று நான் நினைக்கவேயில்லை. உம்மை, ஆத்மாவின் இழிவை தருமமென்ற தோரணங்கட்டி மறைத்து அதருமத்தைப் புரிபவராகவும், பாவத் தொழிலில் ஈடுபட்டவராகவும், புல்லால் மூடப்பட்ட பாழுங் கிணற்றைப் போன்றவராகவும் நான் அறிந்திலேன்! நீறுபூத்த நெருப்புப்போல் நல்லவனாக நடித்து, தருமமென்ற போர்வை பூண்ட தீயிழைப்பவராக அறிந்திலேன்.

"ராமா! என்னை மாய்க்கக் காரணமென்ன? உம் நாட்டிலோ, நகரிலோ அபராதஞ் செய்தவனா நான்? உமக்குத்தான் குற்றமிழைத்தவனா? காட்டிலிருக்கும் கனி, கிழங்கு தின்னும் வானரன் நான். உம்மோடு நான் போரிடவில்லையே. நிரபராதியான என்னை வேறொருவனுடன் போர் புரியும்போது பாணத்தால் வீழ்த்துத் தள்ளினது முறையாகுமோ? க்ஷத்திரிய குலத்திலுதித்தவன், சர்வகலா வல்லபன், தருமத்தில் நிலையாய் நிற்பவன் என்று முறைசாற்றிக் கொண்டு, இச்செயலையா நீர் கைக்கொள்வது? ராகவ! ராஜகுலத்தில் பிறந்தவரென்றும், தருமவான் என்றும் பெயர் பூண்டு அற்றதை உற்றதாக விளைவித்து நடப்பது என்ன காரணமோ? அரசே! ஸாமம் (சமாதானம்) தானம், கடமை, தருமம், ஸத்தியம், ஆண்மை, அபகாரஞ் செய்தவனை மாத்திரம் தண்டித்தல் இவைகளே அரசர்க்குரிய குணங்கள் என்கிறார்கள். ராஜபுத்ர! நாங்களோ காட்டுமிருகங்கள், காட்டிலிருப்பவர்கள். நீங்களோ மானிடர், நாட்டிலிருப்பவர்கள். உமக்கும் எங்களுக்கும் இயல்பான தொடர்பு ஏது? விரோதத்திற்கு, பூமியும் பொருளும் காரணம் என்பார்கள். இவை ஒன்றுமில்லாத எங்களுடன் போர் புரிவதோ, வதைப்பதோ அதன் கருத்தென்ன? நயமோ, விநயமோ, தண்டித்தலோ, அனுக்கிரகித்தலோ, இந்த அரச முறையை மனம்போனபடி கையாளுபவனா அரசனாவான்? கோபங்கொண்டு மன மடக்காத எதேச்சாதிகாரனாய்த் திரிந்து பாணம் விடுவதே குறிக்கோளாய்க் கொண்டிருக்கிறீர். மானிடர்க்கு ஈசன் போன்றவரே! நடுவு நிலையுற்ற தருமத்தைக் கவனியாத, வரம்பெற்ற செய்கையை இழைத்து, உம்மிடங் குற்றஞ்செய்யாத என்னை வாளியாலடித்து மாய்த்து, சாதுக்களை முகமெடுத்துப் பார்த்து என்ன சொல்லப் போகிறீர்? அரசனைக் கொன்றவன், அந்தணனைக் கொன்றவன்,

கோவதை செய்தவன், திருடன், பிராணிகளை வதை செய்தவன், நாஸ்திகன், அண்ணனுக்கு மணமாகாமலிருக்கத்தான் மணஞ்செய்து கொண்ட தம்பி, ரகசியத்தை வெளியிடுபவன், நம்பினவனைத் துரோகஞ் செய்தவன், குரு பத்தினியைக் கெடுத்தவன், இவர்கள் பாவிகள். இவர்களுக்கு நரகந்தான் என்பது சான்றோர் வாக்கு. உமது செய்கை இவைகளில் ஒன்றுதானே?

"அது போகட்டும். நான் காட்டிலிருக்கும் மிருகம்தான். காட்டு மிருகங்களை அரசர்கள் வேட்டையாடுவதில் குற்றமொன்றுமில்லையென்று சொல்லலாம். உண்மையே. எனினும், புலி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகளை வேட்டையாடுவார்கள். அவைகளின் தோலினாலும் தந்தத்தாலும், கொம்பாலும், எலும்புகளாலும் மாமிசத்தாலும் பலனுண்டு, என்பார்கள். அப்படி என்னிடத்தில் என்ன உபயோகமுண்டு? என் தோலோ இறைச்சியோ, எலும்போ, மயிரோ எதுவும் எவர்க்கும் உபயோகமில்லையே! பின் ஏன் என்னை வதம் செய்தீர்? முன்பே, உயரறிவாளியான தாரை எனக்கு நலங்கொடுக்கும் உண்மையை எடுத்துரைத்தாள், அவளை அசட்டை செய்தேன். அதன் விளைவாக எமனிடத்தில் சிக்கிவிட்டேன். அறநெறிபிறழும், தீங்கிழைக்கும் கபடனும் கொடியோனுமான உம்மை எங்ஙனம் அந்த மகாத்மாவான தசரதர் புத்திரனாக அடைந்தார்? நீதிமுறை என்ற கட்டையறுத்து, தருமமென்ற அங்குசத்திற்கடங்காத பாபஞ்செய்தல் என்ற மதங்கொண்ட ஒரு யானையால் முறித்துத் தள்ளப்பட்டேன்! உமக்கு ஒரு குற்றமுஞ் செய்யாத எங்களிடத்தில் காட்டிய வீரத்தனத்தை உமக்கு, மகா அபராதஞ் செய்தவர்களிடம் காட்டாதது ஏனோ? அரசிளங்குமர! என் எதிரே நேராக நின்று போர் செய்ய வந்திருப்பீராகில் அப்போதே என்னால் மாய்க்கப்பட்டு எமலோகஞ் சென்றிருப்பீர். குடி மயக்கத்தில் கண் மூடியவன் கடுஞ்சர்ப்பம் தீண்டி மடிவதுபோல் எனக்குக் கட்புலனாகாது மறைந்திருந்த ஒருவரால் அடிக்கப்பட்டு மரணத்தருவாயிலிருக்கிறேன்! எக்காரணத்தால் சுக்கிரீவனுக்கு நலஞ் செய்யக் கருதி நான் உம்மால் வீழ்த்தப்பட்டேனோ அக்காரணத்தால் முன்னமேயே நீர் என்னை நியமித்திருப்பீராகில் ஒரே நாளில் மைதிலியை நான் திரும்பிக் கொணர்ந்திருப்பேன். உம் மனைவியை அபகரித்த துராத்மாவைக் கழுத்தில் சுருக்கிட்டு இழுத்துக்கொண்டு வந்து உம்மிடம் சேர்த்திருப்பேன். கடலிலோ, பாதாளத்திலோ, எங்கிருப்பினும் அவனை இழுத்து வந்திருப்பேன். என் பின் சுக்கிரீவன் அரசு புரிவது நியாயம்தான். ஆனால் தரும விரோதமாக உம்மால் நான் கொல்லப்படுவது நியாயமாகுமா? நீதிநெறியுள்ள பெரியோர்கள் ஆமோதிக்கும்வண்ணம் நீர் என்ன பதில் சொல்வீரென்று சிந்தனையிடப்படட்டும்" என்று பொருமினான் வானரக் கோமான்.

[சுக்ரீவனுடன் சீதாராமன் சக்கியஞ்செய்த காரணமும், ராம லட்சுமணர்கள் கிஷ்கிந்தை வந்த காரணமும் தான் அறிந்ததுதான் என்று

வாலி வாக்கியம் தெளிவாக்குறது. "என்னை முன்பே நியமித்திருந்தால் நான் செய்து முடிக்கமாட்டேனோ"? என்று பச்சாதாபத்துடன் வினவுகிறான் ஆனால், எல்லாமறிந்தும் இவன் ஏன் முன்வரவில்லை? அயோத்தி மன்னன் மகன், தன் ராஜ்யமடைந்ததும் கிஷ்கிந்தையாளும் அரசன் ராஜமரியாதை செய்யாது வாளாவிருந்தது ஏனோ? சொற்றிரும்பா, சத்தியசந்தன் கோசலேந்திரன் என்று வாலி அறிவான். சுக்ரீவனுக்கு வாக்களித்த செய்தியையும் அறிவான். அறிந்தும், 'நீர் தம்பிக்களித்த வாக்கறிவேன், எக்காரணத்தால் அதைச் செய்தீரோ, அக்காரணத்தை—வைதேகியைத் திரும்பிப் பெறுவதை—நானே இதோ நிறைவேற்றுகிறேன்.'' என்று சொல்ல வாலி முன்வராத காரணம் யாதோ? தான் செய்யவேண்டிய கடமையையும் மரியாதையும் செய்யத்தவறியவன் இப்பொழுது குற்ற ஓலை வாசிக்கிறான்.]

18. அறஉரையும் அறிஉரையும்.

[உலகம் தோன்றிய நாள்முதல் மானிட சமுதாயம் முன்னேறப் பல பெருமக்கள் நம் சமூகத்தில் தோன்றியுள்ளார் என்பது சரித்திரக் கண்கூடு. மக்கள் மனக் குழப்பங்கொண்டு, அல்லலுற்று நெறி பிறழ்ந்து நலியுங்காலை, இப்பெரியார்கள் உதயமாகி நெறிவகுத்து நம் மன விடரகற்றிச் சன்மார்க்கத்தைக் காட்டி, அழைத்துச் சென்றிருக்கின்றனர். இவ்வரும் பெரும் பணி பலதிறப்பட்டிருக்கின்றது; எனினும் விளைவு மனிதனின் முன்னேற்றமே, கலை மூலமாகவோ, விஞ்ஞான மேம்பாடு மூலமாகவோ, அரசியல் சீர்திருத்த மூலமாகவோ, ஸத்யம், அஹிம்ஸை தியாகம், சகிப்புத்தன்மை ஆகிய லட்சியங்களிலாழ்ந்து அரிய சாதனைகளைச் செய்து காட்டியோ, ஆத்ம சக்தியைத் தட்டி எழுப்பி யிருக்கிறார்கள். ஓர் உண்மையை இப்பணிகளின் படிப்பனை உருவாக்குகிறது. அதாவது மனிதன் இறைவனின் ஒளி. அவனால் சாதிக்க முடியாததொன்றுமில்லை. உலகிலியங்கும் மாபெரும் இயக்கங்களும் கணக்குக்கெட்டா திண்சக்தியும் பிரமிக்கவைக்கும் நிகழ்சிகளும் அவை விளைவுகளும் அவ்வொளியின் பிரதிபலிப்பே. சிற்சில நேரத்தில் மனிதன் வான் எழுந்து கடவுளைத் தொடுகிறான்.

இக்கருத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நம்போன்ற பாமர மக்களுக்கு தெளிவாக்குகிறது இந்த ஸர்க்கம். மனிதன் தன் கடமையைச் சரிவரச் செய்துகொண்டே போவானாகில் அவனுக்குத் தருமம் தலைகாக்கும், "தானமும் தவமும் தாம் செய்வராயின் வானவர்நாடு வழிதிறந்திடுமே" தெய்வபலமும் தானாகக் கிட்டும். அறநெறி ஒழுகாது தன்போக்காய்ச் செல்வானாகில் தண்டனைபெற்று அவதியுறுகிறான். இவ்வுண்மையை நிலை பெறச்செய்ய, நிர்வாகஞ்செய்ய அமுல்நடத்த பெரியோர்களும், ஞானிகளும், தேவர்களும் சித்தர்களும், மறைந்தும், தெரிந்தும், மானிட ரூபத்திலும் பிராணிகள் வாயிலாகவும் எவ்விதத்திலும் சமயத்திற் குகந்தவாறு செயலாற்றி வருகிறார்கள். இந்த ரகசியத்தை ஸ்ரீ ராமபத்திரன் வாக்காக

வெளியிடுகிறது இந்த ஸர்க்கம், ' எப்படியோ நிகழ்ந்தது ', இது ஓர் நல்ல வேளை, ! ' அகஸ்மாத்தாய் விளைந்தது ' ' ஒரு நூலிழை சாய்ந்திருந்தால் பள்ளத்தில் விழுந்து அதோகதிதான்.'! 'இது ஒரு யதேச்சை சம்பவம் ' என்ற வார்த்தைகள் நம்மிடையே அடிபடுவதின் கருத்து என்னவென்றும் இந்த நிகழ்ச்சி தெளிவாக்குகின்றது.]

நீண்டதொரு குற்றச்சாட்டாய் ஒலிக்கின்றது வாலியின் கடுஞ் சொற்கள். இவைகளைச் சொல்லிவிட்டு அவன் மௌனமாகிவிட்டான். கடலில் மறையும் குன்றிய கதிரவன் போலவும், நீர் பொழிந்த மேகத்தைப் போலவும், அவிந்துபோன நெருப்பைப் போலவும் திறனற்றுச் சாய்ந்து விட்டான் அடியுண்ட வாலி. பெருமூச்சு விடுகிறான்; மனங்கலங்குகிறான்; வாளியின் வேதனையுண்டு வியர்கிறான். இந்நிலையைக் கவனித்த காகுத்தன் அவன் முன் அணுகிக் குளிர்ந்த தொனியில் தருமோபதேசம் செய்ய வாரம்பிக்கிறான்.

"அப்பனே! என்னைக் குறை கூறுகின்றாய். தருமத்தைப்பற்றிப் பேசினாய். நீ தருமமென்னவென்பதை உண்மையில் அறிவாயா?

இருவர் சண்டையிடும்போது மற்றவர் குறுக்கிட்டு, அவர்களுள் ஒருவரை மாய்ப்பது தருமமாவென்பது வாலியின் முதல் முதல் கேள்வியாகும். யுத்தத்திலிருந்தவன் தருமத்தைப்பற்றிப் பேசுகிறான். எதிரி, சளைத்துப் போனபின்பும் நிற்காது அவனைப் புடைத்துக் கொண்டே போவது தருமமறிந்தவன் செய்யும் தரும யுத்தமாகுமா? சோர்வுற்றுத் தோல்வி கண்டவனை, ஒருவன் குறுக்கிட்டு மரணமடையவிடாது காப்பது அதருமமாகுமா?

[ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனின் குணாதிசயங்களை ஒருவாறு அறிய இக்காரணம் ஓர் திரவுகோலாக அமைகிறது என்னலாம். வைணவப் பெரியார் ஸ்ரீ வேதாந்த தேசிகனார் இராமவதாரத்தின் சிறப்பை தசாவதார ஸ்தோத்திரத்தில் குறிப்பிடும்போது முதலில் மீனாகவும், ஆமையாகவும் பன்றியாகவும், நரசிங்கமாகவும், யாசிக்கும் சிறிய நராகவும், ரோஷங் கொண்டு அகம்பாவத்தை விகசிக்கும் புருஷனாகவும் இப்படி ஜீவப்பிராணி களின் முன்னேற்றத்தை உதாரணமாகக் காட்டியபடி ஸர்வேச்வரனின் அவதார ரகசியங்களை விவரிக்கும்போது மானிடன் பரிபூரணனாகும் ராமாவ தாரத்தில் இறைவன் "கருணாகாகுஸ்தா" என்று கருணை வடிவமாய் வந்து மானிட சமுதாயத்தை யுயர்த்திய பெருந்தகை என்று விளக்குகிறார். நன்றாய் ஆராய்ந்து பார்க்குங்கால் இக்காருண்யமென்ற குணம் அவனுடைய மற்றெல்லாக் குணங்களையும்விட மேல்தூக்கி நிற்கிறதை ராமாயணம் முழுவதிலும் பலதடவை காணலாம். உரையளித்த பெரியோர்கள் இக்குணத்தை ' ஆன்றுஸம்ஸ்யம் ' என்றும், இரக்கம், பச்சாத்தாபம், ' பரதுக்கதுக்கித்வம்' என்றும் பலமுறைகளில் விளக்கிக்காட்டி ஆங்காங்கு உதாரணங்களும் வழங்கி தெளிவுபடுத்தி யிருக்கிறார்கள். "எல்லாத் தர்மத் தையும்விட ' ஆன்றுஸம்ஸ்யம் ' என்பது பரம தர்மம் என்று தாங்களே எனக்கு எடுத்துரைத்திருக்கிறீர்களே. இப்படி நான் இங்கு துயருறும்போது வாளாவிருப்பதேனோ?" என்று ஜனகநந்தினி ஸ்ரீமத் சுந்தர காண்டத்தில்

அனுமனிடம் கணையாழி கொடுக்கும்போது தன் பதியிடம் இதை நினை வூட்டுமாறு வேண்டுகிருள். இன்னும் இதேபோல் அநேகவிடங்களில் இக்குணத்தின் பெருமையை நன்கு விமர்சிக்கப்படுவது ராம கதை சிந்தனை செய்பவர்களின் அநுபவம்.

இங்கும், வாலி வதத்தின் முக்கிய காரணம் இம்மேலான இராமவதார ரகசியத்தின் திறவுகோலான பிறர் துக்கப்படும்போது தானும் துக்கிக்கும் ஆத்ம சமத்வ, குணம் உணர்வுற்று செயலில் பரிணமிப்பதின் விளைவுதான் என்று விளங்குகிறது. வாலி சுக்ரீவனை நையப் புடைத்துக்கொண்டே போகிருன் சுக்ரீவன் கதிகலங்கி திணறுகிருன். அவ்வேதனையை சகிக்க முடியவில்லை அவன் உண்மை நண்பனுக்கு. கோதண்டத்திலிருந்து சீறி வருகிறது ராமபாணம்!

வாலி மாண்டபின், தாரை புலம்பல், பின், சுக்ரீவன் மனமுறிந்து புலம்பும்போது ரகுநாதன் கண்ணிலும் சோகவாரி. தாரை அழும்போதும் தானும் துக்கிக்கிருன். முன்பு அரண்மனையில், தனக்கு ராஜ்யம்போயிற்றே ஏமாற்றம் நேர்ந்ததே, உரிமையைப் பறிகொடுத்ததே என்றல்ல தாசரதியின் சோகம். இவ்வாறு நிகழலாயிற்றே என்று தசரதர் வருந்த, ஐயோ! இவர் வருந்தலாயிற்றே! என்று அவர் துக்கத்தில் தானும் பங்கு கொள்கிருன் கருணைக்கடல்!]

ரகுபதி சொல்லிக் கொண்டே போகிருன் :—

"நடைமுறை சம்பிரதாயத்தைப்பற்றியும், நேர்முறை வாழ்க்கையைப் பற்றியும்," தருமம், காமம் (தருமத்திஞல் அடைய விரும்பும் பலன்) அர்த்தம் (லட்சியம்) இந்த புருஷார்த்தங்களைப்பற்றியும் இவைகளின் போக்கையும் கோட்பாடுகளையும் நன்கறிந்தவனுகவா பேசுகிருய், நீ"?

[ராகவன் தன் புகழிற்கிசையாதவாறு நடந்து கொள்ளுவதேன்? என்பது வாலியின் இன்னொரு முறையீடு. அரசர்களின் மேற்குணங்களை விவரித்து அம்மரபினனுன ராமன் இத்தகைய தீங்கிழைப்பது அவனுக்கு நியாயமாகுமா? என்று கேட்கிருன். அரசர்களின் உண்மையான அரச குணங்கள் கொண்ட எவ்வரசனும்—எங்கிருப்பினும், எந்நிகழ்ச்சியிலும், இன்னலுறுபவனைக் காப்பதும் குற்றவாளியைத் தண்டிப்பதும், என்ற அரசாளுபவர் இயல்பை மறந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பானே? இத்தன்மையே ராமபாணத்திற்கு ஆதார மென்பதை வாலி ஏன் உணரவில்லை?]

"ஸௌம்மியனே! நுட்பமறியும் பெரியோர்களிடம், கேட்டறிந்து கற்ருல்தான் தெள்ளறிவு காணமுடியும். உன் ஆசிரியன் யார்? நீயே சிறந்த உயர் அறிவாளி என்று நினைத்துக் கொள்வது குரங்கு புத்தியின் சுபாவமாகும். உண்மையை என்னவென்றுணராதவாறு தவராய் என்னை நிந்திக்கின்றனை.

"அரசர்களைப்பற்றிப் பேசினுய், மலை, வனம், மிருகங்கள், பட்சிகள், மானிடர்கள் எல்லாம்—ஏன், இவ்வுலகமே, இக்ஷ்வாகுவம்சத்தவராட்சிக்கு

ஆதீனம். சிட்சித்தல், ரட்சித்தல், என்ற அதிகாரமும் அவர்களுடையதே. நன்கு கவனி, தருமாத்மாவும், சத்தியசந்தனும் அறநெறி ஒழுகுகிறவனும் தருமம் காமமென்ற புருஷார்த்தங்களை நன்கறிந்தவனும், காத்தல், புடைத்தல் என்ற அரசமுறையில் வெகு கவனமாயிருப்பவனுமான பரதன் பரத கண்டத்தைப் பரிபாலித்து வருகிறானென்று அறிவாய்.

[வாலி அரசர்களின் குணத்தை வர்ணித்தான், அக்குணங்களையே பரிபூரணமாகக் கொண்ட பரதன் என்று ஒரு அரசன் இருக்கிறான் என்பதையே விளக்கி காட்டுகிறது ராம வாக்கியம். அவ்வரசன் எந்த நாட்டையாண்டாலும் உலகத்தையே யாண்டாலுஞ்சரி, அதில் ஒரு பாகத்தைத்தான் ஆண்டபோதிலும், அவன் எங்கிருந்தாலும், அவனுடைய பிரதிநிதியாகவும்... அவ்வரச மரபில் ஒருவனானதால், தனக்கும் அவ்வரசத் தன்மையின் அதிகாரமுண்டென்றும். அவ்வுண்மை அரச முறையிலேயே நின்ற அறநெறி சாசனத்தை நிர்வகிக்கவும், நிறைவேற்றிவைக்கவும் தனக்கு உரிமையும் பொறுப்பும் உண்டு என்பதையே நிலைநிறுத்துவதாகும் இப்பதிலுரை. இதற்காக பரதன் ராமனிடம் "நீ இப்படிச் செய்" என்று சொல்ல வேண்டியதில்லை.]

ரகுநாதன் சொல்லிக் கொண்டே போகிறான், "வாலியே! இன்னும் கவனிப்பாயாக, நீ அரசகுணங்களைப்பற்றிப் பேசிவிட்டு என்னை அவைகட்குமாறாக நடப்பதாக ஏசினாய். குற்றஞ் செய்தவர்களை தண்டிப்பது உண்மை அரசர்களின் பிறவிக்குணம். தரும விதிகளை எந்தெந்தக் காலங்களில் எவ்வாறு அமுல் செய்யவேண்டுமென்பதையறிந்து, சத்தியத்தையும் நீதியையும் உயிராகக் கொண்ட பரதன் நாட்டை ஆண்டு வருகிறான். நாங்கள் அவனைச் சேர்ந்தவர்கள். அவன் சாஸனத்தை நிறைவேற்றி வைப்பவர்கள், பிரதிநிதிகள். அவன் அரசின் புகழிற்கு இகழ்வு நேரிடாது பார்த்துக் கொண்டு வருபவர்கள். எங்கெங்கே அதருமங்களைச் செய்பவர்களைக் காண்கிறோமோ அங்கங்கே அவர்களைத் தண்டித்துக் கொண்டுவருவதுதான் எங்கள் கடமையாகும். தருமத்தை நிலைநிறுத்தப்பாடுபட்டு நாங்களும் எங்களைப் போன்ற மற்றவர்களும் பரதன் சாம்ராஜ்யத்தில் சஞ்சரித்துக் கொண்டு வருகிறோம். ஆகவே குற்றஞ்செய்தவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் பெற்றவர்கள் நாங்கள்,

"நீயோ தருமத்திலிருந்து நழுவினவன். யாவரும் இகழும் தொழிலுற்றவன். காமவெறியில் கூத்தாடுபவன். அரசமுறையைக் கைவிட்டவன். அஞ்சலென்று அடிபணிந்த அன்பார்ந்த தம்பியை அடித்துத் துரத்தி, நாட்டைவிட்டு வெளியேற்றி மந்திரிகளை சிறையிட்டு. தம்பியின் மனைவியை அபகரித்தாய்."

"போகட்டும் காட்டில் வசிக்கும் காய் கனி தின்னும் குரங்கு. குரங்கிற்கும் மானிடனுக்கும் தொடர்பு ஏது என்று எக்களித்து மானிடனுக்கோ அரசனுக்கோ ஒரு அபராதமுஞ் செய்தவனல்லவென்று மார்புதட்டினாய். தருமங்களை உணர்ந்தவனாக மானிடனுடன் வாதஞ்

செய்ய மாத்திரம் மானிட உலகின் தருமங்களை மானிடன் தன்மையி லிருந்து விவரித்தாய். பின்பு, உன் ராஜ்யத்தில் செய்கையில் குரங்காய் விட்டாய். காய் கனி கொய்து தின்னும் குரங்கிற்குத் தரும சாஸ்திரம் பேச உரிமையுண்டா? உண்டென்றால், பேசுவதற்கு மாத்திரம் தருமம், செய்கையிலோ நடத்தையிலோ அத்தருமத்தை நிலைநிறுத்தப் பொருப்பற்ற வனாகலாமா? வாதாடும்போது மாத்திரம் மனித இனத்தில் கலந்துகொண்டு தருமத்தைப் பேசுவது; பின்பு அரசன் என்பதையும், மற்றவர்க்கு வழிகாட்டியாய் விளங்கவேண்டுமென்ற கடமையை மறந்து செயல்களில், கட்குடித்து காமத்திலீடுபடும் குரங்காக நடந்து கொள்வது. இதுவா நீதி நெறி?

"உன்னை அடித்து மாய்த்தது அறமாமோவென்றாய்? சொல்வதைக் கேள். தருமத்தில் நிற்பவன், தந்தையையும், தமையனையும், குருவையும், பிதாவாகக் கொள்கிறான். இவர்களோ தம்பியையும் புதல்வனையும் சிஷ்யனையும் புத்திரனாகக் கொள்வார்கள். இது உலகமறிந்த விதியே. இதை நீ அறிந்திலையோ? உன் அமைச்சர்கள் இந்நீதியை உரைக்க வில்லையா? நீ அவர்களுடன் ஆலோசனை செய்தது எப்போது? அரசனென்றும் அரச விதிகளையும் எடுத்துரைக்கிறாய். நீ தண்டனை யடைந்ததைப்பற்றி என்னை நிந்திக்கிறாய். என்னை ஐம்புலன்களால் அலைக்கப்பட்டவன் என்றாய். நீயோ காமவிகாரத்தில் கலந்துகொண்டு கள்ளுண்டு காலம் போக்குகிறாய். இதுவுமன்றி நன்னடத்தை யாவற்றையும் முற்றிலும் கைவிட்டு உன் தம்பியைக் காண ஒட்டாது உலகெலாம் துரத்தி யடித்தாய். உடன்பிறந்தவன், பிழை பொறுக்க மன்றாடினான். நீ ஏற்க மறுத்தாய். ஐம்புலன்கள் அடக்கி அரசுபுரியும் மன்னனின் செய்கைகளா இவைகள்?

"வாழ்க்கை நடைமுறையில் உலகிலுள்ள ஜீவராசிகள்—பிராணிகளோ, மானிடர்களோ — எல்லோருக்கும் அறநெறி என்பது ஒன்றுதான். இனத்திற்கு இனம் வேறுபாடுள்ள தருமவிதி என்பது கிடையாது. மற்றவைகளை யடித்துத் தின்னும் காட்டு விலங்குகள் — இப்படி உண்பது தங்கள் இயற்கைமுறை என்பதால் விட்டு விடப்படுகின்றனவா? கொடுங்கோன்மையை — நாட்டிலும், காட்டிலும் — ஒழித்துக் கட்டக் கங்கணஞ் செய்த உண்மை அரசர்கள் காலமுறையில் கானகம்வந்து இவ்விலங்குகளை வேட்டையாடி வதைக்கிறார்களல்லவா? ஆகவே மனிதர்களுக்கு ஒரு தருமம், விலங்குகளுக்கு இன்னொரு தருமமென்பது ஏற்றதாகுமா?

"நீ சில பாவங்களையும் தோஷங்களையும் விவரித்தாய். சரியே. உன் செய்கைகள் அவைகளிலிருந்து விலக்கானதா? அரசமுறைகளை விவரித் துரைத்தாய். எங்கெங்கு, எவ்வப்போது குற்றவாளிகளைக் கண்ணுறும் அரசர்களும் அரச வம்சத்தினரும் அரச சாசனம் உள்ளவர்களும் அவர்கள் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளும், அப்பாவிகளைத் தண்டிக்காமலிருந்தார் களானால் அவர்கள் கடமை இழந்தவர்களாவார்கள். தாங்கள் கண்ணுற்ற

அநீதிகளையும் அசுத்தங்களையும் அழுக்காறுகளையும் நீடிக்கவைத்தால் அரசகுலத்து புகழுக்கும், செங்கோலுக்கும் இகழ்ச்சி விளைத்து அழிவையே வளர்ப்பவர்களாவார்கள்.

"வானரா! நீதிநெறியையும் குறிப்பிட்டாய். அரசனின் கடமை குற்றவாளியைத் தண்டிப்பது, குற்றவாளி தண்டனையடைவதால் அவன் செய்த பாவம் நீங்கிப் பரிசுத்தனாகிறான். தண்டனை செய்யாதிருந்தால் அரசன் பாவம் செய்தவனாவான். ஆகவே இத்தண்டனைமுறை இருவரையும் புனிதமாக்குகிறதென்பதை நீ அறியாயோ?

"உன்னிடத்தில் மேலான தருமத்தைப் பேசுவதில் ஆவதென்ன? அவிவேகியாயிருந்தாய், அவிவேகியாய் தூஷித்தாய். உடன் பிறந்தவன் உயிருடனிருக்கையில் அவனுடைய மனைவியைப் பெண்டாடின ஒரு குற்றம் ஒன்றே உனக்கு மரணதண்டனையைத் தேடித்தந்தது. இதில் விசாரிப்பதற்கும் விவாதிப்பதிற்கும் இடமேது? மனைவிக்காகவும் ராஜ்யத்திற்காகவும் என்னைச் சரணமடைந்தான் சுக்கிரீவன். எனக்கு லட்சுமணன் எவ்வண்ணமோ அம்முறையிலேயே இடம் பெற்றான் அவன். வானர்கள் முன்னிலையில் அன்றே அவனுக்கு வாக்குறுதியளித்தேன். அதினின்று நான் பிசகுவேனா? நீ தருமத்தை அறிந்தவனாக அதை எனக்கு எடுத்துரைத்தாய். சரி, நம் மரபினர் மூதாதையரான மனுவின் தரும சாஸ்திர விதிகளை அறிந்தாயா? குற்றஞ் செய்தவன் தண்டிக்கப்படாவிடில் நீதி வழங்கும் அரசர்கள் பாவத்திற்குட்படுவார்களன்றோ? தண்டிக்கப் பட்டபின் குற்றவாளியும் பாவம் நீங்குகிறான். தண்டித்தவன் கடமையைச் செய்தவனாகிறான். எம் முன்னோரான மாந்தாதா என்பவரால் தருமத்திற்கொத்த சரீர தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

["ஆகவே, உன்னைத் தண்டிப்பது என் கடமையாகும். உன்னுடன் எதிர்நின்று போர்புரியாமல் மறைந்தடித்து மாய்த்தேன் என்று கத்தினாய். குற்றவாளியாக உன்னைத் தண்டிப்பதா, அல்லது உன்னுடன் போர்புரிவதா என் முறை? வில்லெடுத்துப் போர்புரியாதவன், கேவலம் மிருக பலத்தை மாத்திரம் பேராதரவாய்க் கொண்டவன். அம்மிருக பலம் என் ஒரு பாணத்திற்கிரையானது. உன்னைத் தண்டிக்க வந்தவனேயொழிய உன்னுடன் எதிர்நின்று போர்புரிய வந்தவனல்லன். உனக்கு சமனாக—குற்றவாளியுடன் குற்றமற்றவன் சரிசமானமானவனா? மல்யுத்தத்திற்கு வந்தவனல்ல என்பதை உணராதது ஏன்? இம்மாதிரி எண்ணங்களும் வாலி நினைத்தானோ என்னவோ?

"காய் கனி தின்று காட்டில் திரியும் குரங்கு என்றாய் உன்னை. ஆம் குரங்குதான். எனினும் கொடிய விலங்கான குரங்கு மற்றவர்க்குத் தீங்கிழைத்து இரக்கங்காட்டாத எதேச்சையாய்க் கொடுங்கோன்மை விளைவிக்கும் குரூர இயற்கையான குரங்கு! கொடிய விலங்குகளைக் காட்டில் அரசர்கள் எப்படி வேட்டையாடிக் கொல்லுகிறார்களென்பதை அறிவாயா? தெரிந்தோ, மறைந்தோ அம்பெய்து அழிக்கிறார்கள்."

[" கொடிய விலங்குகளுடன் நேராக நின்று யுத்தம் தொடுப்பதென்ற கட்டாயமில்லையே. நீ யோ பகுத்தறிவிருந்தும் அதை மழுங்கவைத்து விலங்கானாய். என் பாணத்திற்கு இலக்கானாய். நான்தான் சுக்ரீவனை உன்னுடன் போர்புரிய அனுப்பினேன். நீ வெளியே வந்து அவனுடன் போர்தொடுக்கும்போது என் வாளிக்கு இலக்காவாய் என்று எண்ணினேன். அதேபோல் என் அம்பிற் கிலக்கானாய், அவ்வளவுதான். மனிதசுபாவத் தன்மை கொண்டவன் என்றால் கொடுங்கோலனான குற்றவாளியாகி நீதி வழங்கும் அரசகுலத்தோனால் தண்டிக்கப்பட்டாய். குரங்குதான் என்று எண்ணிக்கொண்டால் இன்னொரு குரங்கிற்குத் தீங்கிழைத்த கொடிய விலங்காக மாறி வேட்டையாடப்பட்டாய், இதற்கு உன் அநுமதியோ சமாதானமோ, விசாரணையோ அவசியமில்லை. உன்னைக் கொடிய விலங்காகவே மதிப்பிட்டு என் அம்பிற்கு இலக்காக்கி வேட்டையாடி வீழ்த்தினேன்" என்று இம்மாதிரி பதிலும் வாலி மனத்தில் தொனித்தனவோ என்னவோ ?]

" இதில் மனஸ்தாபத்திற்கோ, கோபத்திற்கோ, துவேஷத்திற்கோ சரிசமானமென்ற தரத்திற்கோ இடம் கிடையாது. அரசர்கள் நீதிநெறியில் நிற்பவர்கள் தருமத்தையும் உயர்வாழ்வையும் அளிப்பவர்கள், அவர்களை உபத்திரவிக்கவும், நிந்திக்கவும் அலட்சியஞ் செய்யவும் கூடாது. *[தன்னாட்டை யடைந்து வாலி ராமலக்ஷ்மணர்களை வரவேற்று மரியாதை செய்யாததை யெடுத்துக் காட்டுகிறதுபோலும் !]* கோபமடைந்து, மதி மயங்கி, அவர்களைத் தூஷிக்கவும் கூடாது. இதைத் தெரிந்துக் கொள்."

கோபமின்றித் தாபமின்றிச் சாவதானமாக வந்த கோதண்டபாணியின் அறிவுரையைக் கவனமாகக் கேட்ட வாலியின் மனத்தில் கொஞ்சங் கொஞ்சமாக அறமுறை தெளிவாகி வந்தது. அன்பார்ந்த மெய்யுரை, மாண்பு பூண்ட நல்லாசிரியனின் உண்மை விளக்கும் உரை, அதிகாரமுற்ற, அரசியல் முறையை ஆதரவுடன் நிர்வாகத்தில் ஆக்கிவைக்கும் ஆய்உரை. நீதிநெறியை நன்குணர்த்தும் நல்லுரை, வாலியின் மதியும் தன்மையும் உள்ளமும் தன்னிலையடைந்து ராகவன் சொல்லுண்மையைத் தெளிவாக்கின. தன் தவறை யுணர்ந்தான் ; கதியையுமுணர்ந்து உடனே சரணாகத வத்ஸலனான சியாமளரூபனை மலர்ந்த கண்களுடன் கண்ணாரக் கண்டு கைகளை உயர்த்தி அம்மெய்ஞ்ஞானிக்கு அஞ்சலி செய்கிறான் !

[இராமன் பரப்பிரமம்தான் என்ற தோற்றம் மனத்திலுண்டாயிற்றோ என்னவோ. முழுமனதுடன் பணிகிறான், பக்திவெள்ளம் அலைமோதி வார்த்தைகளில் வெளிகிளம்புகிறது !

" புருஷோத்தமா ! தேவரீரின் அருள்மொழிகள் முற்றிலும் உண்மை மொழிகளே. சுவாமி ! நுட்பமறிந்த அறிஞர்முன் அறிவிலி வாய் திறப்பனோ ? ராகவா ! அறிவீனத்தால் அடாது சொன்னேன். அடாது செய்தேன். அதைப் பொறுத்தருளும்படி பிரார்த்திக்கிறேன். சுவாமி ! சாஸ்திரங்களின் கருத்துணர்ந்த ஞானிகள் மக்களின் நலனொன்றையே குறிக்கோளாய்க் கொண்டவர்கள் ! பற்றற்று உயரிய சேவையை தம் பணியாக் கொண்டு செய்து முடிப்பவர்கள் ; விளைவைப்பற்றி அக்கரை

யில்லாதவர்கள்; நீர் தெள்ளறிவாளிகள், களங்கமற்ற அரும்பெரும் குணவான்கள்; அறநெறி யுணர்ந்த ஆசிரியரே! பாவியான அடியேனுக்கும் நற்கதியை அருள்புரிவீர்களா? என்று கதறிப் புலம்பிக் கண்ணீர்விட்டு மனம் விம்மி வாய் பேசாது நெஞ்சடைந்து சோர்ந்துவிட்டான்.

பின்பு, சிறிது பிரக்ஞை வந்ததும் மெல்லிய குரலில் நாத்தழுதழுக்க, ராமனை நோக்கியவண்ணம் சொல்லுகிறான். "சுவாமி! எனக்குக் கவலை யொழிந்தது. தாரையைப்பற்றியும் மற்றவர்களைப்பற்றியும் நான் கவலை யுறேன். என் மைந்தன் சிறு பாலகன் அங்கதனைப்பற்றியக் கவலை ஒன்றுதான் சிறிதுள்ளது. நீங்கள்தான் இனி அவனுக்கு ரட்சகர். நரபதியே! தேவரீருக்குப் பரதனிடமும் லட்சுமணனிடமும் எத்தகைய பற்றுண்டோ, அத்தகைய பற்றையே சுக்கிரீவனிடமும் அங்கதனிடத்திலும் அருள்புரியவேண்டும்; சுவாமி! உலகிலுள்ள யாவற்றுக்கும் தலைவர் தாங்கள். உங்கள் அநுக்கிரகம் பெற்ற சுக்கிரீவன், தாரையைக் கௌரவிக்கும்படி அவனிடம் மொழிந்தருளவேண்டும். தேவரீர் மொழி, எல்லாவற்றையும் தேடிக்கொடுக்கும் திருவருள்மொழியென்றுணர்ந்தேன். தேவரீர் திருக்கையால் முடிவை நாடியே, நான் தாரையால் தடுக்கப்பட்டும் இந்த லட்சியத்தையே அடைய விரும்பித் தம்பியுடன் போர்புரிய வந்தேன். இப்பொழுது உங்கள் கருணையால் என் எண்ணம் சபலமாயிற்று" என்று பயபக்தியுடன் பணிந்தான் வாலி.

[இது உண்மையென்றால் அவன் குற்றச்சாட்டு முற்றிலும் தவறுகிறது. உலகோர்க்கு தருமம் விளங்கவும், வாலி வதத்தால் எழும் பிரச்னைகளுக்கு சமாதானங் காட்டவோ என்னவோ கேள்வியும் பதிலுரையும் விஸ்தாரமாக தரப்பட்டுள்ளன. எனவே, வாலி வதம், அருள்நோக்குடன் ராமாயணத்தில் ஊன்றியிருப்போர்க்கு முக்கியத்துவம் பெறவோ, வாதம், எழுப்பவோ, இடம் பெறத்தக்கதன்று. தாரை எவ்வளவு தடுத்தும் ரகுராமன் கையால் மரணமடைய அவாக்கொண்டே போர்தொடுக்க வந்தேன் என்கிறான் வாலி. பின் ஏன் இத்தகைய கேள்விகளை விடுத்தான்?

அவன் ஒரு திடசித்தன், உண்மை யுரைப்பவன், தருமந் தெரிந்தவன் என்று வாலியின் குணத்தை மிகைப்படக் கருத காரணமில்லை. இதையறிந்து தானோ, என்னவோ கபந்தன் சுக்ரீவனை மாத்திரம் புகழ்ந்தான். எனவே வாலி வதம் ஓர் மகத்தான பிரச்னை யென்பது வாலியின் விளக்கத்தால் மிக்க அற்ப மான நிகழ்ச்சியாய் மறைந்துவிடுகிறது.]

ராமபத்திரன் வாலியை நோக்கி முகமலர்ந்து, "வானரா! கவலையைவிடு. எங்களைப்பற்றிக் கலக்கம் வேண்டாம். தண்டனையடைந்ததால் நீ பாவமொழிந்தவனாகி நல்ல ஞானத்தை அடைந்தாய். இனி அங்கதனைப் பற்றிய கவலையைவிடு. நீ அவனிடம் எப்படி இருந்தாயோ அவ்வித பராமரிப்புடனேயே, சுக்கிரீவனும் நானும் அவனைப் பரிபாலிப்போமென்று மனத்தில் உறுதிக்கொள். எள்ளளவும் இதில் சந்தேகம் வேண்டாம்." என்று கூறி அமைதியளித்தான்.

வாலி இவ்வுறுதிமொழியைக் கேட்டான். காதிலும் மனத்திலும் மதுரம் பொழிந்த அம்மொழி, கவலையை ஒழித்தது. பாசம் நீங்கிய மனம் உடனே பக்தியில் ஊன்றியது. உள்ளம் பூரித்தது. "பேரன்பு பொழியும் கருணைவள்ளலே! இந்திரனுக்கும் மேம்பட்ட பராக்கிரமனே! நரேசுவரா! பாணத்தாலடிபட்டு புத்தி மயங்கித் தேவரீரைத் தாறுமாருகத் திட்டினேன்! சுவாமி! மகாபாவியான என்னைக் கருணைபுரிந்து பொறுத்தருளப் பிரார்த்திக்கிறேன்; பிரபோ!" வென்று மனமார மெய்ம்மறந்து எளிமை காட்டும் கண்களால் பணிந்தான்.

---

19. அச்சத்தின் அலங்கோலம்.

பயபக்தியாய்ப் பணிந்து கிடந்த வானர மன்னன், பாணத்தால் தைத்த உடலின் வேதனை மிகுந்து மூர்ச்சையாயினன். அவன் மனைவியான தாரை இவன் நிலைமையைக் கண்டு, மண்ணில் சாய்ந்துகிடக்கும் வாலியினிடம் விரைந்தோடி வந்தாள். அச்சமயத்தில் அங்கதனைப் பின்பற்றிவந்த மற்ற வானரர்கள் கோதண்டபாணிகளாய் எதிர்நிற்கும் ராமலட்சுமணர்களைக் கண்டு நடுக்கமுற்று நாலுபக்கங்களிலும் பயந்தோடத் தலைப்பட்டனர். உள்ளங்கலங்கி ஓடிஒளியும் வானரர்களை நோக்கித் தாரை, "வானரர்களே ஏன் ஓடுகிறீர்கள்? உங்கள் தலைவர் ராமபாணத்தால் அடிப்பட்டுக் கீழே கிடக்கும்போது அவரை விட்டோடுவதா உங்கள் பெருமை?" என்ருள்.

அவர்கள் இவள் வசனத்தைக் கேட்டு, "அம்மணி! எங்கே செல்கின்றீர்கள்? உங்கள் மகனைப்பற்றிக் கொண்டு திரும்பிவிடுங்கள். அவனைக் காப்பாற்றவேண்டும். எமன் ராமனென்ற ரூபத்தில் வந்து வாலியை மாய்த்ததை அறியாமலிருக்கிறீர்களா? இதுவரை வீசப்பட்ட பெரும் மரங்களும், கற்பாறைகளும் ராமபாணத்தால் பொடியாய்ப் போயின.

[இவைகள் சுக்ரீவனுல் வாலியின்மேல் வீசப்பட்டனவா அல்லது, வானரர்கள் ராமன்மேல் வீசினுர்களா? இப்படி மரங்கள், கற்கள், எறியப் பட்டனவென்றும் முன்பு சொல்லப்படவில்லை. இப்பொழுது இவர்கள் இவ்வாறு சொல்வதின் உண்மை யென்ன? ஒரேஒரு பாணத்தால் ராமன் வாலியை வீழ்த்தினுன் யென்பது ராமனும், வாலியும் மொழிந்த சொற்களி லிருந்து புலனுயிற்று. எனினும் இவர்கள் மரங்களும் கற்பாறைகளும் எறியப்பட்டன வென்கிருர்கள். அவைகளை ராகவன் பொடியாக்கினுன் என்கிருர்கள். அப்படியானுல் வாலிக்கும் ராமனுக்கும் நேர்முகமாகப் போர் நிகழ்ந்ததா? இவர்கள் சொல்வது உண்மை தானு? பின்பு அநுமனின் வாக்கியமும் ராமனின் வார்த்தைகளும் வாலி போரில் ராமனுல் மாய்ந்தான் என்று காட்டுகின்றன. வாலி கீழே சாய்ந்தவுடன் அவன் சேனை ராகவனைக் கண்டு வாலிக்கு உதவியற்று அஞ்சியோடி விட்டதா? இதை மறைக்கவா;

நாங்கள் எறிந்த பாறைகளும் மரங்களும் பலனற்றுப் போயின என்கிறார்கள் இவ்வானரர்கள்? காலத்துக்குத் தக்கவாறு பேசினார்கள் இவர்கள் என்பது மாமுனி வாக்கியம். அச்சத்தின் அலங்கோலம் போலும்! ராகவன் தோற்றத்தைக் கண்டு நடுங்குகிறார்கள்.]

பயங்கொண்டு ஓடும் வானரர்கள் மேலும் சொல்லிக் கொண்டே போகிறார்கள். "ஒளிபொருந்தின மேனியுடையவளே! நாங்கள் கோருவதைச் செவிசாய்க்க வேண்டும். இல்லையேல், சுக்கிரீவனைச் சார்ந்த வானரர்கள் இப்பொழுதே அதிவிரைவில் நம் கோட்டைக்குள் புகுந்து விடுவார்கள். நமக்கு ஆபத்து நேரும். ஆகையால் மைந்தனைப்பற்றிக் கொண்டு கோட்டைக்குள் சென்று விடுங்கள். வாயிற்கதவு மூடப்படட்டும்" என்றார்கள்.

தாரை இவர்களின் மனப்பான்மையைக் கவனிக்கிறாள். கணவனை இழந்த துக்கம் மேலிடுகிறது. "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? வானரச் சிங்கமான கணவனையிழந்த எனக்குப் புதல்வனைப்பற்றியும், ராஜ்யத்தைப் பற்றியும் ஆகவேண்டியது என்ன இருக்கிறது? ராமனால் அடிப்பட்டுக் கிடக்கும் என் நாதனின் சரணங்களல்லவா எனக்குப் புகலிடம். அங்கல்லவா நான் செல்லவேண்டும்? **[நான் என் கடமையைச் செய்ய நீங்கள் உங்கள் கடமையைச் செய்யத் தவறினீர்கள் என்று இடித்துக் காட்டுகிறாள், போலும்!]** இதைச் சொல்லிக் கொண்டே, துயரத்தால் உள்ளங்கலங்கித் தலையிலடித்துக் கொண்டு கதறி அழுது வாலியிடம் விரைகிறாள். மலைபோல் சாய்ந்து கிடக்கிறான் வாலி. மல்யுத்தத்தில் புறங்காட்டாதவனும், பேரிடிபோல் வெற்றியில் கர்ஜிப்பவனும், மலைகளைப் பிடுங்கி அவற்றால் அசுரர்களையும் விரோதிகளையும் மோதி அறைந்து மாய்த்தவனும், அதிசூரனும், தோள்வலி கொண்டவனுமான வாலி, இப்பொழுது புலியால் வதைக்கப்பட்ட மான் போலவும், இடித்துத் தள்ளப்பட்ட கோபுரம் போலவும் பிரக்ஞையற்றுக் கிடக்கிறான்! எதிரே வில்பிடித்த கரங்களுடன் ராமனும், லட்சுமணனும சுக்கிரீவனுடன் கம்பீரமாய், சாவதானமாய் நின்று கொண்டிருக்கும் தோற்றத்தையும் காண்கிறாள் தாரை. இவர்களைக் கடந்து, மாய்க்கப்பட்ட கணவனை யடைகிறாள். அவன் கிடக்கும் நிலையை கண்ணுறுகிறாள். மெய்பதறி, சோகம் மேலிட்டுப் பூமியில் விழுந்தாள். சிறிது நேரஞ் சென்றது. கண் திறந்தாள், சூழ்நிலை அறிந்தாள். கணவன் காலவசமடைந்ததாக உணர்ந்தாள். துயரம் நெஞ்சடைத்தது. "ஹா! நாதா"! என்று கதறிப் புலம்பினாள்.

சுக்கிரீவன் மனம் நொந்தது. பறவைபோல் ஆவிதுடித்து அலமரும் தாரையின்கதி, அவன் உள்ளத்தைப் பதறவைத்தது. அவள் மைந்தன் அங்கதனும் அருகே ஏங்கிப் பரிதவிப்பதைப் பார்த்துச் சகியாதவனாய்ப் பெரும் துன்பமடைந்து துக்கித்தான்.

20. வீரமகளின் விலாபம்

கீழே தலைசாய்ந்து கண்மூடின கணவனைக் கண்ணுற்ற தாரை துக்கம் தாங்காமல் அவன்மேல் விழுந்து புலம்பிக் கதறினாள். அவனைத் தன் மடியிலிட்டு அலறினாள்.

"போர் வீரரே! சூரரே! ஏன் படுத்திருக்கிறீர்? உங்கள் மனங் கோணாது நடந்து உங்கள் அன்பைப் பெற்றவள் உயிர் துடிக்கிறாள். சுவாமி! கண் திறந்து உரையாடுங்கள். இனி உங்கள் தொனியிசை கேட்பதெப்போது? வானர மன்ன! தூங்கவா தரையில் படுப்பது? எழுந்திருங்கள்; சிறந்த பஞ்சணை உங்களுக்காகக் காத்திருப்பதை மறந்தீர்களா? உங்களுக்குப் பிரியமான நானிருக்கையில் பூமியைப்பற்றிக் கொண்டு துயிலுறுவது எங்ஙனம்? நாதா! நீங்கள் நிர்மானித்த திவ்வியமான கிஷ்கிந்தா நகர் இருக்க, சுவர்க்கமென்னும் இன்னொரு நகரையா நீங்கள் நாடிச் செல்வது? பிராணபதியே! உங்கள் தாரையுடன் உல்லாசமாகக் காலங்கழித்த நந்தவனங்களும் மதுவனமும் பாழடைந்து விடுமே! தனிப்பெரும் தோள் வீரரே! எங்கு சென்றீர்கள்?

"இதோ பாருங்கள் உங்கள் பெரும் சைனியம். அதைவிட்டு எங்குற்றீர்? என்னை விட்டுவிட்டுப் போவது முறையாமோ? துயர்க் கடலில் ஆழ்த்திவிட்டீர்களே! என்னால் வேதனை தாங்கமுடியவில்லையே கணவன் மாண்டபின் மனைவியின் மனம் பிளக்குமென்பார்களே! என் உள்ளம் சுக்கல் சுக்கலாய் வெடிக்கவில்லையே!

"அரசே! தம்பியைத் துரத்திவிட்டு; அவர் மனைவியை அபகரித்தீர்கள். அதன் பலன் இதோ கிடைத்துவிட்டது, பிராணனை விடுகிறீர்கள். என் வார்த்தையைக் கேட்காமலிருந்தீர்கள். ஏன், ஸ்வாமி! நீர் மண்ணுலகை விட்டு விண்ணுலகுக்குச் செல்வது, அப்சரஸ் என்னும், தேவமாதர்களின் வார்த்தைகளைக் கேட்கவோ? எவருக்குமடங்காத எதேச்சாதிகாரப் பிரபுவான தாங்கள், இப்பொழுது காலவசத்தால் சுக்கிரீவனிடம் அடங்கி விட்டீர்கள். உங்கள் உண்மையான சதியான என்னை விதவையாக்கவா எண்ணமிட்டீர்கள்? செல்வத்திலே வளர்ந்து, இன்பத்திலே திகழ்ந்து, களிப்பிலே திளைக்கும் உங்கள் செல்வப் புதல்வன் கதி இனி என்ன ஆவது? உங்கள் வைரியான சிறியதந்தையிடமல்லவா இனி அவன் கைபார்த்து நிற்கவேண்டும். ஐயனே! கண் திறந்து அங்கதனைக் கண்குளிரக் கடாட்சித்தருளுங்கள்.

"ஸ்ரீ ராகவன் சுக்கிரீவனுக்களித்த வாக்கை நிறைவேற்றிவிட்டார். சுக்கிரீவரே! இனி உங்கள் செல்வாக்குதான். உம்முடைய சத்துரு ஒழிந்தார். ராஜ்யம் இனி உமதே. பார்யையான ருமையை அடைந்து

மனோரதம் கைகூடப் பெற்றவராகக் களிப்புறப் போகிறீர். உங்களைப் பகைத்தவர் இதோ மண்ணைக் கவ்விவிட்டார். ஹா! நாதா! என் இறைவனே! உயிர்நிலையே! கபிகளுக்கெல்லாம் ஈசனே! இப்போது கண்மூடி வாயடைத்து உயிர்விடுவதைப் பார்த்தும் என் நெஞ்சம் பிளக்க வில்லையே! சுவாமி! இதோ பாருங்கள், உங்கள் தாரையிடம் ஒரு வார்த்தை பேசுங்கள்'' என்று விம்மி விம்மி மனம் விண்டு புலம்பி அழுதாள் தாரை.

அருகிலிருந்தவர்களின் மனம் கரைந்துபோயிற்று. தாரையின் புலம்பல் அவர்களை நீர் மல்க வாட்டியது. இளைஞன் அங்கதன் கண்ணில் நீர் மடை திறந்து வெள்ளப் பெருக்கெடுத்தது. நெஞ்சடைத்தது. தாரையோ கணவன் பாதங்களைப் பற்றிப்பணிந்து அவ்விடத்திலேயே பட்டினி கிடந்து உயிர் துறக்க முடிவு செய்தாள்.

21. மனைமாட்சி இல்லாள் மரபு

தாரையின் விபரீத முடிவைக் கவனித்த அநுமான் அவளிடம் நெருங்கி "அம்மணி! வாழ்க்கை முறையையும் அதன் முடிவையும் நன்குணர்ந்தவர்கள் நீங்கள். நன்மை தீமைகளின் விளைவுகள் காரணமின்றி நிகழா வென்பதையும் அறிவீர்கள். வாழ்வின் ஆதியும் அந்தமும் அவ்வண்ணமே அவரவர்கள் தங்கள் தங்கள் கருமங்களின் பயன்களை அடைவது சகஜமல்லவா? எல்லாமறிந்த நீங்கள் இப்படி வெறும் இப்பூத உடலைப் பற்றிக்கொண்டு அலங்கோலமாகப் பிரலாபிப்பது உங்களைப்போன்றவற்கு தகுதியாகுமோ? உண்மை பிரபஞ்ச தத்துவத்தையும் அதன் கருத்தையு மறிந்த நீங்கள் இப்படித் துடி துடித்தால் அங்கதனும் மற்றவரும் மனங்கலங்கி மதிமயங்கித் தவிப்பார்களே! அங்கதனைப் பரிபாலித்து அவனை நல்வழியில் கொண்டுவரவேண்டிய பொருப்பையும் கடமையையும் தாங்கள் கைவிடலாமா! கொஞ்சம் சிந்தனைசெய்யுங்கள். ஜீவனின் பிறப்பும் இறப்பும் இயற்கை. அது பண்படைந்து உயர்நிலை செல்ல வகை தேடுவது ஒவ்வொருவரின் கடமையாகும். பெரியோர்களும், பெற்றோர் களும் தாங்கள் சந்ததிகளுக்காக இச் சேவையில் ஈடுபடுகிறார்களன்றோ?

"அம்மையே! சோகத்தை விடுங்கள். பாணத்தால் துளைக்கப்பட்டுக் கிடக்கும் இப்பூத உடலைவிட்டுச் சென்ற வாலிமன்னர். அறம் அறிந்தவர்; அவர் வீரசுவர்க்கம் எய்தியவர், நீங்கள் இப்படித் தவித்துத் தயங்குவது அவருக்கேற்ப வீராங்கனைக்கு ஏற்றதாகுமா? நுட்பமறிபவளே! இப்பொழுது இந்த வானர ராஜ்யம் முழுவதும் உங்களதுதான் என்று ஏன் மறந்தீர்கள். அங்கதன் உங்கள் ஆதரவு பெற்று ராஜ்யத்தை அரசாள வேண்டியதுதானே நியதி. சந்ததி எதற்காகக் கோரப்படுகிறது? இச்சமயம்

நடக்கவேண்டியது எதுவோ, நீங்கள் இவைகளைச் சிந்தனைசெய்து மேற்கொண்டு முடிக்க வேண்டும். இவருக்கு உத்திரகிரியைச் செய்து விட்டு அங்கதனுக்கு முடி சூட்டி அவனை சிம்மாசனத்தில் வீற்றிருக்கப் பார்த்து மனநிம்மதி யடைவீர்களாக" என்றான்.

[அநுமன் மொழிகள் தாரையின் மனத்தைத் திருப்பமுடியவில்லை. மாதர்களுக்கேற்ற மாண்பின் பெருமையை வெளிப்படுத்துகிறாள். நடந்தது நடந்தாய்விட்டது; இனி நடக்கவேண்டியதைக் கவனிக்கலாம், என்ற வேதாந்தத்தை ஏற்காது, மாய்ந்த கணவனுடன் மாள்வதே உயரிய மனைவிகளின் மரபு என்று எடுத்துக்காட்டுகிறாள்.]

அநுமனைப்பார்த்துத் திடமனத்துடன் பதில் பேசுகிறாள், "அநுமரே! அங்கதனுக்குச் சமமான புத்திரர்கள் நூறுதான் இருக்கட்டுமே. பர்த்தா இருப்பினும் இறப்பினும் அவரைப் பின்பற்றுவதன்றோ பதிவிரதையின் பண்பாகும்; அங்கதனைப்பற்றிய பொறுப்பு இனிமேல் சுக்கிரீவனது; எனதல்ல; புத்திரனைக் காத்து ரட்சிப்பது முக்கியமாக பிதாவின் கடமையாகும்.

[தாய்க்கும் அக்கடமையுண்டென்றாலும், அவளுடைய முதல் கடமை பதியைப் பின்பற்றுவதுதான்போலும்!]

"வானரோத்தம! எனக்கு இவ்வுலகிலும் சரி, மற்ற உலகிலும் சரி, என் பதியான இவ்வானர மன்னரைப் பின்பற்றுவதைவிட மேலானது ஒன்றுமில்லை, ஆகவே, இதோ மாய்ந்து சாய்ந்து வீரசயனத்தில் சுகமாக துஞ்சும் இவர் படுக்கையே எனக்குப் பொருந்துமென்று கொள்வீராக" என்று மொழிந்து ஒன்றும் தோன்றாது அப்படியே தோய்ந்து கண்ணீர் வடித்தாள் தாரை.

22. வாலியின் மறைவு.

தாரையின் திட சித்தத்தையும் அவள் வீரமொழியையும் கவனித்த எல்லோரும் சற்று நேரம் ஒன்றும் பேசாது பிரமித்து நின்றுவிட்டனர். அச்சமயம் வாலி கண் திறந்தான். மூச்சு திணறிக்கொண்டிருந்தது, முதல் முதலாகத் தம்பி சுக்கிரீவனைக்கண்டான். உடனே அவனைத் தன் அருகில் அழைத்தான்.

"சுக்கிரீவா! நாம் இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள். என்றும் சகோதர அன்பும் உறவும் நம்மிடையே இதுவரை இல்லாதிருந்தது விதிப்பயனே. இயற்கைக்கு மாறாகப் பகை ஏற்பட்டு நீடித்துவிட்டது. போகட்டும். இப்பொழுது உயிர் துறக்கவிருக்கிறேன், நீதான்

இந்நாட்டின் அரசை ஏற்றுக்கொள்ளவேண்டும். நீயே இப்பொழுது அரசன், நீயே வீரன். நான் இவ்வுலகை விட்டுப் போகும் நிலையிலிருக்கிறேன். ஆகையால் நான் சொல்வதைக் கவனித்து எப்படியாவது அதை நிறைவேற்றி வைக்கவேண்டும். இதோ இந்தப் பாலன் அங்கதனைப்பார்! இவன் எனது உயிரினும் இனியவன்; என்னைவிட்டுப் பிரியப்போகிறவன்; அவனை உன் வயிற்றில் பிறந்த புத்திரனைப்போல் ஒரு குறையுமின்றி பரிபாலித்து வரவேண்டும். வானரமன்ன! நான் அவனுக்கு எப்படியோ அப்படியே நீயும் அவனிடம் அன்புகொண்டு அவன் கேட்பதையெல்லாம் அளித்து ஆபத்துகளிலிருந்து அவனைக் காப்பாற்றவேண்டும். பராக்கிரமசாலியே! இவன் சூரன், அரக்கர்களை வதைக்கும் இயக்கத்தில் உனக்கு முன் இருப்பான். அவனைக் கவனித்துக்கொள்.

"இதோ, சுஷேணன் பெண்ணாகிய என் மனைவியான தாரையையும் கவனமாய்க் காப்பாற்று; புத்திசாதுர்யங்கொண்டவள். காரியங்களின் நுட்பங்களை ஆராய்ந்து அறிபவள். இன்னது இவள் செய்யலாம் என்கிறாளோ அதையே செய். எக்காரியமும் தாரையின் ஆமோதிப்பில் நடக்குமானால் அது தவறாது வெற்றிகரமாகவே முடியுமென்பது கவனத்திலிருக்கட்டும். மனவுறுதியுடனும், திடச்சித்தத்துடனும், சலியா ஆற்றலுடனும், ராமனின் காரியத்தைக்கைக்கொண்டு பூர்த்திசெய். இல்லையேல் அது உனக்குப் பாவம் விளைவிக்கும். நீயும் என்னைப்போல் தண்டனையடைய நேரிடும்.

"சுக்கிரீவா! புனிதமான இந்தப் பொன் மாலையை என்னிடமிருந்து எடுத்துத்தரித்துக்கொள். இதை நான் இனி அணிந்திருந்தால் இதில் நிலையாயிருக்கும் மங்களமளிக்கும் சக்தி நான் இறந்தவுடனே மறைந்து விடும்" என்றான்.

சுக்கிரீவன் முகமும் மனமும் சோகத்தால் குன்றின. தன் அண்ணன் சொல்லியபடி அப்படியே செய்வதாக உறுதியளித்து அந்த மாலையையும் எடுத்துக்கொண்டான்.

பின்பு வாலி அங்கதனை யழைத்துச் சிற்றப்பனிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை விவரமாகக் கூறினான். பின்பு வலிவாக மூச்சைக் கட்டுப் படுத்தி, சில மொழிகளைக் கஷ்டத்துடன் மெதுவாகச் சொல்வதற்குச் சிரமப்பட்ட வாலி தன் முயற்சியைத் தளர்த்தினான். உடனே அவன் சுவாசமும் நின்றது. இம்மரணத்தைக் காணமுடியாத அநேக வானரர்கள் அலறிப் புலம்பினர். தாரையோ கணவனின் முகத்தை நோக்கிய வண்ணம் சோகத்தாலடிபட்டு வாலியை அணைத்துக் கொண்டு, வெட்டி வீழ்த்திய மரம்போல "ஹா"! வென்று கதறிக் கீழே விழுந்து விட்டாள்.

23. தாரையின் சோகம்

சற்று நேரஞ் சென்றது. அளவிடற்கரிய சோகம் தாரையை அலை மோதி ஆழ்த்திற்று, எனினும், ஒருவித உயரிய எண்ணத்துடன் தலை உயர்த்தினள். கணவன் முகத்தையும் உடலையும் அன்புடன் தழுவி "நாதனே! என் வார்த்தையைக் கேளாது கல்லும் முள்ளுமுள்ள கட்டாந் தரையில் இனியும் துயில்வது ஏனோ? என்று சாவதானமாகச் சொல்லிவிட்டு, மீண்டும் கணவன் உடலைத் தடவிக் கொடுத்தாள். "வீர சுவர்க்கம் சென்றுவிட்டீர்கள் அவருடைய மனைவி, சுத்த பத்தினியாதலின் அவள்மனம் இப்போதே பிளவுண்டு போக வேண்டியது. எனினும் நான் உங்களிடம் வராமல் இருக்கப்போவதில்லை. இதோ உங்களையே பின்பற்றி வருகிறேன். சற்றுப் பொறுங்கள், நான் உங்களைத் தழுவ முடியாமல் இந்தப்பாணம் புதைந்து கிடக்கிறது இப்படியே இருக்கவேண்டுமா? என்று கதறினள்.

உடனே நீலன் என்னும் வானரத்தலைவன் அணுகி வாலி உடலினின்று பாணத்தை மெதுவாகப் பிடுங்கி வெளிப்படுத்தினன். அதன் ஒளி மாலைக்கதிரவன் ஜோதியைப்போல் பிரகாசித்தது. ரத்தம் பீரிட்டு வெளிப் படவே, அதைக் காணச் சகியாத்தாரை, தாரைதாரையாய் பெருகும் கண்ணீருடன் புண்பட்ட இடத்தைத் துடைத்தாள்.

அருகே மனமுடைந்து மயங்கிநிற்கும் மைந்தன் அங்கதனை நோக்கினள். "அப்பா, உன் தந்தை உடலைப்பார். அசைவற்றுக் கிடக்கிறது. பாவத்தினல் ஏற்பட்ட பகைமையின் விளைவைப் பார். மகனே! வீர சுவர்க்கம் எய்தின மாபெரும்வீரரான உனது தந்தையைப் பணி "என்ருள்.

சிறுவனும் "அப்பா! அடியேன் அங்கதன்" என்று வாய் தடுமாறிப் புலம்பி வாலியின் பாதங்களைப் பற்றிப்பணிந்தான். தாரையும் "சுவாமி! உங்களைப் பணியும் புதல்வனை வழக்கம் போல் ஏன் ஆசி கூருமல் இருக்கின்றீர்கள்? என்று பிரலாபித்தாள். "தேவேந்திரன் அளித்த மாலையை இனி உங்கள் கழுத்தில் காண்பேனு? ராஜலட்சுமியின் களையும் ஒளியும் உங்களிடத்தில் இன்னும் தோற்றமளிப்பதாகவே காண்கிறேன்.

"என்னைவிட்டகன்றுவிட்டீர்கள். என்னை விதவையாக்கிவிட்டீர்கள். உங்களோடு என் பாக்கிய லக்ஷ்மியும் என்னைவிட்டு விலகிவிட்டாள்" என்று கதறிக்கொண்டு வாலி உடலின்மேல விழுந்து மூர்ச்சையாகிவிட்டாள்.

24. கடமைகளின் அலைமோதல்.

கரைகாணமுடியாத துயரத்திலமிழ்ந்து கண்ணிலிருந்து நீர் வெள்ளப் பெருக்கெடுத்த தாரையின் புலம்பலும் அசைவற்றுக் கம்பீரமாய்க் கிடந்த வாலியின் தோற்றமும் சுக்ரீவனின மனத்தைப் பிளந்தது. தாரையின் துயரத்தையும் அங்கதனின் பரிதாப நிலையையும் அவனால் காணச் சகிக்க முடியவில்லை. இளகிய மனமுடைய சுக்ரீவன் அப்போதே வாழ்க்கையில் சலிப்புகண்டான். உடன்பிறந்தவனைக் கொன்று அவன் அரசைக்கைப்பற்றி உயிர்வாழ்வது மிகுந்த அற்பத்தனமென்ற உணர்ச்சி பெருக ராகவனிடம் அணுகினன்.

திவ்விய மங்கள மூர்த்தியாய்ச் சலியாத அன்பும் பெருந்தன்மை பொலியும் மலர்ந்த முக காந்தியுடனும் விளங்கி நிற்கும் ராமனைக்கண்டு உயரிய பக்தி மேலிட்டு அஞ்சலிசெய்து மரியாதையாய்ப் பேசவாரம்பித்தான். "ஒப்பற்ற சக்கரவர்த்தியின் இணையற்ற திருமகனே! பிரதிக்ஞையை நன்கு நிறைவேற்றிவிட்டீர்கள். அடியேனுடைய மனோரதமும் சபலமாயிற்று. எனினும், என்மனம் இவ்வுலகில் எல்லாவற்றிலும் சலிப்பு கண்டுவிட்டது. ராமா! தமையன் மாண்டுவிட அவனுடைய தேவியும் துயரத்திலாழ்ந்து துக்கமுற, இம்மக்களும் மன்னன் மரணத்தால் மனங்கலங்க, அங்கதனும் ஏங்கித்தவித்துப் பரிதவிக்க இவைகளைப் பார்க்கும்போது எனக்கு அரசு புரியும் ஆசை அறவே அகன்று விட்டது. இக்ஷ்வாகு குலதிலகனே! கோபத்தாலும் மதியீனத்தாலும என் தமையன் மரணத்தைக் கோரினேன், கோரிக்கை ஈடேறிவிட்டதும் என் கொடுந்தன்மை யுணர்ந்தேன். எனக்கு அரசாட்சியும் செங்கோலுமெதற்கு? "என்னைக் கொல்லவிருத்தலை விட்டு ஓடிப்போய் எங்காவது கண்காணுது பிழைத்துப்போ" என்று மொழிந்த என் அண்ணனின் கொலையை வேண்டினேன். கொடும்பாவியானேன். நானு அரசுபுரிய யோக்கியதை உள்ளவன்? மக்கள் என்னை அரசனுக ஒப்புவார்களா? இதுவா தரும முறை? எனக்கு அரசும் வேண்டாம், சுகமும் வேண்டாம். புருஷோத்தமா! என்னை மன்னித்தருளுவீர்களாக. எனக்கு இனி உயிர்வாழ எண்ணமில்லை, மகாபுத்திசாலியான உண்மை ஆற்றல்கொண்ட அங்கதன் அப்பொருப்பை ஏற்பான். அவனை முன்னிட்டு வானரர்கள் உங்கள் காரியத்தை முடித்து வைப்பார்கள். தீக்குளித்து உயிர்விடத் தீர்மானித்துவிட்டேன். குலத்தை நாசஞ்செய்தேன், உயிர்வாழ அருகதை யற்ற பாவியானேன். ஆகையால் சுவாமி! எனக்கு விடையளியுங்கள்" என்று பணிந்தான்.

இப்படித் துயரத்திலாழ்ந்து மனவேதனையுறும் சுக்ரீவனைக் கம்பீரமாய் பார்த்து நிற்கிறுன் கோதண்டபாணி! நண்பன் சோகத்தில் பங்கெடுத்துக் கொண்டு தானும் கலக்கமுறுகிறுன். கணவன் உடலின்மேல் மெய்மறந்து

சாய்ந்துவிட்ட தாரையையும் காண்கிறான். பிறர் துக்கத்தை தன் துக்கமாய் உணர்பவனான உண்மை அன்பன் தானும்கண்ணீர் மல்கினான். சற்றுநேரம் மௌனமானான்.

பின்பு, கிஷ்கிந்தை மந்திரிகள் இப்பரிதாபக் காட்சியைத் தவிர்க்க, தாரையை எழுப்பினார்கள். அவள் தலையையுயர்த்தினாள், உடல் நடுங்கினாள். அவளை அநேக அரண்மனை ஸ்திரிகள் அணைத்துக்கொண்டிருந்ததைக் கவனித்தாள். எழுந்தாள். உடனே வில்லேந்திய கையுடன் சூரியகாந்திபோல் ஜ்வலித்துக்கொண்டிருந்த ராகவனைக் கண்ணுற்றாள்.

கபடமற்ற, தெள்ளிய கருவிழிகள், அரச லட்சணங்கள் நன்கு பொலியும் மென்மை அவயவங்கள், ஒளிவீசி அருள்புரியும் கம்பீரக் கண் பார்வை; கண்குளிரச்செய்யும் இனிய தோற்றம்! ராகவனை முதல்முதல் நேரில் தரிசித்ததும் மனம் மலர்ந்து உணர்ச்சிகொண்டது. உடனே காந்தம் ஊசியை வசீகரிக்கும் விசையின் சோகத்தில், மெய்மறந்த தாரை மெய்சிலிர்க்க அருள்பொழியும் அழகனிடம் விரைந்து வந்தாள். தெய்வத் தோற்றத்துடன் எவராலும் அடைதற்கரிய நிலையிலிருப்பவர் இம்மகானுபாவர் என்று வாயும் மனமும் முணுமுணுத்தது. வந்தவனுடன் மிக்க மரியாதையுடன் பணிந்தாள். மனங்கரையும் தாழ்மையுடன் விண்ணப்பிக்கிறாள்:—

"ஸ்வாமி! தாங்கள் யாவராலும் அறியமுடியாத அறிவுக்கெட்டாத அறமூர்த்தி; இந்திரியங்கள் உங்கள் உத்தரவுக்குக் காத்து நிற்கும். அற நெறி அறிந்து தருமத்தில் நிற்பவருள் முதல்வர். என்றென்றும் ஓங்கும் மங்காப் புகழ்கொண்ட கீர்த்திமான். உண்மையான இணையற்ற மெய்ஞ்ஞானி பொறுமையில் பூமிதேவியை நிகர்த்தவர். செந்தாமரைக் கண்கள் உங்கள் திவ்விய தோற்றத்தைக் கவர்ச்சியுற வைக்கின்றன. தருமமொன்றையே விரதமாகக் கொண்டவரே! குற்றவாளியைத் தண்டித்து அன்பனைக் காத்தருளக் கோதண்டங்கொண்ட நீதிபதியே! உங்கள் நினைத்தற்கரிய பலமும் ஆண்மையும், நோக்குப்வரை அப்படியே முழுதும் ஆட்கொள்ளும் பேரன்பு வள்ளலே! மானிடப் பிறப்பை மென்மையுறச் செய்யும் திவ்விய மங்கள விக்கிரக ஸ்வரூபியே! அமானுஷராய் எழுந்தருளியிருக்கும் தங்களை இன்னாரென்று அறிவது எளிதாமோ? சுவாமி! அருள்புரியுங்கள்"

"இருந்தாலும் இறந்தாலும் ஒரு மனைவி தன் கணவனைப் பின் பற்றுவதே முறையாகும். ராமா! என் கணவர் நானின்றிக்களிப்புறார். விண்ணுலகில் தனியே தவிக்கும் அவரை நான் அடையவேண்டியதே முறை. இதை நீங்கள் அறியாதவர்களா? நான் அவரை அடைவது உங்கள் சம்மதத்திலிருக்கிறது. உங்களுடையபாணம் அவரை மேலுலகத்திற்கனுப்பி விட்டது. அதே பாணம் என்னையும் அவரிடம் அனுப்பி விட அருள் புரியுங்கள், சுவாமி! அவர் எங்கிருப்பினும் அங்கங்குள்ள தேவமாதர்களைக் கண்ணுறாது என்னையே தேடிதேடித்திரிவார், வீரரே! சீதையை விட்டுப் பிரிந்த உங்களுக்கன்றோ அப்பிரிவாற்றாமையின் சோகம் நன்கு விளங்கும்."

"அருள் கூர்ந்து என்னை அதே பாணத்தால் அனுப்பிவையுங்கள், மகாத்மாவான தேவரீருக்கு ஸ்த்ரீயைக் கொன்ற தோஷம் வரக்காரணமில்லை. எல்லாமறிந்த கலைஞானி தாங்கள். மனைவி பர்தாவின் ஆத்மா என்ற உண்மை--வேதமறிந்த உண்மை--தேவரீரைப்போன்றூர்க்குத்தெரியாதகா? உலகில் ஞானவான்களுக்குத் தரும பத்தினியைத் தன் பதியிடம் சேர்த்து வைப்பதை விட வேறு தருமம் உண்டோ? இதுவே பிரத்தியட்சமான நீதியல்லவா? தருமத்தை செய்பவரான தாங்கள் என் கணவரைக் கொன்றதின் தோஷத்தை, என்னை அவரிடஞ்சேர்த்துவிட்டபுண்ணியத்தால் போக்கடிப்பீர்களாக" என்றுள்.

வீரராகவன் அவளைக் குளிரக் கடாட்சிக்கிறுன், சாவதானமாக உரைக்கின்றுன் :— "வீரபத்னி! புத்தி கலங்காமலிருப்பவள்தான் வீரபத்தினி என்பதை அறிந்தவளல்லவா நீ. தருமம், நியதி என்று சொன்னுய். ஆம் உலகம் யாவும் தருமத்திலே தோன்றி தருமத்திலே நிலை பெற்றிருக்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டுமா? அதுவே பிரம்மவிதிப்படியே நடந்தேறுகிறது. அதனுல்தான் தருமம் நிலைபெற்று நிற்கிறது. அவ்விதியையோ அதன் போக்கையோ, மனம் போனபடிமாற்ற எவராலும் இயலாது உன்னிடத்திலும் சுக்கிரீவனிடத்திலும் அங்கதனை ஒப்படைத்துப் போயிருக்கின்றுன் வாலி. நீ அவனை விட்டு, உன் கடமையைச் செய்யாது போவது நீதியாகுமோ? உன்னை அப்படிச் செய்யாது வைப்பதா என் நீதியாகும்? சற்று சிந்தனைசெய். அங்கதனை யுவராஜாவாக மகுடஞ் சூட்டிக் காண்பது நீயும் வாலியும் விரும்பும் சம்பவ மில்லையா? இப்படியேதான் பிரம்மதேவரால் விதிக்கப்பட்ட நியமனம் என்று கொள்ளவேண்டும், வீரனின் மனைவி வீரப்புதல்வனுக்குச் செய்யவேண்டிய கடமையைக் கைவிடுவாளா? என்றுன்.

கருத்துள்ள இப்புத்திமதியைக் கேட்ட தாரை மனந்தெளிந்தாள் மௌனமாயினுள்.

---

25. சோகமும் கடமையும்.

தாரையை ஒருவாறு தேற்றரவு செய்த கோதண்டபாணி நாலா பக்கமும் கவனிக்கிறுன், சுக்கிரீவனே சோகக்கடலிலாழ்ந்து விட்டான். கிஷ்கிந்தை பூராவும் தங்கள் மன்னவன் மாண்டுகிடப்பதைக் கண்டு துக்கித்து நின்று விட்டது. அங்கதனே கீழே சாய்ந்தவன் சாய்ந்தவனே! இங்கு மந்திரிமார்கள், அங்கு அந்தப்புர ஸ்திரிகள், எங்கும் வானரமக்கள் பரிதபித்துத் துயரத்தில் தோய்ந்து விட்டார்கள்!

இப்பரிதாப நிலையைக் கவனிக்கின்றான் ரகுநாதன். அவன் எளிமை எல்லோர் துயரத்திலும் கலந்து அவர்களின் சமமான வருத்தத்தை அடைய வைத்தது. 'பரதுக்கதுக்கித்வம்' என்ற பரமகாருணிக பிரத்தியட்ச சொரூபி, அவனும் மனமுருகினான். எனினும் மெய்ஞானியல்லவா? உடனே எல்லோருக்கும் ஆறுதலளிக்க முற்படுகிறான். முதலில் தாரைக்கும் மற்றெல்லோர்க்கும் இப்படி மனம் விண்டு வருந்தி வாடுவது வானரவரசன் வாலியின் மேன்மைக்குக் குறைவாகுமென்பதை எடுத்துக்காட்டுகிறான். வீர சொர்க்கம் எய்திய வாலியைக் கௌரவிக்க வேண்டும், விதியைப் பற்றி நொந்துகொள்வது வீணே. எல்லாம் விதியின் விளைவு என்று தேறி மேற் கொண்டு என்ன நடக்கவேண்டுமோ அதைச் செய்வதுதான் நியதி என்று நினைப்பூட்டுகிறான்.

உடனே எதிலும் மனஞ்சலியா ராமானுஜன் வாடிக்கிடந்த சுக்ரீவனிடம் விரைந்துவந்து, "சுக்ரீவரே! எழுந்திரும், மனம் கலங்கிச் சோர்ந்து விட்டதுபோதும். நீர் இக்கிஷ்கிந்தை ராஜ்யத்திற்கு மன்னரென்பதை மனத்தில் வையும். அண்ணனும் அரசனுமான வாலிக்குச் செய்யவேண்டிய ஈமக்கடனைச் செய்ய முனைவீராக. முதலில் அங்கதனைத் தேற்றி, பின்பு எல்லோரையும் அடுத்தபடியான கடமையில் ஈடுபடச்செய்யும்," என்று அவனுக்குத் தன்னுணர்ச்சி எழுப்பினான். பின்பு தாரன் எனும் மந்திரியைப் பார்த்து உத்தமமான மகாராஜனுக் குரிய சிவிகை ஒன்றைத் தகுந்தபடி ஜோடித்து எடுத்துவர அனுப்பிவிட்டு ராகவனிடம் வந்துசேர்ந்தான்.

தாரனும் உடனே லட்சுமணன் நியமனத்தைத் தொடர்ந்து பரபரப்பாக நகரினுட் சென்று வெகுவெகு சம்பிரமமாகச் சிவிகையைத் தயாரித்தான். அதைத்தாங்கிப்போக ஆட்களைப் பொருக்கி எடுத்தான். அச்சிவிகையோ சிம்மாசனம்கொண்ட ரதம்போல் ஆபரணங்களாலும், பதுமைகளாலும், விதவித தட்டுகளாலும், புஷ்பத் தோரணங்களாலும், பலவர்ண ஜாலத் திரைகளாலும் கண்ணைக் கவரும் காந்திபொலிந்து காட்சியளித்தது.

செஞ்சந்தனத்தின் நறுமணம் கமழும் அப்பல்லக்குக்காக நியமிக்கப் பட்டவர்கள் காலதாமதமின்றி சற்றுமசையாது அதைத் தாங்கிவந்தார்கள். எல்லோரும் மெய்மறந்து நின்றபடியால் ராமசந்திரன் தம்பியைப் பார்த்து "வாலியைக் கொண்டு போகட்டும், பிரேதச் சடங்குகள் துவங்கட்டும்" என்றான்.

சுக்ரீவனும் அங்கதனும் வாலியைப் பல்லக்கில் வைத்து அரசனுக்குரிய அலங்காரஞ்செய்தார்கள். பின்பு சகல மரியாதைகளுடனும் விதிப்படி வேந்தர்களுக்கு உத்தரகிரியை எவ்வாறு நடக்கவேண்டுமோ அப்படியே எல்லாம் நடந்தேறின. கணவனை யிழந்த தாரை பூத உடலைச் சிதையில் வைக்குமுன் மறுபடியும் கைம்பெண் கதியைக் கதறியழுது பிரலாபித்து எல்லோர் மனத்தையும் வாட்டிவிட்டாள். பிறர் துயருறும்போது தானும் துயருறும் தாசாதி தானும் அவர்களைப்போல் மனம் வருந்தினான். சுக்ரீவனைத் தூண்டி கடமையை நினைப்பூட்டி வாலிக்கு ஒன்றும் குறை வராது ஈமக்கடன்களைச் செய்வித்து எல்லோரையும் தேற்றுவித்தான்.

சுக்ரீவனும் அங்கதனை முன்னிட்டு பிரேத ஸம்ஸ்காரஞ் செய்துவிட்டு புனிதப் புனலாடி புவனசுந்தரன் ரகுகுல திலகனிடம் வந்துசேர்ந்தான்.

26. சுக்ரீவன் — அங்கதன் முடிசூடல்.

ஈரவாடையுடன் ராமனிடம் வந்து நின்ற சுக்ரீவனைக் கண்டு அநேக வானரர்கள் அஞ்சலி செய்தவண்ணம் பணிவுடன் காத்து நின்றார்கள். அப்பொழுது, இளஞ்சூரியனையும் பொன் மலையையும் ஒத்த ஆஞ்சநேயன் கைகுவித்து ராகவனை நோக்கிப் பின்வருமாறு விண்ணப்பஞ்செய்தான்.

“ பிரபுவே! சுக்ரீவர் தேவரீர் அநுக்கிரகத்தால், தலைமுறை தலைமுறையாய் வந்ததும், அடைதற்கரியதுமான இந்த வானர ராஜ்யத்தை அடைந்தார். உங்கள் உத்திரவை முன்னிட்டு நண்பர் பந்துக்களுடன் நகர் புகுந்து எல்லா நிர்வாகங்களையும் ஏற்றுக்கொண்டு தக்கபடி நியமிக்கட்டும். அவர் அபிஷேகம் செய்துகொண்டு உங்களை நேராகக்கௌரவிக்கட்டும். சுவாமி! தேவரீர் எங்களால் சூழப்பட்டுப் பட்டணப்பிரவேசஞ்செய்ய அருள் புரியுங்கள் ” என்றான்.

அதற்கு ராமன், “ அநுமனே! பார்ப்போரைக் குளிர்வைக்கும் மேனியனே! என் தந்தையின் பிரதிக்ஞையில் கட்டுப்பட்டவன் நான். பதினான்கு வருஷம்வரை நகரத்திலோ கிராமத்திலோ புகுவதற்கில்லை. ஆகையால் சுக்ரீவன் தனது பரிவாரங்களுடன் நகரடைந்து முடிசூடட்டும். என்று உரைத்து, சுக்ரீவனை நோக்கி, “ வீரனே! எல்லாம் தகுந்தவனான அங்கதனைச் சம்பிரமமாய் உன் இளவரசனாக அபிஷேகஞ்செய்து வைப்பாயாக, அவன் வீரனின் வீரப்புதல்வன். மூத்தவருடைய புத்திரன். மகா பராக்கிரமம் கொண்டவன். நீயும் முடிசூடி இன்புற்றிரு. இது வருஷருது, லட்சுமணனுடன் நான் இம்மலையின் குகையிலேயே இக்காலத்தைக் கழிக்கிறேன். சரத்காலத்தில் ராவணன் வதை விஷயமாக ஊக்கங்கொண்டு தகுந்த ஏற்பாடுகளைச் செய்வாயாக. அரண்மனைக்குத்திரும்பு. என்று பரிவுடன் சுக்கிரீவனை அனுப்பினான்.

சுக்ரீவன் தனது பரிவாரங்களுடன் நகரடைந்தான். மக்களும் மரியாதையுடன் அரசனை வரவேற்றுக் கௌரவித்தனர். சுக்ரீவ பட்டாபிஷேகமும் அங்கத யுவராஜ்ய பட்டாபிஷேகமும் கண்கவரும் காட்சியாய் மிகப் பிரமாதமாய் நடந்தேறின. எல்லோரும் ராகவனைப் புகழ்ந்து கொண்டாடினர். கிஷ்கிந்தை நகரும் புதுசோபையில் திகழ்ந்து துலங்கிற்று!

27, ராகவனின் பொறுமை.

சுக்கிரீவனின் பட்டாபிஷேக மகோத்ஸவத்தை வானரர் வந்து ராமனுக்குத் தெரிவித்தார்கள். சுக்ரீவ மன்னனுக்கும் அங்கத யுவராஜாவிற்கும் ஆசிகள் கூறி அனுப்புகிறான் ராகவன். மழைகாலம் வந்துவிட்டது. நகரில், அரண்மனையில் மனைவியிடம் சுகமாய்க் காலங்கழித்து அரசுபுரிந்து களிப்புற்றிருக்கும் காலம். வெகுநாளாய்த் தடைபட்டிருந்த அவன் சுக வாழ்வு பெற்றுக் கவலையற்றுக் களிப்புறுமாறு வாய்ப்புதரும் காலம். மனோரதம் கைகூடினவனாய் ரகுவீரனைப் பணிந்து பரிவாரங்களுடன் அரண்மனை திரும்பினான் சுக்ரீவன்.

தம்பியுடன்கூட ராகவன் கிஷ்கிந்தையைவிட்டு 'பிரஸ்ரவணம்' என்ற மலைக்கு வந்து அதன் உச்சியிலிருந்த விசாலமான ஒரு குகையைக்கண்டு அங்கே மழைகாலத்தைக் கழிக்கத் தீர்மானித்தான். அழகாயும், காற்றோட்டமுள்ளதாயும் தாதுக்களைக் கொண்டதாயுமிருந்தது அந்த பிரதேசம். அநேக குகைகள், அருவிகள் மலர்ச்சோலைகள் உயரச்செல்லும் கற்குன்றுகள், நாற் பக்கங்களிலும் மிக்கக் கவர்ச்சிகொண்ட வனப்பு வாய்ந்த தோற்றம், முதலியன மனச்சாந்தி யளித்துத் தூய எண்ணங்களை எழுப்பின. மலையுச்சியிலுள்ள குகை முன் சமவெளி எழில் பொழியும் புல்லடர்ந்த தாழ்வரை. அதற்கப்பால் அடர்ந்த மரக்கூட்டங்கள் சிறு புதர் காடாக காட்சியளித்தன. பலாசம், சம்பகம், திலகம், தாளகம், தமாலம், அதிமுக்தகம், பத்மகம், ஸரளம், அங்கோலம், வானீரம், திமிசம், வகுளம், கேதகம், தவங்கம், ஹிந்தாளம், திரிடம், நீபம், வேத்ரகம், கிருதமாலகம், முதலிய மரங்களை இயற்கை அமைப்பு வண்ணங்களுடன் பார்த்து மகிழ்ச்சியுறுகிறார்கள். நீரூற்றுக்கள் குன்றுக்குள்ளிருந்து வெள்ளிக் கீகறுளாயும், பொன்னோடைகளாயும், சலசலவென்று சிலிர்த்தும், பேரொலி கோஷத்துடனும், மழை தாரையாயும் நீர்வீழ்ச்சியாயும் கீழே சிதறும் வனப்பு ஒரே கவர்ச்சிகரமாயிருந்தது. இவ்வெழில் இயற்கை உயிர்கொண்டு வசிப்பது போல் பலவகைப் பறவைகளும் அன்னங்களும் பலபல வர்ணத்துடனும் வெவ்வேறு இசை யொலியுடனும் கோடிட்டுக் காண்பித்தன. இத்தகைய மனச்சாந்தியளிக்கும் இடம் மிக்க ரம்மியமான வாசஸ்தலம் என்று அவர்கள் இருவரையும் அழைப்பது போலிருந்தது.

இராமபிரான் இக்கவர்ச்சியைக் கண்டு இன்புறுகிறான். சற்றுநேரங் கழித்து, தம்பியைப்பார்த்து, "அப்பனே! அதோபார்! அழகிய கிஷ்கிந்தா நகர் சீரும் சிறப்பும் பெற்றுத் தோன்றுகிறது. மக்கள் இன்புறுகிறார்கள். ஆடல் பாடல் சத்தங்களைக் கவனி. சுக்ரீவன் அரசைப்பெற்று, நண்பர்கள் அன்பைப் பெற்று செல்வத்தையடைந்து தன் மனைவியைத் திரும்பப்பெற்று அங்கு சந்தோஷமாயிருக்கிறான். " என்று சொல்லிவிட்டு மௌனமானான்.

பின்னர் மைதிலியைப்பற்றி வருந்தினன். அங்குமிங்கும் நடந்தான். படுத்தான்; திரும்ப எழுந்தான்; பசி இல்லை; தாகமில்லை; தூக்கமில்லை; மனச்சாந்தமில்லை. மனவேதனையில் மயங்கினன். தமையனின் பரிதாப நிலையைக் கவனிக்கிறான் தம்பி; 'கொடிய பாதகனை அரக்கன் எங்கொளிந்திருக்கிறான்? சீதை எங்கு வைக்கப்பட்டிருக்கிறாள்? என்று அறியவேண்டி அண்ணல் துடிதுடிக்கிறாரென்று கண்டு, "வீரபத்ர! மனக் கலக்கத்தை ஒழியுங்கள் உங்களைப்போன்றவரா துயரத்திலாழ்வது? மனத் தளர்ச்சி கொண்டால் முயற்சியில் வெற்றிகாண முடியாது. உங்களுடைய கொள்கைதானே இது, ராகவா! தேவரீர் ஒருவரே அஞ்சாத செயலாளர். தெய்வ பக்திமான்; ஆஸ்திகர், தருமசீலர்; உலக நலனுக்குழைப்பவர்; செருக்கால் வணங்காமுடி மன்னனாய்த் திரியும் சத்துருவான அரக்கனைப் போரில் கொல்லத் தேவரீர் ஒருவரே போதும். தேவரீர் அபார சக்தி உடையவர். சுவாமி! உங்கள் திடசித்தத்தை நினைப்பூட்டுகிறேன். சோகத்தை விடுங்கள். கொடும்பாவி அரக்கனைப் பரிவாரங்களுடன் நிர்மூலமாக்க வேண்டுமே. இப்பெரும்பணி தலைமேலிருக்கச் சோகத்திற்கிடமேது? மழைக் காலம் துவங்கிவிட்டது. சற்றுப்பொருங்கள். இக்காலங்கழிந்தவுடன் ராவணவதையில் ஈடுபடுவோம். உங்களுடைய இயற்கையான வீரியத்தை நினைப்பூட்டுகிறேன். சோகத்தை வேரோடு களைந்தெறிய வேண்டுகிறேன், லட்சியத்தை யடையும்வரை மனச்சோர்வு காணலாமா? காகுத்தா! அகில சராசரங்களையும் ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல்உள்ளவர்கள் தாங்கள். தெய்வமெனக் கொண்டாடப்படுகிறீர்கள். ராவணனைப் பூண்டோடழிப்பதும் அன்னையை மீட்பதும் பெரிய காரியமா?" என்றான்.

உடனே ராகவன் அபூர்வத் தன்மையை நினைப்பூட்டும் சொற்களை உபயோகிக்கிறானென்று கண்டு அவனைச் சமாதானஞ் செய்கிறான். "நீ உரைப்பது உண்மை. சோகத்தை விடுகிறேன்" என்று சொல்லி சுக்ரீவன் தன் வாக்கை நிறைவேற்றுவானா வென்று கவலையை வெளியிடுகிறான். சுக்ரீவனைப்பற்றிக் கவலை வேண்டாமென்று உறுதிமொழி கூறுகிறான் இளையவன். மழைகாலம் கடந்திட இருவரும் காத்திருந்தனர்.

---

28. மழைக்கால எண்ணங்கள்.

அயோத்தியை விட்டுவந்து இப்போது பிரஸ்ரவண மலைக்குகையில் வசிக்க வந்த ராம லட்சுமணர்கள் பேசிக்கொண்டிருக்கையில் மழைகாலம் வெகு மும்மரமாக முழங்கிக்கொண்டு மூண்டது. குகையின் வாசலில் வீற்றிருந்த சகோதரர்கள் அந்த ருதுவின் ஆடம்பரமான வருகையையும் உலகை அடிமையாக்கித் தன் முழுச் சக்தியையும் கைக்கொண்டு செங்கோல் செலுத்தும் சிறப்பையும் கவனித்தவண்ணமிருந்தனர்,

ராகவன் தம்பியைப் பார்த்து "லட்சுமணா! பார்த்தாயா எவ்வளவு கம்பீரமாக இந்த வருஷருது உலகத்தைத் தன் வசமாக்கிக் கொள்ளுகிறது! ஒன்றும் லட்சியமில்லை. மனிதனும் அவன் எண்ணங்களும் இதனிடம் என்ன செய்யமுடியும்? மலைகளையொத்த மாபெரும் கருமுகில் ஆகாசத்தில் திரண்டிருப்பதைக் கவனி. இதுவரை கதிரோன் கடலாவியை உறிஞ்சினான். இப்பொழுது அதைச் சுத்தமாக்கி மழையைப் பொழிகிறான். இம்மேகங்கள் படிக்கட்டுகள்போல் வரிசை வரிசையாக அமைந்திருக்கின்றன. புனிதப் புட்பங்கள்கொண்டு இவைகள் வழியே மனிதன் வானேறி வெண்சுடரோனை நேரில் தரிசிக்க அமையப்பெற்றனபோலும்! இடையிடையே மாலைச் செம் பொன் தீட்டிய மேகங்கள் இதுவரை வெப்பத்தில் வாடிய மண்தரை இப்பொழுது குளிர்ந்த சுத்தநீர் உண்டு, பருத்து மிகுதியைப் பெருக்கெடுக்க வைப்பது, சோகத்திலாழ்ந்து பரிதபிக்கும் ஜானகி கண்ணீர் வடிப்பதைக் காட்டுகின்றன. காற்றினால் நாலு திக்குகளிலுமிருந்து கொண்டுவரப்பெற்ற காட்டு மலர்களின் மணம் மழைத் துளிகளை மணங்கமழச்செய்து அவைகளை கையிலேந்தி பருக ஆசையை எழுப்புகின்றது, சத்துரு வொழித்த சுக்ரீவன் அபிஷேகஞ் செய்யப்பட்டதுபோல் இம்மலை நீர்தாரைகளால் நீடித்து நனைக்கப்படுகின்றது.

"மற்ற மலைகளைப் பார், வேத வித்துக்களான அந்தணர்போல் கம்பீர மாகக் காட்சியளிக்கின்றன. காற்றை வரவேற்கும் குகைகள் பிராணயாமஞ் செய்யும் அவர்களின் நாபிகள், மின்னலில் மிளிரும் மழைத்தாரை அவர்களின் பூணூல் உச்சியில் காணும் கருமேகப் பற்றுகள் அப்பூணூலிலிருக்கும் மான்தோல் முடிச்சுகள்! அதோபார். பளிச்சென்று தோன்றி மறையும் மின்னல்கொடி! அரக்கன் மைதிலியை அபகரித்துச் செல்லும்போது அவள் இங்ஙனமே துடிதுடித்தனளோ? மேன்மேலும் மேகங்கள் இருண்டு திரண்டு உலகைக் கவ்விக்கொள்கின்றன, வானில் வெண்மதியும் நட்சத் திரங்களும் மறைந்தன. கோடைப் புழுதி அடங்கித் தரை நனைந்து, காற்று குளிர்ந்து, மழை பொழிந்து, நதி குளங்கள் நிரம்பி எங்கும் வெள்ளம் பெருகும் காட்சி மனத்திற்கு நிம்மதியை அளிக்கிறது. அரசர்கள் இக்காலத்தில் படை எடுக்கமாட்டார்கள். தேசாந்தரம் சென்றவர்கள் வீடு திரும்புவர்; சக்கரவாகங்கள் பேடைகளோடுகூட மானஸஸரஸ் என்ற ரம்மியமான இடத்தில் உல்லாசக் காலங்கழிக்கப் புறப்படுகின்றன. விடாது பெய்யும் மழையால் உளையுண்ட வெளியூர்ப் பாதைகளில் வண்டிகள் இப்பொழுது செல்லமுடியா. மலையருவிகளின் பிரவாகம் ஆச்சா, கதம்பம் முதலிய புஷ்பங்களால் தூவப்பெற்று மலைத்தாதுக்களின் வாசனை யுடன் ஓடிவருகிறது. இப்பிரதேசம் முழுவதும் உதிர்ந்த கனிகளால் தெளிக்கப்படுகிறது. மயில் தோகையை விரித்தாடுகிறது. கொக்குகள் பறந்து இயற்கை வடிவைப் பரப்புகின்றன. கருமேகங்களின் இடையே தோன்றி மறையும் மின்னொளி, தரையிலும் மலையிலும், செடிகொடிகள் மேலும் புல்தரைமேலும் படிந்து விளங்கும் மினிமினிப் பூச்சிகளின் சிற்றொளியை விளக்கிக்காட்டி, குளிரில் பெண்ணால் போர்த்திக்கொள்ளப்படும் வெள்ளரும்பு தீட்டிய போர்வையை நினைப்பூட்டுகிறது. இக்காலத்தில்தான்

ஸ்ரீ மகாவிஷ்ணுவான கேசவன் துயில்கொள்ளுவர் என்று சொல்லப் படுகிறது. நதிகள் கடலடையுங்காலம் இது ; ஒற்றுமை மிளிருங்காலம்; வனக்கொக்குகள் கொக்கரித்து ஆகாசத்தை அடைகின்றன ; காதலி காதலனை அணுகுகிறுள் ; கதம்ப விருட்சங்கள் பூக்களைச் சொரிய அவற்றின்கீழ்த் தங்கும் பசுக்கள் எருதுகளை நெருங்குகின்றன. வளங் கொண்டு புதுவனப்பெய்தும் பூமியெங்கும் பயிர்பச்சைகள் வளமிக காணப் படுகின்றன. வனத்தில் ஆண் யானை தனது பேடையை நாடப்பிளிறுகிறது. வண்டுகள் கதம்ப மலர்களின் மலர்ந்த கொண்டைகளில் தங்கி, மேகத்தின் நீர் வீழ்ச்சியைக் கவனியாது மதுஉண்டவண்ணம் கோத்துக்கொண்டு காண்கின்றன. இடி மின்னல்கொண்ட கருமேகங்களைக் கண்ட வனத்தில் உள்ள யானைகள், சத்துருவான யானைகள் வந்திருப்பதாக எண்ணி போரில் ஆசைவைத்துச் சப்தம் கிளம்பும் வழியே எதிர்நோக்கி நிற்கின்றன. காட்டின் வனப்பு இக்காலத்தில் கண்ணைக் கவருகின்றது.

இதற்குரிய தொனி ஒரு தனி இன்னிசையே, வண்டுகளின் ரீங்காரம் ஏழுதந்தி கொண்ட வீணை. குரங்குகளின் களியாட்டத்தொனி கொன்னக் கோல். மேகங்கள் மோதுதல் மிருதங்கம். இச்சங்கீதம் கேட்டுச் சில விடங்களில் கூவுகின்றன. மற்ற இடங்களில் மரங்களின் உச்சிகளில் அமர்ந்து அவைகள் கேட்டு மெய்மறந்திருக்கின்றன். இத்தொனியை நிரந்தரமாக ஒலிக்கச் செய்து கொண்டிருக்கும் தவளைகளின் எக்களிப்பு ஓயாது தாளந்தட்டுகின்றன. இவ்விருள் சூழும் பருவகாலத்தில், கூடுகளில் பதுங்கும் பறவைகளாலும் மலரும் முல்லையாலும் கதிரவன் பொன் தூவும் வானத்தாலும் அஸ்தமிக்கும் காலமென்று அறிகிறோம்.

எங்கும் ஓய்வு நிலவுங்காலம். சண்டையின்றிச்சேனைகள் ஓய்திருக்கின் றன. அந்தணர் ஸாமகானம் செய்யுங்காலம். பரதன் வெளியில் சஞ்சரிப் பதைவிட்டு ஓரிடத்தில் தங்கி (ஆடிமாதம்) பௌர்ணமீ விரதத்தை தொடங்கியிருப்பான். நான் நாடுதிரும்பும்போது மக்களின் ஆரவாரத்தை யொத்த சரயூ நதியின் பிரவாகம் கொழித்துக் கொப்பளித்துக் குமிழிகளுடன் கரைகளைக் கடந்து இப்போது ஓடிக்கொண்டிருக்கும் சுக்கிரீவன் மனைவியுடன் இன்புறுங்காலம். ஆனால் நானோ மைதிலியை நினைத்து மனமுருகும் காலம். சுக்கிரீவன்துணை புரிந்து, எதிரியிடம் விரைந்து அக்கொடும் பாதகனை ராவணனைக் கொல்ல எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் காலமும் இது தான்" என்றான்.

29. நண்பன் நட்பின் கடமை யுணர்தல்

இப்படி ஓரிரண்டு மாதங்கள் மழைகாலம் கழிந்திருக்கலாம், பின்பு சோனு மாரியாய்க் கொட்டிக்கொண்டிருந்த மழை சற்று ஓய்ந்தது. ஆகாசம் நிர்மலமாகி மேகங்களின்றித் தன்னிலையிலிருக்கவாரம்பித்தது, இடி,

மின்னல், கருமேகம் இவைகள் அடங்கின. வெண்ணிலா ஒளிவீசிப் பிரகாசிக்கத் துவங்கிற்று. பட்சிகள் வெளிவந்து களிப்பில் ஆரவாரமிட்டன. குளிரும் சற்றுத் தணிந்தது.

இக்காலத்தைக் கவனிக்கிறான் அநுமன். எடுத்த கருமத்தை செய்து முடிப்பவரும், கருமங்களின் கருத்துணர்ந்தவரும் அவைகளுக்கேற்ப காலத்தையும் அவைகளின் பலாபலன்களையும் போக்கையும் நிர்ணயிக்கும் முன்னறிவு பெற்றவரும், இதைத்தருமவிரோதமின்றித் தன் நம்பிக்கையுடன் திடமாகவும் சாவதானமாகவும் மற்றவர்க்கு எடுத்துரைப்பவனுமான ஆஞ்சநேயன் சுக்கிரீவனை அணுகினார். மனோரதம் கைகூடப் பெற்றவனாய் ராஜகாரியங்களை அமைச்சர்களிடம் ஒப்படைத்து ராஜ போகங்களில் மெய்மறந்து இன்பத்திலே பரவசமாயிருந்தான் வானர அரசன், அவனைப் பார்த்துப் பணிந்து மாருதி :—

"பிரபுவே! ராஜ்யமடைந்தீர்கள்; புகழ் பெற்றீர்கள்; இன்பத்திலிருக்கின்றீர்கள். எனினும் எஞ்சியிருப்பதொன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரலாமா? அதுதான் பேருதவி புரிந்தவர்களுக்குப் பிரதியுபகாரஞ்செய்தல். அதற்குச் சந்தர்ப்பம் வந்துவிட்டதென்று நினைப்பூட்டுகிறேன். உபகாரஞ்செய்தவர்க்கு நீதிமுறைப்படி கைம்மாறு செய்தலே கீர்த்தி பெருக்கும் முறையாகும். எந்த அரசன் செல்வத்தையும் சேனையையும் சிநேகிதர்களையும் அசட்டை செய்யாது தகுந்தபடி நடந்து கொள்ளுகிறானோ அவனே உண்மை அரசன் ஆவான் என்கிறார்கள். அவனுக்கு ஓராபத்துமே நேரிடாது. தாங்களோ ஒழுக்கமுடையவர்கள், நீதிநெறியில் இருப்பவர்கள் அரசமுறையை நன்குணர்ந்தவர்கள், ஆகையால் ராகவனுக்குக் கொடுத்த பிரதிக்ஞையை நிறைவேற்றிவைக்கவேண்டும். மற்றவைகளை விட, பேருதவி புரிந்தவருக்கும் பிரதியுபகாரஞ் செய்வதே முதற்கடமை யென்று நான் உரைக்கவேண்டுமா? சத்துருவை ஒழிப்பவரே! சூரரே! ஸ்ரீ ரகுநாதனுக்கிந்த வாக்குறுதியை நிறைவேற்றக் காலம் வந்துவிட்டது, சீதாதேவியைத் தேடிக் கண்டு பிடிக்க உடனே உத்திரவிடுங்கள். அரசே! ஸ்ரீ ராகவனின் மேன்மையைப்பாருங்கள். எதைஎந்தகாலத்தில் எப்படிச் செய்யவேண்டுமென்பதை நன்குணர்ந்தவர் நீர், இதில் ஆக்கமும் ஆற்றலுங்கொண்டவர் செயலாற்றக்காலம் வந்துவிட்டதென்று அறிந்தும், உங்களுக்கு அப்பிரியம் செய்ய மனமில்லாது, காலம் வந்துவிட்டதென்று உங்களுக்கு அறிவிக்காது நீங்கள் சரிவரச் செய்து முடிப்பீர்கள் என்று நம்பி அவர் இதுவரை பேசாதிருக்கிறார். ஐயனே! ஸ்ரீ ராமனைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்லவும் வேண்டுமா? திகழும் இந்த ராஜ்யாலங்காரத்திற்கு அவரே சிற்பியாவர். உண்மையான உயிர் நண்பர்; அளவிடற்கரிய மேன்மை படைத்தவர் தனிப்பெரும் அருங் குணங்களுக்கழகூட்டுபவர்; இணையற்ற பராக்கிரமசாலி; வானர அரசே! இப்பொழுது வானரோத்தமர்களுக்கு ஆக்ஞாபிக்கவேண்டும், ஆர்வமுடையவருமான ஆண்மைகொண்டவருமான நீங்கள் காலதாமதமின்றிச் சீதா பிராட்டியைத் தேடிப்பிடிக்க உத்திரவிடுங்கள். அவர் மனநிலை எவ்விதமிருக்கையில், எவ்விதமாக உங்களுக்கு

அவர் உதவி புரிந்தார் என்று சிந்தனை செய்வீர்களாக. எவ்வித எதிரிகளையும் அலட்சியமாகத்தான் ஒருவரே ஒழிக்கவல்ல வன்மையுடையவர் அவர். எனினும் உங்களுடைய உதவியை நாடி உங்கள் பெருமையைப் பிரகாசிக்கவைக்கும் பேரன்புப் பிரபு! தன் ஒப்புயர்வற்ற மேன்மையை உள்ளடக்கி உங்கள் உதவியால் மனோரதத்தையடையக் காத்துநிற்கும் எளிமைக் களஞ்சியம். இத்தகைய எளியோன் தன் உயிரையே உறிஞ்சும் சோகத்தை யடக்கி உங்கள் தயவிற்குக் காத்திருக்கிறார். காலம் கடந்தும் தன் உத்தம மானிட லட்சணத்தால் அதை நினைப்பூட்டாதிருக்கிறார். அவர் மனநிலையை அறிய வேண்டி தாழ்வுடன் கேட்டுக்கொள்கிறேன். அவ்வுத்தமரோ ஜானகியை யிழந்த சோகத்தாலும், உதவிபுரியுங் காலம் கடந்துவிட்டதாலும் உணர்ச்சி மேலிட்டு உயிரையும்விட இசைந்திருப்பரேயன்றி, உங்களை இப்பொழுது உங்கள் சுகங்களில் அவர் நினைப்பூட்ட இசையார். அத்தகைய புருஷச்ரேஷ்டரைப்பற்றியும் அவர் மனத்துயரத்தைப்பற்றியும், எல்லோர்க்கும் சுடர்விட்டு வழிகாட்டும் அவர் பொறுமையையும் நீங்கள் உடனே கவனத்தில் வைக்கவேண்டுமென்பது எனது விண்ணப்பம்'' என்று பணிந்தார்.

சுக்ரீவனும் உடனே வாரிச்சுருட்டி எழுந்து, தன்னுணர்வடைந்து, நாலா பக்கங்களிலிருந்தும் எல்லா வானரப் படைகளையும் திரட்டிவரும் பொறுப்பை அநுமனிடமும் அங்கதனிடமும் ஒப்படைத்தான். பதினைந்து நாட்களுள் வரத் தவறினவர்களுக்கு மரண தண்டனை என்றும் கடுமையாய் விதித்தான்.

30. இயற்கையின் கருத்துரைத்தல்.

பிரஸ்ரவண மலையின் குகையில் காத்திருந்த ராமலட்சுமணர்கள் பருவ கால மழை அடங்கிவிட்டதையும் கண்டு, தம் சாதனையை இயற்றக் காலம் இதுவேயென்றுணர்ந்து ஒருநாள் வெளிவந்தனர். உதிர்ந்த காய்கனிகளைப் பொறுக்கி யெடுத்துவரத் தம்பி காட்டினுள் புகுந்தான். ராகவன் அக் குகையின் வாயிலில் ஒரு பாறையின்மேல் அமர்ந்து இயற்கைத் தோற்றத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

ஆகாயம் நிர்மலமாய் யிருந்தது. சந்திர மண்டலம் பரிசுத்தமாயும் பரந்தும் தோன்றிற்று. இயற்கை, புது உடையணிந்து சோபித்துக் கவர்ச்சி யளித்தது. இதைக் கண்டுகளிக்க ஜானகியில்லையே யென்று அவன் மனம் ஏங்கித் தவித்தது. சாரசப் பட்சிகள் களியாட்டஞ்செய்து கூவின. 'இதை அவளல்லவோ கண்டுகளிக்க வேண்டும்? அவள் எங்குற்றனளோ? இப்போது எப்படிக் காலங்கழிக்கின்றனளோ? நாயகனின்றி நொந்து போவாளே! இரவில் நிலவில் ஹம்ஸபட்சிகளின் குரலைக்கேட்ட வண்ணம்

துயிலுற்று, சாரசப் பறவைகளின் தொனியைக் கேட்டு துயிலெழுவளே! சர்வாங்க சுந்தரி இப்போது சக்ரவாகங்களின் இன்னிசையைக் கேட்பளோ? வினையைத் தீர்க்கும் விசாலாக்ஷி தாமரையைக்கண்டு முகம் மலர்வளோ? குளங்களிலும், நதிகளிலும் வனங்களிலும் சோலைகளிலும் அவள் மயங்கி களிப்பின்னிசையின்றியும் தனியே திரிந்துவருவது துக்கத்திலும் துக்கமே தருகின்றதே! சரத்காலத்துக்குகந்த வாழ்க்கை அநுபோகமின்றி துவண்டு போகாதிருக்க வேண்டுமே அவள் மனமும் உடலும்! மனைவியைப் பறிகொடுத்துப் பார்த்து நிற்பதா? என்று ராகவன் மனம் கதறிப் பதறிற்று; கண்ணில் சோகவாரிதி.

அச்சமயத்தில் திரும்பிவந்த ராமானுஜன் அண்ணலைக் கண்டு திடுக்கிட்டான். பொறுத்தற்கரிய மனக்கவலை பொங்கிப் பொரும, மனம் விண்டு, உருக்குன்றி, களைமாறிக் கண்ணீர் பெருகும் அண்ணல் தனியே உட்கார்ந்து சோகத்திற்காட்பட்டு விட்டதைக் கவனித்து உள்ளங் கலங்கினன். என்ன இது? இவரா இப்படித் துயரத்தில் மயங்குவது? கையில் கொணர்ந்ததைக் கீழெறிந்துவிட்டு இளையவன் தமையனிடம் தாவிப் பாய்ந்து பணிவுடன் சொல்கிறான்:—ஆர்ய! அன்னை ஜானகியின் பிரிவிற்காட்படுவதா? ஆத்ம பலம்கொண்ட தங்களைப்போன்றவர்க்கு இது அழகாமோ? ஆவேசங் கொண்டெழும் இச்சோகம் ஆண்மையை அழித்து விடுமென்றறியாதவரா தாங்கள்? சிந்தனையை சிதைத்து மன நிம்மதியைக் குலைத்து திட முயற்சியை முறித்து இச்சோகத்தின் சக்தி சொல்லாமல் கொல்லுமென்பது சர்வஜன அநுபவ உண்மையன்றோ? சுவாமி! இத்தகைய சோகத்தால் நமக்கு ஆவதென்ன? மனந்தளர்ந்து! ஆணவமடங்கி, ஞானங்குன்றி, பரிதவித்துத் தவிக்கும் தீனனின் தோல்வி எண்ணங்களால் ஆவதென்ன? எதிலும் சலியா ஆண்மை கொண்டவரே, மேலே செய்யவிருக்கும் கடும் முயற்சியையும், மனோ திடத்தையும் சஞ்சலமற்ற தன்னிலையையும் தற்காலக் காரியத்தின் அவசியத்தையும் நண்பர்களின் துணையை உங்கள் இயக்கத்தில் பயன்படுத்தலையும், விரைவில் நமது லட்சியம் கைகூடும் வழியையும் மறந்துவிட ஏன் உங்கள் மனத்திற்கு அனுமதி யளித்தீர்கள்? மனுவம்சத்தின் விளக்கே! வீரர்களின் உத்தமரே! தேவரீரை நாதனையடைந்த மிதிலைச் செல்வி மற்றொருவனானும் மனதாலும்கூட அணுக முடியாதவளென்று நினைப்பூட்டவும் வேண்டுமா? சுடர்விட்டெரியும் செந்தணலிடம் கைநீட்டுபவன் சாம்பலாவனே!" என்று தேற்றினன்.

தம்பியின் உத்தமமான தேறுதலாகிய தீரமொழிகளைக் கேட்டான் கோசலேந்திரன். ஆம். திடநெஞ்சன் துயரத்திற்காளாயினன். அந்நிலையிலிருந்த தன்னைத் தன்நிலையடைய மொழிந்த வீரச்சொற்கள் இதையென்றும் உணர்ந்தான். "அப்பனே! ஆம்! நீ சொல்வது முற்றிலும் சரியே. ஒரு காரியமானது கலவரமின்றிக் கவனிக்கத் தக்கது. அதை விடாமுயற்சியுடன் செய்துமுடிக்கவேண்டியதே. எடுத்த கருமத்தை முடித்துவைப்பதே மனிதனுக்குச் சிறப்பு. நம் இயக்கத்தில் முனைவோம். அதன் பலாபலனைப் பற்றி யோசனை வேண்டாம். இனி நாம் மேற்கொண்டு நடக்கவேண்டியதை கவனிப்போம்.

இந்திரன் முதலான தேவதைகள் உலகில் மழையைப் பொழிந்து நீர்வளம் பெருக்கிப் பயிர்செழிக்க உதவித் தங்கள் தொழில்களை முடித்துவிட்டார்கள். மேகங்கள், தங்கள் நீரைச் சொரிந்துவிட்டுக் கடமை முடித்தவைகளாக வெண்ணொளிகொண்டு வானில் தங்கி ஓய்வுகொண்டன. இயற்கைத் தன் கடமையைச் செய்துவிட்டது. உலகம் தருமத்தில் இயங்கித் திளைக்கிறது என்று காட்டுகிறது. மனிதன் தன் கடமையைச் செய்ய வற்புறுத்துங் காலம் இது. மனத்தில் குதூகலத்தை எழுப்பி எங்கும் உற்சாகம் பரவும் காலமிது. தாமரை ஓடைகள் செடிகள் கொடிகள் முதலியன புதிய சோபை பெற்று விளங்குகின்றன. விருட்சங்களிலிருந்து புதுமலர் மணம் கமழ்கிறது. வண்டுகளின் ரீங்காரமும் திரும்பிவந்த ஹம்சங்களின் தொனியும் ஒலிக்க இதுவரை கூவிக் குலவிக் கொம்மாளித்த குயிலும் மயிலும் இளைப்பாற திக்குகளெல்லாம் இருள்நீங்க, யானைக்கூட்டங்கள் கம்பீரமாகக் கானகத்தில் திரிய, சூரியன் பிரகாசமாக ஒளிவீசுகிறான். மன்னர்கள் போருக்கெழுங் காலம். செம்பொன் கலந்த சந்தியாகாலம். உதயசந்திரனின் கிரணங்களின் ஸ்பரிசத்தின் களிப்பில் மெய்மறந்து மறைகின்றது. அதைத் தேடி உடனே எழுகின்ற ஜ்வலிக்கும் நட்சத்திர மண்டலத்தின் வனப்பு. இக்காலத்தில் சுக்கிரீவன் முயற்சி துவங்கவேண்டும். ஏன் காலதாமதம்?

லட்சுமணா! சீதையை விட்டுச் சோகத்தில் ஆழ்கிக் கிடந்த எனக்கு இந்த மழைகால மாதங்கள் நூறுவருஷங்களாக நீடித்து என்னை விரட்டின. இந்நிலையிலிருக்கும் என்னை ஏன் இன்றும் சுக்கிரீவன் கவனியாதிருக்கிறான்? செய்நன்றிமறந்து வாளா விருக்கின்றனா? கொடுத்த வாக்கை ஏன் இன்னும் நிறைவேற்றாதிருக்கிறான்? நீ அவனிடம் சென்று விசாரித்துவா? அவன் மெய் மறந்திருந்தால், வாலி எவ்வழி எய்தினனோ அவ்வழி இவனுக்கும் இன்னும் திறந்திருக்கிறதென்று எச்சரித்துவிட்டுவா" வாலி தன் குற்றத்திற்காக தான் ஒருவனே மாண்டான். செய்நன்றி மறந்தவன் தன் இனத்தோடு அழிந்துபோவான் என்று நினைப்பூட்டு" என்று சினங்கொண்டு பேசினான். லட்சுமணன் ராகவன் மனநிலையை யுணர்ந்து சுக்ரீவன்பால் கடுஞ்சினங்கொண்டான். அண்ணனுக்கு அபராதஞ் செய்தவன் அயோக்கியன் என்ற கோபத்தில் கையில் வில்லேந்தி அரண்மனையடைய ஆயத்தமானான்.

31. நட்பும் சீற்றமும்

இளையவனின் மனவோட்டத்தைக் கவனிக்கிறான் தமையன். ராகவன் கோபமாகவே விருக்கிறான் என்று உணர்ந்த லட்சுமணன், "அண்ணா! வானரன் நல்லோர் முறையில் நடந்துகொள்வானோ? விளைவுகளின் காரணங்களையும் கடமைகளையும் குரங்குகள் உணர்வது அசாத்தியம். சுக்ரீவனது புத்தி தடுமாறியிருக்கிறது. அநேககாலம் நிலையாய் அரசு புரிய மாட்டான். வீரனே! இனியும் இந்தக் கிஷ்கிந்தையரசை அவனிடத்தில்

விட்டுவைப்பது தகுதியன்று. அல்பமான விஷய சுகங்களில் அவன் காலங்கழிக்கிறான். தான் கொடுத்தவாக்கை நிறைவேற்றாதிருக்கிறான். வாலி சென்ற வழியில் இவனும் செல்லவேண்டியதுதான். எனக்கு அனுமதி அளியுங்கள். என் கோபத்தை அடக்க முடியாமலிருக்கிறேன். இவனை வாலியிடம் அனுப்புகிறேன். அங்கதன், மற்ற வானரர்களோடு மைதிலியைத் தேடட்டும்." என்று வீராவேசம் பொங்கும்படி உரைத்தான்.

கோபமும் ஆற்றலும் ஒன்றாய்க் கலக்கும் சுபாவமுள்ள லட்சுமணனின் மன நிலையையுணர்ந்த ஜானகிகாந்தன் அவனது விபரீத எண்ணங்களை உடனேதடுத்து கருணையூட்டும், நல்லொழுக்கம் எழும் நேர்முறையை உபதேசிக்க ஆரம்பித்தான். "அப்பனே! நீ யாரென்று உணர்ந்தாயா? உன்னைப்போன்ற எவனும் இக்கடுங்கோபங்கொண்டு கொடிய தீங்கு இழைக்கும் பாவத்தை நினைக்கவும் முடியாதே! பெருந்தன்மை கொண்டவன் ஆர்யன் எனப்படுபவன். அவனிடம் எந்தத் தீய யோசனையும் எழாது. தீமை ஒழிப்பவனே உண்மை வீரன். அவனே புருஷோத்தமன். லட்சுமணா! சாது அணியில் முதல்வன் நீ. உன்னால் இத்தகைய கோபங் கொள்ளத்தக்கதன்று. சுக்ரீவனுக்கும் எனக்கும் ஏற்பட்ட நட்பையும் உறவையும் பெருமைப் படுத்து. ஆம். அவன தன் வாக்கு நிறைவேற்றும் காலம் முன்பே வந்து விட்டது. எனினும் அவன் மனத்தைப் புண்படுத்தாது சாந்தமான முறையில் சாவதானமாக அவனுடன் பேசுவது உன்பொறுப்பாகும். கவனமாயும் கண்யமாயும் நடந்துகொள்வாய் என்பது என் திடமான நம்பிக்கை' என்றான்.

ராகவனின் மதியுரையைக் கவனித்த லட்சுமணன் உடனே சாந்த மாயினான்.' ஆம், சரியான சமயத்திற்கேற்ற மெய்யுரை; மனித சுபாவத்தை மேம்படுத்தும் உயர் மதியுரை. தரும நெறியில் நின்று செயலாற்றும் விரிவுரை. இதைக் கவனியாதுபோனால் மனிதத் தன்மையே இழிவுறும்' என்று உணர்ந்து, தகுந்த சமயத்தில் வாழ்க்கையை உயர்த்த உதவியாய் இருக்கும் தமையனின் புத்தி லாகவத்தை மனத்தில் மெச்சிப் பணிந்தான். 'இத்தகைய கலைஞனை அசட்டை செய்யத் துணிந்தானே சுக்ரீவன்' என்று எண்ணவே திரும்பவும் கோபம் மேலிடுகிறது. வில்லை உறுதியாய்ப் பற்றிக் கிஷ்கிந்தை நகர் நோக்கி வெளிவந்தான். அதிவிரைவில் துடித்து நடந்தான்.

துரிதமாய் நடந்து செல்லும் லட்சுமணனின் ஆவேசம் பொங்கி எழுகிறது. காரியத்தை முடிக்கும் ஆர்வத்தால், வழியில் நின்ற மரங்களை உதறித் தள்ளுகிறான். எதிரிலிருந்த கற்பாறைகளை சிதறி எறிகிறான். காலில் அகப்பட்டவைகளை அப்படியே நசுக்குகிறான். கோபக் கனல்கொண்டு காற்றாய்ப் பரக்கிறான். கோட்டை வாயில்முன் கடுகவந்து நின்றான்.

வாயில் காப்போர்களான ஆயிரம் வானரர்களும் சேனையாட்களும் சினமே உருவெடுத்து வந்த லட்சுமணனைக் கண்டு தற்காப்பு எண்ணத்தில் உடனே மரங்களையும் பாறைகளையும் எடுத்துக்கொண்டனர். இதைக் கண்ணுற்றான் கடுங் கோபத்திலிருந்த காகுத்தன். அப்படியே திடமாய்

நின்றான். கோபம் காட்டுத்தீபோல் கொந்தளிக்கக் கண்களில் தீப்பொறி கண்டனர் வானரர்கள். உடனே, யமனைக் கண்டதுபோல் அலறிப்புடைத்து வானரர் அனைவரும் அப்படியே தாவிக் குதித்து ஓடி மறைந்தனர். பதறித் துடித்து சுக்ரீவனிடம், காலனைப்போல் கதறவடிக்கும் லட்சுமணனின் வரவையும் ஆபத்தை விளக்கும் அவனது தோற்றத்தையும் விவரித்து அலறினர்.

அச்சமயம் சுக்ரீவன் மது மயக்கத்தில் மதி கலங்கி மயங்கியிருந்ததைக் கண்டு, வானர அமைச்சர்கள் ஓடிவந்தவர்களுக்கு என்ன நேருமோ வென்றெண்ணி அவர்களை எங்காவது ஓடி மறைந்துகொள்ளும்படி உத்தர விட்டு, அங்கதனை முற்கொண்டு சைனியங்களை அங்கங்கே பாதுகாப்புக்கு அமைத்தனர். நொடிப்பொழுதில் அப்பிரதேசம் முழுவதும் வானர சேனை போர் மூண்டால் தற்காப்புக்கு அணிவகுத்திருப்பதைக் கவனித்தான் லட்சுமணன். அவன் கோபாவேசம் இன்னும் பதின்மடங்கு பெருகிற்று. கூறிய வாளிகளாகிய துடிக்கும் நாக்குகளுடையதும், கைப்பிடித்த வில்லே படமாகவும் சுய வீரியத்தை விஷமாகக் கொண்டதுமான ஐந்துதலை சர்ப்பம் சீறுவதுபோல் காட்சியளித்தான் ரகுவீரன். பிரளயாக்கினியைப்போல் ஜொலிக்கும் சர்ப்பராஜனின் சீற்றத்தில் கடுகடுக்கும் லட்சுமணனைக் கண்ட அங்கதன் உள்ளம் நடுங்கி மெள்ளமெள்ளப் பயபக்தியுடன் லட்சுமணனை அணுகினான்.

நடுங்கின அங்கதனைப் பார்த்த லட்சுமணன் அபயமளிக்கும் மொழியில் "குழந்தாய்!" என்று அன்புடன் அழைத்தான். "அப்பா! சுக்ரீவனிடம் போய்ச்சொல். ராமனுடைய தம்பியும், சத்துருக்களை ஒழிப்பவரான ராகவனுடைய வருத்தத்தின் சீரிய நிலையை உன்னிடம் சொல்ல வந்தவனுமான லட்சுமணன் வாயிலில் காத்து நிற்கின்றான், என்று அவனிடம் தெரிவித்துவா. அவன் கொடுத்த வாக்கு உண்மைதான் என்றால் அதன்படி நடக்கட்டும் என்றும் அறிவிப்பாயாக" என்றான்.

உடனே சுக்ரீவனிடம் அங்கதன் விரைந்தோடினான். அவனை அணுகி "லட்சுமணன் இப்பொழுது இங்கு வந்திருக்கிறார்" என்று நா தழதழக்கச் சொல்லி அவனைப் பணிந்து தாயையும், சிற்றன்னையான ருமையையும் அடிபணிந்தான். சுக்ரீவனுக்கோ இன்னும் கலக்கம் தெளிய வில்லை. இதற்குள் லட்சுமணனது கோபத்தைக் கண்டு பயந்தோடின வானரர்கள் ஆபத்து வந்தணுகியதென்று திகிலடைந்து பெருங் கூச்ச லிட்டார்கள். கிஷ்கிந்தையே நடுக்கம் கொண்டது. இப்பேரிரைச்சல் சுக்ரீவனை எழுப்பியது. "என்ன இது?" என்று வினவுவதுபோல் சிவந்த கண்களை மலர மலர, விழிக்க, அந்தப்புரம் நுழைந்துவர அனுமதிபெற்ற வர்களும் பிலக்ஷன், பிரபாஸன் எனப்படுபவர்களும், நெறி தருமம், அர்த்தம் என்பவற்றை நன்குணர்ந்தவர்களும் அரசனின் நலனை நாடுபவர்களுமான அவனது இரு அமைச்சர்களும் சுக்ரீவனுக்கு நன்கு விளங்கத்தக்க வார்த்தை களால் லட்சுமணன் வரவைத் தெரிவித்து அவன் நிலையையும் உணர்த்தி னார்கள். அரசன் மயக்கம் தெளிந்தானென்று கண்டு வினதன், ஸுஷேணன்,

நீலன், நளன், அநுமன் முதலிய மற்ற மந்திரிகளும் அரசனிடம் வந்து சேர்ந்தார்கள். மரியாதையுடன் நெருக்கடியை மெள்ளமெள்ள தங்களுக்குள் ஆலோசனைசெய்வதுபோல் அரசன் நிலையை அறியுமாறுபேசிக்கொண்டனர்.

அப்பொழுது அநுமன் சுக்கிரீவனை நோக்கி, "சுவாமி! உங்களுக்குத் தெரியாததா? ராமலட்சுமணர் இருவரும் ஸத்திய ஸந்தர்கள்; மகா புண்ணியமூர்த்திகள்; உமது நட்புக்கொண்டவர்கள்; ராஜ்யத்திற்குரிய வர்கள்; நமக்கு ராஜ்யத்தையளித்தவர்கள்; அவர்களுள் எவரொருவரைக் கண்டு நம் வானரர்கள் அஞ்சியோடி ஓலமிடுகின்றனரோ, அந்த லட்சுமணர் நமது வாயிலில் வில்லும் கையுமாய் நின்று கோபஸ்வரூபமாய்க் காட்சி யளிக்கிறார். தமையனின் ஆக்கினைகொண்டு வந்திருக்கிறார். சுவாமி! தேவரீர் இப்போதே அவரிடம் புதல்வன் அங்கதனுடனும் பந்துக்களுடனும் எங்களுடனும் விரைந்து சென்று அடி பணியுங்கள். அவர் சினத்தைத் தணிப்பதே நமது முதற் கடமையாகும். அரசே! தருமாத்மாவான ஸ்ரீ ராமர் எதை உத்தரவிட்டாரோ அதை உடனடியாகக் கண்ணும் கருத்து மாய்ச் செய்து முடிப்பீர்களாக. உங்களுடைய உறுதிமொழியில் நிலைநின்று சத்தியங்காத்தவராக ஆவீர்களென்று பிரார்த்திக்கிறோம்" என்றுரைத்தார்.

---

32. அநுமனின் ஆய்வுரை

அநுமன் சொல்லிக்கொண்டே போகும்போது வானரர்கள் சப்தமிடுவதைக் கேட்ட சுக்கிரீவன் தன்னறிவு அடைந்து லட்சுமணன் கோப வடிவமாகக் கோட்டைவாயிலிருக்கிறானென்று உணர்ந்து உள்ளங்கலங்கி கவலையுடன் எழுந்து நின்றான். தன்னுடனிருக்கும் அமைச்சர்களையும் மற்றவரையும் நோக்கி, "உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள். ராமலட்சுமணர்களுக்குக் கோபம் ஏற்படும்படியான தவறு ஒன்றும் நான் செய்யவில்லையே! என்மேல் ஏன் கோபம் அவர்களுக்கு? யாராவது இந்த லட்சுமணரிடம் என்னைப்பற்றி குற்றங்குறைகள் சொல்லியிருக்கிறார்களா? அவர் ஏன் என்மீது சிற்றங் கொண்டிருக்கிறார், என்று நீங்கள் அறிய வேண்டியது அவசியம். அவர்கள் என் ஆப்த நண்பர்கள். ஆகையால் அவர்களிடம் எனக்குப் பயமொன்றுமில்லை. எனினும் என்னிடம் கோபங் கொண்டிருப்பது கவலைக்கிடமாகிறது. நட்பு பிளவுபடாமலும், அது மேன்மேலும் விருத்திபெறவும், அதைப் பாதுகாப்பதும் வெகு அவசியம். ஆகையால்தான் இக்கோபத்தைக் கண்டு கவலையடைகிறேன். மகாத்மா ராகவர் எனக்குப் பேருதவி செய்திருக்கிறார். அதற்குத்தகுந்த கைம்மாறு என்னால் என்ன செய்யமுடியும்? எனினும் அந்நட்பைக் கௌரவித்து நான் பாதுகாக்க வேண்டும்; நட்பில் குற்றங்கண்டால், அந்நட்பு குலைந்துபோம். இக்கடுங்கோபத்தின் காரணத்தை அறியாது மிகவும்

கவலைகொள்கிறேன். அவர்களிடம் கடுஞ்சொற்கள் சொல்லவில்லை. தவருகவும் நடந்திலேன். பின் ஏன் இக்கோபம்''?

அமைச்சர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றனர். அப்பொழுது அநுமன் பணிந்து அஞ்சலிசெய்து பேசவாரம்பித்தார். "அரசே! தவறு நடந்திருக்கிறது. அதன் காரணமே அவர்கள் சினம். செவிசாய்த்தருளுங்கள். உங்களுக்குப் பேருதவிசெய்த மகாத்மாவை தாங்கள் மறந்துவிட இல்லையென்பது உண்மையே. உங்கள் நட்பைப் பெருமைப்படுத்தவும் உங்கள் நலனுக்காகவும், இந்திரனையு மிக்க பராக்கிரமம் படைத்த காகுத்தர் வாலியை மாய்த்து உங்கள் உள்ளத்து திகிலையும் ஒழித்தார். அந்நட்பை நீங்கள் பெருமைபடுத்தவேண்டும். இது சம்பந்தமாகத்தான் இப்பொழுது ஸ்ரீ ராமர் தம்பியை அனுப்பியிருக்கிருர். நட்பில் எழுந்த கோபமேதவிர பகைமையில் எழுந்ததல்ல. ஐயனே! காலமறிந்தவர்கள் தாங்கள். எனினும் இக்காலத்தைக் கவனத்தில் வைக்க வில்லையென்று அஞ்சுகிறேன். வருஷகாலஞ் சென்று சரத்காலம் வந்து விட்டது. நிர்மலமானவானம். நட்சந்திரங்களின் ஒளி; நதிகளின் களங்க மற்றதும் பிரவாகமற்றதுமான சுயநிலை முன்பே வந்து விட்டது. இக்காலம் மன்னர்கள் போர் துவங்கும் காலம். அதுவே எல்லாமுயற்சிக்கும் காலமல்லவா? நம் முயற்சி, ராமன் விஷயத்தில் வாக்குத்தத்தஞ் செய்த முயற்சி தீவிரமாய் எடுக்கப்படவில்லை. மழைக்காலமயக்கம் இன்றும் உங்களைப்பற்றி யிருக்கின்றது. ஆகையால் நம் கடமையில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இதுதான் காரணம் லட்சுமணன் வருகைக்கு. சுவாமி! தாங்கள் பொறுமையுடன் சிந்திக்கவேண்டுகிறேன். ஸ்ரீ ராமபிரான் மனைவியை இழந்து தனியே நொந்து தவிக்கிருர். அவர் மனநிலை எங்ஙன மிருக்குமென்று, மனைவியைத் திரும்பியடைந்து சுகித்திருக்கும் தங்களுக்குத் தெரியாதா? வருஷருது செல்லும்வரை ஒன்றும் பேசாது தவித்துக் காத்திருந்தார். இப்போது சரத்காலம் வந்தும் நாம் முயற்சி யெடுக்கவில்லை என்று தோன்றி அவர் இளையவரை நம்மிடம் அனுப்பி யுள்ளார். இவர் சீற்றத்தையும் மனத்தாங்கலையும் தாங்கள் மனத்திற் கொள்ளவேண்டாம். லட்சுமணரைப்பணிந்து அஞ்சலி செய்தவண்ணம் பிழை பொருத்தருள அவரை வேண்டுவதைத்தவிர இச்சமயத்தில் வேறு செய்யத்தக்கது ஒன்றுமில்லை யென்பது எனது யோசனை மன்னனே! உங்கள் நலனையே முதலிலும் முற்றிலுமாகக்கொண்டு சிறந்த யோசனையைத் தெரிவிப்பது என் கடமை யென்பதையும் கொண்டு இதைத் தங்களுக்குத் தெரிவிக்கலானேன். ஸ்ரீ ரகுநாதர் சினமடையாதபடி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர் சினங்கொண்டு வில்வளைத்தால் இவ்வுலகிலும், எவ்வுலகிலும் அவருக்கு எதிர் நிற்பவர் எவருமிலர் என்பது உங்களுக்குத் தெரியாததா? அவர் உங்களுக்குப் பரம மித்திரர் அவர் சினமாறுமாறு, அவரை அடிபணிந்து பணிவுடன் பிரார்த்திக்க வேண்டும். வானர மன்ன! தேவரீர் புதல்வன், அங்கதனேடும், பந்து மித்திரர்களோடும் லட்சுமணரை முடிதாழ்த்திப் பணிந்து உங்கள் பிரதிக்ஞையை நிறைவேற்ற இப்போதே ஆயத்தமாக விருப்பதாகவும்உடனே

தெரிவித்து அவர் உத்தரவிற்கு நாம் காத்து நிற்கவேண்டும். செய்ந்நன்றி மறவாதவர், சுக்கிரீவமகாராஜா என்ற பெருமையை நிலை நிறுத்துங்கள். அவர்களுடைய சக்திப் பிரபாவத்தையும் அவர்கள் வன்மையையும் நினைந்து அவர்களுடைய உண்மை நட்பில் ஈடுபட்டால் மேன்மேலும் எல்லையற்ற நன்மை விளையு மென்பது உங்கள் அறிவிற்கும் மனத்திற்கும் முன்பே புலனாகியிருக்கும். ஆகையால், நம்முடைய நாதனான ஸ்ரீ ராம பத்திரனிடம் விரைந்து சென்று அடிபணிய அவர் தம்பியானலட்சுமணரை இப்போதே பணிந்து பிழைபொறுத்தலை வேண்டுவதைவிட நமக்கு வேறு வழியில்லை, என்பது உங்களுக்கு நன்கு தெரியும்'' என்றான்.

33. லட்சுமண சாந்தி

அநுமனது அறிவுரையை அமைதியுடன் கேட்ட சுக்கிரீவன் அதை அப்படியே அங்கீகரித்தான். உடனே அரசனின் ஆக்கினைபெற்று ஆட்கள் விரைந்தோடினர். லட்சுமணனை அடிபணிந்து அவரை உள்ளே வருமாறு பரிந்தழைத்தனர்.

அழைப்பிற்கிசைந்து உள்ளே நுழைந்த லட்சுமணனைக் கண்டதும் பேருடலுற்றவர்களும், மகா பலசாலிகளுமான வாயில்காப்போர்களும், சேனைத்தலைவர்களும் தலைகுனிந்து அஞ்சலிசெய்து மரியாதையுடன் நின்றனர். ராஜவீதி மிக்க அழகுற்றதாய் காட்சி அளித்தது. திவ்விய மானதும், இரத்தினமிழைக்கப் பெற்றதும், பூஞ்சொரியும் பூங்காவனங் களும், விலையுயர்ந்த பொருள்கள் நிறைந்த உயர்த்த மாளிகைகளும், நானாவிதமாய் சித்தரித்த பல கடைகளும், விருப்புறும் பழங்கள் குலுங்கும் மரங்களும், தேவகந்தர்வர்கள் சந்ததிகளும், நினைத்த ரூபமெடுக்க வல்லவர் களும் கண்ணைக்கவரும் ஆடை ஆபரணங்கள் பூண்டு களிப்புற்ற பார்வை யுடன் நின்று வரவேற்பவர்களும், சந்தனம், அகில், தாமரை, மைரேயம் முதலிய மலர்களின் மதுவின் வாசனை கமழும் இயற்கையுடனும் அந்த ராஜ வீதி சிறப்புற்று விளங்கிற்று. உறுதியாய்க் கட்டப்பட்டவைகளும் வெண் மேகங்கள் போல் பிரகாசிக்கின்றவைகளும் திவ்விய புஷ்பங்களாலும் திரவியங்களாலும், கன்னிகைகளாலும் நிறைந்த அழகிய மாளிகைகள், அங்கதன், மைந்தன், துவிதன், கவயன், கஜன், கவாக்ஷன், சரபன், வித்யுன்மாலி, நளன், குமுதன், ஸுஷேணன், தாரன், ஜாம்பாவான் ததிவக்த்ரன், நீலன், சுபாடலன், சுநேத்திரன் என்ற பிரமுகர்களுடையது என்று அவை காட்டி விளங்கின. கடைசியில் இவைகளுக்கெல்லாம் சிகரமாய் விளங்கிற்று வெள்ளிமலையை யொத்த, பொன்தோரணங்கள் தொங்கும் சுக்கிரீவனுடைய அரண்மனை. அதனைக் கண்டு கம்பீரமாக அந்த அழகு படுத்திக்கொண்டு உள்ளே புகுந்தான் லட்சுமணன்.

ஏழுகட்டுகளைத் தாண்டி, பொன் வெள்ளிக் கட்டில்களாலும் விலையுயர்ந்த விரிப்புகளோடுகூடிய சிறந்த ஆசனங்களாலும் அழகுற்று விளங்கும் அந்தப்புறத்தைக் கண்டான். அங்கு இன்னிசைக் கீதங்கள் முழங்கின. அநேக சிறந்த அழகுடைய மாதர்கள் ஆடிப் பாடினர். அநேகர் பழங்களையும் புஷ்பங்களையும் எடுத்துவருவதையும் பணிவிடைப் பெண்கள் சிங்காரித்துக் களிப்புற்றுக் கவலையின்றி காத்து நிற்பதையும் கண்டு சற்று சங்கோஜ மடைந்தவனாகித் தயங்கவே, ஆபரண ஒலிகள் அருகே ஒலித்தன. கருமத்தில் கண்ணானவன் கருவிழிகளைக் கண்டு, குயிலின் இன்னிசை கேட்டு இன்பங்கொண்டிருப்பனோ? உடனே 'டங்' என்று நாணோசை எழுப்பி அரண்மனை இனிய தொனிகளை எல்லாம் விழுங்கவைத்தான் அந்த சுத்த வீரன்.

அவ்வளவுதான்! பேரிடிபோல் கர்ஜித்த அந்நாணோசை சுக்ரீவனை உள்ளம் நடுங்கவைத்தது. சரேலென்று ஆசனத்தை விட்டெழுந்து அஞ்சி ஒடுங்கினான். குழம்பிய மனத்துடன் தாரையை அணுகி "சுந்தரி! இளகிய மனமுடைய லட்சுமணன் இப்பொழுது இங்குச் சீற்றங்கொண்டு வந்திருக்கிறார். என்ன கோபமென்று அறியேன். அவர் காரணமின்றிக் கோபமுறார். ஆகையால் நுண்ணறிவுள்ள நீயே அவரிடம் நேரில்சென்று அவர் கோபத்தைத் தணியவைக்கவேண்டும். அவரோ ஸத்புருஷர். மகாத்மாவான அவர் ஸ்த்ரீகளிடத்தில் கோபங்கொள்ளார். உன் நல் வார்த்தைகளால் அவர் சாந்தமடைந்தபொழுது அவர் கமலக்கண்கள் அமைதி யடைந்தவுடன் நான் வந்து காண்கிறேன்" என்று பணிவுடன் தெரிவித்தான். இதைக் கேட்டாள் தாரை. அவள் சரியான நிலையில் இல்லை. மதுபானத்தால் மதிமயங்கி யிருந்தாள். எனினும் அரசன் ஆபத்து நிலையிலிருப்பதையும் அவன் மன நிலையையுங் கண்டு, அப்படியே, படுக்கை விட்ட கோலத்துடன் அவசரமாக லட்சுமணனைக் காண விரைந்தாள். அவள் அணிந்த ஒட்டியாணம் நழுவியிருந்தது. இவ்வாபத்துச் சமயத்தில் இவைகளைக் கவனிக்க நேரமில்லாதவள்போல் சுக்ரீவனைக்காத்து உதவி புரியச் சாய்ந்தாடி. மனத்தை நிலைநிறுத்தி லட்சுமணனிடம் மிக்க பயபக்தியாய் வந்தடைந்தாள்.

லட்சுமணன் இவளைக் கண்டதும் ஓர் நங்கை அணுகுகிறாளென்று கண்டு கோபத்தை விட்டுத் தலைகுனிந்து நின்றான். இளையவன் சினம் மாறினனென்றுணர்ந்த தாரை, தைரியமடைந்து அவன்முன் வந்து பணிவுடன் பேசவாரம்பித்தாள். "தசரத சக்ரவர்த்தியின் திருக்குமாரரே! கோபத்தின் காரணம் யாது? தேவரீருடைய சித்தத்திற்குக் குற்றம் விளைவித்தவன் யார்? மரமலர்ந்த காட்டைப்பற்றிப் பரவும் காட்டுத்தீயைப் போல் வளரும்தன்மைகொண்ட உங்களுடைய சினத்தை மூட்டினவன் யாவன்?" என்றாள்.

முழுவதும் சாவதானமான குரலில் பதிலுரைத்தான் லட்சுமணன் :—

"கணவன் நலத்தை நாடி வந்தவளே! தருமார்த்தங்களையும் ஆதன் கருத்துக்களையும் மறந்து, காமத்திலிடுபட்ட உன் கணவனின் போக்கை

நீ அறிந்திலையா? தாரே! சுக்ரீவன் ராஜ்யத்தை யடைந்தபின்னர், சோகத்தில் மூழ்கியிருக்கும் எங்களை அவன் ஏன் நினைக்கவில்லை? எல்லோருடனுங்கூடி மதுபானத்திலேயே காலங்கழிக்கும் அவன் நான்கு மாதங்கள் தவணை கடந்ததைக் கொஞ்சமும் அறியவில்லையே! கள்ளுண்பவன் கதியை அறியாயோ? இத்தகைய தீயோன் தருமம், அர்த்தம், காமம் என்ற புருஷார்த்தங்களை இழப்பதுமன்றிப் பொருளையும் இழந்துவிடுகின்ருன். செய்ந்நன்றி உணர்பவனு? அவன் தருமநெறி தவறி, நட்பையும் இழந்து கொடுத்த வாக்கை நிறைவேற்ருது ஆத்மாவையும் நற்குணத்தையும் நட்பையுமிழக்கிருன். இத்தகையோனைப்பற்றி நாங்கள் கோபமுருது என்ன செய்யவேண்டும்? சிந்தனைசெய், நடக்கவேண்டியதை அறிபவளே! எங்கள் விஷயத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை அறியாயோ? என்ருன்.

தாரை மதுரமான சுபாவத்தை விளக்கும், நன்னெறி காட்டும் லட்சுமணனது மதியுரையைக் கேட்டு மறுபடியும் பயபக்தியாய்ப் பதில் சொன்னுள்.

"புகழ்படைத்த பூபாலபுத்திரரே! இச்சமயம் கோபிக்கலாமா? உங்கள் பிரிய பந்துவுடனும் உங்கள் பிரியத்தையே நாடும் உறவினருடனும் கோபங்கொள்வீர்களா? வீரரே! உங்களுடைய காரியத்தில் கவனமாயிருக்கும் சுக்ரீவரின் குற்றத்தைப் பொருத்தருள்வீராக! அரசகுமாரா! நற்குணங்கள் பூரணமாயுள்ள ஒருவர் அற்ப குணமுள்ளவனிடம் கோபங்கொள்ளுதல் என்பதுண்டோ? சத்வகுணங்கள் நிரம்பியவரும் பொறுமைக்கு இருப்பிடமாகிய உங்கள்போன்ற மகான்களுக்குக் கோபமென்பது ஏது?

"வானர வீரனின் உண்மைத் தோழரான உங்கள் கோபாவேசத்தின் சக்தியை நன்குணர்வேன். சுவாமி! உரியகாலத்தில் செய்யவேண்டியது இன்னதென்பதையும், உங்கள் விஷயத்தில் என்ன செய்யவேண்டுமோ' இதற்காக என்ன செய்யப்பட்டதோ, ஆகிய எல்லாவற்றையும் அறிவேன். மனித சிரேஷ்டரே! காமத்திலீடுபட்டு மற்றெதையும் கைவிட்டு மதிமயங்கி இருப்பவரின் நிலையையு மறிவேன். தலைசிறந்த தவசிகளும், மெய்ஞ்ஞானி மாமுனிவர்களுங்கூட இவ்விகாரத்தை யடைந்து வருந்தவில்லையா? கேவலம், சபல சுபாவமான குரங்கரசனின் சிற்றின்பத்தைப் பெரிதாக நினைக்கலாமா! உங்கள்போன்ற ஐம்புலனடக்கிய சீலவான்கள் இவ்விஷய சுகத்தை பொருட்படுத்தார். ஆகையால் ஐயனே! சுக்ரீவனது பிழையைப் பொருத்தருள வேண்டுகிறேன். புருஷோத்தமா! உங்கள் காரியத்தை முடித்துவைக்கும் விஷயத்தில், உங்களிஷ்டப்படியே நடக்கிற சுக்ரீவர் இந்த விஷயத்தில் முன்னமேயே வேண்டிய முயற்சி செய்துள்ளார். அவரது ஆக்கினையின்பேரில், மகா வீரர்களும், நினைத்த உருவமெடுப்பவர்களுமான வானரர்கள் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும், கோடிக்கணக்காகவும் இங்குவந்து சேர்ந்திருக்கிருர்கள். அவர்களை நீங்களே நேரில் பார்க்கலாம். சுபமளிக்கும் அருள் விழிகொண்ட சுசீல! நீங்கள்

சுக்ரீவருக்கு ஆத்மசகா. ஆகையால் அவர் மனைவியைப் பார்ப்பதென்பது தோஷமாகாது. தேவரீர் சற்று உள்ளே எழுந்தருளுங்கள்" என்று அழைத்தாள்.

கருமமே கண்ணான லட்சுமணன் அவளழைப்பிற் கிசைந்து உள்ளே சென்றதும் ருமையுடன் வீற்றிருந்த சுக்ரீவனைக் கண்டான். ஆபரணங்களின் சிங்காரிப்பும், கண்ணைக் கவரும் வேலைப்பாடுள்ள ஆசனங்களும் விலையுயர்ந்த விரிப்புகள் கொண்ட பஞ்சணைகளும், களிப்புற்றிருந்த களிமங்கைகளும் காட்சியளித்தன. உடனே அணைந்த கோபம் மறுபடியும் லட்சுமணனைப் பற்றிக்கொண்டது. அக்னியின் ஜ்வாலையாய்ப் பிரகாசித்தான் அவ்விளஞ் சிங்கன்!

34. "உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு"

சுமித்திரையின் புதல்வனான லட்சுமணன் நேராக அந்தப்புரம் நுழைந்து அங்குள்ள மாதர்களையெல்லாம் கடந்து தானிருக்கும் அறையில் வருவான் என்று சுக்ரீவன் நினைத்தவனல்ல அவனைச் சாவதானமாகப் பேசிப் பணிந்து சாந்தப்படுத்தும்படி தாரையிடம் வேண்டியிருந்தான். அவன் சாந்தமானதும் தன்னிடம் அவள் வந்து தெரிவித்தால் அப்புறம் தானே அவனிடம் செல்வதாகச் சொல்லியிருந்தான். ஆகவே, லட்சுமணனை அங்கு எதிர்பார்த்தவனல்ல சுக்ரீவன். எனவே, அவன் நேரில் தானிருக்கும் இடத்திற்கு வந்துவிட்டானென்று கண்டு பிரமித்துப்போனான். ருமையுடன் இன்புற்றிருந்த அவன் உடனே அவளைவிட்டுப் பாய்ந்தெழுந்தான். உள்ளம் கலங்கினான்.

லட்சுமணனை நோக்குகிறான். அவனோ கோபாவேசத்தில் ஜ்வலித்துக் கொண்டிருந்தான். அண்ணனுடைய மன வேதனையை எண்ணி எண்ணி அதிகமாகத் தவித்துப் பெருமூச்சு விடுகிறானென்று உணர்ந்தான். அவனும் சுக்கிரீவனைப் பார்த்து, "சுக்கிரீவா! இந்திரியங்கள் அடக்கினவன், சத்வ குணங்களுள்ளவன், செய்நன்றி மறவாதவன், உண்மையிலேயே நிற்கும் அரசன், இவன்தான் உலகின் மதிப்பிற்குரியவனாகிறான். செய்ந்நன்றி கொன்ற பாவியைப்போல் கொடியவன் ஏது? ஓர் குதிரைக்காகப் பொய் சொல்லுவது நூறு விதத்தில் பாபமென்றால், ஓர் பசுவிற்காகப் பொய்யுரைப்பது அதைவிட ஆயிரமடங்கு தோஷம். ஓர் மனிதன் விஷயத்தில் பொய் நடத்தை காட்டுவது அதைப்போலக் கொடியது ஒன்றுமில்லை. அவன் மானிட இனத்தையே இழிவுறச் செய்கிறான். அதுவும் செய்நன்றி மறப்பவன் இருப்பதைவிட இறப்பதே மேல். இதைவிடப் பாவச்செயல் இல்லை. நன்றி மறத்தலுக்குப் பிராயச்சித்தமேயில்லை. மரணதண்டனைதான் அதற்கு விதி. சுக்ரீவா! உன் தற்கால நிலையை நினைத்தனையா? நீ கொடுத்த வாக்கை நிறைவேற்றப் போகிறாயென்று ஸ்ரீராமர் குகையில்

மனைவியைப்பற்றி பொங்கி யெழும் சோகத்தால் தவித்துக்கொண்டு இருக்கையில், நீ கள்ளைக் குடித்துப் பெண்களுடன் ரமித்துக்கொண்டு இருக்கிறாய். இதுவா நட்பின் பெருமை? இதுதானோ உன் பிரமாணம் நிறைவேற்றுவதின் அடையாளம்? ஸ்ரீ ராமபிரான் சொற்களை அசட்டை செய்யலாமா? மகா சர்ப்பம்போன்றது அவர் கோபம். சர்வத்தையும் அழிக்க வல்லவை அவர் பாணங்கள். நீயும் உன் ராஜ்யமும் சம்பத்தும் பந்துக்களும் அவன் கோதண்டத்தால் இப்பொழுது விடப்பட்டிருப்பதை நினைப்பூட்ட வேண்டுமோ? இன்றேல் இனியும் அவன் காரியத்தில் அசிரத்தைகொண்டு வாலி சென்றவழியே நீயும் செல்ல எண்ணுகிறாயா? உடனே இது சிந்திக்கப்படட்டும்'' என்று கடுஞ் சொற்களால் வானர மன்னனை எச்சரித்தான். இவ்வார்த்தைகளைக் கேட்ட சுக்ரீவனும் அவனைச் சூழ்ந்திருந்த மாதர்களும் உள்ளம் கலங்க உடல் நடுங்கினர்.

---

35. "சொல்லற்க சொல்லிற் பயனிலாச் சொல்"

படபடவென்று கடிந்துவந்த மொழிகளைக் கேட்ட தாரை மனத்தில் தைரியம் வளர்வதைக் கண்டாள். இக்கோபம் கொள்ளுமாறு தவறு நேர்ந்து விடவில்லை என்று திடங்கொண்டாள்.

"லட்சுமணா! இவர் வானர அரசர்; இத்தகைய கொடுஞ் சொற்கள் கேட்கத்தகாதவர்; இவைகளுக்கு ஆதாரமில்லை என்று நீங்களே உணர வேண்டும்.

[முன்பு தாசரதி தம்பியைக் கொடூரமாக நடந்துகொள்ளாமலும் சாவதானமாகவும் சுக்ரீவனை எச்சரித்து வரும்படி அனுப்பினார். அந்த எச்சரிப்பு ஒன்றிலேயே கவனமாயிருந்த இளையவன் சீற்றத்தைத் தணிக்காது நிந்தனைத் தொனியில் மடமடவென்று கூறிய சொற்றொடர் பயந்த தாரையின் பயத்தைப் போக்கடித்து விட்டதுபோலும்!]

"உங்களைப்போன்றவர்களின் அங்கீகரிப்பிற்குரியவர் அவர். வீரனே! சுக்ரீவ மகாராஜா செய்நன்றி மறந்தவராகார். அறநெறி பிறழாதவர்; உண்மையிலேயே நிற்பவர்; இதை நீங்களே அறிந்துகொள்வீர்கள். இணையில்லா வல்லவரே! ஸ்ரீ ராமபிரான் அநுக்ரகத்தால் சுக்ரீவர் ராஜ்யத்தையும் தன்மனைவி ருமையையும் என்னையும் அடைந்தார். காணாதுகண்ட மாபெரும் பாக்யத்தை யடைந்தார். முன்பு கரைகாணாத துயரத்தில் மூழ்கியிருந்தவர் இப்பொழுது சகலசம்பத்துகளும் ராஜ்யமும் தன்னிடமிருந்து பிரிக்கப்பட்ட ருமையையும் மற்ற எல்லா பாக்யத்தையு மடைந்து அவைகளிலேயே ஈடுபட்டுவிட்டார். ஐம்புலன்களை யடக்கி ஆள்பவனே! கிருதாசி என்னும் அப்சரமாதை அடைந்தவுடன் மாமுனி விச்வாமித்திர ரிஷி அவளிடம் தம்

தவங்களைவிட்டு இன்புற்று பத்து வருஷங்கள் கழித்தார் என்று சொல்லு கிறார்கள். அவருக்கே இங்ஙிலை என்றால் கேவலம் பாமரனான குரங்கு மன்னனைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? லட்சுமணா! இவரைப் பொருத்தருள்வீராக. தங்களைப்போன்ற பெரியார்களுக்குக் கோபமென்பது ஏது? புருஷோத்தமா, தங்களைப் போன்ற ஸத்புருஷர்கள் நன்கு விசாரித் தறியாது சினமடைவது இல்லையே! தருமமூர்த்தி! சுக்ரீவருக்காகப் பணிந்து அவரைப் பொறுத்தருளும்படி பிரார்த்திக்கிறேன்.

" சுவாமி! உங்களிடங்கொண்ட அவர் பக்தியும், அன்பும் எல்லைகாண முடியா. அவைகளின்பொருட்டு ராஜ்யத்தையும், தன தானியங்களையும் ருமையும் என்னையும் எல்லாவற்றையும் தியாகஞ்செய்யத் தயாராயிருக்கிறா ரென்று உறுதி கூறுவேன். ராவணனை யுத்தத்தில் மாய்த்து, ரோகிணியைச் சந்திரனோடு சேர்த்து வைப்பதுபோல சீதையை ராமனிடம் சேர்த்து வைப்பார் என்றும் உறுதி கூறுகிறேன். சுவாமி! அப்போரில் கலந்து கொள்ள எல்லா வானரங்களையும் சேனாதிபதிகளையும் உடனே இங்கு வந்து சேரும்படி அழைத்துவர அரசன் ஆக்கினையுள்ள ஆட்கள் முன்பே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். கொடிய அரக்கர்கள் அனைவரும் மடிந்தா லொழிய ராவணன் ஒழிந்தவனாகானென்று வாலி எனக்குச் சொல்லி யிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். வானரர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அக்காரணத்தால்தான் அவர் இதுவரையில் உங்களை வந்து காணவில்லை.

" ஆகவே, ராமகாரியத்தில் முயற்சிகள் நடந்துவருகின்றன. மிக்க பலிஷ்டர்களும் அதி சாமர்த்தியசாலிகளுமான வானரத் தலைவர்கள் ஆயிரக் கணக்கில் ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கோடிக்கணக்காய் வந்து சேருவதைக் காணப்போகிறீர்கள். அதைக் கண்டு களிப்படைவீர்கள் என்பது நிச்சயம். சுவாமி! சினத்தை ஆற்றுங்கள். கடுங் கோபம் பிரதி பலிக்கும் உங்கள் முகமும் சிவந்த கண்களும், இந்த அரண்மனையிலுள்ள வானரப் பெண்மணிகளையும் எங்களையும் உள்ளம் கலங்கவைக்கின்றன. என்ன ஆபத்து நேரிடுமோ என்று அஞ்சுகிறோம். எங்கள் பயத்தைத் தணியுங்கள்; சாந்தியடையுங்கள், கோடி நமஸ்காரம்" என்று பணிந்து கூறினாள்.

இத்தகைய மனங்கசியும் வேண்டுகோள் பயனற்றுப்போகுமா? வீரன், கலைஞன், காரணமின்றிக் கோபமுறாதவன், காரணங் கண்டவுடன் தணிந்து கருணைபொழியும் காகுத்தன், தாரையின் மொழிகளையும், சுக்ரீவன் முன்பே முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறானென்ற உறுதி மொழியையும் கேட்டு அவள் வினயத்தையும், பக்தியையும் உணர்ந்து சினம் நீங்கிச் சாந்தி யடைந்தான்.

36. "காலத்தினால் செய்த நன்றி ஞாலத்தின் மாணப்பெரிது"

வானரப் பெண்மணிகள் திகிலடைந்து விட்டார்களென்ற தாரையின் செய்தி லட்சுமணனின் கோபம் முழுவதையும் தணியவைத்துவிட்டது. பெண்களை பயமுறச்செய்வது சுத்தவீரனின் சுபாவமில்லை. மேலும் அவள் சொற்கள் தருமத்திற்கு ஒத்தவைகளாயிருக்க, லட்சுமணன் உடனே சிற்றத்தைவிட்டு அவள் வார்த்தைகளால் சமாதானமடைந்து தன் நிலையில் இருந்தான்.

இதைக்கண்ட சுக்ரீவன் ஈரத்துணிகளைக் களைந்துப் புனித ஆடையுடுப்பதுபோல் அச்சத்தைவிட்டு நட்புணர்ச்சி கொண்டான். உடனே இன்ப சக்தியைப் பெருக்கும் ஓர் மாலையைத் தன் கழுத்திலிருந்து முறித்தெறிந்து மயக்கம் முழுவதும் தெளிந்து ராமாநுஜனுடன் வணக்கமாகப் பேச ஆரம்பித்தான்.

"லட்சுமணரே! கைவிட்டுப்போன சம்பத்தையும் கீர்த்தியையும் கிஷ்கிந்தை அரசையும் நிலையாகப் பெற்றது ஸ்ரீ ராமரின் பிரஸாதத்தினாலன்றி வேறினாலில்லை என்று ஒரு நாளும் மறவேன். அவரோ எனக்கு மகத்தான வரப்பிரஸாதமளித்தார். அக்கீர்த்திமானுக்கு என்னால் தகுந்தபடி கைம்மாறு செய்வதென்பது எண்ணவும் முடியுமோ? உண்மையாய் கவனிக்குங்கால், அவருக்குக் கைம்மாறு செய்வதென்பதோ, துணை புரிவதென்பதோ ஒரு நாளும் ஒருவராலும் செய்யமுடியாத காரியம். ஓரேபாணத்தால் ஏழு ஆச்சா மரங்களையும் துளைத்து, மலையையும் பூமியையும் பிளந்து அது மறுபடியும் வீண்போகாது தன்னை யடையவைத்த வில் வல்லான் வேறு துணை நாடி நிற்பதென்பதேது? கொடும்பாவியான சீதாபகரணஞ் செய்த ராவணனைத் தன் ஈடுயிணையற்ற பராக்கிரமத்தால் வென்று கொன்று ஜானகியைத் திரும்பி யடையவிருக்கும் வீரதீரனுக்கு, நான் துணைபுரிவதென்பது வெறும் பெருக்குமாத்திரம்தான் என்று உணர்கிறேன். எந்த மகானுபாவனின் வில் வளைத்து நாணேற்றுஞ் சத்தம் ஒன்றே பர்வதங்கள் உள்பட உலகம் அனைத்தையும் குலுங்க வைக்கிறதோ, அத்தகைய அசகாய சூரனுக்கு, துணைவர்களால் ஆகவேண்டியதென்ன? நரசிங்கனே! அப்புருஷோத்தமரை போருக்கு எழுந்தருளச்சொல்லும். சேவகனான நான் அவரைப் பின் பற்றுகிறேன். அவ்வொப்பற்ற பெருந்தகை, அல்பனான அடியேன்பால் கோபங்கொள்ளார், என்ற நம்பிக்கையாலும், அவர் என்பால் காட்டும் விசுவாசத்தாலும் நான் ஏதேனும் குற்றம்செய்து விட்டேனாகில் அதை மன்னித்து அருளும்படி வேண்டுகிறேன். எம்போன்ற சாதாரண ஜனங்கள் இடையே குற்றமற்றவன் யாவன்?

முன்பே சினம்மாறிய இளைய பெருமான் சுக்ரீவனின் பணிவையும் எளிமையையும் கண்டு தன் எளிமையில் உருகிவிட்டான். "சுக்ரீவ! அண்ணலுக்குற்ற துணைவனும் நண்பனும் நீதான் என்று சொல்ல வேண்டுமா? ஆண்மையும், ஆண்மைக்குகந்த ஆர்வமும், ஆர்வத்திற்குத் தகுந்த ஆற்றலும், ஆற்றலுக்கேற்ற பணிவும், பெருந்தன்மையும் கொண்ட நீதான் கிஷ்கிந்தை அரசை ஏற்று நிர்வகிக்கத் தகுதியுள்ளவன் என்பது நன்கு விளங்குகிறது. உன் துணையால் ஸ்ரீ ராமன் மேன்மைபெற்று விளங்குகிறார் என்பதில் சந்தேகமில்லை. உன்னைத் துணையாக வைத்துக் கொண்டு அவர் ராவணனை ஒழிப்பதில் சந்தேகமென்ன? தெய்வப்ராப்தமாய் அடைந்த இத்துணையும் சிறந்த துணை. நீயும் அவருக்குச் சமமானவனே. இனி வெற்றியைப்பற்றிக் கவலை ஏது? வீரனே! இனி நீ அவரிடஞ் சென்று மனைவியிழந்த சோகத்தில் பரிதபிக்கும் அண்ணலைத் தேற்றித் திடமுறச் செய்யவேண்டும். அவருடைய நிலையை நினைத்து உன்னிடம் கடுஞ்சொற்களை உபயோகித்தேன். இதையறிந்த நீ அவைகளைப் பொருட்படுத்த வேண்டாம்; மன்னிக்கவும்" என்று உண்மை நண்பனாகி உரையாடினான்.

சுக்ரீவனும் உள்ளம் களித்தான்.

---

37. வானரசேனையின் வருகை.

சுக்ரீவனும் லட்சுமணனும் தன்னிலை யடைந்து இருவரும் அளவளாவும் போது அமைச்சரான அநுமனை நோக்கிச் சுக்ரீவன், உலகில் எங்கெங்கு வானரர்கள் இருக்கின்றனரோ அங்கெல்லாம் நமது தூதர்களை யனுப்பி ராவணன்மேல் படையெடுப்புக்காக ஆயத்தமாக வந்து சேரும்படி ஆக்கினை அனுப்பிவைக்கும்படி உத்தரவிட்டான். அவர்கள் எங்கிருப்பினும் பத்து தினங்களில் இங்கு வந்து சேரவேண்டுமென்றும் தவறினால் கடுந்தண்டனைக்குள்ளாவார்களென்றும் ஆக்கினை விடுத்தான்.

[முன்பு வாலி வதத்தின்போது ராமன் பரதனுடைய சாசனத்தை எங்கும் நிறைவேற்ற தனக்கு அதிகாரம் உண்டென்றும், ஆகையால் வாலி குற்றவாளியென்று மரண தண்டனை விதிக்கப்பட்டானென்றும் சொன்ன போது, அயோத்தியின் ஆட்சிக்கு உட்பட்டதாயிருக்குமா கிஷ்கிந்தை என்று ஒரு ஆட்சேபம் எழுந்திருக்கலாம். அவ்வாட்சேபத்திற்கு இங்கு கவியரசனின் வாக்கியம் விடையளிக்கிறது. வானரர்கள் எங்கிருப்பினும்சரி, சூரிய மண்டலத்திலோ, இமய மலையிலோ, விந்தியப்ரதேசத்திலோ, குமரிக் கண்டத்திலோ எங்கிருப்பினும் அவர்கள் அனைவரும் கிஷ்கிந்தை ஆட்சிக்குட்பட்டவர்கள்தான் என்று புலனாகிறது. குரங்குதேசங்கள் பல இருந்தன. அங்கங்கே அவர்களுக்குத் தலைவர்கள் இருக்கின்றனர். எனினும் எல்லோரும் கிஷ்கிந்தை சாசனத்தைப் புறக்கணித்தால் தண்டனைக் குள்ளாவார்கள். எனவே கிஷ்கிந்தை மன்னன் இத்தகைய அகண்ட ஆட்சி செய்வது முறை.

அவ்வாறே, அயோத்தி ஆட்சியும் ஓர் அகண்ட சாம்ராஜ்யம்தான் என்று தெளிவாகிறது.

தவிர, முன்பே சுக்ரீவன் இதே ஆக்கினையை விடுத்தான். இப்பொழுது லட்சுமணன்முன் அதைத் திரும்பவும் பிரசுரிப்பது ஏன்? என்ற பிரச்னை எழலாம். முன்பு நீலனுக்குக் கொடுத்த உத்தரவு, வானரச் சேனைகள் அனைத்தையும் ஆயத்தம்செய்து ஒன்றுதிரட்டி முஸ்தீப்பு செய்வதைப் பற்றியது. இப்பொழுது அநுமனிடம் சொன்னது, எங்கெங்கு வானரர்கள் பிரதேசம் இருக்கின்றதோ அங்கெல்லாம் இருக்கும் வானரர்களைத் திரட்டி சுக்ரீவன் படையைப் பலப்படுத்துவதற்காக என்று விளங்குகிறது.]

அநுமனுக்கு வானரர்கள் எங்கெங்கிருக்கிறார்கள் என்று சுக்ரீவன் விவரித்துக்கொண்டே போகிறான். மகேந்திரம், இமயம், விந்தியம், கைலாசம் மந்தரம், பாண்டு முதலிய மலைகளில் வசிப்பவர்களும், மேற்குக் கடற் கரையிலுள்ள பத்மதாலவனம் முதலிய பிரதேசங்களில் இருப்பவர்களும், அஞ்சனம், மேரு, தூம்ரகிரி, மகாருணம் என்ற மற்ற திக்குகளிலுள்ள வானரங்களும், தலைவர்களும் உடனே வரவழைக்கப்பட வேண்டுமென்றும், அந்தந்த இடங்களில் உள்ளவர்களின் வர்ணத்தையும் தோற்றத்தையும் வலிவையும் எடுத்துரைத்தான். முன்பே தன்னால் அனுப்பப்பட்ட தூதர்கள் மிக்க வேகங்கொண்டவர்கள் எனினும், வானரங்களெல்லாம் விரைந்து வந்தடைய மற்றும் அநேகரை இப்பொழுது அனுப்ப வேண்டுமென்கிறான்.

அரசனின் உத்திரவின்படி அநுமன் மிக்க பராக்கிரமம் படைத்த பறந்துசெல்லும் வானர தூதர்களை எல்லாத் திக்குகளிலும் உடனே அனுப்பிவைத்தான். இதற்குள் ஆயிரமாயிரமாக வானர சைனியங்கள் பல இடங்களிலிருந்தும் விரைந்துவர ஆரம்பித்தன. இமய மலையிலிருந்து வந்தவர்கள் அரசன் காணிக்கையாகப் புனிதமான யக்ஞங்களிலும் யாகங் களிலும் உபயோகிக்கப்பட்ட வஸ்துக்களிலிருந்து உண்டான, அமிருத சக்திவாய்ந்த அற்புத பலம் அளிக்கவல்ல கனிகளையும், வேர் மூலிகைகளையும் கொணர்ந்து சமர்ப்பித்தனர். மற்றும் அநேக சைனியங்கள் இன்னும் விரைவாக வந்துகொண்டிருக்கின்றன வென்றும் தெரிவித்தார்கள். இதைக் கேட்டு சுக்ரீவன் மிக்கத் திருப்தியடைந்தான். அவர்கள் காணிக்கைகளையும் ஏற்றுக்கொண்டான்,

38. வானரப் படையின் ஆயத்தம்.

வந்தடைந்த வானர சேனைத் தலைவர்களை வரவேற்று அவர்கள் சமர்ப்பித்த காணிக்கைகளை ஏற்றுக்கொண்டு, அவர்களைக் கொண்டாடி விடைகொடுத்தனுப்பிச் சுக்ரீவன் ஸ்ரீ ராமனின் லட்சியம் ஈடேறுவதாக

நிச்சயமடைந்தான். லட்சுமணனும் திருப்தியடைந்து வானர அரசனைப் பார்த்து ஸௌமியனே! உனக்கு இஷ்டமானால் ஸ்ரீ ராமனிடம் செல்வோமா? என்று வினவினான்.

இப்பிரியமான மொழியைக் கேட்ட சுக்ரீவன் லட்சுமணனுடைய எளிமைத்தன்மையைக் கௌரவித்து, "எனது இஷ்டமென்பதென்ன? சுவாமி! எல்லாம் உங்களுடைய சித்தத்தின்படி நடக்கவேண்டியவன் நான் என்பதை மறப்பேனா? அப்படியே ஸ்ரீராகவனிடம் செல்லலாம்" என்று பதிலுரைத்து, லட்சுமணனின் அநுமதியின்பேரில் சிறந்த பல்லக்கைத் தருவித்து அதில் லட்சுமணனை ஏறும்படி வேண்டினான். அவனும் இசைய, தானும் அவனுடன் உட்கார்ந்து இருவரும் ரகுநாதனிடம் வந்தனர்.

ஸ்ரீ ராமச்சந்திரனைக் கண்டமாத்திரத்தில் சுக்ரீவன் பல்லக்கைவிட்டு இறங்கி வானரத் தலைவர்களும் சேனைத் தலைவர்களும் பெரும் வானரச் சேனையும் பின்பற்ற, அவர்கள் எடுத்துவந்த காணிக்கைகளில் அபூர்வமும் சிறப்பும் வாய்ந்த சில பொருள்களைக் கோசலேந்திரன் பாதங்களில் சமர்ப்பித்து அஞ்சலிசெய்து அடிபணிந்தான். திரள் திரளாய்க் கடல் அலைகள்போல் பொங்கி எழுந்து பரவும் பிரும்மாண்டமான வானரச் சேனையைக் கண்ணுறுகிறான் காகுத்தன்.

உண்மை நட்பில் உளமுவந்து முடிதாழ்த்தின வானர மன்னனை ராமபிரான் எழுப்பி பிரியத்தோடும் கௌரவத்தோடும் அவனைத் தழுவித் தன்னிடத்திலமர்த்தி, "அப்பனே! தருமார்த்த காம புருஷார்த்தத்தை உணர்ந்து உரியகாலத்தில் தரும வாழ்க்கை நடத்துபவனே அரசனாகிறான். அவனிடத்தில்தான் உண்டு மெய்நட்பும் செய்நன்றிமறவாமை என்ற உயரிய குணங்களும். நம் முயற்சி துவங்கும் காலம் வந்துவிட்டதென்று நீ அறிந்து வந்திருக்கிறாய். அமைச்சர்களுடன் ஆலோசனை துவக்கலாம்" என்றான்.

அதற்குச் சுக்ரீவன், "மகாபாகுவே! வெற்றி வீரர்களின் தலைவனே! தெய்விகத் தோற்றமளிப்பவரே! தேவரீருடைய அநுக்கிரகத்தாலும், தம்பியினது அநுக்கிரகத்தாலும், கைநழுவின சம்பத்தும், கீர்த்தியும் அரசும் என்னால் நிலையாக அடையப்பெற்றன. செய்நன்றி யற்றவன் நாயினும் கேடானவன் என்றுணர்ந்து, உங்கள் காரியத்திற்காக வானரப் படை ஆயத்தம். சத்துருக்களை எளிதில் சம்ஹாரஞ் செய்பவரே! இதோ உலகில் பலசாலிகளான வானரர்கள் எல்லோரையும் முன்னிட்டு இந்த வானரத் தலைவர்கள் நூற்றுக்கணக்காக வந்திருக்கின்றனர். ராகவ! கரடிகளும், குரங்கு வீரர்களுக்கும் பயங்கரத் தோற்றமுள்ள வனங்கள், மலைகள், குகைகள் எல்லாவற்றையும் அறிந்தவர்களும் எல்லாவற்றையும் நிமிஷத்தில் பறந்து கடந்து போகிறவர்களும், நினைத்த ரூபம் எடுப்பவர்களும், தேவ கந்தர்வ தொடர்புடையவர்களும், மேரு மந்தர மலைகளின் வன்மை கொண்டவர்களும், நூறு, ஆயிரம், பதினாயிரம், லட்சம், கோடி, சங்கு, அற்புதம், மத்யம், அந்தம், சமுத்ரம், பரார்த்தம், அத்புதசதம் என்ற,

ஒன்றுக்கொன்று பதின்மடங்கு கணக்கு அடங்கிய வானரசேனைகள் இன்னும் வந்துகொண்டிருக்கின்றன. அரக்கன் ராவணனையும் அவன் பந்துக்களையும் அறவே ஒழித்து மைதிலியைத் திரும்பியடைய இவர்கள் உங்கள் ஆக்ஞைக்குக் காத்திருக்கிறார்கள், என்று உறுதியளிக்க ரகுவீரன் உள்ளம் களிந்து முகமலர்ச்சி யடைந்தான் !

39. படை அணிவகுப்பு

சுக்ரீவன் மனத்திருப்தி அடைந்திருக்கிறான் என்று கண்டு அவனை இன்னும் உற்சாகம்கொள்ளச் செய்கிறான் தாசரதி.

சுக்ரீவனது கைபற்றி மேலும் சொல்லுகிறான்:—"சுக்ரீவா ! இந்திரன் பூமியை மகிழ்விப்பதுபோலவும், சூரியன் இருளைப் போக்கடிப்பதுபோலவும், சந்திரன் ஆகாசத்தை விளக்குவது போலவும், நீயும் உன் நண்பனுக்குதவும் உணர்வைக் கொண்டிருப்பதை அறிவேன். சௌம்மியனே ! இதைக்கேள். புலோமன் என்பான் இந்திரனை வஞ்சித்து, அவனது புதல்வி இந்திராணியை அனுஹ்லாதனெனும் அசுரன் திருடிச்செல்ல அனுமதித்தான். எப்படி இந்திரன் அந்த புலோமனைக் கொன்று இந்திராணியை யடைந்தானோ அவ்வாறே உன் துணையால் ராவணனை மாய்த்து மைதிலியை மீட்கப் போகிறேன்" என்று திடமாக உரைத்தான்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலேயே, பூமியிலிருந்து ஓர் புழுதி பெரும் புயலாகக் கிளம்பி வானெழுந்து பரவியது. சூரியனை மறைத்தது. வரவர அப்புழுதியின் வேகமும் உயர்வும் பெருகின. என்ன இது ? திக்குகள் எல்லாம் புழுதி நிறைந்துவிட்டனவே ! மலையும், வனமும், மூடுண்டு கதிரவனை மறைத்தது. அப்போது இடிமுழக்கம்போல ஒரே பேரொலி ! பூமியெல்லாம் கிடுகிடுக்க வைத்தது. மிக்க ஆச்சர்யமான சம்பவமென்று அங்கிருந்தவர்கள் பார்த்துக்கொண்டு இருக்கும்பொழுதே, இமய மலையையொத்தவர்களும், கூறிய பற்களை யுடையவர்களும், மகா பலவான்களான வானர வீரர்கள் தொப்பு தொப்பென்று குதித்து, கர்ஜித்து எல்லாத் திசைகளையும் நிறப்பிவிட்டனர். ஒரு நிமிஷத்தில், நினைத்த ரூபம் எடுக்கவல்லவர்களான வானரசேனைத் தலைவர்கள் ஆயிரமாயிரமாயும் லக்ஷோப லக்ஷமாயும் கோடானு கோடியாயும் வந்து குதித்து அவ்விடம் முழுவதையும், பொங்கி எழுந்து அலைமோதும் வானர சமுத்திரமாகச் செய்தனர். மலையிலும் மடுவிலும் வசிக்கும் இளஞ்சூரிய வர்ணங்கொண்ட மகா பலசாலிகளான பத்தாயிரங்கோடி கொண்ட சைனியத்துடன் வீரனான சதபலி என்ற வானரத் தலைவன் வந்து குதித்தான் !

அப்பொழுதே அதே கணக்குள்ள மாபெருஞ் சேனையுடன் தாரையின் தந்தை வந்து சேர்ந்தான். ஆயிரமாயிரமாகவும் லட்சம் கோடிக்கணக்காகவும்

அணிவகுத்துத் தனித்தனியே திரள்திரளான தங்கள்தங்கள் சேனைகளை முன்னிட்டு ருமையின் தந்தை, கேஸரி, கவாக்ஷன், தாம்ரன், பனஸன், நீலன், கவயன், தரீமுகன், அசுவினி மைந்தர்களான மைந்தன் த்விவிதன், கஜன், ஜாம்பவான், ருமன்வான், கந்தமாதனன், அங்கதன், தாரன், இந்திரஜானு, ரம்பன், தூர்முகன், அநுமன், நளன், ததிமுகன், குமுதன், வன்னி, ரம்ஹன் என்ற பிரத்யேக சேனைத்தலைவர்கள் உலகெங்கும் சூழ்ந்து பூமியைக் கண்ணுக் கெட்டியதூரம் நிரப்பி வந்தடைந்தனர்! அவர்கள் தொகை எண்ணமுடியவில்லை. குதித்து கர்ஜித்துக் கொம்மாளமிட்டுக் கொண்டு வந்தனர். அவர்கள் வானர மன்னனைக் கண்டு முகமன் கூறி விதிப்படி மரியாதை செய்து அஞ்சலிசெய்து காத்து நின்றனர்.

மிகவும் திருப்தியடைந்த சுக்ரீவன் ராமனிடம் அவர்களை அறிமுகமாக்கி பின்பு, அவரவர்களுக்குத்தக்க வசதிகளை உத்தரவிட்டுச் சேனாதிபதியைக்கொண்டு முழு பலத்தையும் விசாரித்துக் கேட்டு அறிந்துகொண்டான்.

40. நிலவுலகாற்றுப் படை.

தன்னை முன்னிட்ட அகண்ட வானரச் சேனையின் முழு பலத்தையும் நன்கறிந்துகொண்ட சுக்ரீவன் ராகவனை அணுகினான்.

பின்பு, அவன் "சுவாமி! ஆயத்தமாய் வந்தடைந்த இம்மாபெரும் வானரசேனை, அனைத்தும் இனி உங்களது சேனை. மகா பலவான்கள்; தைத்தியதானவர்களை நிகர்த்த வேகங்கொண்டவர்கள்; அளவுகடந்த ஆற்றலும் ஆண்மையும் பூண்டவர்கள்; களைப்பு, மனச் சோர்வற்றவர்கள்; பாதாளத்திலும் ஆகாயத்திலும் கடல் நதிகளுக்குள்ளும் பனி காற்றுக் குள்ளும் செல்ல வல்லவர்கள்; நல்லொழுக்க முள்ளவர்கள்; இன்னோர் தேவரீரது காரியத்தைச் செய்து முடிக்கத் துடிக்கின்றனர். தேசகால மறிந்து செயல் செய்ய வல்லுனரான உங்கள் ஆக்ஞையைக் காத்து நிற்கின்றார்கள். ஆகையால் அவர்களுக்கு என்ன செய்யவேண்டியதென்று உத்தர விடுங்கள்" என்றான்.

ரகுநாதன் சுக்ரீவனின் கௌரவமான மொழிகளைக் கேட்டுச் சந்தோஷம் கொண்டு மெச்சி, "சுக்ரீவ! உனது சுபாவமான எளிமைபூண்ட தொண்டின் தன்மையைக்கண்டு உளங்களிக்கிறேன். இவர்கள் இப்பொழுது செய்ய வேண்டியது இதுதான். வைதேகி உயிருடனிருக்கிறாளா? எவ்விடத்தில் இருக்கிறாள்? ராவணன் எங்கிருக்கிறான்? இதைக் கண்டுபிடித்து வந்து சேரவேண்டும். இதை யறிந்தபின் உன்னுடன் கலந்து நடக்கவேண்டியதை ஆலோசிப்போம்" என்றான்."

மேலும் சொன்னான் "வானரேசா! இதுதான் கண்டறியவேண்டிய விஷயம். இதை நீதான் அவர்களுக்குக் கட்டளையிடவேண்டும். அது உனது உரிமை. எல்லா அதிகாரமும் உனக்கே உரியது. நீ என் நலனைக் கோருபவன்; நட்பை கௌரவிப்பவன்; பராக்கிரமசாலி; ஞானவான்; ஆகவே மைதிலியை தேடுவதிலும், ராவணனின் இருப்பிடத்தை அறிவதிலும் எனது ஆத்திரம் உனதே என்றறிவேன்"

ராமசந்திரன் மதிப்புரை சுக்ரீவனை மிகத்தேற்றி அவன் ஆற்றலைப் பெருக்கிற்று. ரகுநாதனுடைய காரியம் தனதென்று உணர்ச்சிகொண்டு உடனே வினதன் என்ற பெயர்பெற்ற தலைசிறந்த வானரத் தலைவனை முன்னுக்கு அழைத்தான். மலைபோன்ற கம்பீரமான வானரத் தலைவன் வினதன் அரசன்முன் விரைந்து பாய்ந்து அஞ்சலிசெய்தான். அவனைப் பார்த்து சுக்ரீவன்,

"வானரோத்தமா! நான் சொல்வதை நன்று கவனிப்பாயாக. சந்திரன், சூரியன் இவர்கள் சந்ததியான வானர முக்யர்களையும் கூட அழைத்துக்கொண்டு புறப்படு. கிழக்குத் திக்கில் சென்று அதின் எல்லைவரை செல். செய்யத்தக்கதும் தகாததுமறிந்து, தேசகால வர்த்தமானத்திற் கிசைந்து, அத்திசையிலுள்ள பிரதேசம் முழுவதையும் நன்கு புகுந்து ராவணனையும் கண்டுபிடி. இதுவே உன் லட்சியமாகும்.

"விரிவான பிரதேசம் கிழக்குதிசையிலுள்ளது. நேரே மலைகள் குகைகள் வனங்கள் நதிகளைக் கடந்துசென்றால், அழகிய பாகிரதி, யமுனை, ஸரஸ்வதி, சிந்து, சோணை ஆகிய இவ்வைந்து நதிகளும் ஒவ்வொன்றாகத் தோன்றும். இவைகளைக் கடந்து, மகி, காலமகி, பிரும்மமாலம், விதேகம், மாலவம், காசி, கோசலம், மகதம், புண்ட்ரம், வங்கம், கோசகம் முதலிய ராஜ்யங்களைக் கண்டு, பட்டணங்களிலும், கிராமங்களிலும், வனங்களிலும் ஓடைகளிலும் கவனித்துச் சீதையைத் தேடவேண்டும். ஒன்றையும்விடாது மிக்க ஊக்கத்துடனும் ஜாக்கிரதையுடனும் விறைந்து ஆழ்ந்து தேடவேண்டும். பின்பு ரஜதாகரம் என்ற கிழக்குப் பிராந்தியம் (ஜகர்டா) கிட்டும். இது உயர்ந்த உலோகங்களுள்ள நாடு. மிக்க வளமுள்ளது. அங்கே கர்ணப்ராவணர்கள், ஓஷ்டகர், கோரலோமுகர், ஜவனர் (யவனர்,) (ஜாவா தீவிலுள்ளவர்களோ?) ஏகபாதகர், அக்ஷபர் என்ற பலிஷ்டர்களும் புருஷாதகர்கள், கிராதர், கர்னசுடர், ஹேமாங்கர்களும் வசித்து வருவதைப் பார்ப்பீர்கள். அங்கங்கே கோடிக்கணக்கான அரக்க நரவியாக்கிரர்கள் (மலைவாசிகள்), சிலர் ஜலத்திலுள்ளேயே வசிப்பவர்கள், இவர்கள் இருப்பிடங்களையும் துருவித் தேடவேண்டும். இதுதான் யவத்வீபமென்பது (ஜாவா, இந்தோனேஷியா. ஸையாம், மலேயா, என்ற நாடுகள்) இந்த யவத்வீபத்தைத் தேடிக் காணாதபோது இன்னும் நேர்கிழக்கே சிசிரமென்ற மகா உயர்ந்த மலை ஒன்று உண்டு. அதில் அநேக புகமுடியாத குகைகள். அங்கே பறந்தோ, தண்ணீரில் நீந்தியோ, மடுக்களுள் மூழ்கியோ, மறைந்தோ எல்லாவிடத்தையும் தேட வேண்டியது. அங்கே, மந்தேகர்கள் என்ற அரக்கர்களைப் பல உருவங்களில் காண்பீர்கள். சிறிதும் பின்வாங்காது, மனஞ் சோராது, உங்கள் ஆற்றலைக்

கொண்டு தைரியமாயும், சாதுர்யமாயும், மாயமாயும் தேடவேண்டும். சில அரக்கர்கள் மரக்கிளைகளில் தொங்குகிறார்கள். காயத்ரீமந்திரத்தின் சக்தியாலும் இதனுடன் சூரியக் கிரணங்களின் காந்தியும் அனலும் கலப்பதால் அவர்கள் பொசுக்குண்டு தொப்பென்று நீரில் விழுவார்கள். பின்பு மறுபடியும் கிளைகளில் தாவித் தொங்குவார்கள்.

"இவர்களுள் புகுந்து தேடினபின்பு, மைதிலியைக்காணவிடில் இன்னும் கிழக்கே சென்று, க்ஷீரோதமெனும் கடலையடையுங்கள். அதன் மத்தியில் திவ்விய வாசனை நிரம்பிய வெள்ளிமயமான விருஷப மென்ற மலையொன்று உண்டு. பொன்மயமான சுதர்சனமெனும் தடாகமும் காணப்படும். அதுதான் தேவர்களும், சாரணர்களும் யக்ஷர்களும், கின்னரர்களும், அப்ஸரஸ்களும் உல்லாசமாய் காலங்கழிக்கும் இடம். அதன் நேர் கிழக்கில் சமுத்திரங்களில் சிறந்ததான ஜலோதமெனும் கடல் உண்டு. அங்குதான் கோபமே உருவாய்க் கொண்ட தணலைக் கக்கும் வடவாக்கினி என்ற குதிரையைக் காண்பீர்கள். உலகையே இரையாய்க் கொள்ளும் காலாக்கினி அது. அவ்விடத்திலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் அலறிக்கொண்டிருக்கும் மிக அற்புததான காட்சியளிக்கும் பிரதேசம் இது. இங்கு தேடி அப்பால் சென்றால், ஜாதரூபசிலம் எனப்படும் பொன்மலையைக் காண்பீர்கள். அங்குதான் புனிதமான, நீல ஆடை அணிந்த பன்னகக் கடவுளான ஆயிரம் தலைகொண்ட அனந்தனெனும் ஆதிசேஷன் இருக்குமிடம். அம்மலையின் உச்சியில் பொன்னொளி வீசிக் கண்ணைப்பறிக்கும் பனைமரம் அதன் கொடியாய் ஜோதியுடன் பிரகாசித்து விளங்கும்.

அதற்கப்பாலிருப்பதுதான் உதய பர்வதம். அதன் வேதியுடனிருக்கும் கொடிமுடியானது வானளாவி பொன்மயமாய் நூறுயோசனை விஸ்தீரணம் உள்ளதாய்ச் சூரியனைப்போல் ஜொலித்துக்கொண்டிருக்கும். அங்கும் சென்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். மகாவிஷ்ணு திரிவிக்கிரம அவதாரத்தில் முதலடியை வைத்த ஸௌமனஸம் எனப்படும் திவ்விய க்ஷேத்திரம் அதுதான். அவ்விடத்தில் சூரியன் ஜம்பூத்வீபத்தை வடபுறமாக வலம்வந்து அச்சிகரத்தை யடுத்துச்செல்வதைக் காணலாம். மிக்க தூயதான காட்சியது. வைகானஸர், வாலகில்லியர், மற்றும் தலைசிறந்த தபோதனர்கள் அங்குக் காணப்படுவர். அங்கும் சீதாபிராட்டியைத் தேடவேண்டும். அச்சிகரம் முற்காலத்தில் பூமிக்கும் விண்ணுலகுக்கும் வாயிலாக அமைந்திருந்தது. அதற்குப் பூர்வதிக்கென்று நாமதேயம். அதற்குமேல் உங்களால் செல்லமுடியாத ஒரே இருண்ட புகைபோன்ற சூனியம்தான் தோன்றும். அந்த இடம் மானிடர்களுக்குக் கட்புலனாகாது. அது தேவர்கள் வசிக்கும் இடம். வானரர்கள் போகக்கூடியது இதுவரையில்தான். இவ்வுதயமலையை யடைந்து தேடுங்கள். எல்லாம் ஒரு மாதத்திற்குள் இம்முயற்சி செய்து முடித்தாகவேண்டும். மைதிலியைப்பற்றி விஷயம் தெரிந்துகொண்டு காரியத்தை முடித்தவர்களாய்த் திரும்பி வருவீர்களென்று நம்புகிறேன். இந்திரனுக்குப் பிரியமான இத்திக்கில் தேடிவந்து கருமம் முடித்தவர்களாய்க் களிப்புற்றிருப்பீர்கள்" என்று அத்திசை பூராவும் விவரித்து விடைகொடுத்தனுப்பினான் சுக்ரீவன்.

41. தென்திசை இலங்கை நோக்கி.

சுக்ரீவன், வினதனின் தலைமைகொண்ட மாபெரும் வானர சேனையை கிழக்குத்திக்கில் வைதேகியைத் தேடிவருமாறு அனுப்பிவிட்டு, அங்கதன், அநுமன், நீலன், ஜாம்பவான், கவயன், கவாக்ஷன், மைந்தன், த்விவிதன், சரபன், கந்தமாதன் முதலிய புகழ்படைத்த வானர வீரர்களை யழைத்தான். இவர்களோ மகா சூரர்கள்; வேகமும் ஆண்மையும்தான் இவர்கள் பிறவி குணம்; வெற்றி என்பதே இவர்கள் வாழ்க்கையின் லட்சியம். அக்னியின் புதல்வன் நீலன்; வாயுகுமாரன் அநுமன்; பிரும்மதேவரின் மகன் ஜாம்பவான். பொருக்கியெடுத்த இத்தலைவர்களை ஒன்றுதிரட்டி அங்கதனை முன்னிட்டு, மதிப்பிடமுடியா திறன்கொண்ட, தேர்ந்தெடுத்த வானர சேனைகளுடன் தெற்கு திக்குச்சென்று தேட அப்பிரதேசத்தைக் கட்டங் கட்டமாக விவரித்துக் காட்டினான்.

" வானர வீரர்களே! வெற்றிபெற்று வருவீர்களாக! ராமகாரியத்தை முடிப்பதையே கருமமாய்க்கொண்டவர்களே! உங்களையே நம்பியிருக்கிறோம் என்று சொல்லவும் வேண்டுமா? நீங்கள் தெற்கு திக்கு நோக்கிச் செல்லுங்கள். தெற்கே விந்திய மலையை ஒரே பாய்ச்சலாய் அடைவீர்கள் என்று தெரியும். அதைக் கடந்தால் நர்மதை, போகவதி, கிருஷ்ணவேணி எனும் மகாநதியைத் தாண்டினால், பாவனமான வரதை, மேகலை, உத்கலை, தசார்ணம், அச்வவந்தி, அவந்தி, முதலிய நாடுகள் ஒன்றின்பின் ஒன்றாகக் காட்சியளிக்கும். இங்கு, காடுகளிலும் மலைகளிலும் நகரங்களிலும், கிராமங்களிலும் உட்புகுந்து நன்கு கவனித்து எல்லா இடங்களிலும் சீதையைத் தேடவேண்டும். இதன்பின் விதர்ப்பம், ரிஷகம், மாகிஷம், வங்கம், கலிங்கம், கௌசிகம், முதலிய தனித்தனி நாடுகளைக் காண்பீர்கள். நுட்பமாயும் விரைவாகவும் ஓரிடமும் விடாது தேடிப் பார்த்தாகவேண்டும்.

" இதன்பின் தண்டகாரணியத்தைக் கடந்து கோதாவரி நதியைத் தாண்டி ஆந்திர நாட்டைப் பரிசோதியுங்கள். அப்புறம் கவனிக்க வேண்டியவை புண்டரம் (கிழக்குதெக்கணம். வடக்கு கன்னடம் ஆகிய நாடு) சோளதேசம், பாண்டியநாடு, கேரளப்ரதேசம் முதலிய நாடுகள்.

[ஸ்ரீமத் வால்மீகி ராமாயண காலத்திலேயே இருந்துவரும் சோளதேசம், பாண்டியநாடு, கேரளப்ராந்தியம், ஆந்திரகோணம் எத்தகைய புராதன மானவை என்று புலனாகின்றன!]

இவைகள் நீர்வளம் நிலவளமமைந்த செழிப்புற்றுத் திகழும் திவ்விய ப்ரதேசங்கள். சந்தனம், மா, புளி, ஆல், அரசு, பனை, வாழை, அகில், கமுகு, முதலிய உயர்ந்த மரக்காடுகள், தாதுக்கள் பொருந்திய அயோமுகம் முதலிய மலைகள் இங்குண்டு. சந்தனங் கமழும் சிறப்புக்கொண்ட

இப்பிரதேசம் முழுவதும் தேடத்தக்கது. அங்கே அழகிற் சிறந்த புனிதமான மனங்களிக்கும் அப்ஸரஸ் ஸ்த்ரீகள் பூஜிக்கும் காவேரிநதி காட்சியளிக்கிறாள்! அவைவிட்டு இன்னும் தெற்கே செல்லுங்கள். அங்கே அழகுவாய்ந்த அமுதம்பொழியும் பழ மரங்களடங்கிய, அத்தி, பலா, கமுகு, ஜாதிக்காய் காடுகள் பரந்த மலைத் தாழ்வரையைக் காண்பீர்கள். அது மலயமலையின் தாழ்வரை. (தென்காசி எனும் பிரதேசம்போலும்!) நந்தவனங்களும் காய் கனிகள் கொழிக்கும் இயற்கை வனப்புவாய்ந்த வனந்தரம் அது. அம்மலையின் உச்சியில்தான் சூரியனை நிகர்த்த காந்தியுடன் அகத்திய மாமுனி வீற்றிருப்பர். அப்பெரியாரைத் தரிசித்து, பயபக்தியாய் பணியுங்கள். அம்மகாத்மாவினிடம் உங்கள் லட்சியத்தைத் தெரிவித்து அவருடைய அருள்பெற்று, பின்பு அகண்டமானதும் கம்பீரமானதும் மகா புனிதமானதுமான தாம்பிரபர்ணி என்ற திவ்விய நதியை யடையுங்கள். சந்தன வனங்கள்கொண்ட மனோரம்மியமான மணல் திட்டுகள் அங்குண்டு. தாமிரபரணியைக் கடந்து நேரே தெற்கில் சென்றதும் பொன்மயமான முத்திழைத்த பாண்டியநாட்டு நாயகமாகிய கபாடபுரத்தைக் காண்பீர்கள். அந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில்தான் தெற்குச் சமுத்திரம் ஆழ்ந்து அமர்ந்து அரசாளுகிறது.

அக்கடலினுள் அழுந்தியிருப்பது மகேந்திரம் எனும் ஓர் பர்வதம். அதற்கு நூறுயோஜனையில் எவராலும் அடையமுடியாத பயங்கரமான ஒரு தீவு காணப்படும். இதை எப்படியாவது தேடிக் கண்டுபிடிக்கவேண்டும். மிக்க பிரயாசையும் கவனமும் செலுத்தி ஓரிடமும் விடாதபடி இந்தத் தீவைத் துருவிப்பார்க்கவேண்டும். ஏனெனில் அந்தத்தீவுதான் இந்திரனின் ஆற்றல்கொண்ட கொடிய ராக்ஷஸ அரசனை கொல்லப்படவேண்டியவனை ராவணனின் இருப்பிடம்.

[ராவணன் வசிக்குமிடம் இன்னதென்றறிந்த சுக்ரீவன் ராவணன் எங்குற்றானென்றும் சீதையை எவ்விடம் கொண்டுபோனானென்றும் தனக்கு தெரியாதென்று ராமலட்சுமணர்களை முதல்முதல் கண்டவுடன் சொன்னது பொருத்தமாகுமோவென்ற பிரச்னை யெழுவது சகஜமேயெனினும், கூர்ந்து நோக்குங்கால் அவன் உரைத்தது பொய்யல்லவென்று நன்கு விளங்கும். ராகவன் மனைவியை இழந்து சோகத்தில் வாடுகிறான். அவளை அபகரித்துப் போன கொடிய அரக்கனைக் கண்டு அவனை மாய்க்கக் துடிதுடிக்கிறான் ரகுநாதன். இவனுக்காக அஞ்சி ராவணன் அச்சமயம் எங்கு ஒளிந்து இருக்கிறானென்று சுக்ரீவன் திட்டமாக எடுத்துரைக்க முடியாது. களவாடின பொருளைக் கள்வன் தன் வீட்டிலோ வேறு எங்கோ, வைத்து இருக்கலாம்; மேலும், சுக்ரீவன் அங்கதன் முதலிய வானரத் தலைவர்களுக்கு யாத்திரை மார்க்கத்தைக் கவனப்படுத்தும்போது, இந்தத் தீவைப்பற்றி மாத்திரம் சொல்லிவிட்டு இவ்விடத்தில் தேடினால் போதும், என்று சொல்லிவிடவில்லை. மேலும், அதற்கப்பாலும் தேடும்படியும் எச்சரித்து அனுப்புகிறான். ஆகவே, ராவணன் இந்தத் தீவிலேயே இருப்பானென்றும், அங்கேயே ஜானகியையும் வைத்திருப்பான் என்றும் உறுதி கொண்டு இருப்பதாகத் தெரியவில்லை. சகஜமாக, அரக்கவரசன் வசிக்குமிடம் அது என்றுதான் சுக்ரீவன் அறிவான் என்று தெளிவாகிறது. எல்லாத் தேசங்

களையும் நன்கறிந்தவன், நாடுகளின் பெயர்களையும், நதிகளின் தன்மைகளையும், அந்தந்த ஊர்களில் வசிப்பவர்களின் குண குணங்களையும், தெரிந்தவன். இப்பொழுது அவன் இத்தீவின் பெயரையாவது அது இலங்கை என்றும், அது எப்படிப்பட்டதென்றும் விவரிக்கிறதில்லை. அதைப்பற்றியும் அதன் பெயரைப்பற்றியும் அவன் அநேகமாக அறியாதவன்தான் என்று புலனாகிறது. ஆகையால் அவன் மெய்யுரைக்கவில்லை என்பது ஏற்றதாகுமா?]

சுக்கிரீவன் இன்னும் வானர வீரர்களுக்குச் சொல்லிக்கொண்டே போகிறான். "அந்த தீவில் ஊசிமுனை நுழையும் துவாரங்கூட விடாது, கொல்லப் படவேண்டிய அக்கொடிய அரக்கனையும் சீதாபிராட்டியையும் வெகுகவனமாய்த் தேடுங்கள். அங்குகாணவிடில், இன்னும் தெற்கே செல்லுங்கள். ஆனால், இதைக்கவனத்தில் வைக்கவேண்டும். அக் கடலின் நடுவே, ஒரு பயங்கரமான, ஆபத்தே உருவாயிருக்கும், அங்காரகி யென்ற ஓர் கொடியஅரக்கி கிடக்கிறாள். அவளிடத்திலுள்ளசக்தி மிக அற்புதமானது அவள் மேலே ஆகாயத்தில் செல்லும் ஜீவராசிகளின் நிழல்களைப்பற்றி யிழுக்கும் மாயச் சக்தி பெற்றிருக்கிறாள். நிழலை பற்றியிழுத்து நிழலுடைய உருவத்தை பிடித்துத் தின்றுவருகிறாள். இதைப்பற்றி நீங்கள் ஜாக்கிரதை செலுத்தவேண்டும். ஆனால் பயங்கொள்ள வேண்டாம். எல்லா விடங்களையும் துருவிப் பாருங்கள். மனச்சோர்வு கூடாது. அளவிடற்கரிய ஒப்பற்ற பராக்கிரமசாலிகள் நீங்கள். உங்களுக்குத் தோல்வி என்பதே கிடையாதென்பது எல்லோருமறிந்த விஷயம். ஆகையால் புருஷோத்தமனின் பிரிய மனைவியைக் கட்டாயம் கண்டு தெரிந்து கொள்ளுவீர்கள் என்பதில் சந்தேகமென்ன?

"இத்தீவைத்தேடி முடித்து அங்குத் தேவியைக் காணவிடின் இன்னும் நூறு யோஜனை தெற்கே சென்றால், சித்தர்கள், சாரணர்கள் பூஜிக்கின்ற மிக்க மங்களகரமான புஷ்பிதகம், எனப்படும் ஒரு திவ்விய மலையைக் காண்பீர்கள். அம்மலையையும் தெற்கு சமுத்திரத்தால் சூழப்பட்டதே. அது சந்திரன் சூரியன் ஒளி கொண்டது. வானளாவும் சிகரங்கள். அதன் சிகரம் ஒன்றில் சூரியனொளி எப்பொழுதும் ஜ்வலிக்கின்றது. மற்றொன்றில் சந்திர ஒளி வீசுகிறது. அது மிகவும் புனிதமானது. நன்றி கெட்டவர்களுக்கும், பொய் பேசுபவர்களுக்கும், நாஸ்திகர்களுக்கும் அந்த இடம் கட்புலனாகாது. நீங்கள் அங்கடைந்ததும் அப்புண்ணிய க்ஷேத்திரத்தைத் தலையால் வணங்குங்கள்! பின்பு அங்கும் நன்கு தேடுங்கள். அதன் பின் இன்னும் தெற்கில், மிகக் கடுமையான, ஆவி பதறவைக்கும் ஓர்வழி காணும் அதன் பதினான்கு யோஜனைகளுக்கப்பால் சூரியவான் என்றொரு மலை தோன்றும் அதையுங்கடந்து சென்றபின், நினைத்த எண்ணங்களை நிறைவேற்றும் சக்தி வாய்ந்ததும், எக்காலத்திலும் மனக்களிப்பளிக்கும் மரங்களடர்ந்த, வைத்யுதமென்ற மலை ஒன்றுண்டு, அங்கே கிடைக்கும் காய்கனிகள் கிழங்குகளின் ருசியின் இனிமை எவராலும் வர்ணிக்க முடியாததற்கிணை ஒன்றே ஒன்றுதான். அது அங்கு கிடைக்கும் தேன்தான்! அங்கும் நன்கு தேடுவீர்களாக. அங்கும் உங்கள் முயற்சி பலனற்றதானால், இன்னும் அப்பால் தெற்கே செல்லுங்கள்.

" அப்போது என்றும் கண்டிருத, மனமும் கண்ணும் பூரிக்கவைக்கும் ஒரு உன்னத உணர்ச்சி உங்களிடம் படர்ந்து பரவும் அவ்விடம்தான் புனிதமான குஞ்சரம் என்ற மலைப்ரதேசம் அங்கேதான் விஸ்வகர்மாவினால் அகஸ்திய மாமுனிக்காகச் செய்யப்பட்ட ஓர் தனிப்பெரும் மாளிகை உளது பொன்னாலிழைக்கப்பட்டு, இரத்தினங்களால் பொலிவுண்டு, விசாலமாய்ப் பரவி, ரம்மியமாய்த் திகழ்ந்து வருபவரை வரவேற்க, அமைக்கப்பட்டு இருக்கிறது. அவ்விடத்திலேயே, பாம்புகளின் வாசமான போகவதி என்ற நகரமிருக்கின்றது. அது புகமுடியாதது, கடும் விஷமுள்ள சர்பங்கள் அந்நகரத்தைப் பாதுகாக்கின்றன. அங்கேதான் வாஸுகி என்ற சர்ப்ப ராஜன் வசிக்கிறான். அவ்விடத்திலும் நம் தேவியைத் தேடவேண்டும். அதை அடுத்துச் சில தேசங்கள் இப்போது மறைந்துவிட்டன ! இதைக் கடந்துச் சென்றால், கோசிர்ஷம் பத்மகம், ஹரிச்யாமம், என்ற சந்தனம் உற்பத்தி ஆகும் ரிஷபம் என்ற மலை புலனாகும். கொடியவர்களான ரோஹிதர்கள் என்ற கந்தர்வர்கள் அதைக் காத்து நிற்கிறார்கள்.

" அற்கப்பால்தான் பூமியின் எல்லை காணும். அங்கேதான் புண்ணிய ஆத்மாக்கள் வசிக்குமிடம். அத்துடன் உங்கள் யாத்திரை நிற்கவேண்டும். அங்கிருந்து துவங்குகிறது பித்ருலோகமும் யமனுடைய ராஜதானியும். காரியத்தை முடித்து ஜயங்கொண்டு வருவீர்களாக" என்று ஆசிகூறி அனுப்பினான்.

42. குடதிசை மேருகாட்டி.

அங்கதனை முன்னிட்டு, வானரப் பிரமுகர்கள் மிகவும் ஆற்றல்கொண்டு உற்சாகம் மிகுந்து துள்ளித் தாவி தெற்குநோக்கிச் சென்றனர். அந்த உணர்ச்சி மற்ற எல்லோரையும் பற்றியிழுத்து எல்லோரும் முன்னணியில் வந்தனர். ஆனால் சுக்ரீவன் தானே முன்வந்து தாரையின் தந்தையும் தனது மாமனுமான சுஷேணனை நோக்கி அஞ்சலி செய்துகொண்டு அணுகினான். விக்கிரமமும் வீரமும் படைத்த தலைவன் அவன். அஞ்சா நெஞ்சுடையோன் அசகாய சூரன் ; அவனைச் சார்ந்து, மரீசியின் மகனான மாரீசி என்ற கீர்த்திபெற்ற வானரத் தலைவனும், இந்திரனின் ஆற்றலும், வைனதேயனின் வேகம் கொண்டவனுமான அர்சிஷ்மான் என்பானும், அர்ச்சிமாலர்கள் என்ற ரிஷி புத்திரர்களும், அவனைச் சூழ்ந்துநின்றனர். இவர்களை நோக்கி வானர மன்னன் பேசவாரம்பிக்கிறான் :—

" வானரோத்தமர்களே ! இரண்டு லட்சம் வீரர்கள் அடங்கிய சேனையைக்கொண்டு சுஷேணனின் தலைமையில் நீங்கள் மேற்குத் திக்கில் விரைந்துச் செல்லுங்கள். எல்லாவிடங்களிலும் சீதாபிராட்டியையும் கொடிய அரக்கனான ராவணனையும் தேடி கண்டுபிடியுங்கள். நீங்கள் போகும்போது

தென்படும் தேசங்கள் ஸௌராஷ்டிரம், பாஹ்லிகம். மாளவம், சூரம், (சூரத்-பம்பாய் பிராந்தியம்), குக்ஷி (கட்ச்), பீமம் (ராஜபுதனம்). முதலிய தேசங்கள் என்பவை. மிக்க வளம்பெற்ற நாடுகள் அவை. அநேக உலோகங்கள் பொதிந்தவை; செழித்தோங்கும் செல்வத்தினர் வாழும் நாடுகள்; வானளாவும் உத்தியான உப்பரிகைகளும் வனங்களும் கொண்டவை; நேர்த்தியாயும் விசாலமாயுமுள்ள ஏரிகள், குளங்கள் அடங்கியவை; நேரே ஓடும் நதிகளுமுண்டு. இங்கு ரிஷிகளின் ஆச்ரமங்கள் பலபல. இங்கும் வனக் குகைகளிலும் நகரங்களிலும் ஓரிடம் விடாது நன்ருய்த் துருவித் தேடுங்கள். இங்கெல்லாம் உங்கள் முயற்சி பயனில்லையாயின், இன்னும் மேற்கே சென்ருல் நீரற்ற பாலைவனமும் மலைப்ரதேசமும் காணப்படும். (தார்பாலைவனம்) இவைகளைக் கடந்து மேற்கு மலைத்தொடரை அடையுங்கள். அங்கே தேடவேண்டிய அநேக குகைகளும் பொய்கைகளும் மலை உச்சிகளும் இருக்கின்றன. இங்கே அந்த ராவணன் ஒளிந்திருக்கிருனே தேவியை மறைத்து வைத்திருக்கிருனே வென்று தேடிப்பாருங்கள்.

" பின்பு மேற்குக் கடல் சென்று வலைபோடுங்கள். ஓரிடமும் விடாது பார்க்கவேண்டும். இதையொட்டி நைகரங்கள், முரசி, ஜபி, அவந்தி, அங்கலோபம், அலக்ஷிதம், முதலிய அரும்பெரும் இயற்கைத் துறைமுகங்கள், அவைகள் சமுத்திரத்திலுள்ள மலைப் பாறைகளால் ஆகியவை. இங்கேயும் இதைச்சார்ந்த குகைகளிலும் உங்கள் கவனஞ் செல்லட்டும். இவைகளைக் கடந்துச் சென்ருல், சிந்துநதி கடலில் கலக்குமிடத்தில் ஹேமகிரி என்ற பெரியதொரு பர்வதம் தோன்றும். அக்குகைகளில், பறக்கும் சக்திவாய்ந்த சிங்கங்களிருக்கின்றன என சொல்லக் கேட்டிருக்கின்றேன். மிகக் கொடிய அபூர்வமான மற்றும் பல ஜந்துக்களும் அவ்விடமுண்டு. மாயமான குகைகளுண்டு. விதவிதமான தாழ்வரைகளும் பொய்கைகளும் புதர்களும் அங்குண்டு. இவைகளைப் பாராமல் அவற்றை விட்டுவிடாதீர்கள்.

" அங்குத் தேடியும் இல்லையென்ருல், இன்னும் மேற்கில் சென்றபோது கடலின் நடுவே நூறு யோஜனை கொண்டு கண்ணைப்பறிக்கும் பொன்மயமான பாரியாத்ரமெனும் பர்வதம் வானெழுந்து தோன்றும். அதை மிக்க பலிஷ்டர்களும், கொடியவர்களுமான இருபத்துநான்கு கோடி கந்தர்வர்கள் பாதுகாத்து வருகின்றனர். இவர்கள் ஒன்றுசேர்ந்தால் உலகுக்கு வேறு அழிவு வேண்டியதில்லை. இங்கே மிக்க நுட்பமாகவும் தந்திரமாகவும் நீங்கள் நடந்துகொண்டு காரியத்தை நடத்துங்கள். அதன் அருகே வஜ்ர உறுதி பெற்ற வஜ்ரமென்ற மலையொன்றுண்டு. அதிலுள்ள அநேக குகைகள் உங்களால் தேடத்தக்கவைகளே.

" வானர வீரர்களே! இங்கும் உங்கள் லட்சியம் பயன்பெருவிட்டால் இன்னும்மேற்கே செல்லுங்கள். கடலின் கடைசிப்பாகமது. அங்கு சக்ரவான் என்று பெயர்கொண்ட பர்வதம் கண்ணைக்கவரும். அங்குதான் விச்வகர்மா ஸகஸ்ராரமென்ற சக்கிரத்தை, நிருமாணித்திருக்கிருர். அங்கேதான் ஸ்ரீமகாவிஷ்ணு, பஞ்சஜனன், ஹரக்ரீவன் என்ற தானவர்களைக் கொன்று உலகவ்யாபிகளைப் போக்கடித்து, சக்கிரத்தையும் சங்கையும் கையில் தரித்து

வாகைசூடி, வெற்றி விலாசத்தில் விளங்கினர். இதற்கப்புறம் அறுபது யோஜனையிலிருக்கும் வராகமென்ற பர்வதம் விளங்கும். அதில் பொன்னால் நிறுவப்பட்ட பிராக்ஜோதிஷமெனும் நகரம் உண்டு. அங்குதான் துஷ்டனான நரகன் என்ற அசுரன் இருக்கிறன். இங்கு உங்கள் முழு ஜாக்கிரதையும் செலுத்த வேண்டும். பலன்காணவில்லையெனில், பகாசுரனைக் கொன்று இந்திரன் முடிசூடின ஸர்வ ஸௌவர்ணம் என்னும் மலையடைந்து தேடுங்கள். பின்பு மலைக்குன்றுகளை யடைந்து அவற்றின் நடுவிலுள்ள மேரு என்னும் பொன்மலையையும் அதிலுள்ள மேருகிரி, அஸ்தகிரி, என்ற விடங்களிலும் குகைகளிலும் கவனித்துத் தேடவேண்டும். அங்கிருக்கும் மேரு ஸாவர்ணி என்ற மாமுனியைப் பணிந்து, உங்கள் லட்சியத்தைச் சொல்லுங்கள். மேற்கு திக்கு எல்லையான இந்த அஸ்தகிரிக்கப்புறம் உங்களால் செல்ல இயலாது. கருவிருள் சூழ்ந்து, புகை எழும்பும் காண முடியா பிரதேசமது. ஆகவே, இவ்வளவு தூரம் சென்று இடைவிடாது நூல்நுழையு மிடமின்றி, எங்கும் தேடிக்கண்டுபிடித்து வெற்றியுடன் வாருங்கள்'' என்று உற்சாகத்துடன் அனுப்பினன்.

43. வடதிசை இமயம்தாண்டி.

இவ்வாறு ஸுஷேணனை முன்னிட்ட வாரத் தலைவர்களுக்கு வடக்குத் திக்கு முழுவதும் தேடி வரும்படி நியமித்துவிட்டு சுக்ரீவன் வீரனான சதபலி என்ற வானரத் தலைவனை முன்னுக்கழைத்தான்.

"அப்பனே! லட்சம் வானரச் சேனையை அழைத்துக்கொண்டு நீ வடக்குத்திக்கில் செல்லுவாயாக. உன் அமைச்சர்களான யம புத்திரர்களை கூடஅழைத்துப்போ. ஸ்ரீ ராமகாரியத்தை ஈடேற்றி வைப்பதே நமது கடமையாகுமென்பதை மறவாதீர்கள். இதுவே எனது வாழ்க்கை லட்சியம். என் நலனைக்கோரும் உங்களால் ராமச்சந்திரனின்தேவியை எவ்விதம் தேடி கண்டுபிடிக்கமுடியுமோ அவ்வித முயற்சியைச் செய்யத் தவறமாட்டீர்கள் என்பது என் உறுதியான நம்பிக்கை. ஆகையால் இப்புனித இயக்கத்தில் இறங்கி மேலே விரைந்துச் செல்லுங்கள். இங்கிருந்து நேரே மிலேச்சநாடு, புளிந்தநாடு, சூரஸேன நாடு பாரதநாடு, மத்ரகம், பிரஸ்தலம், குரு, கம்போஜம், யவனம், சகா, ஆரட்டகம், பாஹ்லீகம், ரிஷிகம், பௌரவம், டங்கணம், சீனம், பரமசீனம், நிகாரம், தரதம் முதலிய நாடுகள் ஒன்றன் பின் ஒன்ருக நன்ருகத் தேடப்படவேண்டும். பின்பு ஸோமாச்சரமடைந்து துருவிக் கடைந்து, காலம் மலையை யடைந்து, குகைகளெல்லாம் ஆராய்ந்து பார்த்துப் பொன்வயல்கொண்ட சுதர்சன பர்வதம் சேருங்கள். அதன்பின் தேவசகம் என்ற மலையில் தேடிப்பாருங்கள். இம்மலைப்பிரதேசத்தில் உங்கள்

பிரயாசை பலனற்றால், அதைத்தாண்டி இன்னும் வடக்கே போனால் நூறு யோஜனைகொண்ட மலை; மரம், ஆறுகள் எதுவுமின்றி ஜீவராசிகளே இல்லாத சூனியமான சமவெளி கிட்டும். அதை விரைவில் தாண்டிக் கைலாச மலையை அடையுங்கள். உடனே உள்ளம் களிப்பீர்கள். அங்கே உங்கட்குப் புனிதமான பரவச உணர்ச்சி எழும். தங்கம், வெள்ளி எங்கும் சிந்தி நவமணிகள் குவியல் குவியலாகக் காணப்படும்.. அங்குதான் குபேரன் மாளிகை. கொடிய அரக்கனை ராவணனின் சகோதரன் அவன். அங்கும் ஊசி தேடுவதுபோல் தேடவேண்டும். பின்பு 'கிரௌஞ்ச'மென்ற மலையையடைந்து, அதன் குகைகளில் புகுந்து பாருங்கள். மகாத்மாக்களான ரிஷிகளும் தேவர்களும் வசித்துவரும் சுந்தரப் பிரதேசம் அது. அங்கு வெகு ஜாக்கிரதையாயும் மரியாதையுடனும் நடந்துகொள்ள வேண்டும். அதன் உச்சியிலும் தேடிவிட்டுக் காமபர்வதஞ்சேர்ந்து, சுற்றித் தேடி அங்குள்ள மானஸ ஸரஸ் பொய்கையையும், புகுதற்கரிய குகைகளையும் கவனமாய்க் கண்டு தேடி, அதற்கப்பாலுள்ள மைநாக பர்வதமடையுங்கள். அங்கு மயன் என்ற தானவனின் மாளிகையும், கின்னர மாதர்கள் இருப்பிடத்தையும் கவனியுங்கள். பின்பு, மகா புண்ணியஸ்தலமானதும், சித்தர்கள், வைகானஸர்கள், வாலகில்யர் ஆகிய சிறந்த தவசிகளின் நிலையமானதுமான சித்தாசிரமம் காணும். அவ்வுலக உத்தம மக்களைச் சாஷ்டாங்கமாகப் பணிந்து, பயபக்தியுடன் உங்கள் காரியத்தை அவர்களிடம் தெரியப்படுத்துங்கள். அவர்களைக் கேட்டறிந்த பின்னர், குபேரன் வாகனமாகிய 'சார்வபௌமம்' என்ற யானை வசிக்கும் இடத்தையும் அங்குள்ள பொய்கையையும் தேடிப் பார்த்துவிட்டு சுயம் பிரகாசமாய் விளங்கும் நிர்மலமான சமவெளியைத்தாண்டி, புண்ணியசாலிகளின் வாசஸ்தலமான குருதேசம் சேருங்கள். அங்கே விதவிதமான உணர்ச்சி எழுப்பும் நதிகளுண்டு. அவ்விடத்துள்ள மரங்கள், கற்பக விருக்ஷங்கள்போல் எதையும் கொடுக்கவல்லவை. அங்கு விண்ணுலகத்தவர் வந்து வசிப்பர். சந்திர சூரிய ஒளி அவ்விடத்திற்கு வேண்டியதில்லை. சுயம் பிரகாசத்திலேயே அப்பிரதேசம் திகழ்ந்து விளங்குகிறது. இதையும் தேட வேண்டும். இதற்கப்பாலிருப்பதுதான் வட சமுத்திரம். அதன் நடுவே நிற்பதுதான் சோமகிரி என்ற புண்ணிய க்ஷேத்திரம். சிவபெருமான் பதினொரு ருத்ர மூர்த்திகளாய் வீற்றிருக்குமிடம். இதற்கு மேல் உங்களால் செல்லமுடியாது. வீரர்களே! இப்பிரதேசங்கள் பூராவும் சிரத்தையுடன் தேடிக் கண்டுபிடித்து வெற்றியுடன் திரும்பி வாருங்கள்" என்று முடித்தான், சுக்ரீவன்.

44. தேவிக்கு கணையாழி அனுப்பியது.

இவ்வாறு ஒவ்வொரு திக்குக்கும் தகுந்த வானரப் படையை வகுத்து ஆங்காங்குள்ள பிரதேசங்களையும் வருணித்துக்கூறி, அங்கு வசிப்பவர்களைப்

பற்றியும் இயற்கை அமைப்பைப் பற்றியும் விவரித்துரைத்து, சுக்ரீவன் ராம காரியத்தில் முழு மனதுடன் ஈடுபடுகிருன். இவன் ஊக்கத்தைக்கண்ட வானரத்தலைவர்களும், சேனைகளும் லட்சியத்தை முடித்துக் காட்ட உற்சாகங்கொண்டு வெளியேற ஆயத்தமாயினர்.

[திக்குகளைப் பற்றிய சுக்ரீவனின் விவரணம் சிறந்த தத்துவத்தை சூசிப்பிக்கிறதுபோலும்! ஒவ்வொரு திசையின் அமைப்பையும் அங்கு வசிப்பவர்களின் தன்மையையும் அவன் எடுத்துக் காட்டுகிருன். உத்தமர்களான ரிஷிகளும் அதமர்களான அரக்கர்களும் அங்கங்கே காண்கிருர்கள். ஓரிடத்தில் மகா புனிதமான தேவர்கள், தவசித்தியடைந்தவர்கள், நல்லொழுக்கங்கொண்டு நல் வினைகளிலேயே திளைத்துள்ளனர். அங்கேயே இன்னெரு பக்கம் அதே திசையில் கொடியவர், இரக்கமில்லாத அரக்கர், கந்தர்வர்களாயினும் ராட்சதர்கள், (பாரியத்ரிப்ரதேசம், இதற்கு உதாரணம்) இங்கு மாமுனி, தவசித்தி பெற்று, அங்கு அசுரன் அட்டகாசம்; இத்தகைய மாறுபாடுகள், விரோதமுற்ற வேற்றுமைகள், இயற்கை அமைப்பே போலும்! எஜ்ஜீவனுக்கும் தன் வாழ்க்கை வகுக்கும் சுதந்திரமுண்டு; தன்னறிவிற்கேற்ப அச்சக்தி அமையப் பெறுகிறது. ஓர் இலட்சியத்தை குறி வைத்துப் போகிறவன் கால்கள் ரரஜவீதியில் அழைத்துச் செல்கின்றன. எதேச்சையாய்த்திரிபவன் கால்கள் சேற்றில் விழுந்து செல்கின்றன! விளைவு, ஒருபுரம் தீயோர், மறுபுறம் நல்லோர். இப்படிப்பினையைக் கற்பிக்கிறது போலும், சுக்ரீவனின் பூகோள விரிவுரை!]

சுக்ரீவன் ஆற்றல் கொண்டு ராம காரியம் வெற்றி காணத்துடித்து நிற்கும் வானரப் பெரியார்களைக் கவனிக்கிருன். ஆம்! எங்கும் உற்சாகம்; எப்படியும் செய்து முடிக்க வேண்டுமென்ற உறுதியும் விரைவில் வெற்றி பெற்றுத் திரும்பவேண்டுமென்ற ஆர்வமும், பொங்கி விளங்கின. அவன் கவனிக்கிருன். அநுமன் எளிமையுடன் தலை குனிந்து நிற்கிருன். அவனது வீரியத்தையும் வேகத்தையும் நன்கறிந்த சுக்ரீவன் இவனே ராம காரியத்தைச் சரிவரச் செய்து முடிப்பவன் என்றுணர்ந்து, அநுமனைச் சபை முன்னர் அழைத்தான்.

"வானரர்களில் உத்தமனே! வாயுவின் புதல்வனே! உனது வீரப் போக்கும், வேகமும் இப்புவியில் வேறு எவரிடம் உண்டு? மேகமும் உனது வேகங்கொண்டதன்று என்று நாங்களனைவரும் நன்கறிவோம். நீ இதை மறந்தனையா? வாயுவின் வேகமல்லவா உனது அபூர்வ பிரத்யேக பாத்தியதை! நீரிலும், வானிலும், அனாயாசமாய்ப் பாய்ந்து பறந்து, செல்லும் உனது கதியை நினைப்பூட்டவும் வேண்டுமா? நீ புகாத இடமும் அறியாத பிரகிருதிகளும், உண்டோ! வானர வல்லவ! வரையறை யற்ற வீரம் படைத்தவனே! உனது கதியும், வேகமும், ஆத்ம சக்தியும், எதையும் எளிதில் முடிக்கும் பேராண்மையும், உன்னை உனது தந்தை வாயு பகவனுக்கு நிகராக்குகின்றனவென்பது நாங்கள் அறியாததா? உனது ஆற்றலுக்கு மாற்றென்று உண்டோ? ஆகவே, பிராட்டியைத் தேடி கண்டு பிடிப்பது உன் ஒருவனாலன்றோ ஆகவேண்டும்! எடுத்த கருமத்தை முடித்து வைக்கும் வல்லுனன் நீ, கலைஞனும் நீயே. பலம், புத்தி, பராக்கிரமம், தேச

காலத்துக்குகந்தபடி செயல்களைச் செய்து முடித்தல், நீதி நெறிமுறை பிறழாமை, ஆகிய இவ்வொவ்வொன்றும் உன்னிடமே குடிகொண்டு இருக்கின்றன என்பதும் நாங்கள் அறிந்ததே. ஆகவே, ஆஞ்சநேய! நமது அண்ணலின் ஆசிகொண்டு அவன் அலுவலின் வெற்றியை காண வைப்பவன் நீயே தவிர, மற்றெவருமில்லை யென்பது எங்கள் எண்ணமும் நம்பிக்கையும் நீயும் அதை மறக்காமலிருப்பாயாக'' வென்றான்.

அருகிலிருந்த ரகுநாதன் மாருதியைக் குளிரக்கடாட்சிக்கிறான். உடனே அனுமனும் வெற்றி உணர்ச்சி உள்ள முழுவதிலும் பரவுவதை உணர்கிறான். மனமும் முகமும் மலர்கின்றன. சரி, அரசனால் பிரத்யேகமாகத் தெரிந்தெடுக்கப்பட்டவன், காரியத்தை நிறைவேற்றுபவன்தான் என்று நிச்சயமடைந்து அவனைத் தன்னிடமழைத்துப் பேசலுற்றான்.

"வானரோத்தமா! இது என் கணையாழி, இதனை நீ எடுத்துச் செல்வாயாக. இது உன்னை என்னிடமிருந்து வந்தவனாகவே அறிவித்து ஜானகியின் சந்தேகத்தை நிவர்த்தித்து உறுதியளிக்கும். வீரனே! சுக்ரீவன் உன்னிடத்தில் கொண்டிருக்கு மதிப்பும், உனது மனோ திடமும், ஆற்றலும், ஆண்மையும், எனது காரியம் சித்தியடைவதை நன்கு அறிவிக்கின்றன. இந்தா, என்பெயர்புனைந்த இக்கணையாழியை என்னிடமிருந்து வருபவனின் அடையாளமாகச் சீதையிடம் எடுத்துச் சென்று வெற்றியுடன் திரும்பி வருவாயாக'' என்றான்.

மனோ வேகமும் பின்னிடும் வேகவானான அக்கவித்தலைவன் அந்த மோதிரத்தை ராமன் கையினின்றும் பெற்று, அஞ்சலி செய்து அதைத் தன் தலைமேல் இருத்தி ராகவனின் பாதம் பணிந்து கடவுளின் அருள் பெற்றவனாகி, நூற்றுக்கணக்கான நட்சத்திர கூட்டங்களிடையே ஒளி வீசும் வெண்மதிபோல் விளங்கினான். ரகுநாதனும் அவனுக்குக் கடைசியாக ஆசி கூறி," வாயு குமார! வல்லவ! வீரவிக்கிரமா! உன்னை நான் நம்பி யிருக்கிறேன் என்பதை மறவாதே! என்ன செய்தால் ஜானகியைக் காண்பாயோ, அதை செய்து முடித்து அவளைக் கண்டுபிடித்து வெற்றியுடன் திரும்பி வருவாயாக'' வென்று அருள் மொழி அளித்தான்.

---

45. திருவருள் தேடும் தூய இயக்கம்.

அநுமன் ராமபிரானிடம் கணையாழியைப் பெற்றுக்கொண்டு அங்கதனை முன்னிட்டுக் காத்திருந்த வானர சேனையை அடைந்து, ஜாம்பவான் முதலிய பெரியோர்களுடன் வந்து நின்றான். நான்கு திக்குகளிலும் ஊடுருவித் தேடும் சேனைகள் ஆயத்தமாகவே, சுக்ரீவன் எல்லோரையும் நோக்கிப்

பேரொலி பெருக்கி, "வாநர வீரர்களே! ஸ்ரீ ராமனுடைய காரியத்தை நிறைவேற்றத் துடிக்கும் உங்களுக்கு அதிகம் சொல்லவேண்டியதில்லை. வெற்றிபெற்று வாருங்கள். ஒன்றுமாத்திரம் கவனத்தில் வையுங்கள், ஒரு மாதத்திற்குள் திரும்பவேண்டுமென்பதை மறக்காதீர்கள். தவணையை மீறினால் கடுந்தண்டனை அடைவது நிச்சயம். வீரத்துடனும் தீரத்துடனும் சென்று வாருங்கள்" என்று விடைகொடுத்தனுப்பினான்.

உடனே ஆகாயம் முழுவதும் விட்டில் பூச்சிகள்போல் கோடிக் கணக்கான வானரங்கள் புழுதியுடன் பரவிப் பாய்ந்தன. இவ்வற்புதமான காட்சியைப் பெரு மகிழ்ச்சியுடன் கண்ட ராம லட்சுமணர்கள் வெகுநேரம் அங்கேயே தங்கி, பின்பு தங்கள் வசிப்பிடமான பிரஸ்ரவண மலைக்குகையை அடைந்தார்கள்.

முதலில் சதபலியும் அவன் சேனையும் வடக்கு நோக்கிப் புறப்பட்டன. புழுதிபடியும் முன்னரே வினதன் பூர்வ திக்கிலும், சுஷேணன் மேற்கு நோக்கியும், அங்கதன் தெற்கு நோக்கியும் மாபெருஞ் சேனைகளுடன் மும்முரமாய்க் கொம்மாளமிட்டுத் தாவி மறைந்தனர். "சீதாதேவியைக் கொண்டுவருவோம். ராவண அரக்கனை மாய்ப்போம்" என்றும், "கவலையை விடுங்கள் இங்கேயே தங்கிச் சுகித்திருங்கள். நான் ஒருவனே இதோ ஆகாயத்தில் பறந்தோ, பாதாளத்தில் நுழைந்தோ, கடலைக் கடந்தோ மலையைப் பிளந்தோ உட்சென்று தேடித் தேவியைக் கொண்டுவருகிறேன். ஐயம் வேண்டாம். அரக்கப் பதரை அழித்துத் தள்ளுவேன். கோட்டையை இடிப்பேன். திமிர்பிடித்த அத்திருடனின் தலையைத் திருகி எறிவேன்" என்றும் வீர ஒலி எழுப்பி, பொங்கிப் பரவும் ஆற்றலின் புயலில் ஒவ்வொருவரும் வாயுவேகத்தில் ஒருவரை யொருவர் போட்டியிட்டுப் பறந்து மறைந்தனர்.

[இலட்சியத்தையும் இலட்சணத்தையும் மனக்கண்முன் நிறுத்தி ஆற்றல் கொண்டு பணியாற்றும் மாபெரும் புனிதமான ஓரியக்கம் அன்று துவங்கிற்று இளமையில் சேவை இசைத்துப் பாராளும் பருவத்தில் பாரைத் துறந்து காட்டின் கொடுமையை நீக்கி தவசிகளைத் தன் தோள்வலியால் பாதுகாத்த பரந்தாமன் அன்பு மனைவியை இழந்து, தனிமையிலும், துன்பத்திலும் தருமம் வழங்கி இப்பொழுது புது இயக்கத்தைத் தோற்றுவிக்கிறான்!]

---

46. பூமண்டலம் வட்டவடிவமே.

ஒவ்வொரு திக்கிலும் சேனைத் தலைவரை நியமித்து அங்கங்குள்ள பிரதேசத்தை விவரித்து அந்தந்த திக்கின் அமைப்பையும் வரையறையையும் எச்சரித்து, சேனைகளை அனுப்பிவிட்டு சுக்ரீவன், ராகவனை நோக்கினான்.

அரக்கனைத் தேடிக் கண்டுபிடிக்கவும், சீதாபிராட்டியின் நிலையையறிந்து வருவதுமான முதல் முயற்சியில் தான் ஆவனசெய்து முடித்ததாகத் திருப்தி அடைந்தான். என்ன செய்யவேண்டுமோ, ரகுநாதனின் நோக்கம் என்ன என்று அறியவேண்டிக் காத்து நின்றான்.

இவன் செய்த பெரும் பிரயத்தினம் மதிப்பிற்குரியதுதான் என்று அங்கீகாரஞ் செய்யும் பார்வையில் ரகுநாதன் சுக்ரீவனை உள்ளங்குளிரக் கடாட்சித்தான் "அப்பா! சுக்ரீவ! இவ்வளவு நுட்பமாக உலகின் அமைப்பையும் அங்கங்களையும் எங்ஙனம் அறிந்திருக்கிறாய்"? என்று வினவினான்.

அதற்குச் சுக்ரீவன். "புருஷோத்தமா! விஸ்தாரமாக சொல்கிறேன், கேளுங்கள், வாலி மலயமலைக் குகையில் துந்துபி யென்னும் தானவனோடு ஒரு வருஷகாலம் யுத்தஞ்செய்து கொன்றான் என்று முன்பே உங்களுக்குச் சொன்னேனல்லவா? அவன் திரும்பி கிஷ்கிந்தை வந்தவுடனே நான் அரசனாக இருந்ததையும், தாரையுடனும் ருமையுடனும் நான் இருந்ததையும் பார்க்கப்பொறுதவனாய் என்மேல் வஞ்சினங் கொண்டானென்றும் முன்னால் சொல்லப்பட்டது நினைவிருக்கலாம்.

என் அண்ணனான அந்த வாலி, என் சமாதானத்தை உதறித்தள்ளி சீறி எழுந்து என்னை நாட்டைவிட்டுத் துரத்தினான். அதுவும் தவிர, நான் எங்குச் சென்றாலும் அங்கு வந்து என்ன எண்ணங்கொண்டோ, ஓய்வின்றி பின்துரத்தினான். எங்குபோய் ஒளிந்து தப்பிப் பிழைக்கச்சென்றாலும் அங்கெல்லாம் அவன் என்னை விட்டானில்லை. முதலில் ஒரு திக்கை யடைந்தேன். அதன் எல்லையை அடைந்தபின்பும் துரத்தினான். பின்பு மற்ற திக்குச் சென்றேன். இவ்வாறு நான்கு திக்குகளிலும் அவைகளின் எல்லை வரை அவனிடமிருந்து தப்பி ஓடினேன். அவனும் விடாப்பிடியாய் என்னைப் பின்தொடர்ந்து துரத்திவந்தான். இச்சந்தர்ப்பத்தில்தான் நான் ஒவ்வொரு திக்கிலுமுள்ள பிரதேசத்தையும் அதன் அமைப்பையும், நிலையையும், அங்கு வசிப்பவர்களைப்பற்றியும் நேரே கண்டறிந்தேன். கிழக்குத் திக்கில் அதிசய பர்வதங்களையும் நதிகளையும் கடலையும் அதன் தீவுகளையும் எல்லையையும் அடைந்து கவனித்தேன். எல்லையை அடைந்தாய்விட்டது. இனி மேலே செல்வதற்கில்லை என்று மிக்க ஆயாசத்துடன் அங்கே தங்கும்பொழுது என்னுடன் வந்த அமைச்சர்களும் அன்பர்களும் "அதோ வாலி வருகிறான்" என்று எச்சரிக்கவே உடனே கிளம்பித் தெற்கு நோக்கி விரைந்தேன். விந்தியமலைப் பிராந்தியத்தையும் அதன் வனப்பையும் அமைப்பையும் கண்டு ஆச்சரிய மடைந்தேன். விதவிதமான மரங்கள் செறிந்த வளமுள்ள திவ்விய எழில்பெற்றது தென்னாடு. பின்பு மேற்கே திரிந்து அஸ்தகிரி அடைந்தேன். அங்கும் ஓடிவந்தான் அக்கொடுங்கோல் கொற்றவன். ஓய்வின்றிச் சோர்வுற்றுக் கடைசியில் வடக்கு நோக்கித் தாவி இமய மலையையும் மேருவையுமடைந்தேன். அங்காவது, என்னை விட்டு விட்டானா என் தமையன்? இச்சமயம்தான் பூமண்டலம் வட்டமாகவும் சூரிய

ளெியில் ஒவ்வொருபுறமும் பிரகாசித்து சுழன்றுகொண்டு போவதைத் தெரிந்துகொண்டேன். என்னசெய்யலாம்? வாலியிடமிருந்து தப்புவது எப்படி "? என்று நெஞ்சம் துடித்துப் பதறிக்கொண்டிருக்கையில் அநுமன் இந்த ரிசியமூக பர்வதத்தையும் அங்கு வாலி வந்தால் என்ன நேரிடும் என்றும் மதங்கமுனியின் சாபத்தையும் நினைப்பூட்டினன். 'தப்பிப் பிழைத்தோம்' என்று அதுமுதல் நாங்கள் பயமற்று அங்கு வசித்து வந்தோம்" என்று சொல்லி முடித்தான்.

---

47. முத்திசைகளிலும் கைவிரிப்பு.

இதற்குள், பூச்சிகள்போல வானை மறைத்துச் சென்ற வானரக் கோடிகள் திக்குதிக்காக தாவிப் பறந்து உற்சாகத்தால் வெகுதூரம் சென்றன. எங்கும் விடாமல் வலைபோட்டுத் தேடிக்கொண்டே நகரத்தை விட்டு நகரமடைந்தன. மலைகள், காடுகள், குகைகள், மடுக்கள், கடல், தீவுகள், நதிகள், வனங்கள், ஒன்றுவிடாமல் உட்புகுந்து ராவணனையும் சீதாபிராட்டியையும் தேடின.

[வாழ்க்கையில் அல்லல்பட்டு ஜனனம், மரணம் முதலிய இன்னல்கள் தொலைய மனச்சாந்திதேடும் ஜீவன் பகுத்தறிவடைந்து ஞானம் முதிர்ந்து இறைவனருள் கிடைக்கப்பெற்று, முன்னேக்கிச் செல்லுங்கால், நன்மையும் தீமையும் அடுத்தடுத்து இருப்பதை காண்பதைப்போல, கொடிய அரக்கன் இருக்குமிடத்தில் மகாலட்சுமியாய் விளங்கும் சீதாதேவி இருப்பதாகவும், தீமையைத் தவிர்த்து நன்மையை மேற்கொள்ளல் போல, அவனை மாய்த்து அன்னையை மீட்க வானரர்கள் பேராவல் கொண்டு மிக்க ஆற்றலுடன் எங்கும் நாடித் தேடித்திரிந்து சென்றனர்போலும்!]
நாளெல்லாம் ஓயாது நாற்புறமும் தேடுவது, இரவில் அவ்விடத்து எல்லையில் வந்து தங்குவது இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிராயத்தைக் கடந்து விரைவில் திக்குகளின் எல்லையை யடைந்தனர்.

மகா பலவானுன வினதன் கிழக்குத் திக்கு முழுவதும் வலைபோட்டுத் தேடினன். பிராட்டியைக் காணவில்லை. மனம் வாடினன். தவணை முடியும் காலமும் வந்தது. கவலையுடன் கிஷ்கிந்தை திரும்பினன். அதேசமயம் வீரனுன சதபலி ஊசி நுழையும் இடமும் விடாமல் வடக்குத் திக்கெல்லாம் திரிந்து அலைந்து அன்னையைக் காணுது மனந்தளந்து திரும்பிவந்தான். சுஷேணனும் தன் பிரயாசையெல்லாம் வீணனதைக் கண்டு வருத்தமுற்று வடக்கு திக்கிலிருந்து விடுதிரும்பினன். **[இங்ஙனமே வாழ்க்கையில் நால்வரில் மூவர் ஏமாற்றமடைவது இயல்புபோலும்!]**.

அப்பொழுது தவணைக்காலமானதால் சுக்ரீவனும் ராமனிடம் வந்து பிரஸ்ரவணகிரியில் வானரர்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான். ஒருவன்பின் ஒருவனாக வந்து ராம சுக்ரீவர் முன்னிலையில் பிரயாணத்தின் விருத்தாந்தங்களை விளக்கினர். ஆனால் இன்னும் தெற்கே சென்ற அங்கதப் படை திரும்பவில்லை. தவணை முடிந்தும் வராதது அவர்கள் வெற்றியைத் தெரியப்படுத்துகிறதென்று தங்கள் உறுதியையும் வெளியிட்டனர்.

---

48. தெற்கு யாத்திரையின் முற்போக்கு

மற்ற வானரத்தலைவர்களால் குறிப்பிட்ட தென் திசை சென்ற அங்கதன், அநுமன், ஜாம்பவான், முதலிய பிரமுகர்களும், அவர்கள் சேனையும் விந்திய மலையை அடைந்து நின்றனர். அங்கே அடர்ந்தகாடுகள் இருண்ட குகைகள், அகன்ற நதிகள், எங்கும் புகுந்து துருவித் தேடினார்கள். மனஞ்சலியாது, பொங்கிப்பரவும் ஆற்றலுள்ளவர்களாய் தடைகளைத் தகர்க்கும் தீரங்கொண்டவர்களாய், வெற்றி யடைந்தே திரும்புவதென்ற திடசித்தமுடன் அவர்கள் பிராட்டியைத் தேடிக்கொண்டு சென்றனர்.

ஒரு சூனியமான இடம். பழங்களில்லை. மரம் செடி கொடிகளில்லை. புற்பூண்டு, நதி, குளம், பட்சி. மிருகம் ஒன்றுமில்லாத இடம். பயங்கரமான இருள் சூழ்ந்த ஜீவனற்ற பிரதேசம். அதனருகே மிக்க வனப்புகொண்ட திவ்வியமான தபோவனம். என்றும் இயற்கை எழிலை அள்ளி வீசி மனம் கவரும் நறுமணம் கமழும் நந்தவனங்கள், அழகிய ஓடைகளை அலங்கரித்தன. அந்த இடம் மனிதனும் மிருகமுமில்லாத பாழடைந்த சோகக்களையைத் தெரிவித்தது. இதன் அமைப்பைப்பற்றி முன்பே அத்தேசத்து மக்களிடமிருந்து வானரர்கள் அறிந்து கொண்டிருந்தார்கள். சாந்தியளிக்கும் இந்த பூங்கா முன்பு கண்டு முனிவரின் இருப்பிடமாயமைந்திருந்தது, அப்பொழுது அன்னாரின் பதினாறு வயது இளங் குமரன் அவ்விடத்தில் திடீரென்று ஒரு நாள் மரணமடைந்தான். இத்தகைய மேன்மையான வனப்பு வாய்ந்த சோலையாயினும், அங்கிருக்கும் கட்புலனாகாத தேவதை தன் மகனை அடித்திருக்கவேண்டு மென்று அம்முனி உணர்ந்தனரோ, என்னவோ? அவ்விடத்தைக் கடுமையாய்ச் சபித்துவிட்டு அகன்றார். அதுமுதல் எந்த ஜீவனும் அங்கு வசித்ததில்லை. அந்தப் பிரதேசம் சூனியமாய் இயற்கை எழில் திகழ்ந்ததாக விளங்கிவந்தது,

இத்தகைய வசதியும் வளமும் பெற்ற இடம் கொடிய அசுரர்கள் வசிக்குமிடமாகுமென்று வானரர்கள் கருதி ஆழ்ந்து கூர்ந்து ஒவ்வொரு மறைந்த இடத்தையும் கவனத்துடன் தேடிப் பார்த்தனர். அங்கே ஒரு குகை. அக்குகையை கொடிகளும் புதர்களும் மூடிக்கொண்டிருந்தன,

அதனுட் புகுந்தனர். அவ்வளவுதான்! அங்கிருந்து பூமி பிளக்கும் சப்தத்துடன் எழுந்தான் ஒரு கொடிய அசுரன். மலைபோன்ற பூத உடல் பயங்கரத்தோற்றம்; தீச்சுடர் வானையொத்த கோரப்பற்கள்; நரமாமிச பக்ஷிணி ;கோரத் தோற்றம்; இவன் தோற்றமே போதும் பார்ப்பவர்களை மாய்க்க. இவனைக்கண்டு வானரர்கள் திடுக்கிட்டனர். எல்லோரையும் ஒன்றாகதிரட்டி விழுங்க உலக்கைக் கைகளை அவன் நீட்டிக்கொண்டு எதிர்த்துவந்தான். வானரர்கள் உள்ளம் நடுங்கினர். இவன்தான் கொடிய அரக்கனான ராவணன் என்று எண்ணினர். உடனே ஸ்ரீ ராகவனை நினைக்க இக்கொடும் பாதகன் அவ்வுத்தமனுக்குத் தீங்கிழைத்தவன், என்று ஆவேசமெழ, அங்கதன் அங்கே ஒரு புது உணர்ச்சியும் அடக்கமுடியாத தோள் வலிவுமடைந்தான், எதிர்த்தோடி வரும் பீம அசுரனை அங்கதன் தன் கையினால் ஓங்கி அறைந்தான்.

அவ்வளவுதான்! அரக்கன் வாயினின்று ரத்தம் கக்கினான். நெஞ்சடைத்து வெட்டி சாய்த்த விருட்சம் போல் தடாரென்று கற்பாறையில் விழ்ந்து மோதுண்டு உயிர்துறந்தான். மாய்ந்தவன் ராவணனில்லை யென்றும், மாரீசனின் மகனென்றும் அறிந்து, மறுபடியும் மற்றவிடங்களையும் மனம் தளராது தேடி அலைந்தார்கள். அன்னையைக்காணவில்லை. கவலையுற்று, ஏங்கி களைப்பாறினர்,

---

49. தவணையின் இறுதி

மாரீசன் மகனான கொடிய அரக்கனை மாய்த்தவுடன், அவன் ராவணனல்லனென்று கண்டு அப்பிரதேசம் முழுவதும் மூலையிலும் முடுக்கிலும் கவனமாகத் தேடிச் சென்றனர். சீதையைக் காணவில்லை. மனத்தளர்ச்சி கண்டு அப்படியேஅவர்கள் உட்கார்ந்து விட்டதைக் கவனிக்கிறான் அங்கதன். இவ்வியக்கத்திலிறங்கி விடாமுயற்சியுடன் ஆற்றல் கொண்டு பணியாற்ற ஆக்கமளிப்பது அவன் பொறுப்பு. வெற்றி காணுவோமென்ற உறுதியே அவர்கள் எல்லோருக்கும் பக்கபலம், இவ்வாறு வந்தவர்கள் இப்போழுது சோர்வு கொண்டால் இயக்கத்தின்வலி குன்றுவதல்லாமல் எடுத்த கருமம் முடிக்காதவர்கள், என்று இழிச் சொல் கேட்கவும் நேரிடுமென்று உணர்ந்து அவர்களைத் தேற்றி ஊக்கங் கொள்ளுமாறு பாடுபடுகிறான் அங்கதன்.

அவர்களைப் பார்த்துச் சொல்கிறான்:—"உங்கள் ஊக்கமும் விடா முயற்சியும் உயர்தன்மைகொண்டனவே. வனங்கள், மலைகள், நதிகள், குகைகள் எல்லாம் வலை போட்டுத் தேடினீர்கள். நம் லட்சியத்தைக்காணவில்லை. களைப்படைந்து உட்கார்ந்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் மனந்தளரவில்லை யென்று எண்ணுகிறேன். வெற்றியடைந்து திரும்புவதே

சித்தாந்தம். உங்கள் கவலேயும், ஏமாற்றமும், மனத்தை பற்றியதில்லே யென்று நம்புகிறேன். மனஞ் சலியாமை, எச்சஞ்சலத்திலும் ஈடுகொடுக்கும் மனோதிடம், வெற்றி ஒன்றையே நாடும் ஆற்றல், இவைகள் காரியசித்திக்கு இன்றியமையாதவை யென்று பெரியோர் கூறுவர். இந்தக் குணங்கள் நம்மவரிடம் இயல்பில் காணப்படுகின்றன. நாம் அதை மேற்கொண்டு வந்து கடமையைச் செய்தேயாக வேண்டும். இதைத் தவிர்ப்பதற்கில்லே. அரசனின் தவணேக்கு இன்னும் கொஞ்ச நாட்களே உள்ளன. நம் அரசனுக்கு இழிவு தேடுபவர்களா நாம்? பலனடையும்வரை நம் கடமையைச் செய்துகொண்டே போகவேண்டுமல்லவா? அல்லல்களாலும் இன்னல்களாலும் மனஞ் சிதறிச் சோர்வடைந்து, இடையில் முயற்சியைக் கைவிடுவது நலமாகுமோ? ஆகையால், நண்பர்களே! மனந் தளர்ச்சி அடைந்ததுபோதும்! கண்மூடித்தனம் தகாது. உங்களுடைய நலனேக் கருதிச் சொல்கிறேன். காரியத்தை சரிவரச் செய்யாது அரசனிடம் திரும்புவது சரியல்ல. அவனுல் தண்டிக்கப்படுவோம். ஆகவே நம் முயற்சியை நிறுத்தாது இன்னும் முற்செல்லுவதே முறையாகும். அப்புறம் உங்கள் இஷ்டம்'' என்றான்.

உடனே கந்தமாதனன் என்னும் வானரத் தலேவன் எழுந்து முன்வந்து அங்கிருந்த வானரர்கள்பால் சொல்லுகிறான். "தோழர்களே! நம் தலேவன் அங்கதன் மதிப்புரையை நாமெல்லோரும் மனத்தில்கொண்டு மறுபடியும் முயற்சியில் முன்செல்வோம். நம் நலனுக்காகவே எடுத்துரைத்த புத்திமதி இது. மனந்தளர்ந்து எடுத்த பணியைக் கைவிடுபவர்களா நாம்'' என்றதும் உடனே அனேவரும் எழுந்து கிளம்பி புது ஊக்கமடைந்து விந்தியமலேக் காடுகள் நிறைந்த தெற்குத் திக்கில் தேடிக்கொண்டே சென்றனர்.

அப்பொழுது அவர்கள் சரத்கால மேகம்போன்றதும், அழகிய குன்றுகளுடையதும் அநேக குகைகளடங்கியதுமான ரஜதமலே எனப்படும் இடத்தை யடைந்து, அபூர்வமும் அதி ரம்யமானதுமான மரங்கள் செறிந்த வனங்களில் புகுந்து நுழைந்து தேடினர். பின்பு மலேயை விட்டிறங்கி குகைகளிலும் குளங்களிலும், தாழ்வரையிலும் பள்ளத்தாக்குகளிலும சென்றனர். அன்னே ஜானகியைக் காணேம். களேப்படைந்து, தாகம் மேலிட்டுத் திரும்பவும் மரத்தடிகளில் உட்கார்ந்துவிட்டார்கள். இதைக் கண்டு, அனுமன் முன்வந்து அவர்களனேவர்க்கும் புத்துணர்ச்சி எழுப்பி அவரவர்கள் கடமையை நினேப்பூட்டி அரசன் தெரிவித்த எல்லே இன்னும் அடையவேண்டியிருப்பதால் அப்போதே அங்கிருந்து கிளம்புவது அவசியம் என்றும் எடுத்துரைத்து அவர்களுடன் மறுபடியும் மேல் கிளம்பித் தெற்கு நோக்கி விரைந்தான்.

---

50. குகைத்தவசி தரிசனம்.

அநுமனே முன்னிட்ட வானரர்கள் விந்திய மலேப்பிரதேசத்தில் தேடுவதை விரைவில் முடிக்க எண்ணி நான்கு பக்கங்களிலும் வனேந்து

மரங்கள் புதர்கள், புகமுடியாத முட்கொடிகள் சூழ்ந்த மலைப் பிளவுகளிலும் சந்துகளிலும் பிரயாசையுடன் ஆழ்ந்து கூர்ந்து தேடிச் சென்றனர். எல்லாரும் வெகு நேரங்கழித்துச் சிகரமடைந்தனர். களைப்பும் தாகமும், மனத்தையும், உடலையும், சோர்வுறச் செய்தன. அநுமன் எல்லோரையும் கவனிக்கிறான். அன்றோடு அரசன் குறித்த தவணைநாள் கடந்துவிட்டது. அங்கதன், கஜன், கவாக்ஷன், கந்தமாதனன் முதலிய தலைவர்கள் கைசோர்ந்து அமர்ந்திருப்பதைக் காண்கிறான். நம் அன்னையைக் காணவில்லை, என்ன செய்வதென்று அறியாது நிற்கையில், கீழே ஓரமாய் மலைச்சரிவை யொட்டி ஒரு குகை கண்ணில் பட்டது. முன்பு கீழிருந்து தேடுங்கால் இது கண்ணுக்கு எட்டாதிருந்தது. மிக்க ஆச்சரியமான அமைப்புவாய்ந்த குகையென்று கவனிக்கும்போது, அநேக பறவைகளும் பிராணிகளும் நீரில் முழுகினவைகளாய் அக்குகையினின்று வெளிவரவே, இங்கு நம் தாகவிடாயை தீர்த்துக்கொள்ளலாம் என்று உணர்ந்து எல்லோரையும் கூட்டிக்கொண்டு அக்குகையை அணுகினான்.

வாயிலில் நறுமணம் கமழும் இன்பவாடை வீச அவர்கள் குகையில் நுழைய எண்ணுகையில் புகமுடியாது முள்ளும் புதரும் வாயை அடைத்து நின்றன. இதுதான் ரிஷபிலம் என்று கண்ட அநுமன் சலியா மனத்துடன் அவர்கள்முன் தடையைச் சற்று விலக்கி உட்புக மற்ற எல்லோரும் அவனைப் பின்பற்றினர். உட்புகும் வாயில் முதலில் புலனாகவில்லை. எனினும் அநுமன் முதலியோர் அன்னை ஜானகி இங்கு மறைக்கப்பட்டு இருக்கலாம் என்று அவளைப்பற்றியும் ராகவனைப்பற்றியும் நினைத்தும் பேசிக்கொண்டும் தேடினதால் இக்குகையின் வாய் அவர்கள்முன் அகப்பட்டதுபோலும் !

மையிருள் கவ்விக்கொண்டிருந்தது. பார்வை மழுங்கிற்று. அவர்கள் ஒருவருக்கொருவர் பெயரிட்டுக் கூவிக்கொண்டும், கையைப் பற்றிக் கொண்டும் வெகு ஜாக்கிரதையாக உள்ளே சென்றனர். பயங்கரநிலையை அதிகரிக்கச் சிங்கம், புலி, முதலிய விலங்குகளின் பேரொலி கேட்டது. எனினும் ஸ்ரீராமகாரியத்தில் ஈடுபட்டிருந்ததால் அவர்களுக்கு அச்சம் என்ற உணர்ச்சியே ஏற்படவில்லை. தாகம் நாக்கை வரட்டுகிறது. எனினும் உற்சாகம் குறையவில்லை. "நீரில் நனைந்து முழுகி வெளிவந்த பறவைகளையும் மிருகங்களையும் முன்பு கவனித்தோம். மரஞ்செழித்த புன்செய் நிலங்களைக் கண்டோம். ஆகையால் நதியோ நீரோடையோ இங்கிருக்கவேண்டும். வாருங்கள் முன்செல்வோம்" என்று அநுமன் அவர்களை அழைத்துக் கொண்டே முன்சென்றான்.

கொஞ்சதூரம் சென்றதும் ஓரொளி பிரகாசித்தது. அதை நோக்கி அவர்கள் விரைந்து வந்து, அழகியதும், இருளற்றதுமான ஓர் ஆச்சரியமான பிரதேசத்தைக் கண்டார்கள். எங்குபார்த்தாலும் பொன், வெள்ளிப் பிரகாசமுள்ள கொடிகள், செடிகள், முத்து ரத்தினங்களிழைத்த பந்தல்கள் மேடைகள் உருக்கி வார்த்த திவ்விய ஆபரணங்களிழைத்த, உயர்ந்த அகர்ந்த பொன் மாளிகைகள், பற்பல ஒளிவீசும் மரங்கள். விதவித மணங்

கமழும் பூஞ்சோலைகள், எங்கும் புள்ளினங்கள் பொருந்திய தாமரை ஓடைகள், ஒப்பற்ற ஒரு சிற்பியின் சிறந்த கற்பனைச் சிருஷ்டியை விளக்கிக் காட்டியது அவ்விடம். விதவிதமான உணவுகள், சித்திரான்னங்கள், பக்ஷியங்கள், பானங்கள், அவைகளுக்கேற்ப பாத்திரங்கள், பழங்கள், தேன், பால், விலையுயர்ந்த ஆபரணங்கள், ஆடைகள், கம்பளங்கள் எல்லாம் குவியல் குவியலாய் கண்ணைப் பறித்தன. இவைகளை வானரர்கள் பார்த்து வரும்போதே, சற்று தூரத்தில் மரவுரி உடுத்தி சடை முடியுடன் ஜகத்ஜோதியாய் பிரகாசித்து நிற்கிருள் ஓர் தவசி! அப்படியே பிரமித்து நின்று ஆஞ்சநேயன், "அம்மணி, நீங்கள் யார்" என்று வினவினான்.

---

51. சுயம்பிரபையின் வரவேற்பு.

முன்பு ராகவன் அயோத்தி நகரில், கோமதீ தீரத்திலுள்ள நைமிசாரண்யத்தில் அமையப் பெற்ற அசுவமேத யாகசாலையில், அமர்ந்திருந்த மாமுனிகள், ரிஷிகணங்கள், மந்திரிமார்கள், நகரமாந்தர்கள், பாமரமக்கள், வானரத்தலைவர்கள், ராட்சத பிரமுகர்கள் முன்னிலையில், மேக வர்ணனை, சர்வலோக சரண்யனை, சர்வ ரக்ஷகனை, சர்வேச்வரனை, தரும விக்ரகம், மங்கள சுரூபியாவ, சுயம்பிரபாசுந்தரன் எல்லோர் மனக்குறையையும் நீக்கிக் குளிரவைக்கும் கருணாநிதியான ஸ்ரீ ராமபத்திரன் முகமலர்ந்து, காதாரக்கேட்க, குசலவர் எனும் சந்திர சூரிய பாலகர் பதினாரும்நாள் செய்த ஸ்ரீமத் வால்மீகி ராமாயண கானம் பின்வருமாறு :—

மான்தோல் தரித்த அம்முனிமாது மதுரமாய்ப் பேசும் அநுமனையும் மற்றத் தலைவர்களையும் உற்று நோக்குகிருள். மாருதி இன்னும் பேசுகிற மொழிகள் காதில் விழுகின்றன. "அம்மையே! நாங்கள் விளையாட்டாகவும் விஷமத்திற்கும் வந்தவர்களல்ல. ராகவன் தர்மபத்தினியைத் தேடும் பொருட்டு வந்தவர்கள். நாலாபக்கங்களிலும் நன்கு தேடித் திரிந்து காலை முதல் உழைத்து வெகுதூரம் வந்தவர்கள், பசியும் தாகமும் மேலிட்டன. இம்மலையின் உச்சியடைந்து தேடினோம். சுற்றிப்பார்க்கும்போது இங்கிருந்து பட்சிகள் வெளிக்கிளம்புவதைக் கவனித்தோம். அவைகளின் நனைந்த உடலைக் கண்டோம். இவ்விடத்தில் நதியோ, குளமோ இருக்கவேண்டும் என்று எண்ணி இக்குகையைக் கண்டுபிடித்தோம். ஒரே இருள் சூழ்ந்த அதன் வாயிலில் புகுந்து மிக்க பிரயாசையுடன் இங்கு வந்தோம்.

"நாங்கள் இதுவரை இம்மகத்தான கண்காட்சியைக் கண்டதில்லை. எங்கும், பொன்னும் வெள்ளியுமான, மரமுர் செடியும் கொடியும், மின்னொளி கொண்டு திகழ, குவியல் குவியலாய் பக்ஷணங்களும், பலகாரங்களும் விளங்கக்கண்டு அப்படியே பிரமித்துவிட்டோம். இது நனவா, கனவா வென்று அறியமுடியவில்லை. அம்மணி! இது யாருடைய பிரதேசம்? எந்த

மகானின் சக்தியால் இத்தகைய உயரிய சிருஷ்டி உண்டாயிற்று? உங்கள் தவமகிமையைக் கண்டு அடிபணிகிறோம்” என்றான்.

மிகவும் சாந்தமான குரலில் பதில்வருகிறது:— “தானவருக்குள் முதல்வனான மயனென்பவன் மாயா சக்தியை உபயோகிக்கும் வல்லமை பெற்றவன். இங்கு நீங்கள் கண்ணுறும் சிருஷ்டி அவனுடையதே. அதோ காணும் பொன்மயமான மாளிகையும் அவனால் ஆக்கப்பட்டது. ஆயிரம் வருஷங்கள் கடுங்கானில் கொடுந்தவமியற்றிய அம்மயன் கடைசியில் பிரம தேவன் அருளால், உசனஸ் என்பவரால் இயக்கப்பெற்ற சிற்பசாஸ்திரக் கலையையும் சிறந்த பொன் வெள்ளி முதலிய மூலதனத்தையும் வரமாகப் பெற்றான். அச்சக்தியால் இக்காட்டில் இவ்வாச்சரியமான பவனத்தையும் எழிலையும் செதுக்கிவைத்துக் களித்திருந்தான். சிற்பக்கலையில் தலைசிறந்தவன் அவன். கடைசியில் அழியாக்கலையை அடைவதைவிட்டு அப்ஸரஸ்மாதான ஹேமை என்பவளை இச்சித்து அவளைத் தன் பிரத்யேக உயிரோவியமாக்க எண்ணினான். கலையைக் கைவிட்ட மயன் தெய்வ மாதர்கள் இருப்பிடமான தெய்வலோகத்து இந்திரன் கோபத்திற்கு ஆளாகி, அவன் வஜ்ராயுதத்திற்கு இறையாயினன். பின்பு இம்மாளிகையும் இத்திவ்விய பிரதேசமும், அந்த ஹேமைக்குச் சொந்தமாயிற்று. அவள் நாட்டியக் கலையிலும் சங்கீதத்திலும் கரைகண்டவள், அவள் என்னுடைய பிரிய சினேகிதி. என் பெயர் சுயம்பிரபை. மேருஸாவர்ணி என்ற முனிவரின் பெண். என் தோழிக்காக இதைக் காத்து நிற்கிறேன். இதுதான் இத்தலத்தின் சரித்திரம்.

“நீங்கள் யார்? இங்குவந்த காரணம் சொன்னீர்கள். ஆனால் யாரைத் தேடி அலைகிறீர்கள்? யாருடைய காரியத்தை கைக்கொண்டிருக்கிறீர்கள்? இது யாவராலும் நுழையமுடியாதெனினும் நீங்கள் எப்படியோ வந்து விட்டீர்களே! ஏதோ உயரிய லட்சியங்கொண்ட யாத்திரையாய்ச் சுற்றித் திரிகிறீர்களென்று தோன்றுகிறது. நல்லது; உங்களுக்கு வேண்டியதைப் புசியுங்கள், தாகவிடாய் தீர்த்துக்கொள்ளுங்கள். கவலையின்றிக் களைதீர்ந்த பின்னர் உங்கள் காரியத்தைப்பற்றி எனக்குத் தெரிவிக்கலாம்” என்றாள்.

52. தவமாதின் திருப்தி

தவமாதின் அநுமதியில் வானரர்கள் வயிறார உண்டு களைப்பாறினர். இதுவரைகாணாத திருப்தி யடைந்து, சுயம்பிரபைக்கு வணக்கம் செய்தனர். அப்போது அநுமன் வினயத்துடன் சொல்லலுற்றான்:—

“அம்மையே! எங்கள் வரலாற்றைச் சொல்கிறோம், கேளுங்கள். இப் பூமண்டலத்திற்கே அதிபதியாயும் இந்திரன், வருணன் முதலியோரை யொத்த தசரத சக்ரவர்த்தி புதல்வனான ஸ்ரீ ராமர் எனும் சீமான், தம்பி

லட்சுமணனுடனும், மனைவி வைதேகியுடனும் தண்டகாவனம் புகுந்தார். அங்கே பலாத்காரமாக அவருடைய மனைவி சீதையென்பாள் ராவணனால் திருடிக்கொண்டு போகப்பட்டாள். வானரமன்னனும் ஸ்ரீ ராமசந்திரனுடைய நண்பருமான சுக்ரீவர் எங்களை சீதாப்பிராட்டியைத் தேடும்படி கட்டளை விடுத்தார். அங்கதன் என்ற தலைவருடனும், மற்றப் பெரியவர்களுடனும் யமனுடைய திக்கான தெற்கில் தேடிவர அனுப்பப்பட்டோம். வெகுவாக எல்லா இடங்களையும் தேடி அலைந்தோம்; அன்னை ஜானகியைக் கண்டிலோம். மிக்க களைப்படைந்து தாகந்தீர்த்துக்கொள்ள இக்குகையை அடைந்தோம். உங்களைத் தரிசித்தோம். உங்கள் அனுமதியின்பேரில் என்றும் காணு விருந்துண்டோம். அம்மணி! உங்களுக்கு பிரதியுபகாரஞ் செய்யக் கடமைப் பட்டவர்களாயினும், எங்களால் ஆகவேண்டுவதைச் சொல்லுங்கள்" என்று பணிவுடன் கேட்டு நின்றார்கள்.

சுயம்பிரபை கவனிக்கிறாள். எல்லோரும் உள்ளம் களித்துக் களைப்பாறினதைக் கண்டு திருப்தியடைந்தவளாய், "ஐயனே! நல்ல பராக்கிரமசாலிகளான உங்களைக் கண்டு திருப்தியடைந்தேன். நான் ஒரு தவசி. கடவுளை வழிபடும் எனக்கு உங்களால் ஆகவேண்டியது என்ன இருக்கும்? நீங்கள் களைப்பாறி தங்கி இருந்ததே எனக்குத் திருப்தி" என்றாள்.

---

53. தவணைகடந்து துன்பக்கடல்.

தருமத்துக்கொத்த தவசியின் வாக்கியம் அநுமனையும் மற்றவரையும் மிக்க களிப்புறவைத்தது. அவளைப்பார்த்து அநுமன், "அறநெறியறிந்தவளே! நாங்கள் எல்லோரும் உம்மைச் சரணமடைந்தோம். எங்கள் அரசன் விதித்த தவணையும் கடந்துவிட்டது. காரியம் இன்னும் பலனடையவில்லை. உங்களைப் போன்ற பெரியார் துணை செய்தருளவேண்டும். ஆகையால் இக்குகையில் இருந்து இப்பொழுதே நாங்கள் வெளியேற உதவிபுரிய வேண்டும்" என்று பணிந்தான்.

சுயப்பிரபை சற்று யோசித்தாள். என்ன நினைத்தாளோ, இங்ஙனம் பதில் சொன்னாள் "அநுமனே! இதில் உட்புகுந்த எவனும் உயிருடன் திரும்புவதும் வெளிக்கிளம்புவதும் அசாத்தியம். ஆனால் நீங்கள் ஓர் உயரிய லட்சியத்திற்காகப் பாடுபடுபவர்கள். ஆகையால் உங்களை இப்போதே வெளியில் கொண்டுபோய் விடுகிறேன். நீங்கள் கண்களை மூடிக்கொள்ள வேண்டும்" என்றாள். அவர்களும் அப்படியே செய்ய, அடுத்த நிமிஷம் எல்லோரும் வெளியே வந்தவர்களாகக்கண்டனர். அவர்களை அந்த யோகினி சிலாகித்து, உற்சாகப்படுத்தி "வானரர்களே! நானாவித கொடிய மரங்களும் கொடிகளும் அடர்ந்த திவ்வியமான விந்திய பர்வதம் இது. அதோ

காண்பதுதான் மஹோததி எனும் தென்கடல். வானர வீரர்களே! உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும்! ஜயம் பெறுவீர்களாக!'' என்று ஆசிகூறி குகையினுட் சென்றுவிட்டாள்.

அவள் மறைந்ததும் வானர சேனை அங்கிருந்து புறப்பட்டு ஒரே பாய்ச்சலில் மலைத்தாழ்வரை யடைந்து பெருங் கர்ச்சனையுடன் அலைபுரண்டு கொந்தளிக்கும் வருணனின் இருப்பிடமான தெற்கு சமுத்திரத்தைக் கண்டது. சமுத்திரம் பொங்கி கொண்டிருந்தது. எங்கும் அலைகடல்!

வானரர்கள் செய்வதறியாது தியங்கினார்கள். தவணையோ கடந்து விட்டது. அப்படியே பெரு மரங்களடியில் சிந்தனையுடன் உட்கார்ந்து விட்டனர். அப்பொழுது பொலபொலவென்று உதிர்ந்த மலர்கள் வசந்தருது வந்ததைத் தெரிவித்தன. ஒரு மாதத்தில் திரும்பி வரவேண்டும் என்ற அரசன் ஆக்ஞையையும் அவர்கள் மீறிவிட்டனர். கதிகலங்கி, மனம்சோர்ந்து வேதனையுறும் வானரர்களைக்கண்டு, அங்கதன் அவர்களைத் தேற்ற முனைகிறான். "பெரியோர்களே! நீதிநெறி நன்குணர்ந்தவர்கள் நீங்கள். விடாமுயற்சியுடையவர்கள். அரசன் குறிப்பிட்ட தவணைக்காலம் முடிந்து விட்டது. ஐப்பசி மாதமும் முடிகிறது. நாம் வந்த காரியம் இன்னும் பலன் அடையவில்லை. ஆகையால் திரும்பிப் போவதென்பது அசாத்தியம். அரசனுடைய ஆக்ஞையையும் மீறி நாமெடுத்துவந்த காரியமும் நிறைவேறாது அவரிடஞ் சென்றால் கடுந்தண்டனைக் குட்படவேண்டுமென்று சொல்லவும் வேண்டுமா? ராமசந்திரனுடைய கட்டளையின் பேரிலன்றி அன்பினால் என் சிற்றப்பன் என்னை யுவராஜாவாக ஏற்றவரல்ல என்று நினைக்கிறேன். ரகுவீரன் ஆக்கினையை நாம் இன்னும் நிறைவேற்றாதிருக்கிறோம். ஆகையால் உங்களுக்கு தலைமைபூண்ட நான் மரண தண்டனை யடைவது நிச்சயம். அங்கே சென்று அக்கதியை யடைவதைவிட, இங்கேயே இப்புண்ணியமான கடல் கரையிலேயே உண்ணாவிரதங்கொண்டு உயிர்விடத் தீர்மானித்து விட்டேன். நீங்கள் மனைவி மக்களை விட்டுவிட்டு வந்திருப்பீர்கள். நீங்கள் திரும்பிச் செல்லுங்கள்'' என்றான்.

இவ்விபரீத முடிவைக் கேட்ட வானரர்கள் அனைவரும் வருத்தம் அடைந்தார்கள். என்னசெய்வதென்று அறியாது திகைத்து தயங்கினார்கள் அப்போது தாரன் என்ற வானரத் தலைவன் முன்வந்து ஒரு யோசனை கூறினான். "நாம் அரசனிடம், தவணைகடந்து முயற்சி வெற்றிகாணாது திரும்பிச் செல்வதென்று முடியாத காரியம். ஆகையால், நாமெல்லோரும் ஏன் குகையிலேயே மறுபடியும் உட்புகுந்து ஒருவரும் காணாதபடி வசிக்கலாகாது''? என்றான்.

அவர்களெல்லோரும் இந்த யோசனையையும் அங்கதனின் முடிவையும் கேட்டு தவணை கடந்துவிட்டதால் யாது செய்வதென்றறியாது துன்பக் கடலில் துவண்டு தென்கடலோரம் சென்றனர்.

54. "கடமை உணர்மின், விறுகொண்டு எழுமின்"

கவலையின்றி வீடு திரும்பாமலும், காரியத்தை முடிக்காமலும் கனிகிழங்குகளைத் தின்று குகையிலேயே வாழ்நாட்களை கழிக்கலாமென்ற தாரனின் ஆலோசனையை அங்கதன் அங்கீகரிப்பதாகக் கண்ட அநுமன் மிக்க கவலையடைந்து சிந்திக்கலானான், அங்கதன் சிறந்த புத்திமான் புத்திக்கு எட்டுவிதமான அங்கங்கள் உண்டு. கருத்தை உடனே கவனித்தல், தவறுதலை உணர்தல், தருமத்திற்குகந்த உண்மையைக் கண்டு பிடித்தல், லட்சியத்தை மனத்தில் வைத்தல், ஞாபகசக்தியுடைத்தல் அதை நன்மை என்று விவரித்தல், நயம்பட உரைத்து பிறருடைய, அபிப்பிராயத்தை மாற்றுதல், தன் முடிவிற்கு அவர்கள் இசைந்த உடன் அது அவர்களுடைய முடிவென்று அவர்களையே கௌரவித்தல் என்று இவ்வித அங்கங்களுடைய புத்தி நுட்பம் கொண்டவன். தோள்வலி, மனஉறுதி, உபாயங்களை உபயோகித்தல், துணையைத்தக்கபடி பயன் படுத்துதல், முதலிய நான்கு குணங்கள் பெற்றவன், மனந்தளராது விடா முயற்சிகொண்டு, வெற்றியில் இன்பங்கொண்டு அதை பிறர் சேவைக்குத் தியாகஞ் செய்து காக்கும் பெருந்தன்மையுடன், பாரபட்சமின்றி அன்பு காட்டி ஆபத்துகளில் அவர்கள் குற்றங்களை மறந்து கைக்கொடுத்துதவி, நன்றி மறவாது அவர்களைப் புகழ்து உற்சாகமூட்டி, எல்லோரையும் உயரிய இயக்கத்தில் இணைத்து, சமுதாயத்தையே மேம்படச் செய்ய பொறுமையும் ஆற்றலும் சலியா உழைப்பு என்று, இப்பதினான்கு குணங்களும் அவனிடத்தில் உண்டு என்று அறிந்து, அவன் ஆண்மையை எழுப்பி, எடுத்த கருமத்தை முடிப்பதேதான் கடமையாகுமென்று உணரவேண்டு மென்ற பணியில் தீவிரமாக முனைந்தான். வானரர்கள் அனைவரும் தாரனின் ஆலோசனைக்கு இசைந்துவிட்டால் ஆபத்தாய் முடியுமே யென்று அஞ்சி அநுமன் அங்கதனைத் திருப்ப எண்ணி அவனை நோக்கி பேசலுற்றான்:—

"தாரையின் செல்வனே! ஆண்மையில் தந்தைக்கு நிகரானவனே! நம் எல்லோருக்கும் தலைவனான அரசன் காரியத்தில் ஈடுபட ஆவல்கொண்ட நீ தாரன் சொன்ன ஆலோசனையை ஆழ்ந்து கவனிப்பாயாக. அரசன் கட்டளையை புறக்கணித்து அவனிடமிருந்து தப்பி தலைக்காணாது குகையில் வசிக்கலாமென்பது வானரர்களின் மேன்மையை விளக்கும் ஆலோசனை தானா என்று சிந்தனை செய்வாயாக. எதற்குஞ் சலியாத மனவலிகொண்ட நீ, வானர ராஜ்யத்தை ஆளப்பெறும் ஆண்மை பூண்ட யுவராஜன்; உன் ஆணவத்தையும் ஆற்றலையும் நன்குணர்ந்து அவைகளை நம்பி, ஜாம்பவான் நளன், நீலன், ஸுஹோத்திரன் முதலிய வானரத் தலைவர்களும் மற்ற வானரர்களும் நானும் உன்னைப் பின்பற்றி வந்தோம். கீர்த்தி பெற்ற இப்பெரியார்கள் எடுத்த கருமத்தை விடுத்து, அரசர் ஆக்கினையை

அலட்சியஞ்செய்து அச்சமுற்றுத் தனியே இக்குகையினுள் உன்னுடன் இழிவாகக் காலங் கழிக்க இசைவார்களா? முடிவு என்னவாகும் என்று கவனித்தாயா? வானரர்களுள் பிளவுகண்டு இரு கட்சியாகி இக்குகையில் உன்னுடன் வசிப்பவர்களென்றும், அரசனைச் சார்ந்து அவன் அரசில் பங்கு கொண்டவர்கள் என்றும், இருதரமாகவா நம் சமூகம், பிரிந்து போகவேண்டும்? அரசனை எதிர்த்துக் கொள்வதா நலமாகும்? ஒருவேளை அவனை எதிர்க்காமல் தலைமறைவாய் இக்குகையில் தப்பிவாழ்வோமென்றால் எவ்வளவுநாள் அப்படிச் செய்ய முடியுமென்பது சிந்தனையிருக்கட்டும், இக்காரியம் அரசனுடைய காரியமாத்திரமன்று. சர்வ வல்லமைகொண்ட சர்வேச்வரனைப்போன்ற ஸ்ரீ ராமசந்திரனின் காரியம் அல்லவா இது? இதை மறந்தால் அவனிடமிருந்து தப்புவதேது? வல்லமையே உருவாயிருந்த வாலியின் கதி என்னவாயிற்று? இக்குகையை அவர்களால் கண்டுபிடிக்க முடியாதா? கண்டுபிடித்தபின்பு அந்த லட்சுமணனின் பாணங்களுக்கு இக்குகை இரையாகாது நிற்குமா? நொடிப்பொழுதில் இக்குகையும் இதன் பாதுகாப்பும் பொடிப்பொடியாய்ப் போகுமே. அதில் இருப்பவர்கள் மண்ணோடு மண்ணாய் மடியவேண்டியதுதவிர வேறில்லையே. இதை நினைக்க, எந்த வானரர்கள் இங்கு உன்னுடன் தங்கியிருப்பார்கள்? நீதிமுறையை நன்கறிந்தவர்கள், தவணை கடந்தபோதிலும், தங்கள் லட்சியம் நிறைவேறாவிடினும் அரசனிடம் சென்று எங்களாலியன்றவரை முயன்றோம். பயனில்லை என்று உண்மையுரைத்து அவன் ஆக்ஞையிலேயே இருப்பார்கள். நீயும் இதை உணர்ந்ததில்லையா? சுக்ரீவர் உன்னை உதாசித்துவிடுவாரா? அவருக்குப்பின் அரசாளவேண்டிய உன்னை அவமதிப்பரா? மனச்சாட்சிக்கு யாதொரு குறைவின்றி, சோர்வின்றி, நம் கடமையைச் செய்தோம். மிக்க பிரயாசைப்பட்டோம், என்பதை அரசனிடமும் ராமலட்சுமணர்களிடமும் தெரிவிக்காது அவர்களிடமிருந்து ஓடி ஒளிந்து இழிந்த வாழ்வு வாழ்வதா வானரர்களுடையவும், யுவராஜாவான உன்னுடைய பெருமையுமாகும்? அப்பனே! உனக்கு எதிராகவும் உன்னைத் துன்புறுத்துவதற்கும் நான் பேசவில்லை. உண்மையை யுணர்ந்து நேர்முறையில் செல்லவேண்டும் என்பதே என் கருத்து. ஆகையால் சோர்வற்று ஆணவத்துடன் எழு! முற்போக்கு காட்டு" என்றான்.

55. அங்கதன் வடக்கிருத்தல்.

அங்கதன் அநுமனின் மதிப்புரையைக் கவனித்தான். ராஜபக்தி உள்ள நல்லுரைதான், எனினும், லட்சியம் நிறைவேறவில்லை என்ற தோல்வியுணர்ச்சியே அவன் மனத்தில் குடிகொண்டிருந்தது. திரும்பிச் சென்று தோல்வியைத் தெரிவிக்க அவன் ஆண்மை மறுத்தது. ஆகவே, கிஷ்கிந்தை திரும்புவதில்லை என்று நிச்சயம்கொண்டான். தன் முடிவை வெளியிடுகிறான்:—

"அநுமனே!" என்று அங்கதன் விநயத்துடன் துவங்கினன். "சுக்ரீவரைப்பற்றி உமக்கும் நமக்கும் தெரியாததென்ன இருக்கிறது. தோல்வி கண்டவர்களிடம் இரக்கம், உண்மை வீரியம், சொற்பிறழாமை என்ற குணங்கள் அவரிடம் வெகுவாகக் காண்பதற்கில்லை. எதிரியான அண்ணனுடன் சண்டையிடும்போதே குகைவாயிலை மூடி ராஜ்யத்தைப் பெற்று அரசனாக முடிசூடி, தாரையை சுவீகரித்து சுகித்தவர்; நண்பருக்குக் கையடித்துக் கொடுத்துவிட்டுக் களியாட்டில் காலங்கடந்து வாளாவிருந்தவர் பின்பு லட்சுமணரின் கோபத்திற்கு பயந்தே வானரர்களை சீதாபிராட்டியைத் தேடிவர அனுப்பியவர், ராவணன் அதர்மம் செய்தான், அவனைத் தண்டிக்க வேண்டுமென்ற காரணத்தாலல்ல. என்னை இளவரசராக முடிசூட்ட இசைந்ததும் அக்காரணத்தால்தான் என்பது என் அபிப்பிராயம். அவருக்கு விரோதியான வாலியின் புதல்வன் நான்; ஓர் அபராதஞ்செய்தால் போதும்; உயிரிழக்க வேண்டியவன்தான். மேலும், அரசன் கட்டளையை நிறைவேற்ற உறுதியும் ஆற்றலும்கொண்டு வெளிக்கிளம்பினேன், அதைச் செய்து முடிக்காது, சக்தியற்றவனாகி, மனந்தளர்ந்து தோல்வியுடன் கிஷ்கிந்தைக்குச் சென்று மானமிழந்து உயிர்வாழ்வது எனக்கு பெருமையாகுமோ? நம்போன்ற குற்றவாளிகளுக்குச் சிறைவாசம் ஏற்ற தண்டனைதான் என்பது தெளிவு. ஆயுள்வரை கைதியாய் வாழ்வதை விரும்புகிறவன் எவன்? ஆகையால் நான் இங்கேயே உண்ணாவிரதங்கொண்டு உயிரைவிடத் தீர்மானித்துவிட்டேன். நீங்கள் எனக்கு விடையளித்துவிட்டு அநுமன் சொல்லியபடி கிஷ்கிந்தைக்கு திரும்பிப்போகலாம். நீங்கள் போய் ஸ்ரீ ராமலட்சுமணர்களுக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவியுங்கள். நம் அரசனுக்கும் என் வணக்கத்தைச் சமர்ப்பியுங்கள். என் அன்னைகளான ருமைக்கும் தாரைக்கும், என் அபிவாதனத்தைச் செலுத்துங்கள்" என்று சொல்லிவிட்டு மனம்விண்டு தர்ப்பைப்பில்லைத் தரையில் பரப்பி, வடக்கில் தலைவைத்துப் படுத்துவிட்டான்.

இந்த விபரீதமான முடிவைக் கண்ட மற்ற வானரர்களின் மனம் கலங்கியது. தங்கள் தலைவன் பிராயோபவேசஞ்செய்ய, அவர்கள் மாத்திரம் தனித்து நிற்பவர்களா? அவனுரைத்த காரணங்களும் எளிதில் புறக்கணிக்கத் தக்கவையல்ல என்று அவர் மனம் ஒப்பியது. தங்களுக்கு தலைவனைப் பின்பற்றுவதைவிட வேறு வழியில்லை என்று உணர்ந்தனர். உடனே அவர்களும் நீரண்டை வந்து கிழக்கு நோக்கி ஆசமனஞ்செய்து தெற்கு நுனியாகத் தருப்பைப் பில்லுகளைப் பரப்பி உண்ணாவிரதம் பூண்டு உயிரிழக்க உறுதிகொண்டு அமர்ந்துவிட்டார்கள்.

உட்கார்ந்தவண்ணம் இதுவரை நடந்த விருத்தாந்தங்களைப்பற்றிப் பேசவாரம்பித்தனர். ஒருவன், தசரதரின் முடிவையும், ஸ்ரீ ராகவனுடைய வனவாசத்தைப்பற்றியும் சொல்லி முடித்தான், இன்னொருவன், ஜனஸ்தான சம்பவத்தையும், வைதேகியின் அபகரணத்தையும் சொன்னன். மற்றொருவன் ஜடாயுவின் மரணத்தையும், வாயுவின் முடிவையும் எடுத்துரைத்தான். மற்றொருவன், ராம சுக்ரீவ சக்கியத்தையும், இப்பொழுது தென்திசை வந்த

வானரர்களின் கதியைப்பற்றியும் கூறினன். இதைக் கேட்கக் கேட்க அவர்கள் ஆர்வமும் ஆத்திரமும் பொங்கி யெழுந்தன. "ஹாஹா!" வென்று அவர்கள் கதறினர். மலையடிவாரம் எதிரொலிகொண்டு நடுங்கிற்று.

---

56. காரிருளில் ஓர் கதிரொளி.

வானரர்கள் போடும் சப்தம் அந்த மலையடிவாரம் முழுதும் எதிரொலிக்கவே, என்றுமில்லாது அன்று இரைச்சல், அங்கே வசித்துவந்த கழுகரசனை சம்பாதி என்பவனை எழுப்பிற்று. "என்ன இது? ஒருநாளும் இல்லாத இப்பேரொலி! இன்று வானரர்கள் கூச்சல் கேட்கிறது. என்னவோ கதை சொல்கிறார்கள்! என் தம்பியான ஜடாயுவைப்பற்றிப் புகழ்ந்து பேசிக் கௌரவிக்கிறார்கள். இதை அறியவேண்டும்" என்று எண்ணி அவன் வானரர்களை நெருங்கினன். நெடுநாள் வாழ்பவன்; ஒப்பற்ற பிரதாபமுள்ள அரும்பெரும் கழுகரசன். அவன் அவ்விந்திய மலைக் குகையினின்று வெளிக் கிளம்பி லட்சக்கணக்கான குரங்குகள் அசைவற்றுச் சாய்ந்து படுத்து இருப்பதைக் கண்டு உள்ளம் களித்து மகிழ்ந்தான்.

"அவனவன் செய்த நல்வினை தீவினைகள் அவனவன் வாழ்வைச் சமைத்துப் பின்பற்றுகின்றனவென்றும், உலக தருமம், ஆங்காங்கு வாழும் ஜீவராசிகளுக்கு தகுந்தபடி சம்ரக்ஷணை செய்கிறதென்றும் உண்மை இப்போது நிரூபிக்கப்படுகிறதுபோலும்! நெடுங்காலம் பட்டினிகிடந்த விருத்தாப்பியனை எனக்கு என்றும் கிடைக்காத அரும்பெரும் உணவு பல நாட்களுக்கு நீடிக்க வலுவில் கிடைத்திருக்கிறது. இது என் பாக்கியமே! இவைகள் இறந்தபின் இறக்கையிழந்து உணவு தேடமுடியாத எனக்கு வெகுகாலத்திற்கு இவை இரையாகும், இனி எனக்கு கவலை ஏன்" என்றான்.

இதைக்கேட்டான் அங்கதன். அநுமனை நோக்கி, "ஆஞ்சநேய! இவ்வறிக்கையைக் கேட்டீர்களா? நம் அழிவின் காரணமாகவே வைவஸ்வதனென்ற யமனே பிரத்யட்சமாக இங்கு வந்திருக்கின்றான்போலும்! ஸ்ரீராமனுடைய காரியம் நிறைவேறவில்லை. அரசனுடைய கட்டளையையும் கைவிட்டோம். நம்போன்ற குற்றவாளிகளுக்கு இம்முடிவுதான் என்று இது தெளிவாக்குகிறது. போகட்டும், ஸ்ரீராகவனுடைய கைங்கரியத்தில் வெளி வந்தோம். அதன்பொருட்டே நாம் உயிர்விடுவதும் யுக்தமே. அன்று அன்னை ஜானகிக்காகக் கேவலம் பறவையான ஜடாயு என்ற கழுகு தன் உயிரையே தியாகஞ் செய்யவில்லையா? ஒன்றும் இயலாத வெற்றி காணாத நம் வாழ்வு முடிந்தால்தான் என்ன? ஜடாயுவோ ரகுநாதனுக்காக உயிரைவிட்டான், நமக்கு அந்தப்பாக்கியமும் கிடைக்கவில்லை. ஆகையால் இதோ காணும் காலனுக்கு இரையாவது நலமே."

"என்ன? ஜடாயு உயிரைத் தியாகஞ்செய்தானா?" என்று ஸம்பாதி அங்கதன் வார்த்தையைக் கேட்டு பிரமித்துப்போனான். பின்பு மிக்க மனக் கலக்கங்கொண்டு, உரத்த குரலில் அங்கதனைப் பார்த்து, "எனக்கு உயிரினும் இனியவனான என் சகோதரன் ஜடாயுவைப்பற்றிய வார்த்தைகள் கேட்டனவே? அவ்வரலாறு யாது? எக்காரணத்தால் அவன் உயிர் துறந்தான்? அவனுக்கும் அரக்கனுக்கும் ஜனஸ்தானத்தில் கடும்போர் நடந்தது என்கிறீர்களே! என்ன சம்பவம் அது? என் மனம் துடிக்கிறது. நண்பர்களே! உதவிபுரியுங்கள். இங்கிருந்து உங்களிடம் இறங்கிவர விரும்புகிறேன். நானாகவே அங்கு இறங்கிவர எனக்கு இப்போது சக்தி இல்லை. என் தம்பியான ஜடாயுவைப்பற்றி அறிந்து நீண்டகாலமாகிவிட்டது. அவன் இறந்தானோ? அரக்கனை எதிர்த்து அவன் ஏன் போர்புரிந்தான்? ஸ்ரீராமவிருத்தாந்தத்தை முற்றிலும் அறிய விரும்புகிறேன்." என்றான்.

"வானரர்களே! நீங்கள் ஏதோ மகத்தான ஒரு பணியில் ஈடுபட்டு யிருப்பதாகத் தெளிவாகிறது. ஏன் அப்பணி நிறைவேறவில்லை? எல்லாம் அறிய விரும்புகிறேன். அநேக ஆயிர வருஷங்கள் கழித்து, சூரிய கிரணங்களால் எரிக்கப்பட்ட இறக்கைகளுடன் தனியே இங்கு வசிப்பவன் நான். உங்களிடம் நெருங்கிவர முடியாதிருக்கிறேன். நண்பர்களே! என்னை இங்கிருந்து உங்களிடம் வர கைகொடுத்து உதவிபுரியுங்கள். என்னிடத்தில் ஒன்றும் சந்தேகம் கொள்ளவேண்டாம்" என்று உறுதியளித்த வண்ணம் வேண்டி நின்றான் சம்பாதி.

---

57. கதிரொளியில் இசைத்த செம்பொருள் ஒலி.

ஸம்பாதியின் வசனங்களைக் கேட்ட வானரர்களுக்கு அவனிடம் நம்பிக்கைவரவில்லை. அவனிடத்தில் சந்தேகம்தான். ஆனால் பிராயோப வேசஞ் செய்யத் தீர்மானித்து விட்டவர்களுக்கு கழுகுக்கு இரையாய்ப் போனால்தான் என்ன? இதுவும் நியாயமே, என்று அவர்கள் பேசிக்கொள்ள, அங்கதன் மலைக்குகையினின்றும் கழுகரசனைக் கை கொடுத்துக் கீழே இறக்கினான்.

அவர்களுடைய விருத்தாந்தத்தைக் கேட்க மிக்க ஆவல் கொண்டிருந்த ஸம்பாதியை நோக்கி அங்கதன் சொல்லலுற்றான்; "கழுகுப் பெரியாரே! கேளுங்கள். ருக்ஷரஜஸ் என்ற பேர்பெற்ற ஒரு வானரமன்னர் இருந்தார். அவர் எனக்குப் பாட்டன்; குரு, அவருக்கு வாலி, சுக்ரீவன் என்ற இரு புதல்வர்கள். அளவற்ற பராக்கிரமசாலிகள். அவர்களில் முதல்வரான வாலி என் பிதா. உலகத்தில் மிக்க கியாதிபெற்றவர். அயோத்தியையாண்டு வந்த பிரதாபவானான தசரதர் குமார் ஸ்ரீ ராமபத்ரன் பாரெங்கும் பிரசித்தி

பெற்ற கீர்த்திமான்; சீமான், தருமத்திலேயே நிலைத்தவர். நீதிநெறி பிறழாதவர்; சத்தியங்காத்தல் என்பது அவர் வாழ்க்கை லட்சியம். தந்தையின் வாக்கை நிறைவேற்ற, மனைவியுடனும் தம்பியுடனும் அவர் அரசைத்துறந்து தண்டகாவனமடைந்தார். ராவணனெனும் அரக்கன் அவர் மனைவியைப் பலாத்காரமாக திருடிச்சென்றான். ஸ்ரீ ராகவரின் தந்தையாகிய தசரதன் நண்பரான ஜடாயு என்ற கழுகரசர், ஆகாயமார்க்கமாய் சீதையைத் தூக்கிச் சென்றுகொண்டிருந்த அரக்கனை எதிர்த்துக் கடும்போர் தொடுத்து அவன்ரதத்தை முறித்து சாரதியையும் குதிரைகளையும் குலைத்துக் கொன்றார். மிக்க வயோதிகர். ஆகவே இக்கடும்போரில் களைப் படைந்தார். அச்சமயம் பார்த்து அப்பாதகன் அவர் சிறகுகளை வெட்டித் தள்ளினான். பிறகு அவர் அவனோடு போர்புரிய முடியாமல், ஸ்ரீராம கைங்கரியத்தில் ஈடுபட்டு உயிர்துறந்தார். அரக்கனும் மைதிலியைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் பறந்து விரைந்தான். ரகுநாதன் ஜானகியைத் தேடிவரும்போது, ஜடாயு அடிபட்டுக் கிடப்பதையும் அதன் காரணத்தையும் அறிந்து துக்கித்தார். அப்பொழுது மாண்டுவிட்ட அவருக்காக ஸ்ரீராகவன் ஈமக்கடன்களைச் செய்து, அவரை நற்கதி யடையச்செய்தார். பின்பு தாசரதி தேவியைத்தேடிவர, வானர தேசமடைந்து என் சிற்றப்பனை சுக்ரீவரைக் கண்டு அவருடன் நட்புக்கொண்டார். என் தகப்பன் வாலி சுக்ரீவரிடம் பகைமைகொண்டிருந்ததனால், அப்பொழுது சுக்ரீவரை நாட்டை விட்டுத் துறத்தியிருந்தார். என் தந்தையைக்கொன்று சுக்ரீவருக்கு அரசு கொடுத்தார் ஸ்ரீராகவர். அதன் பின்பு வானரர்கள் அனைவரும் ராம காரியத்தில் ஈடுபட்டுத் திக்குதிக்காக அக்கொடிய அரக்கனைத் தேடுவதில் முனைந்தனர். நாங்கள் தென்திசை வந்தவர்கள். இவ்விந்திய மலையடைந்து அங்குள்ள குகையில் புகுந்து தேடினோம். இதற்குள் எங்களுக்கு அரசர் கொடுத்த ஒருமாதத் தவணையும் சென்றுவிட்டது. நாங்கள் அரசன் ஆக்கினைக்குட்பட்டவர்கள். குறிப்பிட்ட தவணையும் கடந்துவிட்டது மாத்திரமின்றி, அன்னை ஜானகியைப்பற்றியும் புலன் தெரியாது மனம் கலங்கி வருந்தினோம். இக்காரியமும் சித்திபெறாது கெடுவைத்த காலம் கழிந்துவிட்டு, அரசனிடம் திரும்புவது முறையாகாதென்று உணர்ந்தோம். ஆகவே இங்கேயே உண்ணாவிரதம் இருந்து உயிர் துறக்க வேண்டியதென்று நிச்சயித்தும் பிராயோபவேசஞ் செய்துகொண்டிருக்கிறோம்" என்று சொல்லி முடித்தான்.

இத்துயரமொழிகளைக் கேட்கக்கேட்க விருத்தாப்பியனான ஸம்பாதியின் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. உயிருக்குயிரான சகோதரன் மாண்டு விட்டானென்று கேட்டு அடங்கா வேதனையுற்றான். எனினும் ஓர் உயரிய லட்சியத்திற்காகத் தன் உயிரைத் தியாகஞ் செய்தானென்று கேட்க மிக்க பெருமிதங்கொண்டான். அருமைத் தம்பி ஸ்ரீ ராமகாரியத்தி லீடுபட்டான். சரி! நானும் அதே இயக்கத்தில் ஈடுபடுவதைத்தவிர செய்வ தொன்றுமில்லை என்று உறுதிகொண்டு உயிர்விடத் தீர்மானித்த வானரர்களுக்கு புத்துயிர் அளிக்க முனைந்தான்,

58. கதிரொளி காட்டிய சுடரொளி.

கண்களை துடைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தான் ஸம்பாதி. "வானரர்களே! தலைவர்களே! நீங்கள் ஸ்ரீ ராமகாரியத்தில் முனைந்தவர்கள். மனந்தளர்ந்து உயிர்மாய்க்கத் தீர்மானிப்பது நேர்மையாகுமா? எவன் கொடும் பாதகனான ராவணனால் இரக்கை அறுபட்டு இந்த ராமகாரியத்தில் உயிரைத் தியாகஞ் செய்தானோ அவன் (அந்த ஜடாயு) என் அருமைச் சகோதரன். அவனை மாய்த்த அரக்கனை அடியோடு அழித்துவிடுவதுதான் என் கடமையாகும். ஆனால் அது என்னால் ஆக்கமுடியாத பணி என்று உணர்கிறேன். நானோ வயதுமுதிர்ந்து உடல் தளர்ந்த விருத்தாப்பியன். என் சிறகுகளும் சூரிய கிரணங்களால் பொசுக்கப்பட்டுவிட்டன. பழிக்குப்பழி வாங்க இயலாதிருக்கிறேன்.

"முன்பு விருத்ராசுர வதம் நடந்தபொழுது ஜடாயுவும், நானும் போட்டி போட்டுக்கொண்டு சூரியமண்டலம் அடைய உயர உயரப்பறந்து கொண்டே சென்றோம். சூரிய கிரணங்கள் ஜ்வலித்துக் கொளுத்திக்கொண்டு இருந்த ஆதித்தியமண்டலம் வந்தோம். அப்பொழுது சூரியன் உச்சியிலிருந்து கொண்டு, கதிர்களைக் கடுந்தணலாக்கி உலகைதகித்த வண்ணமிருந்தான். அங்கே சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டிருந்த எங்களுள் ஜடாயு கிரணங்களின் தாபம் தாங்காது களைப்புற்றான். அவனைக்காக்க எண்ணி, என் அகன்ற சிறகுகளை அவன்மேல் விரித்து சூரிய வெப்பம் படாதபடி செய்தேன். அதன் விளைவால் என் இரக்கைகள் முற்றும் எரிக்கப்பட்டுச் சுருண்டுவிட, தொப்பென்று அம்மலைச் சாரிபில் விழுந்துவிட்டேன். என் தம்பி அவ்விடத்தைவிட்டுச் சென்றுவிட்டான். அதுமுதல் இந்நாள் வரை அவனைப்பற்றிய தகவல் ஒன்றும் அறியாது வருந்தி வந்தேன்." என்றான்.

அப்பொழுது அங்கதன், "பெரியவரே! நீர் ஜடாயுவின் அண்ணன். ஜடாயுவிற்கு அன்னை ஜானகியை திருடிப்போனவன் ராவணன் என்று தெரியவந்தது. ஆகையால் உமக்கு அவன் இருப்பிடம் தெரியவேண்டும் என்று எண்ணுகிறேன். அவன் எங்குள்ளானென்பதை எங்களுக்குத் தெரிவிக்கவேண்டுகிறோம்" என்றான்.

ஸம்பாதி ஊக்கங்கொண்டு பதிலுரைத்தான்: "அப்பனே! என் அருமைத் தம்பி ஜடாயு ஸ்ரீ ராகவனுக்காகத் தன் உயிரையும் விட்டான். நானும் அதைப் பின்பற்றுவதே முறையாகும். ஆனால் சிறகொரிந்து வலிவு குன்றிய, கிழக் கழுகாகிய நான் என்ன செய்யமுடியும்? எனினும், அம் மகானுக்கு என்னால் செய்யமுடியுமான சேவையைச் செய்கிறேன். அது இப்போது வாக்குதவி மாத்திரம். அதைச் செயலில் காட்டி முடித்து வைப்பது உங்கள் வசமுள்ளது. எல்லா உலகங்களையும் கடலில்

உள்ளவைகளையும், விஷ்ணுவின் திருவிக்ரமாவதாரத்தையும், பாற்கடல் கடைந்து அமுதமெடுத்ததையும் பற்றி நான் நேரில் அறிந்தவன். அக்காலம் முதல் இக்காலம்வரை ஜீவித்து மூப்பினால் எனக்கு வலிவு குன்றிவிட்டது. சுவாசமும் சிதறுகிறது. ஆகவே உடனே என்னாலாகும் ராமகாரியத்தை இதோ செய்கிறேன்.

"நன்றாக கவனிக்கவேண்டும். "ராமா! ராமா!" என்றும், "ஹா! லட்சுமணா" என்றும், கதறியவண்ணம் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற அதிரூபவதியும், தருணியும் ஆரணங்கின் தலைசிறந்த அழகியுமான ஒரு உத்தமி துராத்மாவான ராவணனால் தூக்கிக்கொண்டு போகப்பட்டவளாய் ஒருநாள் ஆகாயத்தில் நான் பார்த்ததுண்டு. அவளோ கண்ணீர்பொழிந்து உடல் துடிக்க ஆபரணங்களைக் கழற்றி எறிந்துகொண்டு இருந்தாள். அரக்கனின் பூதாகாரமான காருடலில் அவள் கண்ணைப் பறிக்கும் மின்னலைப்போல் விளங்கினாள். 'ராம, ராம' என்றும் அவள் கதறிக்கொண்டிருந்தாள். ஆகையால் அவள்தான் சீதையாயிருக்கவேண்டு மென்று நிச்சயிக்கிறேன். அக்கொடிய ராட்சதன் இருப்பிடம் எனக்குத் தெரியும். சொல்கிறேன் கேளுங்கள்.

"அவனே விச்ரவஸுக்குக்கேசியினிடம் பிறந்த மகன். குபேரன் சகோதரன். இலங்கை என்று பெயர் வாய்ந்த ராஜ்யத்தை ஆண்டுவருகிறான். அது நேரே இங்கிருந்து நூறு யோசனையுள்ள ஒரு தீவில் விசுவகர்மாவினால் அமைக்கப்பட்ட ஓர் அற்புதமான நகரம். பொன், வெள்ளி, இரத்தினம் இவைகளால் இழைக்கப்பட்டு, கண்கொள்ளாக் காட்சியாய்ச் சூரிய ஒளி கொண்டு ஜொலித்துக் கொண்டிருக்கிறது.

"அங்கு அரசன் அரண்மனையின் அந்தப்புரத்தில் காவலில் வைக்கப்பட்டு மனம்விண்டு வாடி வதங்கியிருக்கிறாள் வைதேகி. நான்கு பக்கங்களிலும் கோரமான அரக்கிகள் அவளைக் காவல் செய்து வருகிறார்கள். நீங்கள் நேரே தெற்கில் சென்று நூறு யோசனை கடந்து, இந்தத் தீவைச் சேரவேண்டும். நீங்கள் இக்கடலைத் தாண்டி செல்வீர்கள் என்று உறுதி கூறுகிறேன், நீங்கள் அந்த அம்மணியைக் கண்டு வெற்றி பெற்றுத் திரும்புவதை என் ஞானக்கண்ணால் காண்கிறேன். எனது புறக்கண்ணின் பார்வையும் கூர்மையானதுதான். காலடியிலுள்ள தானியங்களைக்கொத்தும் கோழிப்பறவை இனம் கொஞ்சமான பார்வைகொண்டது. காக்கை, புறா, கழுகு, கருடன் இவைகள் கிரமமாக படிப்படியாய் அதிக கூர்மையான கண் பார்வை சக்தியுடையன. வைனதேயரின் புதல்வரான அருணனின் புதல்வன் நான். ஆகவே அகப்பார்வையிலும் புறப்பார்வையிலும் சக்தி யுள்ளவன். ஆகையால் இங்கிருந்தே ராவணனையும், தீனமாய்த் தவித்துக் துடிதுடிக்கும் ஜானகியையும் இதோ பார்க்கிறேன். நூறு யோஜனை தூரம் பார்க்கும் வலிவு எங்களுக்கு இயற்கையாயுள்ளது. ஆகையால் சீதா பிராட்டி இப்போது இலங்கையில் இருக்கிறாள். நீங்கள் உடனே அங்கு செல்வீர்களாக. கடலைத்தாண்டி அத்தீவை யடைவதற்குத் தட்சணமே யுக்தி கண்டுபிடியுங்கள். வைதேகியைக் கண்டு காரியசித்தி அடையுங்கள்!

எழுந்திருங்கள்! மனஞ்சோருதீர்கள், உயிர்விடும் எண்ணத்தை விடுங்கள்! இதோ, நீங்கள் வெற்றிபெறப் போகிறீர்கள்! அன்னையைக் காணப் போகிறீர்கள்" என்று முழங்கினன் ஸம்பாதி.

உடனே துள்ளிக் குதித்தார்கள் வானரர்கள். அனைவரும் புத்துயிர் பெற்று பூரித்தார்கள்! கழுகரசனின் அதிர்ச்சிதரும் செய்தி அவர்கள் ஆற்றலுக்கு ஜயபேரிகை கொட்ட, அவன் மனக்கண் உறுதிமொழி. வெற்றியின் எழுச்சியில் உற்சாகத்துடன் வரவேற்று அழைத்தது. உடலில் இருந்த ஆயாசத்தை உதறிவிட்டு அநேகர் அப்போதே உற்சாக பரவசராய் உயரக்கிளம்பிப் பாய்ந்தனர். எங்கும் களிப்புறு பேராநந்த ஆரவாரம். ஸம்பாதி வேண்டினபடி அவனைக் கடற்கரையில் எடுத்துச்சென்றனர். அவன் தன் சகோதரன் ஜடாயுவிற்குத் தர்ப்பணம் செய்தான். பின்னர் அவனை மறுபடியும் அவனிருக்குமிடம் எடுத்துவந்து சேர்த்தனர். அவனும் இவர்கள் களிப்பில் கலந்துகொண்டான். எங்கும் குதூகலம்! அவர்கள் காரிருளில் உதித்த கதிரொளி, பேரொளிகண்ட சுடரொளியாய்த் திகழ்ந்தது அவன் செய்தியுரை!

---

59. சுடரொளிகாண சுபார்சுவன் சரிதை.

விருத்தாப்பியனை கழுகரசன் வானரர்களின் களிப்பை கவனிக்கிறான். முன்பு துயரொலி கேட்ட மலைச்சாரல் இப்பொழுது ஸ்ரீ ராகவன் வாழ்த்து ஒலியுடன் பிரதிபலித்தது. ஸ்ரீ ராம காரியத்தில் ஈடுபடுபவர்களுக்கு இத்தகைய உற்சாகம் தானாகவே விளைகிறதுபோலும்! தானும் புத்துணர்ச்சி காண்கிறான் ஸம்பாதி. என்ன தூய்மையான இயக்கம்? கூடப்பிறந்தவன் இதில் உயிரையே தியாகஞ்செய்து பேருலகஞ் சென்றான். அக்கதியன்றோ நற்கதி! என்ற சிந்தனை ஸம்பாதியை உயரிடத்தில் சேர்த்தது. முதியவன் உடம்பு தளர்ந்து வலிவுகுன்றி உயிர் ஊசலாடுகிறது. எஞ்சியுள்ள வாழ்வை வீணாக்காது, முடிவிலாவது இம்மாபெரும் இயக்கத்திலிறங்கி, சேவை செய்வதே கடைத்தேற வழி என்று ஊக்கங் கண்டான். அவன் கண்கள் சுடர்விட்டு ஒளிவீசி மலர்ந்தன.

ஸம்பாதியின் நிலையை கவனிக்கிறார்கள் வானரத் தலைவர்கள். ஆக்கம் அளித்து ஊக்கமூட்டின அவனுரைத்த நற்செய்தியைப்பற்றி இன்னும் அவனுக்கு ஏதாவது தெரிந்திருக்க வேண்டுமென்று எண்ணின ஜாம்பவான் ஸம்பாதியை நோக்கி, "ஐயனே! எங்களைத் தேற்றரவுசெய்து புத்துயிர் கொடுத்து அன்னை வைதேகியார் அகப்படாததால் உயிர்விடத் தீர்மானித்த எங்களுக்கு அமுதூட்டி புனர்ஜன்ம மளித்தீர். இந்நன்றி என்றும் மறக்க பாலதன்று. இன்னும் இதைப்பற்றி உங்களுக்கு என்னதெரியுமோ அதை விவரித்துரைக்க வேண்டுகிறோம். அக்கொடிய அரக்கன் சீதாபிராட்டியை

அபகரித்துச் சென்றபோது அவனை நேரில் கண்டவர்களுண்டா? அவனை எங்ஙனம் அடைவது? அற்பத்தனமுள்ள அறிவிலி, லட்சுமணனின் பாணங்கள் தன்னையும் கோட்டையையும், நகரத்தையும் மக்களையும் நொடியில் பொடியாக்குமென்று உணர்ந்தவனு அவன்?" என்று புது ஆவேசத்தை வெளியிட்டான்.

ஸம்பாதியும் இப்புது உற்சாகத்தில் கலந்துகொண்டு சொல்ல ஆரம்பிக்கிறன். "நண்பர்களே! கேளுங்கள். அத்தடங்கண்ணள் அந்த கொடும்பாவியால் அபகரிக்கப்பட்டு எங்கு எவ்வாறு சென்ருளென்று நான் அறிந்ததைச் சொல்லுகிறேன். ஒருநாள் வலிவிழந்து, மூப்பு மூண்டு சிறகெரிந்து வீழ்ந்துகிடக்கும் எனக்கு வழக்கம்போல் உணவு கொண்டுவரும் ஸுபார்சுவன் எனும் எனது புத்திரன் திரும்பிவரத் தாமதமாயிற்று. கந்தர்வர் காமந் தாங்காததுபோல், சர்ப்பங்கள் கோபந் தாங்காததுபோல், கழுகுகள் பசி தாங்கமாட்டார்கள். பசி பொருக்காமல் அவனைக் கடிந்து பேசினேன். தாமதத்தின் காரணத்தை விளக்கினன் அவன். அன்று இரை தேடச்சென்றவன், வழக்கம்போல் மகேந்திர மலையிலிருந்து ஆகாய மார்க்கத்தின் வழியை மறைத்து அங்குவரும் பிராணிகளைப் பற்றியிழுக்க நின்றுகொண்டிருந்தான். அச்சமயம், பூதாகாரமாய்க் கரிய மலையையொத்த அரக்கன், ராவணன் மின்னல்கொடியை நிகர்த்த சர்வாங்க சுந்தரி ஒருத்தியை, அவள் அழஅழப் பலவந்தமாகத் தூக்கிப் பறந்து வந்துகொண்டு இருந்தான். இது இன்று சரியான ஆகாரமென்று சுபார்சுவன் கூரிய நகங்களுடன் அவனைப் பிடிப்பதற்கு ஆயத்தமாகவே, விரைந்துவரும் அரக்கன் சுபார்சுவனுக்கு வணக்கங்கள் பல செய்து சரணமடைந்து வழி விலக்கித் தனக்கு இடையூறு செய்யாதபடி மண்டியிட்டு மன்ருடினன். கெஞ்சி கேட்பவர்களுக்குக் இல்லையென்பவன் நீசனன்ருே? ஆகையால் சுபார்ச்சுவனும் 'தொலைந்துபோ'! வென்று வழிவிட்டான். இப்பெருந் தன்மைக்குப் பணிந்துவிட்டு, பின்பு, ஆகாயத்தில் சுற்றிக்கொண்டிருக்கும். அபலையுடன் வாயுவைவிட வேகமாய் விரைந்து பாய்ந்து இலங்கையில் மறைந்தான். அப்பெரும் பாய்ச்சல் வேகத்தில் மூச்சுத்திணறி தொங்கிக் கொண்டிருந்தாள் விதேக மன்னன் புதல்வி. அப்போது வானிலுள்ள சூட்சம ஜீவர்களான சித்தர்கள் சுபார்சுவனையும் அவன் பெருந்தன்மையையும் மெச்சிப்புகழ்ந்தனர். "நல்லவேளையாக வைதேகி பிழைத்தாள்; அக்காரணத்தால் அரக்கனும் இப்பொழுது பிழைத்தான். மகத்தான வருங்காரியத்தில் இது ஓர் பெருதவி" என்று சுபார்சுவனைக் கொண்டாடி ஆசிகூறி வழங்கினர். முடி அவிழ்ந்து, ஆபரணங்கள் சிதறி, மனம்விண்டு, 'கோ'வென்று கதறிக் கொண்டிருந்த மைதிலியையும், பேய்போன்ற முகவிகாரத்துடன் உடல் துடிக்கக் காற்றுவேகமாய் மறைந்தோடும் ராட்சதனையும் கண்முன் கண்ட சுபார்சுவன் இக்கதையைச்சொல்லி, தன் காலதாமதத்தை விளக்கினன். ஆகையால், ராவணன் சமாசாரத்தை உங்களுக்குச் சாட்சிபூர்வமாக சொல்லுகிறேன். ஸ்ரீ ராமகாரியம் மகத்தானது; புனிதமானது; பேரின்பப் பெருவீடளிக்கும் சக்திவாய்ந்தது. மூப்பின் துரப்பாக்கியத்தினல் என் உதவி பேச்சோடுதான் நிற்கிறது. செயலோ உங்கள் கையில்தான். ...தை

சரிவரச் செய்யுங்கள். நீங்கள் செய்ய வல்லவர்களென் றறிவேன்; நீங்கள் சிறந்த நுட்பபுத்திமான்கள்; ஒப்பற்ற செயலாளர்கள்; தேவர்களும் அசுரர்களும் கண்டஞ்சும் வீரர்களும் சூரர்களும் நீங்கள் என்று நினைவு படுத்தவும் வேணடுமா? ராவணன் அபார சக்திவாய்ந்தவன் தான். எனினும் ஸ்ரீ ராமலட்சுமணர்களின் சீறி எழும் பாணங்களுக்கு அவன் ஒரு துரும்பே. அத்தகைய புருஷோத்தமனின் சேவையில் ஈடுபட்டவர்களான உங்களுக்கு இடுக்கண் இருக்குமா? வெற்றிபெற்று வரப்போகிறீர்கள், ஆகையால் விரைந்து செல்லுங்கள்'' என்ற ஆற்றலை அலைமோத அநிகரித்தான் ஸம்பாதி!

60. நிசாகரர்.

[கழுகரசனின் ஆற்றலுரை வானரர்களின் உற்சாகத்தை உச்சிக்குக் கொண்டுபோயிற்று. முதலில் ராமகாரியம் என்று உணர்த்தி அது இனிதே முடியும் என்றும் மனக்கண்முன் அதைக் காண்பதாகவும் உறுதியளித்து தாங்கள் தேடவேண்டிய இடம் இன்னும் எஞ்சியிருப்பதாக நினைப்பூட்டி கடமையைச் செய்து முடிக்கப் பேராற்றலை எழுப்பிவைத்தான் ஸம்பாதி. இதற்கு வலியூட்டச் சுபார்சுவன் விருத்தாந்தத்தை விவரித்து, வானில் சஞ்சரிக்கும் பெரியோர்களின் ஆசி மொழியையும் எடுத்துக்காட்டினான்.

புத்திரன் சுபார்சுவனின் யாதாஸ்தை உரைக்கும்போதே அந்தச் சுபார்சுவனும் எங்ஙனம் தன் கடமையைச் செய்தானென்று அவர்களுக்கு எடுத்துக்காட்டுகிறான். மகேந்திர பர்வதத்தினிடம் நின்று ஆகாயமளவு வழிமறைத்து, அவ்வழி சிக்கும் பிராணிகளை இரையாக்கக் காத்திருக்கிறான். அப்பொழுது அவனை அஞ்சலிசெய்து அடைக்கலம் அளிக்கவேண்டும் என்று அடிபணிந்தான். அடிபணிந்தவன் நீசனுயினும் அவனை ஆட்கொள்வதே அற நெறியும் கடமையு மென்றுணர்ந்து, தன் உணவைத் தியாகஞ்செய்து சுபார்சுவன் ராவணனுக்கு வழிவிட்டுக் கொடுக்கிறான். அரக்கர்களுள் புகழ் பெற்ற பேரரசன்; முடிமாய்ந்தாலும் பிறருக்கு முடிசாய்க்காதவன் இப்போது சுபார்சுவனைச் சரணம்புகுகிறான்; அச்சமுற்றோ, அல்லது கருமமே கண்ணான வனுக்கு எதிரியைச் சரணாகதி செய்து அவனிடமிருந்து தப்பும் அரசியல் உபாயத்தாலோ, எப்படியோ, சுபார்சுவனை வழிவிலக்கி உதவும்படி வேண்டுகிறான். கழுகுகளின் பசி தாங்கமுடியாதது. அதையும் பொறுத்துத் 'தொலைந்துபோ' வென்று விட்டுக்கொடுக்கிறான். புனித இயக்கத்திலீடுபட்ட வானர விரர்களும் தங்கள் கடமையைச் செய்தே ஆகவேண்டுமென்று வலியுறுத்துகிறான்.]

உடனே வானரர்களனைவரும், சமுத்திரத்தில் ஸ்நானஞ் செய்து பரிசுத்தரான ஸம்பாதியைச் சூழ்ந்து அமர்ந்தார்கள். அவனிடம் விடை பெற்று மேலே செல்லவேண்டியவர்கள். அவர்களது ஆற்றலும் ஆர்வமும் பொங்கி எழுந்து பரவ தானும் கலந்துகொண்டு ஸம்பாதி இன்னும்

அவர்களை உற்சாக மூட்டுகிருன். "அன்பர்களே! கேளுங்கள். முன்பு இரவியின் கிரணங்களால் எரிக்கப்பட்டுக் கடும் வெப்பத்தில் உடல் வாடி, விந்தியமலையடியில் விழுந்தேன் என்று சொன்னேனல்லவா? பிரக்ஞையற்று வலிவிழந்து அப்படியே ஆறுநாள் கிடந்தேன். பின்பு கண்விழித்தேன். கடலும் மலையும் நதியும் காடுங்கண்டு தன்னறிவு பெற்று ஊன்றிக் கவனிக்குங்கால், அங்கொரு புனிதமான முனிவரின் ஆச்ரமம் இருக்கக்கண்டேன். இயற்கை எழில் கண்ணைப்பறித்தது. சாந்தியளிக்கும் சூழ்நிலை மனத்தைக் கொள்ளைகொண்டது. பின்பு அங்கு நானும் ஜடாயுவும் முன்பு ஒருகால் தனியே வசித்துவந்த நிசாகரர் எனும் மாமுனியை நேர் வந்து தரிசித்துப் பணிந்தது நினைவிற்கு வந்தது. இது எட்டாயிர வருஷங்கள் முன் நடந்த நிகழ்ச்சி. மிக்க பிரயாசையுடன் மெள்ள மெள்ளத் தத்தித்தத்தி அம்முனிவரின் ஆசிரம வாயிலில் வந்து விழுந்தேன்.

"எங்கும் மணங்கமழும் மலர்கள் பசி போக்கும் பழங்கள், குடைபோல் விரித்த மரக்கிளைகள். மனச்சாந்தி பொழியும் ரம்மியமானகாட்சி. அங்கு நான் காத்திருக்கையில், கோடிசூரிய பிரகாசம்போன்ற தேஜஸ்ஸுடன் முனிவர் நீராடிவிட்டு வந்து கொண்டிருந்தார். அப்பொழுது கரடிகள், புலிகள், சிங்கங்கள், சர்ப்பங்கள், யானைகள், மான்கள் முதலிய சர்வ பிராணிகளும் அவரை வலம் வந்து கடவுளின் பரிவாரங்களாகப் பின்பற்றி ஆசிரமம்வரை வந்து வழி விட்டுப் போயின. இவ்வாச்சரியத்தைப் பார்க்கையில் முனிவர் ஆசிரமத்துள் நுழைந்து பின்பு வெளிவந்து, என் கதியைக் கண்டு பரிதபித்தார். "அப்பனே! என்ன நேர்ந்தது? முன்பு எனக்குத் தெரிந்த ஒரு கழுகரசர்களுள் ஸம்பாதி என்பவனல்லவா நீ? இருவரும் பராக்கிரமசாலிகள்; நினைத்த ரூபமெடுக்க வல்லவர்கள். நீங்கள் இருவரும் மானிடராய் வந்து என்னைப் பணிந்தீர்களல்லவா? உனக்கு என்ன நேர்ந்தது? ஏன் இப்படி வருந்துகிருய்"? என்று மிக்க பரிவுடன் விசாரித்தார்.

---

61. அடாதுசெய்து படாதுபடுதல்.

பரிவுடன் விசாரித்த மாமுனியிடம், எல்லாம் சொல்லிவிடத் தீர்மானித்த சம்பாதி சொல்ல ஆரம்பித்தான். "ஸ்வாமி! பொறுத்தருளுங்கள். என் கொழுப்பின் பயனே இது. வெட்கம், களைப்பு, வாழ்க்கையில் வெறுப்பு இவைகள் என்னைத் தடுமாறவைக்கின்றன. ஜடாயுவும், நானும் போட்டி போட்டுச் செருக்கால் மதியிழந்து, வீரியத்தின் பெருமிதத்தால் சூரியன் அஸ்தமிக்கும்வரை அவனுடன் பறக்க எண்ணிக் கைலாயமலைச் சிகரத்தில் இருந்து வானில் கிளம்பினேம். உயரஉயரச் செல்லும்போது கீழே பட்டணங்கள் தேர்ச்சக்கரங்கள்போல் காணப்பட்டன. வாத்திய ஒலியும்

வேத கோஷமும் கலந்து விண்ணில் ஒலிக்கக் கேட்டோம். காடுகள் புல் தரைகள் போலவும், மலைகள் சிறு கற்கள்போலவும், நதிகள் நூல்போன்றும் தோன்றின. இமயம், விந்தியம், மேரு முதலிய பர்வதங்கள் மடுக்களில் நிற்கும் யானைகள்போல் இருந்தன. அவ்வளவு உயரம் மேலே சென்று சூரிய மண்டலமடைந்தோம். அங்கே உருக்கிவார்க்கப்பட்ட செம்பொன் ஆகாசம் கண்ணைக் கூசவைத்தது. நடு உச்சிவேளை ஜ்வலிக்கும் அக்கினி கொழுந்து விட்டுப் பரவிற்று. யுகமுடிவில் உலகைக் கொளுத்தும் காலாக்கினியோ என்று அஞ்சினேம். உடல் பொசுங்க, மனந்தளர, மூர்ச்சையடையும் தறுவாயில் என்னசெய்வதென்று திக்குமுக்காகி திணறித் தவித்தோம். திசை தெரியாது மயங்கினேம். மனவலிமை குன்றி, வாடி வதங்கி மிக்க பிரயாசையுடன் கண்ணைத் திறந்து கதிரவனைக்காண எத்தனித்தோம். வெற்றிபெற்றேன். ஆனால் ஜடாயுவின் முற்போக்கு மந்தித்தது. அவன் சரேலென்று கீழே இறங்குவதைக் கண்டு திகிலடைந்து நானும் கீழே தாவி அவன்மேல் கிரணங்களின் உக்கிரம் உறைக்காது என் சிறகுகளைக் குடை போல் பரப்பினேன். உடனே என் இரக்கைகள் எரிக்கப்பட்டன. தொப் பென்று கீழே விந்திய பர்வதத்தின் சாரலில் விழுந்தேன். அவனும் சற்று தூரம் சென்று ஜனஸ்தானத்தில் விழுந்துவிட்டானென்று நினைக்கிறேன். என் ராஜ்யத்தைவிட்டு வந்தேன். இப்பொழுது வலிவு குன்றிச் சிறகு பொசுங்கினவனைக் கண்டு இனி உயிர்வாழ்வது உசிதமன்றென்று எண்ணி மலையினின்று தரையில் பாய்ந்து மோதி உயிரை மாய்த்துக்கொள்ள முடிவு கட்டினேன். அப்பொழுது உங்கள் ஆசிரமம் கண்ணிவ்பட உங்களை தரிசித்து விட்டுப்போகக் கஷ்டப்பட்டு இங்குவந்தேன்.'' என்று சொல்லி முடித்துப் புலம்பி அழுதான் ஸம்பாதி!

---

62. யாவர்க்கும் உண்டு இறைவனருள்.

நிசாகர மகரிஷி ஸம்பாதியின் வரலாற்றைக் கேட்டார். அவன் புலம்பி அழுது உயிர்மாய்க்க எண்ணியதையும் பார்த்துக் கொஞ்சநேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். தவத்தால் சித்திபெற்ற அவர் அகக்கண்ணில் என்ன கண்டனரோ? ஸம்பாதியை நோக்கிப் புன்முறுவல் செய்து முககாந்தியால் அவனுக்குப் புத்துயிர் அளித்தும் பின்வருமாறு இனிது மொழிந்தார். ''அப்பனே! ஸம்பாதி! அழாதே, கண்ணைத் துடைத்துக்கொள். யாவர்க்கும் உண்டு இறைவனருள் என்று உணர்வாயாக. என் தவ மகிமையால் அகக்கண்ணால் எல்லாம் புலனாகிறது. ஆகையால் கவலைவேண்டாம். நன்றாய்க் கவனி. இக்ஷ்வாகு குலத்தில், கீர்த்திமானான தசரத சக்ரவர்த்திக்கு, மகா தேஜஸ் பொருந்திய புத்திரன் ஒருவர் பிறக்கப்போகிறார். அவர் ஸத்தியத்தில் ஊன்றியவர். அதுவே அவர் ஜீவசக்தி. தந்தையின் வாக்குப்படி தம்பி லட்சுமணனுடன், கானகமேகுவார். அம்மகானின் பத்தினியாகிய சீதை

என்ற உத்தமி அவருடன் கூடவே வருவாள். அப்போது தேவர்களாலும் அசுரர்களாலும் கொல்லமுடியாதவனான ராட்சதன் ராவணன் அவளை ஜனஸ்தானத்திலிருந்து திருடிக்கொண்டு போவான். உண்மை பதிவிரதை அவ்வம்மையார். கொடிய அரக்கன் என்ன கடின முயற்சி செய்தபோதிலும் அவனுக்கு இசையாமலும் அவனைக் கண்ணெடுத்தும் பாராமலும் துக்கத்தில் மூழ்கியவளாய் பதியின் நாமத்திலேயே உயிர் வைத்திருப்பாள். அவள் கதியைக்கண்டு, பசி, தாகம், களைப்பு, மேலிடாதபடி அவளை ரட்சிக்கும்பொருட்டு, இந்திரன் தேவர்க்கும் கிடைப்பதற்கரிதான தேவ அமுதத்தை வைதேகியிடம் அனுப்புவான். அதை அவள் பெற்று இது இந்திரனிடத்திலிருந்து வந்ததாகையால் உத்தமமானதென்று அறிந்து அது தன் கணவருக்கே சேரவேண்டியதென்று தீர்மானித்து அதைத் தன் முன்வைத்து 'இது ஸ்ரீராகவனுக்குச் சமர்ப்பணம். எனது பிரபுவும், பர்த்தாவுமான ஸ்ரீராமச்சந்திரன், தம்பி லட்சுமணனுடன் இப்பொழுது உயிருடனிருந்தாலும்சரி, அல்லது அவர்கள் அமரர்களாகிவிட்டிருப்பினும் சரி, இது அவர்களுக்கே உணவாகட்டும்' என்று சொல்லி அதைத் தரையில் வைத்து நிவேதனம் செய்துவிடுவாள்.

[உண்மைக் கற்பரசி, இத்தேவாமுதத்தை கணவனுக்கு அர்ப்பணஞ் செய்த காரணத்தாலோ என்னவோ, அவன் வந்து தன்னை விடுவிக்கும்வரை, பசி, தாகம் அவளை விட்டுவிட்டதுபோலும்! உபவாசத்தாலும் கடும் தவத்தாலும் தேகம் மெலிந்திருக்கிறாள் என்று அநுமன் ராமனுக்குத் தெரிவிக்கிறான்.]

மகரிஷி சொல்லிக்கொண்டேபோகிறார். "ஆகையால் கேள், கழுகரசே! கவலையுறவேண்டாம். இத்தகைய உத்தமியான ஜானகியைத் தேடிக்கொண்டு இங்கு வருவார்கள், ஸ்ரீ ராம தூதர்களான வானரர்கள். அவர்களுக்கு நான் சொன்னதையும் ஸ்ரீ ராமமகிஷியைப்பற்றியும் நீ தெரிவிப்பாயாக. இதைச் செய்துவிட்டதும் நீ உன் வலிவையும் இரக்கைகளையும் திரும்பிப் பெறுவாய். அதை எதிர்பார்த்து இங்கேயே தங்கியிரு. இப்பொழுதே உனக்குச் சிறகுகள் உண்டாக்க என்னால் முடியாது.

[ஸ்ரீராமகாரியத்தின் பிரபாவம்தான் அவரவர்க்குகந்ததை அளிக்க வல்லதென்று சூசிப்பதுபோலும்.]

"இது முக்கியமான தேவகாரியம். அந்த ராஜபுத்திரர்களுக்காகவும், பிரம்மம் உணர்ந்தவர்க்காகவும், தருமத்திற்காகவும், தேவர்களுக்காகவும், ரிஷிகளுக்காகவும், இந்திரனுக்காகவும், இச்சேவை உன்னால் செய்யப்பட வேண்டியது. நானும் அம்மானிட திலகங்களான, மகான்கள் ஸ்ரீ ராம லட்சுமணர்களைத் தரிசிக்க அவா உள்ளவன். ஆனால் மெலிந்து சுருண்டுண்ட இவ்வுடல் அவ்வளவுகாலம் உயிரை வைத்துக்கொள்ள சக்தியற்றது. அதை என்வசப்படுத்த மனமில்லை. ஆகவே நீ இந்தச் சேவையைச் செய்து முடிப்பாயாக. உன் சிறகும் வலிவும் மீண்டு வருமளவும் காலம் காத்திரு என்று எனக்கு ஆறுதல் சொல்லிப்போனார்" என்று சொல்லிமுடித்தார் ஸம்பாதி.

63. ராமநாம பிரபாவம்.

ஸம்பாதி இந்த விருத்தாந்தத்தை விவரிக்கும்போதே தனக்கு ஒரு புதிய உணர்ச்சி பரவிவருவதைக் கவனித்துப் பேரானந்த மடைந்தான். ஸ்ரீராமகாரியத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதுதான் கைகூடாது என்ற நம்பிக்கை ஒருபுறம்; எண்ணூயிரம் வருஷங்கள் இதற்காகக் காத்திருந்து இது உண்மையே என்று தனக்கும் உலகத்தோருக்கும் என்றென்றும் எடுத்துக்காட்டவே வாய்ப்புக் கிடைத்ததைப்பற்றியும், மாமுனியின் வாக்கு ஒருநாளும் பொய்த்துப்போகாது என்ற நம்பிக்கையும் செயலில் முடிவு பெறுவதைப்பற்றியும் அவன் மனம் பூரித்தது.

அவன் வானரர்களின் புது உணர்ச்சியைச் சிறப்புறச்செய்ய மேலும் சொல்லிக்கொண்டே போகிறான். "ராமதூதர்களே! ராமகாரிய வீரர்களே! மகத்தான இயக்கத்தின் பெருவீரர்களே! உங்கள் வரவை எதிர்பார்த்து நூறு வருஷங்கள் காத்திருந்தேன். இன்றுதான் என் எண்ணம் ஸபலம் ஆயிற்று. நல்லவேளையாக அந்த சுபார்சுவன் ராவணனையும் வைதேகியையும் எதிர்த்து ஒழிக்கவில்லை. அவன் ஏதாவது செய்திருந்தால் உங்கள் இயக்கம் வீணாகிவிட்டிருக்கும்; என் மனோரதமும் கைகூடியிருக்காது. இதுதான் தெய்வசங்கல்பம்போலும்! இதை யுணராது நான் அவனைக் கடிந்து பேசினேன். அபகரிக்கப்பட்டு, கதறிக்கொண்டு செல்லும் மைதிலியைக் காக்காமலும் கொடிய அரக்கனை மாய்க்காமலும் விட்டுவிட்டது உனக்கு அழகாவென்று அவனைக் கோபித்தேன். நீசனானாலும், அவன் சரணடைந்த பின் அவனை வதைப்பது நீதியாகுமோ வென்றான் மைந்தன். அந்த உண்மை இப்பொழுது நன்கு பலனளிக்கிறது. ஆகவே இராவணனைத் தேடுவது உங்கள் பொறுப்பாகிறது. உங்கள் ஆற்றல் வெற்றி யளிக்குமென்று உறுதி கூறுவேன்" என்று அவன் சொல்லிக்கொண்டிருக்கையில், எல்லோரும் கண்முன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, எந்நிலையிலும் எச்சூழ்வினை யாலும், இறைவனருள் இருந்தால் எதுவும் நடக்கவல்லது என்று சூசிப்பதாக, வரவர, கொஞ்சங்கொஞ்சமாக ஸம்பாதியின் உடலிலிருந்து இரு சிறகுகள் முளைத்து வெளிவர ஆரம்பித்தன. புளகாங்கிதமானான் புள்ளரசு! மயிர்கூச்சலுடன் பிரமித்து நின்றனர் வானரர்கள்! ஸம்பாதி உடனே கீழே குனிந்து உடலைக் கவனித்தான்; எல்லோரும் அருகே நெருங்கி இவ்வாச்சரிய சம்பவத்தைக் கவனித்துக்கொண்டு நின்றனர். கழுகரசனின் வாய் எதேச்சையாக 'ராம, ராம' என்று உச்சரிக்க ஆரம்பித்தது. கொஞ்சங்கொஞ்சமாக, அங்கிருந்தவர்கள் எல்லோர் மனத்திலும் அத்தாரகமந்திரம் எதிரொலி எழுப்பி அவர்கள் அறியாமலே உதடுகள் 'ராமா ராமா!' வென்று ஆவலுடன் கூடஉச்சரிக்க ஆரம்பித்தன. (இத்தாரக மந்திரத்தை எவனொருவன் தானாக இயல்பாக உச்சரித்துக் கொண்டே செயலாற்றுகிறானோ அவனுக்கு சித்தி கிடைக்கும் என்று

எடுத்துக் காட்டுவதுபோலும்!) அவ்வளவுதான்! ஸம்பாதியின் சிறகுகள் பூராவும் பூத்து அவனுக்குப் புத்துயிர் ஊட்டின! மெல்லிய வாடி வதங்கிய சரீரத்தில் சுரந்த புது வலிவு வைரம்பாய்ச்சி முறுக்கேற்றியது. அருணைதய வர்ணமுள்ள சிறகுகள், பொற்காந்தி பொருந்திய பேருருவம்! அடக்க முடியா ஆனந்தம்! துள்ளிக் குதித்தான் திடகாத்திரக் கழுகரசன். எங்கும் ஆரவாரம்!

"தோழர்களே! பார்த்தீர்களா இம்மகத்தான பிரபாவத்தை? முனிவர் ரகுநாதன் லட்சியத்தில் ஈடுபடும்படி புகன்றார். ஈடுபட்டேன். இதோ புது ஜீவன் உதயமாயிற்று. என் பழைய இளமை, பராக்கிரமம், ஆண்மை அப்படியே திரும்பப் பெற்றேன். இது ஸ்ரீராகவன் பணியாற்றுதலின் விளைவென்பதைப் பிரத்யட்சமாக எடுத்துக் காட்டுகிறதல்லவா? ஆகவே, நீங்கள் விரைந்து செல்லுங்கள்! வெற்றி உங்களுக்கே! இம்மியும் சந்தேகம் இல்லை. நான் இதோ உங்கள் கண்முன் புத்துயிர் பெற்றெழுவதே தலை சிறந்த சான்றாகும். இதோ, என் வீர்யத்தையும் சக்தியையும் அறிந்து கொள்ளும்பொருட்டு உயரப் பறந்துபோகிறேன். விடையளியுங்கள். உங்களுக்கு மங்களமுண்டாகட்டும்" என்று சொல்லிவிட்டு மின்வெட்டாக பறந்து மறைந்தான். வானரர்களுக்குண்டான குதூகலம் உச்சி எட்டியது!

---

64. வான்திறந்து வீற்றிருப்ப வீரர் வாரீர்!

வாயுவேக மனோவேகமாய்ப் பறந்து மறைந்த ஸம்பாதியைப் பார்த்த வானரர்கள் தாங்களும் புது உற்சாகங்கொண்டு அவனுடன் கூடச் செல்வதாக உயரக் கிளம்பிக் குதித்துக் கொம்மாளம் செய்தனர்! இதோ தேவியைத் தரிசிக்கபோகிறோமென்று ஆரவாரித்து, தாவிப் பாய்ந்து அடுத்த நிமிஷம் கடலையடைந்து வியப்படைந்தனர். பூலோகத்தின் சிறப்பை சித்தரித்துக் காட்சியளித்தது அப்பிரதேசம்! தெற்கு சமுத்திரத்தின் வடக்கு எல்லை அது. ஒருபுரம் கண்ணைப் பறிக்கும் உள்ளம் களிக்கும் எழிலும் வளமும், மற்றொரு பக்கம் கண்ணுக்கெட்டாதூரம் அலைபுரளும் பெருங்கடல்.

கடலின் தோற்றம் மிக்க பயங்கரம்! அரும்பெரும் ஜல ஜந்துக்கள் ஓடி மிதந்து நீரைப் பிளந்து எழுந்து விளையாடின. பிரமாண்டமான அலைகள் திரண்டுயர்ந்து புரண்டு வந்தன! காதைப் பிளக்கும் அலையோசை! கொஞ்ச தூரம் கடல்தேக்கம் அசையாப் படுக்கையாய் காட்டும். பின்பு, வேறிடத்தில் மலைகளை நிகர்த்த திரள்களின் திகில்பயக்கும் கொந்தளிப்பு மறுநிமிஷம் பாதாளம் காட்டும், சுழல் சுனைகள் மனங்கலக்கின இம்மாபெருங் கடல் நூறு யோஜனைகள் கொண்டதுதானா? இவ்வளவு தூரம்

கடந்தாலல்லவா இலங்கையைக் காண இயலுமென்று யோசனைகள் எழ, கடலின் ஆர்ப்பாட்டத்தில் வானரர்கள் உற்சாகம் மங்கியது. திடீரென்று இத்தகைய காட்சியைக் கண்டு கதிகலங்கி அவர்கள் அங்குமிங்கும் ஓடத் தலைப்பட்டனர். கடலைக்கண்ட மாத்திரத்தில் கலங்கித் தயங்கும் வானரர்களின் கலவரத்தைக் கண்டான் அங்கதன். அவர்கள் கலக்கம் தெளிய வைக்கும் பணியிலிறங்கினான்.

"சகோதரர்களே! வீரர்களே! ஏன் கலங்குகிறீர்கள்? அதைரியத்திற்கிடங்கொடுப்பதா ஆண்மையின் நேர்மை? எவ்வளவு பெருங்கடலானாலென்ன? அதைக் கடக்க வல்லவர்களல்லவா நாம்? வாழ்க்கையைத்தாழ வைப்பது கோழைத்தனம். சீறும் சர்ப்பம் சிசுவை விஷம் தீண்டுவதுபோல் தைரியம் இழந்தவன் தொலைந்து போவான். வீரம் வழங்கும் வாய்ப்பு வந்தபோது, வான் திறந்து வீற்றிருக்க விருந்தழைப்பு வந்தபோது, மனத் தாழ்வு கொண்டால் வானர வாழ்வும், நமதய்யன்பணியும் வீணாகுமே! இது உங்களுக்குத் தெரியாததா?" என்று மனத்தளர்ச்சியடையா வண்ணம் வலியுறுத்தினான். அன்றிரவு முழுவதும் அப்பணியில் முனைந்தான்.

மறுநாட் காலை எல்லோரும் சபைகூடி ஆலோசனையிலமர்ந்தனர். கடலைக்கடப்பதென்று முடிவு கட்டப்பட்டது. இலங்கையை யடைந்து தேவியைத் தரிசிப்பது லட்சியமாய்க் கைக்கொள்ளப்பட்டது. அங்கதனும் பின்பற்றி வந்த அனுமனும் இணையற்ற இரு தலைவர்களாய்த் திகழ்ந்தனர். வீரம் பொங்க, ஆற்றல் அலைமோத அவ்வானரத் தலைவன் அங்கிருந்த பெரியார்களை வணங்கிக் கௌரவித்து, அவர்களை முன்னிட்டுப் பேசவாரம்பித்தான். "இங்குக் குழுமியிருக்கும் வீரர்களுள் எவன் கடல் கடக்கும் காட்சியை நம் கண்குளிரக் காணமுடியும். எந்த வானர வீரன் நம் அரசனின் வாக்கை நிறைவேற்றிவைக்கும் வல்லாளனாகப் போகிறான்? எந்தத் திடச்சித்தன் நூறுயோசனை தாண்டி இலங்கையை யடைந்து நமக்கு வெற்றி தரப்போகிறான்? ஆபத்தில் வந்துதவும் பேரன்பன் எவன்? எவனுடைய பேருதவியால் நம் காரியம் கைகூடப் பெற்றவர்களாய்த் திரும்பிச் சென்று மனைவிகளையும், மக்களையும் களிப்புறவைப்பவர்களாகப் போகிறோம்? வீராதி வீரனை ஸ்ரீ ரகுநாதனையும் லட்சுமணரையும், சுக்ரீவரையும் மனமகிழவைக்கும் பேராண்மைத் தொண்டன் முன்வரட்டும். நம் கவலையை நீக்கி அபயப்பிரதானஞ் செய்யட்டும். நீங்களனைவரும் திடமான பராக்கிரமசாலிகளென்பதை நினைப்பூட்டுகிறேன். வீரர்காள்! கீர்த்திமான்கள் நீங்கள். உங்கள் அபாரசக்திக்கு இடையூறோ? இணையுண்டோ? சேனைத்தலைவர்களே! உங்களுக்குள்ள தாண்டும் சக்தியைபற்றி தெரியப்படுத்துமாறு அழைப்பு கூறுகிறேன்" என்று வீர விலாசத்தின் விசையை வெளிக்கிளப்பினான் அங்கதன்!

65. உரைகல்லில் பதம்பார்த்தல்.

வானர சபையில் அமைதி நிலவுகிறது. அங்கதன் அழைப்பை அங்கீகரிக்கின்றனர் தலைவர்கள். சிக்கலான சந்தர்ப்பம். நூறுயோசனை தாண்டும் சக்தியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் அனைவரும். ஒவ்வொருவரும் சபையின் உரைகல்லில் தங்கள் தங்கள் சக்தியைப் பதம் பார்க்கிறார்கள். ஒன்றையும் மறைப்பதற்கும் பசப்புவதற்கும் சமயமல்ல அப்போது தாண்டும் சக்தி என்ற தராசு முனைக்குச் சரியான எடை போட்டாகவேண்டும்.

கஜன் என்பான் முன்வந்து, தான் பத்து யோசனை சுலபமாகத் தாண்ட முடியுமென்று வெளியிடுகிறான். அவன்பின் கவாக்ஷன் இருபது யோசனை கவயன் முப்பது, சரபன் நாற்பது, கந்தமாதனன் ஐம்பது, மைந்தன் அறுபது, த்விவிதன் எழுபது, சுஷேணன் எண்பது யோஜனைகள் கடக்க வல்லவர்கள் என்று முறையே உரைக்கிறார்கள். கரகோஷம் பின்பற்றி வரவேற்பின்றி சபையில் அமைதி நிலவுகிறது. நூறுயோசனை தாண்டுபவன் அல்லவா வேண்டும்? அவன் எங்கே? எல்லோர் மனமும் கண்ணும் தேடுகின்றன. படையிலுள்ள வயது முதிர்ந்த ஜாம்பவான் எழுந்து முன் வருகிறான். "வீரர்களே! மகத்தான தூய்மைவாய்ந்த, நம் வாழ்க்கையே மேம்படவைக்கும் ஸ்ரீராமசேவை எனும் புனித இலட்சியத்தில் இறங்கி இருக்கிறோம். இதை மறப்பது நன்றன்று. இதை செய்தே முடித்தாக வேண்டும். அன்றேல் பொய்வாழ்வு வாழ்பவர்களாவோம். எனினும், என் போன்ற முதுமை மூண்டவனுக்கு இளமையிலிருந்த வேகப் பலத்தைச் சிந்திப்பதில் என்ன பயன்? இருந்தபோதிலும் தடையின்றி இப்பொழுதும் தொண்ணூறு யோசனை தாண்டிப்போக என்னால் முடியும். இது முன்பு இருந்த என் வேகத்திற்கு உரைபோடக்காணாது. ஐயன்மீர்! முன்பு திருமால் வாமனனாய் வந்து மகாபலியை மூணடி மண் வேண்டி, திருவிக்கிரம ரூபத்தில் மூவுலகையும் அளக்குங்கால், அப்பகவானை என் வேகத்தால் பிரதட்சிணஞ் செய்துள்ளேன். இப்பொழுது அது எனக்கு நினைவுமாத்திரமே. கிழத்தனம் கிட்டியவன், நூறு யோசனை தாண்டுவது சந்தேகந்தான். ஆனபோதிலும் நம்மிடையே நூறு யோசனை - ஏன் எத்தனை நூறு யோசனைகளானாலும் சரி தாண்டும் வல்லாளன் இல்லையா என்ன? உண்டு, நிச்சயமாய் உண்டு. வீரம் பொலியும் வீரவிலாசமன்றோ இச்சபை"? என்றான்.

"யோசனை நூறும் தாண்டுவேன்" என்று கிளம்பிற்று அங்கதன் குரல். ஆனால் "திரும்பித் தாண்டிவருவது சந்தேகம்" என்ற மொழி, எழவிருந்த கரகோஷத்தைத் தவிர்த்தது.

ஜாம்பவான் உடனே பதிலளிக்கிறான். "அப்பனே! அங்கத! நூறு யோசனை மட்டுமா தாண்டுவாய்? இன்னும் அனேக யோசனைகள் தாண்டவும் திரும்பவும் சக்திவாய்ந்த வல்லவன் நீ என்று நாங்கள் அறியாதவர்களா?

னினும் நீ சொல்வது முறையாகாது. இப்படைக்குத் தலைவன் நீ. வானர மன்னன் உன் தலைமையில் இச்சேனையை ஒப்படைத்திருக்கிறார். தலைவன் தூதனாகிவிடப் பார்த்திருப்பது எங்களுக்கு அழகல்ல. உன் கௌரவத்திற்கு முறையுமில்லை. நீ எங்களைப் பாதுகாக்கும் அரண். கோட்டையைக் காப்பது எங்கள் கடமை. இம்மாபெரும் முயற்சிக்கு நீயே ஆணிவேர். ஆகவே, உண்மை விக்கிரமசாலியான உன்னைத் தூதனாகச் செலுத்த இசையோம். நீ இங்கிருப்பதே தகுதியானது. மற்ற எவரையாவது அனுப்புவதே முறை''

'' மற்றொருவர் யார்? அவர் எங்குள்ளார்? என்று வினவினான் தலைவன் அங்கதன்.

ஜாம்பவான் நிதானிக்கிறான். மற்றெவரும் இல்லையா? தாண்டிச் சென்று வெற்றிபெற்றுத் திரும்பாது மனந்தளர்ந்து பட்டினிகிடந்து அங்கேயே உயிர்விடுவதா? இத்தகைய அங்கதனின் கவலைக் கேள்விகள் காதில் ஒலிக்கும்போதே, '' வீரச்செல்வனே! கவலை வேண்டாம். நாம் எடுத்த கருமம் வெற்றிகாணுவதில் ஐயமென்ன? இதை எவன் இனிது முடித்துத் தருவானோ, அவனை யடைந்து இதோ வேண்டுகிறேன்'' என்று சொல்லிவிட்டு, தனியே பேசாது வீற்றிருந்த அனுமனிடம் அணுகினான்'

---

66. ஆஞ்சநேயனின் ஆத்மசக்திக்கு அவயமிடல்.

அநுமனின் நிலையைக் கவனித்த ஜாம்பவான் மனம் தெளிந்தான். ஸ்ரீ ராமகாரியம் கைகூடுவதில் ஆற்றல் குன்றியதாகக் காணவில்லை. இவ்வொரு வானரத் தலைவனால்தான் அக்காரியம் நிறைவேறப்பெறும் என்று நன்கறிந்த ஜாம்பவான் அநுமனை நோக்கிப் பேசுகிறான்:—

'' வானர இனத்துத் தலைசிறந்த தனிப்பெரும் வீரனே! எல்லா சாஸ்திரங்களையும் கற்றறிந்து கருத்துணர்ந்த கலைஞனே! என்ன இது? ஒரு தனியிடத்தை யடைந்து மௌனம் சாதிப்பது என்ன காரணமோ? ராமலட்சுமணர்கள், சுக்ரீவர் முதலிய பெரியோர்களுக்கு வலிமையிலும் பராக்கிரமத்திலும் சமமானவன் நீ என்பதை நினைக்கவில்லைபோலும்! என்ன சிந்தனைசெய்கிறாய்? அப்பனே! வைனதேயனான கருடனின் வேகம் உனக்குண்டென்பதை நன்கறிவேன். உன் தோள்வலியும் அவன் சிறகின் வேகமும் சமானமென்பதையும் எல்லோருமறிவர். அவனது ஆண்மையும் உனதேயாகுமல்லவா? உன் ஆற்றலறிந்தல்லவா ஸ்ரீ ராமமூர்த்தி தம் கணையாழியை உன்னிடம் அளித்திருக்கிறார். அதன் சக்தி உன்னிடத்தில்

பிரதிபலித்துப், பரிணமிக்குமன்றோ? இதில் சிந்தனைக்கு இடமுண்டா? வானரோத்தமா! பலமும், புத்தியும் தேஜஸும் சத்வகுணமும் மற்ற எல்லோரையும்விட உன்னிடத்தில் அதிகம் திகழ்வதை நீ மறந்தனை போலும்! ஒப்புவமையில்லாத அழகும் நினைத்த உருவமெடுக்கும் அஞ்சனா தேவி என்ற அப்ஸரஸ் மாதிடம் வாயுபகவானால் ஆக்கிவைத்த உன் பிறவியின் மகிமையையும் நீ மறந்ததின் காரணமென்ன? வாயுபகவனுன் உன் தந்தையின் வேகம் உனதன்றி வேறு யாருக்குண்டு? காற்றின் வேகத்தில் கலைந்துவிழுந்த ஆடையுடன் தனியேயிருந்த உனதன்னை "ஒரே பதியுடன் வாழ்க்கை நடத்தும் உத்தம விரதத்தைக் கெடுக்கமுயல்பவன் யார்"? என்று அஞ்சனை, புஞ்ஜிகஸ்தலை, வினவ, வாயுபகவான் என்ன விடையளித்தாரென்று சொல்லுகிறேன் கேள். "வடிவழகி! உன்னை என் மனத்தால்தான் அடைந்தேன். கவலைவேண்டாம். வீரியவானும் மேதாவியு மான சிறந்த ஓர் புதல்வன் உன்னிடம் தோன்றுவான். தாவுவதிலும், பாய்ந்து தாண்டுவதிலும் என் வேகத்திற்குச் சமமாகக்கொண்டு நற் குணத்திலும் ஆர்வத்திலும் ஆணவத்திலும் தோள்வலிமையிலும் சிறந்து விளங்குவான்" என்றார். உன் தாய் அவரைக் கௌரவித்து களிப்புடன் உன்னைப் பெற்றாள். அவ்வீரத்தையும் வேகத்தையும் உன்னிடமிருப்பதை நினைப்பூட்டுகிறேன்

"இதற்குத் திருஷ்டாந்தமாக உன் இளமைநாட் சம்பவம் ஒன்றை உன் சிந்தைக்குக் கொண்டுவருகிறேன். காற்றில் வீசிய தேவவித்திலுதித்தவன் நீ. காந்தி பெற்றவன்; அன்று உதயமான சூரியனைக்கண்டு அது ஒரு பழம் என்று நினைத்து அதைப் பற்ற எண்ணி, விரைந்து வானில் உயரக் கிளம்பினை. முன்னூறு யோசனைகள் ஆகாயத்தில் உயரச்சென்று உன் இலக்கை குறிவைத்தவண்ணம் சற்றும் களைப்பின்றி, சூரிய வெப்பத்தின் கடுமையையும் சட்டை செய்யாது, வாயு வேகமாய்ச் சஞ்சரித்தாய். அப்பொழுது இந்திரனின் வஜ்ராயுதத்தால் மோதுண்டு குழந்தையான நீ மலைச்சிகரத்தில் விழுந்ததும் உன் கன்னம் அடிபட்டது. அதுவே உன் பெயர் அநுமன் என்பதற்குக் காரணம். தன் செல்வக் குழந்தை இப்படி அடிபட்டுக் கீழேகிடப்பதைப் பார்க்கப்பெறாத உனது தந்தையான வாயு தேவர் பணியை நிறுத்திவிட்டார். காற்றின்றி ஒரு க்ஷணமும் ஒருயிரும் தரித்திருக்குமா? மூவுலகும் மூச்சுக் காற்றின்றித் திணறி தத்தளித்தது. ஜீவராசிகள் அனைத்துக்கும் முடிவுகிட்டிய அத்தருணத்தில் பிரமதேவனை முன்னிட்டு எல்லாத் தேவர்களும் பெரியோர்களும் உன் பிதாவை அணுகிப் பணிந்து கோபம் தணியச் சமாதானஞ் செய்தனர். பிரமதேவர் உனக்கு யுத்தத்தில் எந்த ஆயுதத்தாலும் அழியாமையை வரமாக அளித்தார். இந்திரனும் தாழ்ந்து உனக்கு எப்பொழுது இஷ்டமோ அப்பொழுது நீயே உன் முடிவுக்கு வரையறை வைக்கலாம், வைக்காமலுமிருந்து சிரஞ்சீவியாய் திகழலாம் என்று வரமளித்தான். உனது தந்தையும் மனச்சாந்தியடைய உலகம் தன்னிலையடைந்து மகிழ்வுற்றது. காற்றுவீச ஆரம்பித்தது. அத்தகைய சக்தியின் சுரங்கம் நீ. உன் வேகத்தையும் வலிமையையும்

நிர்ணயிப்பவன் யாவன்? அப்பனே! உன் ஒப்பற்ற தன்மையை நினைவிற்குக் கொண்டுவா. மிக்க சிக்கலிலிருக்கும் எங்களுக்கு ஆபத்தை விலக்கிய, அபயமளிக்கும் வல்லவன் நீதான். வானரத் தலைவரின் முதல் நிற்கும் தனிப்பெரும் வீரதீரன் நீ. நீ ஒருவனே எங்களுக்குத் துணைபுரிபவன். நீயே எங்கள் கதி. திருப்பாற்கடல் கடைந்தபோது திவ்யமான தாதுப் பொருள்களைத் தேவர்களுக்குத் தேடிக்கொடுத்த விளைவால் எனக்கு மரண மின்மை கிட்டியது. எனினும் விருத்தாப்பியனுன என்னால் இக்காரியத்தை முடித்துவைக்க முடியாது. நீ ஒருவன்தான் இதைச் சாதிக்க வல்லவன். ஸ்ரீ ராமசந்திரனின் கணையாழியைத் தாங்கும் உனக்கு அது இணையற்ற சாதனமாகும். வீரனே எழு! உன் வேகத்தைத் திரட்டி வலிவுறச் செய்; இப்புனித காரியத்தை நினைத்து வெற்றியைக் கண்முன் நிறுத்தி ரகுநாதன் ஆணையின்பேரில் உயரப் பறந்து தாவி கடலைக்கடந்து இலங்கை யடைவாயாக! திருமால் வாமனனுய் வந்து, திருவிக்கிரமனுய் வளர்ந்து பரவி உலகை யளந்ததை நினைவில்லை. உனது சாமர்த்தியமும் அதுபோன்றதே என்பதை மறக்காதே. எழுந்திடுவாய்! அருள்புரிவாய்!! என்றுன்.

67. அநுமனின் எழுச்சி!

ஜாம்பவான் மொழிந்த வீராவேசமெழுப்பும் தெளி உரை, அநுமன் இதயத்தில் ஊடுருவிப் பாய்ந்து பேரொலி கண்டது. அவன் காட்டிய கடைசிக் காட்சி திருமால் வாமனனுயிருந்து திருவிக்ரமனுக ஓங்கி உலகை அளக்கும் உவகைகொண்ட திறம் மனத்தில் ஒலித்துக் கவனத்தையிழுத்தது. ஆம்! வீரியம் சக்திபெற்றுல் ஆகாதது என்ன? ஒப்பற்ற வீரியம் பொங்கி எழுந்தது. அதற்கேற்ப மனம்பொங்கி, உடல் பெருகி, ஆற்றல் நரம்பை இரும்பாய்ச் செய்தது. தான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே தன்னை அறியாமலே வீரியம் பெருக்கடைந்து உடலை வளர்க்க, அநுமன் மனம் பொருமி வீறுகொண்டு எழுந்தான். அவ்வளவுதான்! உன்னத உயரிய புது ஜீவசக்திகொண்ட பிரமாண்டமான தேகம் இன்னும் வளர்ந்துகொண்டே வந்தது. பூமியைவிட்டு வானில் நின்றன எண்ணமும் உணர்ச்சியும்! இப்புதுத் துடிப்பினுல் எழும் உயரிய பார்வை பூமியையும் கடலையும் அல்பமாகக் காட்டி ஆர்வமும் ஆணவமும் அவனைவேறு உலகில் நிறுத்தியது. வீரத்தில் விருத்தியடையும் வானர வலிமையின் பேருருவத்தைக் கண்ட மற்ற வானரர்கள், துள்ளிக்குதித்து, "ஆபத்தை அகற்றும் காப்பாளரைக் காண்கிறேம்! நம் துன்பத்தைத் துடைத்துத் துணைபுரியும் தலைசிறந்த துணைவரைக் கண்டோம்! மன்னவர் வாக்கை மெய்ப்பிக்கவிருக்கும் மெய்த்

தொண்டரைக் காண்கிறோம்! அரும்பெருங்காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றவிருக்கும் ஒப்பற்ற ராமதூதரைக் கண்டோம்; தனிப்பெரும் வீரம்கண்டோம்! இனிக் களிப்புடன் உய்வோம்! என்று எங்கும் பேரொலி முழங்கி மேரு பர்வதம்போல் பதிந்து நிற்கும் ஆஞ்சநேயர் அருகில் திரண்டு தாவிக்குதித்து ஆனந்தத் தாண்டவம் புரிந்தனர். அநுமனைப் புகழ்ந்தனர். அவன் வீராவேசத்திற்குத் தூபம்போட்டுச் சூடம்காட்டினர்! அவர்கள் உள்ளக் களிப்பிற்கு எல்லையில்லை. "மண்ணைவிட்டு விண்ணில் நின்றனர். இவன் ஈரடியால் மூவுலகங்களையும் அளந்து வெற்றிகொண்ட நாராயணன்தானோ?" என்று வாய்க்குவாய் வீறுகொண்டு விளம்பரஞ் செய்தனர். "வெற்றி! வெற்றி! அநுமனுக்கு வெற்றி! ராமகாரியம் வெற்றி; வாழி ராகவன்; வாழி நம் ஜானகி!" என்ற வீரகர்ச்சனை ஒலிக்கும் வீர விலாசத்தில் நின்ற மாருதி பெருகிப் பொங்கும் ஆற்றலடைந்தான். உற்சாகம் அலைமோதிற்று. வால்நீண்டு முறுக்கேறியது. அதைத் தரையில் வளைத்தடித்துப் பேரிடி எழுப்பி பெரும் பலத்தைத் திரட்டிக் குவித்தான். அவ்வதிர்ச்சியில் தன் வலிமையையும் வேகத்தையும் கண்டு களித்தான். தன் நம்பிக்கை சுரந்து, கரைபுரண்டு, எதையும் வெற்றிகரமாய்ச் செய்ய முடியுமென்ற திடச்சித்தம் திரண்டு வந்தது! மனவலிமை முகத்திலும் வானளாவிப் பெருகும் உடல் வலிவிலும் திகழ்ந்து பிரதிபலித்தது! வன்மை வெள்ளோட்டத்தில் புளகாங்கிதனாகி, வானரப் பெரியோரை வணங்கி, வீராவேசத்தால் கர்ஜிக்கிறான் கடல் கடக்கும் கவித்தலைவன் :—

"அக்கினியின் தோழன் வாயுபகவான், அளவிடற்கரிய வலிமை வாய்ந்தவர். இடைவெளியினின்று எங்கும் நிறைந்து நிற்பவர், பர்வதங்களை பொடியாக்கும் மாபெரும் மாட்சிகொண்ட அப்பெருமான் எனக்குப் பிதா; அவர் வேகமும், தாவும் சக்தியும், ஆணவமும், எனக்குண்டு. அதை உணர்ந்து அவற்றைக் கையாள்கிறேன். மேரு மலைபோன்ற எல்லா மலைகளையும் ஆயிரம் தடவைச் சுற்றிவருவேன். எதையும் எப்போதும் செய்ய வல்லவனாகிறேன். எதுவும் எனக்கொரு பொருட்டல்ல. கடலைக் கலக்கி உலகை மூழ்கவைப்பேன்! நான் விரைந்து பறந்தால் என் துடையின் வேகம் கடலில் புயல் கிளப்பும். மலையையொத்த அலைகள் கரைகடந்துச் செல்லும். வானில் வாகைசூடிய வைனதேயனை சுற்றிச்சுற்றிச் வலம் வருவேன். கதிரவன் கிளம்புமுன் கிளம்பி அவன் மறையுமுன் திரும்புவேன். இடைவேளையின்றி, இளைப்புறாது, இவனையே இன்னும் தொடரும் விசை காண்கிறேன், ஆகாசம் தாண்டுவேன், கடலை வற்றடித்து தரையைப் பிளப்பேன். இதோ கடலைத் தாண்டுவேன்! என் வேகத்தில் கடலும் உயர எழும்பும். மரங்கள் மலர் சொரியும். வழியைத் தோரணங்களிட்ட சுவாதி வழியாக்கித் துலங்கச்செய்யும்; வானரர்களே! இக்காட்சியைக் கண்டு மகிழுங்கள்! வாயு கருடர்களின் வன்மை என்னுள் எழுகிறது. அதன் அற்புதச் சக்தியைக் காணப்போகிறீர்கள்! அதுமாத்திரமா! ஸ்ரீரகுநாதனின் மகிஷியான வைதேகியாரை அழைத்துவருவேன்! உடனே சர்வ சக்திச் சுழல்களான ராமலட்சுமணர்களைத் தரிசிக்க ரிசியமூக மலைக்குத் தாவிப்

பறப்பேன்! அம்மாபெருஞ் சக்தி, தாவிப்பறக்கும் என்னைக் கருமேகத்தின் இடையே தோன்றி மறையும் மின்வெட்டாகச் செய்யும். அதுவே மட்டில் அடங்கா மனோதிடத்தை மிளிறச் செய்கிறது. அதன் ஆதாரத்தில் அன்னை ஜானகியைக் காண்பேன். என் மனக்கண்ணில் அவ்வம்மையை இப்போதே தரிசிக்கிறேன்! தோழர்களே! களிகூறுங்கள்! ஆசியளியுங்கள்! கவலை களையுங்கள்! நூறுயோசனை என்ன? பதினாயிரம் யோசனையும் இதோ தாண்டுவேன்! எதிர் ஒருவரின்றி எதையும் அனாயாசமாய் எய்தி, கருடன் போல் தேவர்களிடமிருந்து அமுதையும் கொணர்வேன்! சந்திரனொளியும் சூரியனின் காந்தியையும் கைக்கொண்டு இலங்கையையே அடியோடு பெயர்த்து தூக்கிவருவேன்! மனஉறுதிக்கும் திடச்சித்தத்திற்கும் எல்லை காண்கிலேன்" என்று கர்ஜித்தான். வானரர்களின் பேரானந்தமோ ஓர் பூகம்பமாய் முழங்கிற்று.

அநுமனின் வீரகர்ஜனை ஆழ்ந்த திடசித்தத்திலூன்றிப் பெருக்கெடுத்த மன உறுதியையும் தன்னம்பிக்கையையும் பூரிக்கவைக்க, வீரமென்ற சக்தி உருவெடுத்துத் துடிப்பதைக் கண்முன் கண்டுகளித்தனர். இம்மொழிகள் வெறும் பெருமிதத்தில் எழுந்தன அல்லவென்று நன்குணர்ந்தார்கள்.

[நம் கண்முன் பெரும் சாம்ராஜ்யம். பலாத்காரத்தில் நிறுவப்பட்டு அடக்குமுறை ஆட்சியில் நிலைக்கப்பெற்று, அதன் வலிவிலேயே திகழ்ந்து திளைக்கும் உச்சநிலையில், கேவலம் ஒரே ஒரு மனிதன், எளியவன் உடல் வலிவு குன்றியவன், தருமத்தில் நின்று சத்தியத்தை சுவாசித்து தன்னந்தனியே தனது ஆத்மசக்தியைக் கொண்டு "இச்சாம்ராஜ்யத்தை எதிர்ப்பேன், உடைப்பேன்" என்று விறுகொண்டு பயமே பரவிநின்ற சூழ்நிலையில், வீரகர்ஜனை செய்யவில்லையா? அவ்வொரே ஒரு மனிதன் கடவுளைக் கண்டு தெய்விகமொழி வழங்க நாடெழுந்து அவனையே தொடர்ந்து வெற்றிக்குச் செல்லவில்லையா? அதேபோல், அநுமனின் மொழிகளைக் கண்டார்கள். போலும், அவ்வானரர்கள். ஆம்! இத்தகைய இணையற்ற, எல்லையற்ற, ஆன்மசக்தியின் பிரபாவம் எண்ணற்பாலதுமன்று, இடையிடற்பாலதுமன்று. இத்தூய உணர்ச்சி எந்த உயரிய ஆத்மாக்களில் பிரதிபலிக்கிறதோ அங்கெல்லாம் அரும்பெரும் செயலாற்றல் நிகழ்வது சரித்திரம் அறிந்த உண்மை. இதை உணர்ந்தவனாகவோ, என்னவோ, ஜாம்பவான் விசுவரூபம் அடைந்து வீர விலாசத்தில் பொலிந்துத் திகழும் வாயுகுமாரனை வெகுதூரம் அண்ணாந்துபார்த்து பெருங்குரலில் விடையளிக்கிறான்.]

"வீரனே! கேசரிக்குமர! வாயுவின் செல்வனே! அளவிடற்கரிய ஆற்றல்பொங்கும் அநுமனே! உறவினரின் சோகத்தைத் தவிர்த்த அன்பனே! இவ்வானரர்களனைவரும் அடியேனும் ஆசிகூறுகிறோம். உனக்குச் சர்வ மங்களம் திகழட்டும்! மட்டில்லா வெற்றி ஓங்கட்டும்! தவமுனிகளின் ஆசிகளும், வானரப் பெரியாரின் நல்வாக்கும், ஸ்ரீ ராமசந்திரன் முதலிய உத்தமர்களின் அநுக்கிரகமும் துணைபுரிய, ஆயாசமின்றி கடல் கடப்பாயாக! வெற்றியுடன் திரும்பிவா! எல்லா மங்களமும் உண்டாகும். உன் வரவை

நாங்கள் ஒற்றைக்காலுடன் நின்றுகொண்டு எதிர்பார்ப்போம்" என்று மனம் பூரித்த ஜாம்பவான் வெற்றிமுரசு முழங்கினான்.

உடனே வானரர் சீறி எழுந்து நிற்க, பூமி கிடுகிடுக்க, தாவிப் பாய்ந்து உயரக்கிளம்ப மகேந்திர மலைச்சிகரம் ஏறினான் இளஞ் சூரியகாந்தி துலங்கும் வானரச்சிங்கன். அவ்வளவுதான்! மலை தாங்கவில்லை மாருதியின் மனவலிமையை. கற்பாறைகள் அதிர்ச்சிகண்டு விரிசல் கண்டன! பூக்கள் உதிர்ந்தன. ஆஞ்சநேயன் தன் கால்களை வலுவாய் ஊன்ற அம்மலை, சிங்கம் பற்றிய மதயானைபோல் ஓலமிட்டது! கற்கள் உருண்டு வீழ்ந்தன. நீர் வீழ்ச்சிகள் வெளிப்பட்டன. பக்ஷிகள், விலங்குகள், பூகம்பம் தாங்காது ஓடிவிட்டன. அதன் குகையில் வாசஞ்செய்த தவசிகள் அவ்விடம்விட்டு அகன்றனர். அநுமன் ஆணவம் பொங்கியெழ, மனோவேகத்தைக் கட்டில் நிறுத்தி, வலிவைத் திரட்டி, வானை நோக்கி, இலங்கையை அடைவதை மனக்கண்முன் நிறுத்தினான்! இலட்சியத்தின் சித்தியைத் தெள்ளெனத் தெளிந்து நின்றான்.

கிஷ்கிந்தா காண்டம் முற்றிற்று.

Printed at JAMALIAH PRESS, 2/87 Besant Road, Madras-14.